திரு அருட்பா

பாலகிருஷ்ண பிள்ளைப் பதிப்பு

9-ஆம் புத்தகம்

ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத் தணிகைப் பகுதி

பதிப்பாசிரியரும் வெளியிடுபவரும் :

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,

" அருட்பா வளாகம்," தியாகராஜபுரம்,

மயிலாப்பூர், சென்னை-4.

1957

All Rights Reserved.

ANNOUNCEMENT

At the kind instance of eminent Indian and Foreign religious scholars, an English Translation of selected stanzas and prose-pieces from Thiru Arutpa of Saint Sri Ramalinga Swamigal has been attempted by the Editor of the present Arutpa series. Bilingual and multilingual literary persons of great critical acumen and intimate religious persuasion have blessed this humble venture with their very loving and encouraging appreciation. The Translation will be published very early. Friends requiring copies may kindly write for particulars to the Editor. The net profit, if any, from the sale-proceeds of this Translation as well as his other religious, literary and legal works will enure to the benefit of his Thiru Arutpa Trust.

திருஅருட்பா

திருத் தணிகைப் பகுதி

கிடைக்கும் இடம் :

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

விலை ரூ. 2·50

திரு அருட்பா

ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத் தணிகைப் பகுதி

உ

திரு அருட்பா

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்பதாம் புத்தகம்

ஐந்தாம் திருமுறை அல்லது திருத் தணிகைப் பகுதி

முதற்பதிப்பு

நம் பெருமானார்
இராமலிங்க அடிகளாரின்
உண்மைத் திரு உருவம்

தந்தையைக் கண்டேன்நான் சாகா வரம்பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீபற
சித்தெலாம் வல்லேனென் றுந்தீபற.

உ

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திரு அருட்பா

௫. ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத் தணிகைப் பகுதி

முதல் பதிப்பு

இது

சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தத்துவநூல் ஆசிரியராகவும், சென்னைச் சட்டக் கலாசாலையில் அறநூல் ஆசிரியராகவும், சென்னை இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட்ஸ் போர்டில் செக்ரடெரியாகவும் கமிஷனராகவும்

இருந்த

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,

அட்வொகேட் அவர்களால்

சுவாமிகள் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூல ஏடுகள், சுவாமிகளிடம் தொண்டு பூண்டு அவர்களை அடுத்திருந்த அன்பர்களின் கையெழுத்துப் படிகள் முதலியவற்றினின்றும் எடுத்து ஆராய்ந்து குறிப்புக்கள் எழுதி

அடக்க விலையில்

அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

All Rights Reserved.

கலியுகாதி௵ 5059 - இல் நிகழும் ஹேவிளம்பி

ஆவணி௴ 27உ : சன்மார்க்க ஆண்டு ௯௧.

25-9-1957

உ

சிவமயம்

சிவகணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா மகிமை

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மார்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

திருச்சிற்றம்பலம்

இது

வேதாகம சுத்தசைவ சித்தாந்த
சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற
மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்
சிதம்பர சுவாமிகளால்
அருளிச்செய்யப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

நற்றாய்க்கு உரிமை நவிற்சி

மூவாண்டில் இழந்த எந்தையார்தம் உயிர் இரக்கப் பெருஞ் செயல்களையும், வீட்டுப் பூங்காவின்கண் அவர்கள் அமைத்து வழிபட்ட முருகப்பெருமான் திருக்கோயிலில் நிகழ்ந்த அருள் நிகழ்ச்சிகளையும்; அவர்களோடு எந்நாளும் உடனிருந்த பல்வகைத் துறவிகளின் வேறுபட்ட நோன்பின் சிறப்புக்களையும் அவர்கள்தம் சித்திகளையும்; துறவிகள்பால் தந்தையார் கொண்டிருந்த போராத பற்றினையும், தந்தையார்வழி தாம் நின்று, அத் துறவிகளுக்கு உளமுவந்து ஆற்றிய பல்வேறு உணவுவகைகளையும்; நாயன்மார்கள் கற்புடை மகளிர் இவர்களுடைய தெய்வ நிகழ்ச்சிகளையும்; ஔவையாரின் ஆத்திசூடி கொன்றைவேந்தன் தொடக்கத்த அறநூல்களில் காணக்கிடக்கும் எளிய தெள்ளிய செம்மொழிகளையும்; சித்தர்நூல் திருப்புகழ் முதலிய அருணூல்களின் செம்பொருள் துணிபுகளையும்—எளியேனது வினை அறியாத பருவம் முதற்கொண்டே—எடுத்தெடுத்து, கனிவுற்ற சிறுசிறு செஞ் சொற்களால், குழைந்து குழைந்து, உரைத்துரைத்து, கைகளால்வாரி, மார்போடணைத்து, உச்சிமோந்து, அமுதம் ஊட்டி, உடல் உயிரோடு, உயிர் இரக்கத்தையும் இறை எண்ணத்தையும் என்பால் பரிந்து வளர்த்தவரும்; இடைநாளில் தந்தையார் பின்விட்டுப்போன பெருங்குடியின் பொறுப்பினைச் சுமந்து, அதைச் சிதைந்துபோகாது பாதுகாத்து, அதன் கல்வித்துறையைத் தாழாது போற்றி விளங்கச் செய்தவரும்; அவியா அடுப்புடையவர் என்றும், அருட்கற்புடையவர் என்றும், ஓயாது உழைப்பவர் என்றும், நலிவுற்றார்க்கு எந்நாளும் இல்லை என்னாது உணவோடு மருந்தும் ஆதரவும் அளிப்பவர் என்றும், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்றும், நிறைநீர் நெஞ்சப் பெரும் பொறையாட்டியார் என்றும், பழமொழிகள் நிறைந்த தெள்ளிய இனிய பேச்சுடையவர் என்றும் பெரியோர் யாவராலும் மகிழ்ந்து போற்றப்பட்ட பெரும் புகழ் படைத்தவரும்; தேவார — திருவாசக—திரு அருட்பா முதலிய மெய்ம்மொழிகளைச் செவிமடுத்து உளங்கொள்வதிலேயே தமது நோயற்ற முதுமையைப் பயன்படுத்திக் கொண்டவரும்; தம் நெடிய வாழ்வில் தலைநாள் போலக் கடைநாள் வரை சிவபூஜையில் ஊன்றித் திகழ்ந்தவரும்; தாம் விரும்பியவாறே, இறுதி நாள்வரை, அக அமைதியோடும் உடல் நலத்தோடும் வாழ்ந்து, எவ்வித இடையூறும் இன்றி இயல்பாக இறைவன் திருவடி நீழலை அடைந்தவரும்; முப்பது ஆண்டுகட்கு முன் இந்தத் திரு அருட்பாத் தொண்டினை, நான் அவர்கள் திருவடிகளில் வணங்கித் தொடங்கிய காலத்தில், என்னை வாரிஎடுத்து உடல்தடவி கண்ணீர் வார குரல் தழுதழுக்க வாழ்த்தி இதில் என்னை நிலை நிறுத்தியவரும் ஆகிய

என் நற்றாய் சின்னம்மையாரின் புனித ஆன்மாவுக்கு
எளியேனது இந்தத் தெய்வத் திருத்தொண்டின் நற்பயன் ஓர்
வற்புடைப் பொருளாக என்றென்றும் நிலைபெற்று விளங்குமாக.

திருச்சிற்றம்பலம்

இப் பதிப்பின் சிறப்பியல்புகள்

1. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த ஸ்தோத்திர மாலைகள், சாஸ்திர மாலைகள், கீர்த்தனைகள், சன்மார்க்கப் பிரார்த்தனைகள், தர்மசாஸ்திரங்கள், வியாக்கியானங்கள், பிரசங்கங்கள், உபதேசங்கள், கடிதங்கள், சன்மார்க்கக் கட்டளைகள், சன்மார்க்கப் பத்திரிகைகள், தனிப்பாடல்கள், சாற்றுக்கவிகள், அவர்களது திவ்விய சரித்திரம், அவர்கள் ஆராய்ந்து பதித்த பழைய நூல்கள், சன்மார்க்க சங்க நிகழ்ச்சிகள் முதலிய யாவும் இப்பதிப்பில் அடங்கும்.

2. சுவாமிகள் கையெழுத்திலுள்ள திருப்பாடல்கள், கடிதங்கள், வசனங்கள் முதலியவற்றின் போட்டோப் பிரதிகளும் அவர்கள் திரு உருவமும் ஞானசபை அமைப்பும் இதில் வெளிவரும்.

3. இதுவரையில் வெளிவராத பெருவாரியான பலப்பல அரும் பகுதிகள் இப்பதிப்பில்தான் முதல் முதலாக வெளிவருகின்றன. இவை இதற்கு முன் வெளிவந்ததில்லை.

4. இப் பதிப்பில் வெளிவரும் பகுதிகளில் அடங்கியவை எல்லாம் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏடுகள், அவர்கள் பார்வையில் அச்சான முதற் பதிப்புக்கள், அவர்களை அடுத்திருந்த பேரன்பர்களின் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்த பரிசுத்த பாடங்களாகும்.

5. இப் பதிப்பின் ஒவ்வொரு பகுதியும் துருவித் துருவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, சிறு பிள்ளைகளும் தெரிந்துகொள்ளக்கூடிய ஓர் ஓர் பொருத்தமான முறையில் பாகுபாடு செய்து, ஏராளமான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், விரிந்த பாயிரங்களோடும், பல்வகைய அநுபந்தங்களோடும் வெளிப்படுத்தப்படுகிறது.

6. இப் பதிப்பு உயர்ந்த காகிதத்தில், நல்ல திருத்தமான வகையில், திறமான கட்டடத்தோடு, வேண்டிய போதெல்லாம் படிப்பதற்காக உடன் கொண்டு போவதற்கேற்ற அழகான அளவில், அடக்க விலையில், பகுதி பகுதியாக அச்சிடப்பட்டு வருகின்றது.

7. பொது நன்மையைத் தங்களது சொந்த நன்மையாகக் கொண்ட அநேக அன்பர்களின் முயற்சியால், இப் பதிப்பு தமிழ் நாடெங்கும் பரவி வருகிறது. வியாபாரிகளும், சென்னை, சிதம்பரம், தெலுங்கு நாடு முதலியவற்றின் யுனிவர்சிட்டி அதிகாரிகளும் இப் பதிப்பை விரும்பி இதற்கு உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

8. தமிழ் மக்கள் யாவரும்—பெண்கள், பிள்ளைகள், வயதானவர்கள், வேலையாட்கள், அதிக படிப்பில்லாதவர்கள், பரதேசிகள், நோயாளிகள் முதலியவருங்கூட—காலமுள்ள போதே, சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்களை நன்றாகத் தெரிந்து, அவர்கள் திருவடிச் சுவடுகளைப் பின்பற்றி நடந்து, அவர்கள் அடைந்த ஆன்மாநுபவத்தை அடைந்துய்யவேண்டும் என்பதே இப் பதிப்பின் நோக்கம்.

9. இவ் விருப்ப முயற்சி திருவருட் செயலால் தோன்றி நடைபெறு கிறது என்னும் ஒருவித உறுதியே இப்பதிப்பின் உயிர்நிலையாகும்.

10. இப்பதிப்பு ஆரம்பித்த 1930-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் கீழ்க் கண்ட ஒன்பது பகுதிகள் வெளிவந்துள்ளன. இனி, மற்ற திருமுறைப்பகுதிகளும் பிறவும் வெளிவரும். ஒவ்வொரு பகுதியும் தனித்தனியே இயல்பான முடிவடைந் திருக்கிற தாதலால், எல்லாப் பகுதிகளையும் ஒருமிக்க வாங்கித்தீரவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் கிடையாது. அவரவர்க்குப் பிரியமான பகுதியை அவரவர் வாங்கிக் கொள்ளலாம். அல்லது ஒன்றன் பின் ஒன்றாகவும் வாங்கலாம்.

(1) திரு அருட்பா—கீர்த்தனைப் பகுதி: சுவாமிகளுடைய சங்கீதப் பாடல்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு ஸ்வரப்படுத்தியது. 8 இனங்கள், 182 பாடல் தொகுதிகள், 338 குறிப்புக்கள், 272 பக்கம்.

(2) திரு அருட்பா—வசனப் பகுதி: சுவாமிகளுடைய வசன பாகங்கள் முழு வதும், 2-ஆம் பதிப்பு. 8 இனங்கள், 542 குறிப்புக்கள், 288 பக்கம்.

(3) திரு அருட்பா—வியாக்கியானப் பகுதி: சுவாமிகளுடைய வியாக்கியா னங்கள் முழுவதும், 2-ஆம் பதிப்பு. 7 இனங்கள், 550 குறிப்புக்கள், 416 பக்கம்.

(4) திரு அருட்பா—உபதேசப் பகுதி: சித்தமார்க்க மணி மந்திர ஔஷதங் கள், அநுஷ்டானங்கள், கோட்பாடுகள் முதலியவற்றைப் பற்றிய சுவாமி களுடைய உபதேசங்கள் முழுவதும், சின்மயதீபிகை என்னும் அரிய சாதன நூலும். 10 இனங்கள், 240 குறிப்புக்கள், 272 பக்கம்.

(5) திரு அருட்பா—திருமுகப் பகுதி: சுவாமிகளுடைய கடிதங்கள், பத்திரிகை கள், கட்டளைகள் முழுவதும். 13 இனங்கள், 115 குறிப்புக்கள், 200 பக்கம்.

(6) திரு அருட்பா—தனிப் பாசுரப் பகுதி: பல மத ஸ்தோத்திரங்கள், குரு சிஷ்யர்களைக் குறித்த குடும்ப கோஷமும், குருட்டாட்டமும், சீட்டுக் கவிகள் முதலிய சுவாமிகளுடைய பல்வகைய பாடல்கள் முழுவதும். 8 இனங்கள், 347 பாடல்கள், 111 குறிப்புக்கள், 136 பக்கம்.

(7) திரு அருட்பா—முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி: திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், சிவநேச வெண்பா, மஹாதேவ மாலை, திருஅருண் முறையீடு, வடிவுடைமாணிக்க மாலை, இங்கிதமாலை கொண்டது. 8 இனங்கள், 3 பாடல் தொகுதி களும் 705 பாடல்களும், 316 குறிப்புக்கள், பெரிய அளவு 280 பக்கம்.

(8) திரு அருட்பா—இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும் அல்லது திரு ஒற்றியூர்ப் பகுதி: 122 பதிகங்கள், 1320 பாடல்கள், 360 குறிப்புக்கள், பெரிய அளவு 368 பக்கம்.

(9) திருஅருட்பா—ஐந்தாம் திருமுறை அல்லது திருத் தணிகைப் பகுதி 54 பதிகங்கள், 2 இசை உருக்கள், 577 பாடல்கள், 27 இசைக் கூறுகள், 246 குறிப்புக்கள், பெரிய அளவு 212 பக்கம்.

நூல் கள்வர்க்கு
ஓர் எச்சரிக்கை

வருஷக் கணக்கான பெருமுயற்சியாலும் பேருழைப்பாலும் பெருஞ்செலவாலும் எய்திய இப் பதிப்பின் பலப்பல சிறப்பியல்புகளைச் சிலர் கவர்ந்து வருவதை இங்குக் கண்டிக்க வேண்டிய இன்றியமையாமையைக் குறித்துப் பெருவருத்த முண்டாகிறது. அவர்கள் அவற்றைத் தங்கள் உழைப்பால் அடைவித்ததாகப் பாசாங்கு செய்தும் அவற்றோடு சிற்சில சமயம் தங்கள் சொந்தச் சரக்கைக் கலந்து அவற்றைத் திரிபுபடுத்தியும் பொது ஜனங்களை ஏமாற்றி வருவதுமல்லாமல், அதனால் இப் பதிப்பிற்குப் பொருள் நஷ்டத்தையும் உண்டாக்குகிறார்கள். இந்த இழிவான துர்ச்செய்கை சாதாரண மனுஷத்தனத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் சட்டத்திற்கும் ஒருங்கே விரோதமானது. ஆதலால், இப்பதிப்பின் எல்லா உரிமைகளுக்கும் உரிய இதன் பதிப்பாசிரியர் அவ்வுரிமைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கான நடவடிக்கையை வேண்டும்போது எடுத்துக்கொள்வார் என்று இதன் மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத் தணிகைப் பகுதி

பொருளடக்கம்

பிரிவு	எண்	உட்பிரிவு		பக்கம்
பாயிரம்				
	i.	வெளித் தலைப்பு	...	1
	ii.	அடிகளாரின் உண்மைத் திரு உருவம்	...	2
	iii.	உள் தலைப்பு	...	3
	iv.	திரு அருட்பா மகிமை	...	4
	v.	நற்றாய்க்கு உரிமை நவிற்சி	...	5
	vi.	இப் பதிப்பின் சிறப்பியல்புகள்	...	6
	vii.	நூல் கள்வர்க்கு எச்சரிக்கை	...	8
	viii.	பொருளடக்கம்	...	9
	ix.	பதிக அட்டவணை	...	10
	x.	திருத் தணிகைப் பகுதி முன்னுரை	...	11
	xi.	அடிகளார் வழிபாடு	...	23
	xii.	அடிகளார் கையெழுத்து மூலத்தின் வடிவம்	...	24
	xiii.	வாயுறை வாழ்த்து	...	25
	xiv.	சுப்பிரமணியம்	...	32
நூல்				
	1.	மூத்த பிள்ளையார் திருப் பதிகங்கள்	...	1
	2.	திருத் தணிகைத் திருப் பதிகங்கள்	...	13
அநுபந்தம்				
	1.	தொ. வே. முதலியாரவர்களின் முதற் பதிப்பின் தலைப்பு	...	163
	2.	தொ. வே. முதலியாரவர்கள் வாயுறை வாழ்த்து	...	164
	3.	தொ.வே.முதலியாரவர்களின் குறிப்புக்கள்		167
	4.	திரு அருட்பா ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற் பதிப்பின் தலைப்பு	...	168
	5.	தெய்வ மணிமாலை கந்தர் சரணப் பத்து இவற்றின் முதற் பதிப்பின் தலைப்பு	...	169
	6.	எடுத்துக்காட்டு முதற் குறிப்பு அகராதி	...	170
	7.	பாட்டு முதற் குறிப்பு அகராதி	...	173
	8.	பிழை திருத்தம்	...	179
	9.	கடவுளை வழிபடும் அருட்பெருநெறி	...	180

திரு அருட்பா திருத் தணிகைப் பகுதி

பதிக அட்டவணை

எண்	பதிகம்	பக்கம்
1.	முத்த பிள்ளையார் திருப் பதிகங்கள்	
1.	சித்தி விநாயகர் பதிகம் ...	1
2.	வல்லபை கணேசர் பிரசாத மாலை ...	5
3.	கணேசத் திருஅருள் மாலை	8
4.	தனித் திரு மாலை	11
2.	திருத் தணிகைத் திருப் பதிகங்கள்	
1.	பிரார்த்தனை மாலை ...	13
2.	எண்ணப் பத்து ...	17
3.	செழுஞ்சுடர் மாலை ...	19
4.	குறை இரந்த பத்து ...	22
5.	ஜீவசாட்சி மாலை ...	25
6.	ஆற்ரு முறை ...	32
7.	இரந்த விண்ணப்பம் ...	35
8.	கருணை மாலை ...	37
9.	மருண்மாலை விண்ணப்பம் ...	42
10.	பொறுக்காப் பத்து ...	44
11.	வேட்கை விண்ணப்பம் ...	47
12.	ஆறெழுத் துண்மை ...	49
13.	போக் குரையீடு ...	51
14.	பணித்திறம் வேட்டல் ...	53
15.	நெஞ்சொடு புலத்தல் ...	54
16.	புன்மை நினைந் திரங்கல் ...	56
17.	திருவடி சூட விழைதல் ...	59
18.	ஆற்ரு விரகம் ...	61
19.	ஏழைமையின் இரங்கல் ...	62
20.	பணித்திறஞ் சாலாப் பாடிழிவு	66
21.	காணுப் பத்து ...	69
22.	பணித்திறஞ் சாலாமை ...	71
23.	குறை நேர்ந்த பத்து ...	72
24.	முறையிட்ட பத்து ...	75
25.	நெஞ்சவலங் கூறல் ...	76
26.	ஆற்ருப் புலம்பல் ...	79
27.	திரு அருள் விழைதல் ...	81
28.	புண்ணிய நீற்று மான்மியம்	82
29.	உறுதி உணர்த்தல் ...	84
30.	எண்ணத் தேங்கல் ...	85
31.	கையடை முட்டற் கிரங்கல்	86
32.	பொது ...	87
33.	நாள் அவம்படாமை வேண்டல்	88
34.	அன்பிற் பேதுறல் ...	91
35.	கூடல் விழைதல் ...	94
36.	தரிசனை வேட்கை ...	97
37.	நாள் எண்ணி வருந்தல் ...	101
38.	ஏத்தாப் பிறவி இழிவு ...	103
39.	பவனிச் செருக்கு ...	106
40.	திரு அருள் விலாசப் பத்து ...	108
41.	திரு அருட் பேற்று விழைவு ...	111
42.	செல்வச் சீர்த்தி மாலை ...	113
43.	செவி அறிவுறுத்தல் ...	117
44.	தேவ ஆசிரியம் ...	119
45.	இங்கிதப் பத்து ...	120
46.	போற்றித் திரு விருத்தம்...	122
47.	தனித் திருத் தொடை ...	125
48.	தனிப் பாசுரங்கள் ...	129
49.	சண்முகர் கொம்மி ...	131
50.	சண்முகர் காலைப் பாட்டு ...	134
51.	தெய்வ மணி மாலை ...	136
52.	கந்தர் சரணப் பத்து ...	159

பாயிரம்

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத்தணிகைப் பகுதி

முன்னுரை

" மான்கண்டகை உடையார்தரு மகனார்தமை மயின்மேல்
நான்கண்டனன் அவர்கண்டனர் நகைகொண்டனம் உடனே
மீன்கண்டன விழியார்அது பழியாக விளைத்தார்
என்கண்டனை என்றாள்அனை என்னென்றுரைக் கேனே."

இம் முன்னுரைக்கும் ஏழு எட்டாம் பகுதிகளின் முன்னுரைகளுக்கும் உள்ள தொடர்பு

1. தெய்வ மணங் கமழும் திரு அருட்பாவின் எளியேனது இப் பதிப்பின் வரலாற்றினையும் கால அளவையும், மூலங்களையும் பாகுபாட்டினையும், நோக்கத்தையும் பயனையும், இன்றியமையாமையையும் வேறுபட்ட பகுதிகளின் பொருள் தொடர்பையும், இவற்றைச் சார்ந்த பிறவற்றையும் குறித்து, இப் பதிப்பின் ஏழு எட்டாம் புத்தகங்களாகிய பெருநூல் பகுதி திருஒற்றியூர்ப் பகுதி ஆகியவற்றின் முன்னுரைகளில் தெளிவுபடுத்த முயன்றிருக்கிறேன். பெருநூல் பகுதி முன்னுரையின் 1—3, 20—27-ஆம் பத்திகளும், திருஒற்றியூர்ப் பகுதி முன்னுரையின் முதல் மூன்று பத்திகளும், எட்டு பத்தாம் பத்திகளும் இம் முன்னுரையின் முற்கூறாக அமைந்திருக்கின்றன. ஆகலின், இம் முன்னுரையின் தொடர்புநிலை கண்டு தெளிய விழைவார் அவற்றை ஆங்கே முதற்கண் காண்பாராக.

இப் பதிப்பின் சிறப்பியல்புகள்

2. முன் பகுதிகளிற் போலவே, இப் பகுதியிலும் இப் பதிப்பின் சிறப்பியல்புகளில் சிற்சில இந் நூல் பாயிரத்தின் 6, 7-ஆம் பக்கங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்கே காண்க.

3. சிறப்பியல்புகள் என்பவற்றின்பாற்படும் இப் பதிப்பாசிரியருடைய குறிப்புக்கள் சார்பாக ஈண்டு ஒரு சொல் சொல்லுவது நலந்தரும். எடுத்துக்கொண்ட பதிகங்களின் அல்லது பாக்களின் மூலங்களையும் அவற்றில் பொலிவுற்று விளங்கும் மறைமொழி

களையும் அடிகளார்தம் இறை எண்ண ஒழுக்கின் குறியீடுகளையும் தெரிப்பது ஒன்று.

4. அடுத்தது அவற்றின் பொருட் சுருக்கம் கூறுவதாகும். பத்திமையில் விளைந்த பதிகங்களும் பாக்களும் அளவை நூல் அறிவிக்கும் தீர்மானங்களின் எல்லைகட்குள் கட்டுப்பட்டு ஒடுங்கி நிற்பது அரிதினும் அரிது. ஒரே பதிகத்தில் முன்னதொரு பாவில் தாம் அடைந்ததாகச் சொல்லப்பெற்ற பொருள் ஒன்று பின்வரும் மற்றொரு பாவில் தாம் அடையாது நிற்பதொன்றென்று கூறப்படும். பத்திமையின் பயனான நூல்கள் இங்ஙனம் அளவைக் கட்டுப்பாடுகளுக்கு மாறாகக் கிடப்பதனாற்றானே, கல்வியிற் பெரிய கம்பநாடர், "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ." என்று அவற்றின் உயிர்க்குயிரான உண்மையைச் சொல்லாது சொல்லுகிறார். ஆகலின், இக் குறிப்புக்களில், ஒரு பதிகத்தின் பல்வகைய பொருட்களில், தகுந்த காரணம் ஒன்றற்காக முதன்மைப் பொருள் என்று கருதப்பெற்றவற்றை மட்டும் எடுத்துச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஒரு முயற்சியைக் காணலாம். இப் பொருட் சுருக்கக் குறிப்புக்களைக் காணும் அன்பர்கள் இதைச் சற்று நினைவில் நிறுத்துவார்களாக.

5. மூன்றாவது, எடுத்துக்கொண்ட பதிகம் அல்லது பாவில் கண்ட கருத்துக்களில் தெரிந்தெடுத்த இரண்டொன்றிற்கு, யாதானும் ஒரு சீரிய தரத்தில் ஒப்புமைகொண்ட, அல்லது சார்புடைய எடுத்துக் காட்டுக்களைச் சுட்டுவதாகும். அதாவது, தெரிந்தெடுத்த கருத்துக்கு நேர் நேராக ஒத்த கருத்துடைய செய்யுளாவது அல்லது அதற்கு எவ்வகையிலாவது சார்புடைய கருத்தினைக் கொண்ட செய்யுளாவது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.[239] சார்புடைச் செய்யுள் காணும் விருப்ப முயற்சி எளிதில் கைவருவதொன்றன்று. எடுத்துக்கொண்ட கருத்தின் நுட்பத்தையும் ஆழத்தையும் பரப்பையும் காரண காரியங்களையும் உடன்பாட்டு எதிர்மறைகளையும் ஒருவாறு பொறைஉற்று ஆராய்ந்து அறிந்து தெளிந்த பின்னரே, அதற்குச் சார்புடைய எடுத்துக்காட்டு ஒன்று தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறது. இங்ஙனம் அமைத்திருக்கும் எடுத்துக்காட்டுக்களைக் கண்ணுறும் அன்பர்கள் இவற்றின் இந்தப் பான்மையை ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாது வேண்டற்பாலதாகும். இவ்வாறு அமைத்தவற்றுள் பலப்பலவற்றின் சார்புநிலை மேலோட்டமான பார்வைக்கே தெற்றென விளங்கலாம். எளிதில், விரைவில், விளங்காத எடுத்துக்காட்டுக்களைக்

239. இந் நூலின் 6-ஆம் அநுபந்தம் பார்க்க.

காணும்போதுதான், சற்றே பொறுமை உற்ற ஆராய்வு சிறிது வேண்டியிருக்கும். மூலத்தில் எடுத்துக்கொண்ட கருத்து இன்னது, எடுத்துக்காட்டில் உள்ள கருத்து இன்னது என்பதை முதற்கண் தெளிவுபடுத்திக்கொண்டால், அவை இரண்டிற்கும் உள்ள சார்பு நிலை புலப்படாமல் போகாது. இங்ஙனம் தெளிவுபடுத்திக் கொள்ளுதல் அறிஞர்களின் உரிமையும் கடமையும் ஆகும் என்க.

6. இந்தப் பலபட விரிந்த சார்பு நிலையைத்தான் மேல்நாட்டு அளவை நூல்களில் "Universe of Discourse" என்பார்கள். அதை ஒருவாறு "பேசும் பொருள் உலகு" என்று கூறலாம். நேர் நேரே ஒப்புமை உடைய ஓர் எடுத்துக்காட்டில் ஒருவர் அறியக் கிடப்பது அதன் கருத்தொற்றுமைதான். ஆனால், சார்புடைய எடுத்துக்காட்டு ஒன்றின்வழி, மூல பாடத்தின் கருத்தோடு அதன் விரிவு, ஆழம், நுட்பம், காரணகாரியங்கள், உடன்பாட்டு எதிர்மறைகள் ஆய இவற்றுள் ஒன்றுவது பலவாவது புலனாகும். இங்ஙனம், மூலபாடக் கருத்தும், அதைச் சார்ந்து சூழ்ந்துள்ள கருத்துக்களும் புலனாவதால், இவ் வகைய எடுத்துக் காட்டுக்கள் அறிவாற்றலை வளம்படுத்தி ஞானத்தை விளைத்துச் சன்மார்க்க சாதகர்களுக்குப் பெரிதும் பயன்படும். ஆகலின், அறிஞர்கள் இக் கூற்றுக்குச் சற்றுச் செவிசாய்ப்பார்களாக.

7. இன்னும் ஒரு பொருண்மொழி. எடுத்துக் காட்டுக்கள் குறிப்பதில், செய்யுட்கள் பெரும்பாலும் வேண்டும் என்றே முழுமையாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை அங்ஙனம் முழுமையாக இருத்தலால், அவற்றை ஓதி அவற்றின் உண்மைக் கருத்தை ஓர்வதோடு நில்லாது, அக் கருத்தின் உயிர்க்கு உயிராக வதியும் உணர்ச்சியின் வயப்படுதலும் வந்தெய்தும். ஒரு செய்யுளின் சில சொற்களை மட்டும் ஓதுவதால் அச் செய்யுளில் நிறைந்து நிற்கும் அறிவுணர்ச்சி உண்டாதல் அரிது. மேலும், இங்ஙனம் உணர்ச்சி வயப்பட்டு உளம் நிறைவுறுவார் ஒருவர்க்குத் தாம் "பேசும் பொருள் உலகு" உள்ளங்கை நெல்லி என விளங்கா நிற்கும் என்க.

இப் பகுதியின் பாகுபாடு

8. நம் திரு அருட் பிரகாச வள்ளற் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாக்களை முதற்கண் தொகுத்து உலகத்துக்குப் பரிந்து உதவிய தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள், மூத்த பிள்ளையார் திருப்பதிகங்கள் 4, திருத் தணிகைத் திருப் பதிகங்கள் 47, சென்னைக் கந்தகோட்டத்தைச் சார்ந்து எழுந்த பதிகங்கள் 2 ஆகிய இவற்றை ஐந்தாந் திருமுறையாகத் தொகுத்து, 1880-ஆம் ஆண்டு

ஒரு தனி நூலாக வெளியிட்டிருக்கிறார்கள்.240 முதல் 4 திருமுறைகளை அவர்கள் 1867-ஆம் ஆண்டு வெளியிட்டபோது, அதற்குப் பின் இணைப்பாக உள்ள அவர்களது அரும் பெரு "திரு அருட்பா வரலாற்றில்" இந்த ஐந்தாந் திருமுறையும் வெளிவருவதாகவே, உரைத்திருக்கிறார்கள். எனினும், இது வெளிவர 13 ஆண்டுகள் கழிந்தன. இந்த முதற் பதிப்பில் இத் திருமுறைக்கென முதலியாரவர்கள் அருமையான வாயுறை வாழ்த்து ஒன்று அருளியிருக்கிறார்கள். இதை இந்நூலின் இரண்டாம் அநுபந்தத்தில் காண்க.

9. மேற்சொன்ன முதற் பதிப்பில் சேர்க்கப்படாது இப் பதிப்பில் சேர்த்திருப்பன (28). புண்ணிய நீற்று மான்மியம் பின் பாதி, (48). தனிப் பாசுரங்கள், (49). சண்முகர் கொம்மி, (50). சண்முகர் காலைப் பாட்டு ஆகிய இவையாம். இவற்றின் வரலாறுகளை அதனதன் அடிக் குறிப்புக்களினின்றும் அறிக. இப் பகுதியில் அகத்துறையின் பாற்பட்ட பதிகங்கள் நான்குள. அவற்றின் எண்கள்: 18, 35, 39, 45. அடிகளாரின் அகத்துறைகள் சார்பான விளக்கங்கள் பெருநூல் பகுதியில் இங்கித மாலையைச் சார்ந்த விரிந்த அடிக்குறிப்பிலும், திருஒற்றியூர்ப் பகுதியில் மூன்றாந் திருமுறையைச் சார்ந்த அடிக்குறிப்புக்களிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன; அவற்றைக் காண விரும்புவார் காண்க.

இப் பகுதியின் மூலங்கள்

10. இப் பகுதியில் 577 பாக்களும், 27 இசைக் கூறுகளும் உள. அவற்றில் 464 பாக்களுக்கு அடிகளாரின் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய சுவடிகளே மூலங்களாகும். அடிகளாருடைய அன்பர்கள்தம் படிகள்தாம் 70 பாக்களுக்கும் 27 இசைக் கூறுகளுக்கும் மூலங்கள். எஞ்சிய 43 பாக்கள் அவற்றின் முதல் அச்சுப் பதிப்புக்களைப் பின்பற்றி யிருக்கின்றன. இவற்றின் விவரங்களை எல்லாம் அந்தந்தப் பதிகங்கட்கு உரிய அடிக் குறிப்புக்களில் தெளிவாகக் காணலாம்.

இப் பகுதியின் பொருட் சிறப்பு

11. இந்தப் பகுதியின் முதற் பிரிவில் உள்ள மூத்த பிள்ளையார் திருப் பதிகங்களில், நம் பெருமானார், இறைவன் மெய்ப்பொருள் உணர்த்தித் தம்மை ஆண்டருளினன் என்றும், இறை திருஉருவமும் அருட் செயல்களும் தம் நெஞ்சைவிட்டு நீங்கா என்றும், மூதடியார்களுக்கு அருளிய இறைவன் தம்மைக் கைவிடமாட்டான் என்றும், இறை அருட்புகழ்கள் இத்தகையன என்றும் இயம்பி இன்புறுகிறார்கள்.

240. தொ. வே. அவர்களின் குறிப்புக்களை 3-ஆம் அநுபந்தத்தில் பார்க்க.

12. இதன் இரண்டாம் பிரிவான திருத் தணிகைத் திருப் பதிகங்களில் அடிகளார் கூறுவன வருமாறு : உலகியலில் முழுகிய தமக்கு இறைவன் தணிகையில் காட்சி கொடுத்து, இறப்பைத் தவிர்த்தருளினன் என்றும் ; தாயும் தந்தையும் ஆகிய இறைவன் தம்மை மன்னித்து அடியரொடு சேர்க்காதிரான் என்றும் ; தம்மை ஆளாது விடுத்தல் இறை அருளுக்கு அழகன்று என்றும்; தம் கனவிலாவது இறைவன் திருஅடிக் காட்சி அளிக்கவேண்டும் என்றும் ; அருள் வெளியில் இருக்கத் தமக்கு இடம் இல்லையோ என்றும் ; இறைவன் வடிவழகைக் காண வேட்கையுற்ற தம்மை அவன் அருள் வெளியில் நிறுவினன் என்றும் ; இறை ஆட்கொண்டால் அன்றி இறப்பும் அதன் சார்பாய பிறப்பும் தவிரா என்றும் ; இறைவன் திருவடியின்கண் அன்பிலாத புன்மையரோடு கலந்து வாழ்தல் பொறுத்தற்கரிய துன்பம் பயக்கிறது என்றும் ; இறையை இடைவிடாது எண்ணத்தில் நிறுத்தினல், இருமை வளனும் எய்தும் என்றும் ; தம் குற்றங் குறைகள் தமக்கே வெறுப்பாக இருக்க, இறைவனுக்கு எங்ஙனம் தோற்றும் என்றும் ; ஆநந்தாநுபவம் கொண்டு வாழ்வதில் தமக்கு முடியா விருப்பம் என்றும் ; தம் நெஞ்சம் உலகியலில் மூழ்கித் தமக்குரிய வீடுபேற்றினைக் கெடுக்கிறது என்றும்; காமத்தில் சிக்கிய தம்மை விடுவித்தருள வேண்டும் என்றும் ; இறைவன் தமக்கு அருள்வெளியில் இடங்கொடுத்தால் பேரடியார்கள் என் சொல்லுவார்கள் என்றும் ; தாம் ஆவன செய்யாமலும் ஏலாதன செய்தும் புலிச்சுமையாக இருக்கிறார் என்றும் ; இறை திருவடியைத் தாம் இன்னும் கண்களாரக் காணவில்லை என்றும் ; இறைவன் ஒருவனே எல்லாப் பொருளும் எல்லாப் போகமும் என்பதைத் தாம் மறந்திருக்கிறது குறித்து வருந்துகிறார் என்றும் ; நோய்க்கு விருந்தாகத் தம்மை இறைவன் படைத்தான் என்றும் ; இறைவனைத் தவிர்த்து வேறு யார்க்கும் தாம் அடிமைப் பட விரும்பவில்லை என்றும் ; இறைவனை நினைந்து நீறிட இறப்புத் தவிரும் என்றும் ; தம் செயல் எதுவும் இல்லை ஆக, இறைவன் தம்மை ஆட்கொள்வான் என்றும் ; உலக மாயையினின்று தம்மை விடுவிக்கவேண்டும் என்றும் ; தம் நெஞ்சில் வந்து இறைவன் குடிகொள்ளவேண்டும் என்றும் ; தம் துயரம் இறைவனுக்கு எட்டாதிருப்பதன் காரணம் என்ன என்றும் ; இறைவனைத் தணிகையில் தாம் காணப்பெறுவார் என்றும்; ஒன்றுக்கும் பற்றாத தம்மை இறைவன் ஆட்கொண்டது அடியார் உலகு அறியலாயிற்று என்றும் ; இறைவன் தம்மைச் சிறுகாலையே ஆட்கொண்டருளினன் என்றும் ; தாம் இறைவனை மறவாத பேற்றினல் தமக்கு இறப்பில்லை

என்றும்; தலைவனாகிய இறைவன் தம்பால் கொண்டுள்ள பேரன்பால் கூறிய இங்கித மொழிகள் இன்னின்ன என்றும்; முன்னர் தம் தகுதி குறியாது ஆட்கொண்ட இறைவன் இஞ்ஞான்று தம்மைத் தள்ளி வைக்கமாட்டான் என்றும்; சில அறிவிலிகளைச் சன்மார்க்கத்தில் பயிற்றுதல் அரிது என்றும்; இறைவன் அருள் திறங்கள் இன்னின்ன என்றும்; தூய்மை யாக்கிய தம் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளல் வேண்டும் என்றும்; உலகில் கொலை புலை அறவே ஒழிதல் வேண்டும் என்றும்; 'நாம் பிரமம்' என்பது விபரீதமாக விளைகிறது என்றும்; இறையை வழிபடுங்கால் வாய்க்கும் உடல் தூய்மையும் இறையை வழிபடாதபோது உறையும் உடல் புன்மையும் இது இது என்றும்; உலகியலார்க்கும் அருளாளர்க்கும் உள்ள வேறுபாடு இது என்றும்; இறை அருளால் மறவினைகள் அப்போதப்போது அழிவடைகின்றன என்றும்; இறைவனிடம் தம் உடல் உயிராதியவைகளை ஒப்புவித்து அடிமைப்பட்டிருக்கிறார் என்றும்—இன்னோரன்ன பலப்பலவும் நெஞ்சு நெக்குருக உடல் கனிய உயிர் தழைப்பக் கூறி அடிகளார் நிறைவாந்தன்மை எய்தி நிற்பது கண்டு களிக்க.

13. மேலே சொன்னபடி, இப் பகுதி இரண்டு பிரிவுடைத்து. முற்பகுதி மூத்த பிள்ளையாரைப் போற்றி வழிபடுவது. ஆன்றோர் மூத்த பிள்ளையாரை ஓர் எழுத்து ஒரு மொழியாக விளங்கும் இறைவன் என்பர். அடிகளார் எங்ஙனம் இதை அநுபவமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மூத்த பிள்ளையாரைக் குறித்த அவர்கள் தம் பதிகங்களாலும், தாம் எழுதிய ஏடுகள் ஒவ்வொன்றிலும் அவர்கள் முதற்கண் குறித்து வைத்திருக்கும் எண்ணிறந்த குறியீடுகளாலும் மறைமொழிகளாலும் விளக்கிக்கொள்ளலாம். இப் பகுதியில் உள்ள பதிகங்களின் மூலங்களைப் பற்றிய அடிக்குறிப்புக்களைக் காண்க.

14. இரண்டாம் பிரிவு இளைய பிள்ளையார் அல்லது முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குவது. முருகப் பெருமானை, ஓர் எழுத்துண்மையை உணர்த்திக் காமம், வெகுளி, மயக்கம் தொடக்கத்த மாயையின் கூறுகள் எல்லாவற்றையும் அழித்துப் பேரின்பம் நல்கும் இறைவனது குருமூர்த்தம் என்பர் நிறைமொழி மாந்தர். மாறாத கட்டிளமை, பொன்றாத அழகு, எல்லாம் வல்ல இறைமை, உயிர்க்கு இரங்கி அருளும் எளிமை முதலிய கடவுட் பண்புகள் யாவும் இதில் அடங்கும். இறைவன் தமக்கு முருகவேளாகக் காட்சி கொடுத்து இறப்பாய பெரு நவையை நீக்கி, தம் அடியரொடு

சேர்த்து, அருள்வெளியில் நிறுத்தி, வீடுபேறுதவிய அவனது திரு அடியை அருளினுன் என்று அடிகளார் முருகனை வாயார வாழ்த்தி நெஞ்சு நிறைந்த மகிழ்வெய்தி வழிபடுவதை இப் பிரிவில் யாண்டும் பார்க்கக் கண்டு களிக்கலாம். இதில் கண்ட முருக மூர்த்தமும் சாகாக் கலையும் தெரிக்கும் பேருண்மைகளைக் குறித்த அடிகளாருடைய சீரிய உபதேசங்கள் இப் பதிப்பின் நான்காம் புத்தகமாகிய உபதேசப் பகுதியில்தான் முதன்முதல் 1932-ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றன. அவற்றை ஆங்கே கண்டு தெளிக.

திரு அருட்பாவில் காணும் பால் வேறுபாட்டு மொழிகளின் உட்கிடை

15. மாணிக்கவாசகர், பட்டினத்தடிகளார், அருணகிரிநாதர், தாயுமானுர் உள்ளிட்ட பேர் அடியார்கள் போன்று நம் பெருமானுரும் இத் திருமுறையிலும் இதற்குமுன் போந்த முதல் இரண்டு திருமுறைகளிலும் தமது வீடுபேற்றின் வேண்டுதலுக்குப் பெண்பாலார் இடைஞ்சலாக இருப்பதாகப் பல இடங்களில் இயம்பி வருந்துகிருர்கள். இஃது இங்ஙனமாதல் மேலோட்டமான எளிய பார்வைக்கு மட்டில்தான். இதனைச் சற்றுப் பொறுமை உற்று ஆராய்ந்தறியத் தலைப்படுவார்க்கு இதன் அடிப்படையான உண்மை புலப்படாமல் போகாது. அது என் எனில் : தாம் ஆண்பாலின்பாற் பட்டவர் என்ற உணர்ச்சி ஒருவர்க்கு உலகியலில் மீதூர்ந்திருப்பதாற்றனே, மக்களில் ஒரு சாரத்தினரைப் பெண்பாலின் பாற்பட்டவர் என்று அவர் கொள்ள நேர்கிறது. தாம் பாற் பகுப்புக்கு உட்பட்டவர் அன்று என்ருவது, தமக்குப் பால் வேற்றுமை அற்றொழிந்தது என்ருவது, அல்லது, எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே தலைமகன் ஆக, அவனைச் சார்ந்து உயிர்க்கும் எல்லா உயிர்களும் மகளிர் என்ருவது உன்னி உணர்ந்த பெருநிலையில் வாழும் ஒருவர்க்கு ஆண்பால் பெண்பால் என்ற இழிந்த உலகியல் மயக்க மனப்பான்மை ஏது? ஆகவே எளிய மேற்பார்வைக்குப் பெண்பாலைக் கடிந்து கூறுவதுபோல் தோன்றினும், உண்மையில் அடியார்கள் கோருவதெல்லாம் தங்களது ஆண்பால் மயக்கம் அற்றொழிந்து போதல் வேண்டும் என்பதே. ஆகலின், அடிகளார், பெண்பாலினைக் குறைகூறிய இடங்களிலெல்லாம், தமது நெஞ்சின் கண் நிற்கும் ஆண்பால் தன்மையையே முதலினும் இடையினும் இறுதியினும் இழிவுரைத்துக் கடிந்து கூறுகிருர் என்று கருதுக. உபசார வழக்காக, உலக வழக்காக, நூல் வழக்காகப் பெண்

பாவினைத் தாழ்வுபடுத்திப் பேச்சு முறைமையில் பேசினார்களே தவிர அது அவர்களது உண்மைக் கருத்தன்று.

16. ஆண்பால் பெண்பால் தோற்றம் இறைவன் படைப் பின்கண் உள்ளது ஆதலாலும், நற்பிள்ளைப்பேறு ஒன்றற்கே இப் பால் வேற்றுமை கற்பித்திருக்கிறது ஆதலாலும், இதைத் தவிர்த்த ஆண் பெண் வேற்றுமையோ சார்போ அறிவற்ற இழிந்த மயக்க மனப்பான்மையின் விளைவு ஆதலாலும், பெண் பிறப்பு இல்லை யேல் ஆண் பிறப்பு இல்லை என்பதும் ஆண் பிறப்பு இல்லையேல் பெண் பிறப்பு இல்லை என்பதும் வெளிப்படை ஆதலாலும், பெண்பாலைப் பார்க்க ஆண்பால் உயர்ந்ததென்றுவது குற்றமற்றது என்றுவது வீடுபேற்றிற்கு உரியதென்றுவது நிறைமொழி மாந்தர் மாற்றமாவது அநுபவமாவது இல்லை ஆதலாலும், அடிகளாருடைய பெண்பால் பற்றிய குறைமொழிகள் தம்முடைய மற்ற குற்றங் குறைகளைப் பற்றிய குறைமொழிகள் போலத் தம்மையே குறி யாகக் கொண்டு உரைத்து அவர்கள் இரங்குகிறார்கள் என்க.

17. மேலும், இவ்வுரைகள் ஆணகத் தொழிற்படும் தம் நெஞ் சுக்குத் தமக்குள் மறைமுகமாகச் சொன்ன சொற்கள் அன்றி— இந்தப் பால் முனைப்பை அறவே ஒழித்துத் தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவனிடம் முறையிட்டுக்கொண்ட சொற்கள் அன்றி—இந்த மொழிகள் பெண்பாலினைக் குறித்த மெய்ம்மொழி களாகப் பிறர் ஒருவர்க்கோ, உலகுக்கோ சொன்னதன்று. அடிக ளார்க்கு நூல் இயற்றும் நோக்கமாவது, பத்திமை முதிர்ச்சியான் வெளிவந்த பாக்களை வெளிப்படுத்தும் நோக்கமாவது கனவிலும் இருந்ததில்லை என்பது இப் பதிப்பின் ஐந்தாம் புத்தகமாகிய திரு முகப் பகுதியிலும் இரண்டாம் பகுதியாகிய வசனப் பகுதியின் விரிந்த முன்னுரையிலும் தெளிவு படுத்திக் கொள்ளக் கிடக்கிறது. அடிகளார் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு கூறி மகிழ்வெய்தும் ஊனையும் உயிரையும் உருக்கும் பாக்கள் ஆயிரக்கணக்கில் அருட்பாவின் எப் பாங்கரும் மிளிர்ந்து ஒளிர்கின்றன. அவ்வக் காலங்களில், அடிகளார், மஞ்சள் உடை உடுத்து, பெண்ணீர்மை கொண்டு, பெருந்தவம் புரிந்து, இறை அநு பவம் எய்திப் பேரின்பப் பெருங் கடலில் திளைத்துப் பெருஞ் சிறப் பினராய்ப் பொலிந்து திகழ்வார்கள் என்னும் தொன்று தொட்ட கேள்வியும் உண்டு. அவர்கள் இறைவனையே பெண்பாலாக நிறை நீர் நெஞ்சமொடு வழிபட்டிருப்பதை நெஞ்சறிவுறுத்தல், வடிவுடை மாணிக்கமாலை, சௌந்தரமாலைத் தொடக்கத்த பதிகங்களில் கண்

களிக்கக் காணலாம். இவை யாவும் அன்பர்களும் அறிஞர்களும் நீடு நினைந்து உணரத் தக்கவையாம் என்க.[241]

இப் பகுதியின் செய்யுள் நயம்

18. இப் பகுதியில் 54 பதிகங்களும் இரண்டு இசை உருப்படிகளும் உள்ளன. இவற்றின்கண் அடங்கிய இயற்பாக்கள் 577, இசை உருக்கள் 27. இவற்றில் கண்ட 15 பா வகைகளும் அவை கொண்ட பாக்களும் பின்வருமாறு: வெண்பா 6; எண்சீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் 118; எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 83; அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 180; இரட்டை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 41; கலி விருத்தம் 57; கட்டளைக் கலித்துறை 48; வண்ணக் கலி விருத்தம் 10; கட்டளைக் கலிப்பா 11; கலிநிலை வண்ணத்துறை 12; கொச்சகக் கலிப்பா 6; கலி வண்ணத்துறை 2; கலிநிலைத்துறை 1; கலித்துறை 1; வண்ண விருத்தம் 1. 15 இசைக் கூறுகளுக்கு ஆநந்த பைரவி ராகமும் ஆதி தாளமும், 12 இசைக் கூறுகளுக்குக் காபி ராகமும் சாபு தாளமும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

19. தெய்வப் புலமை வயத்தராகிய நம்பெருமான் அவர்கள் மூத்தபிள்ளையாரையும் முருகப்பெருமானையும் வேண்டி இயற்றியருளிய இத் திரு அருட்பாக்கள் எப் பாவினத்தின்பாற் படினும், சொல் எளிமையிலும், ஓசை நயத்திலும், கருத்துத் தெளிவிலும், உணர்வின் ஆழத்திலும், கடவுட் பண்பிலும் வேறெங்கும் கண்டறியாத மாபெரும் சிறப்பியல்பு ஒன்றைப் பொருந்தியிருக்கின்றன என்பதைப் பத்திமை வயப்பட்ட அன்பர்களே அன்றி அறிவாற்றல் நிறைந்த அறிஞர்களும் அறியாமற் போகார். இந்தப் பதிப்பாசிரியரது சிறுகாலையில், சண்முகாநந்த சுவாமிகள் என்ற பெரியார், சென்னையில் தமது மடத்தில், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளுக்குத் திருவடி வழிபாடு செய்த காலத்தில், அங்கு வந்திருந்த இளந்துறவி ஒருவர் ஓதிய "அண்ணாவோ, என்னருமை ஐயாவோ, பன்னிரண்டு கண்ணாவோ, வேல் பிடித்த கையாவோ" என்னும் தெய்வ மெய்ம்மொழிகளானவை அங்கு வீற்றிருந்த அடிகளார் குழுமியிருந்த அன்பர்கள் உள்ளிட்ட யாவரையும் கண்ணீர் பெருகி ஓடவும், விம்மித் தேம்பவும் செய்தன. அந்த இளந் துறவியாரோ என்னில், இங்ஙனம் தாம் பாடத் தொடங்கிய அருட்பாவினை மேற்கொண்டு பாடமுடியாது, உடல் நடுங்க, கண்ணீர் ஊற்றெடுத்தோட, குரல் வாராது, தேம்பிக்

---

241. பால் வேற்றுமையினைப் பற்றிய இன்னும் இரண்டொரு கருத்துக்களைப் பெருநூல் பகுதி 48, 88, 102-ஆம் அடிக் குறிப்புக்களில் காண்க.

கொண்டு நின்றனர். இந்தக் கடவுள் நிகழ்ச்சி இப்போது பார்க்கிறது போலும் கேட்கிறதுபோலும் எளியேனுக்கு மெய்ப்பாடு உண்டாக்கிப் பேரின்பம் பயக்கிறது என்றால், இப் பகுதியின் செய்யுள் நயம் குறித்து வேறு சொல்லவும் வேண்டுமோ ?

இப் பகுதியின் பயன்

20. இந்தத் திருத்தணிகைப் பகுதியின் பயன் குறித்து எளியேனுடைய சிற்றறிவு செறிந்த புன்சொற்களைக் கைவிட்டு, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் ஆகிய தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள்தம் பெறற்கரிய தேன் பிலிற்றும் வாயுறை வாழ்த்தினை வாய் மடுத்துண்டு, அதன் செம்பொருளை அகத்தே பொறித்துப் பேரின்பம் உற்றுப் பெருவாழ்வு வாழ்வோமாக.

21. தேவர்கள் துன்பமும் சூரன் கொடுமையும் கெட, இறைவன் தானே தானாகுமாறு அருளிய மூவிரு முகத்தனும் ; நான்முகன் அறியா மறைமொழியின் உட்கிடையை இறைவனுக்கு உணர்த்தியருளிய எம் ஐயனும் ; இமயப் பாவை உச்சிமோந்து இன்புற்ற மழ இளங் குழவியும்; தேவசேனையும் வள்ளி நாயகியும் காதலித்துப் பேரின்பம் பெற்ற முருகவேளும்—ஆகிய இறைவனே, சின்னாள் வாழ்வும் சிற்றறிவும் உடைய இம் மண் உலக மக்கள், மும் மலம் அற்றுத் துன்பம் நீங்கித் தம்மிடையே எளிதில் கண்கள் ஆரக் காணும்பொருட்டும், உயிர் இரக்கம் ஆகிய சன்மார்க்கப் பொது நெறி காணும்பொருட்டும்—பாற்கடல் பள்ளிகொண்ட திருமால் இராமனாக வந்து தன் தேவி கைவர அரக்கரது உயிரை மாய்த்ததனால் உண்டாய பழியும் பாவமும் தொலைய வழிபட்ட இறை வடிவத்திற்கு உலகம் உய்ய உண்டான—'இராமலிங்கம்' என்னும் பெயரைப் பிள்ளைத் திருப்பெயராகத் தாங்கி; உயிர் இரக்கமே உருவான தமக்கு முற்றிலும் எதிர்நோக்குள்ள புலைகொலை மாக்களின் நெஞ்சு நடுங்கும் செறி தீவினையைப் பார்வை மாத்திரையானே செகுத்து ; அருள்வடிவம் இற்றெனத் தெளிவுற்று விளங்க, திரு அருட்பிரகாசனார் ஆகி—திருவாய்மலர்ந்த செந்தேன் பொதிந்து வழியும் அருட்பா என்னும் தேன் கூட்டில் திகழ்ந்து, பிறப்பிறப்பின் மயக்கப் பெருந் துன்பத்தைக் கட்டழிக்கும், தெய்வ மணம் கமழும் தணிகைச் செந்தமிழ்ப் பெருக்கால் நிறைந்த பேரின்பக்கடலில் " மலிந்தாடி வாழிய, வாழிய உலகே வாழிய உலகே, வாழிய அறனே வாழிய நலனே, வாழிய மறையே வாழிய துறையே, வாழிய தவமே வாழிய வாழ்த்திய ஊழியல் உடம்பே ஏழியல் நாவே, வாழிய வாழிய வாழிய நாவே, வாழிய அருளே வாழிய அருளே, வாழிய அருளே வாழிய அருளே."

இப் பகுதியை அச்சிடுவதில் உறுதுணையாயவர்

22. திருத்தணிகைப் பகுதியாய இந்நூல் இங்ஙனம் அச்சிடப் பெறுவதற்கு அடியேனுக்கு உறுதுணையாக நின்று உதவிய நண்பர்கள் விவரம் பின்வருமாறு: திருவாளர்கள் கே. சோமசுந்தரம்செட்டியாரவர்கள், பி.ஏ.; தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.; வித்துவான் ப. மு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், ஆனர்ஸ் எம்.ஏ. எல்.டி.; வித்துவான் ஜ. இராஜு முதலியார் அவர்கள் (புலவர் அரசு); கே. சந்திரசேகரம் பிள்ளை அவர்கள் எம்.ஏ., பி.டி., பி.,ஓ.எல்.; பண்டிதர் சுகவனம் சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள்; இளம் வித்துவான் இ. பா. வேணுகோபாலன் அவர்கள்; தம் பெயர் குறித்தலை விரும்பாத பெருங் கல்வியாளர் ஒருவர். இவர்கள், இப் பகுதியின் அச்சுத் தாள்களைத் துருவிப் பார்ப்பதில் எனக்கு நிறைந்த அன்போடு துணைபுரிந்திருக்கிறார்கள். இவர்களுக்குள் பண்டிதர் சுகவனம் அவர்களும் வித்துவான் வேணுகோபாலன் அவர்களும், அச்சுத் தாள்களைப் பார்ப்பதோடு நில்லாமல், நூலையும் குறிப்புக்களையும் படி செய்வதிலும், படிகளையும் அச்சுத்தாள்களையும் ஒத்திட்டுப் பார்ப்பதிலும் உவகையோடுற்ற ஒத்தாசை பெரிதும் செய்திருக்கிறார்கள்.

23. இன்னும் ஒரு சொல். இப் பதிப்பின் அச்சாணி அன்ன உறுதுணையாகத் தம் வாழ்நாள் எல்லாம் திகழ்ந்த வாழ்க்கைத் துணைவியரைச்[242] செறுதீவினைப் பயனுல் சென்ற ஆண்டு இழந்த எளியேற்கு, இல்லம் அழிந்தொழிந்து சிதையாவாறு, உடுக்கை இழந்தவன் கைபோல் விரைந்து என் இடுக்கண் களையும்பொருட்டு இன்றுகாறும் துணைநின்று இந்த இல்லினைப் பாதுகாத்து, இப் பகுதியின் சார்பான முயற்சியில் நான் வேறு கவலையின்றி ஈடுபட்டு நிற்கும்படி உதவுபவர்கள் இருவர்: அவர்கள், என் தமையனர் திருமகளும் நான் கண்ணேபோல் வளர்த்துக் கல்வி பயிற்றிய அருந்தவச் செல்வியும், என் அரும்பெறல் மணியாய செல்வத் திருமகளும் ஆவர்.

24. இவர்கள் யாவரும் எளியேனுடைய அரும்பெரு நண்பர்களும் உறவினரும் ஆயினும், நட்பு உறவு என்னும் நல்லுரிமைகளின் பொருட்டாக மட்டும் அன்றித் திரு அருட்பாத் திருத்தொண்டாகவும் இவ்வுதவியை அகமும் புறமும் ஆர்ந்த அன்போடு ஆற்றியிருக்கிறார்கள். ஆகலின், என் அன்பார்ந்த நன்றியோடு,

---

242. திரு ஒற்றியூர்ப் பகுதி பாயிரம் 5-ஆம் பக்கத்தில் உள்ள ஆராதனை பார்க்க.

செழுந்தேன் வழிந்து பொலியும் இத் திருத்தணிகைத் திருப்பதிகங்களை ஆதரம் பெருக ஓம்பும் சன்மார்க்க அன்பர்களின் உளங்கனிந்த நன்றியும் இவர்களுக்கு உரியதாகும் என்க. அருள் உருவமான இறைவன் அவர்களுக்கு எல்லாப் பெருநலங்களையும் அளிப்பானாக!

25. இதைக் குறித்த காலத்துக்குள் அழகுபட அச்சிட்டுக் கொடுத்தவர்கள், சாது அச்சுக்கூடத் தலைவர்களும், அதன் செயலாளரான மு. நாராயணசாமி முதலியார் அவர்களும், அதில் தொழிற்புரியும் அன்பர்களும் ஆவர். நூல்களை அச்சிடுவதில் சிறந்த அறிவாற்றலும் பொறுப்பும் அநுபவமும் உள்ள இவர்களுக்கு என் அன்பும் நன்றியும் என்ஞான்றும் உரியன.

வாழ்த்துரை

26. இந்தத் தெய்வத் திருப்பணியை எளியேன்பால் அடைவித்த எல்லாம் வல்லவனும் அருள் வடிவனும் ஆன இறைவன் நாண்மலர்த்தாள்களை மனம் மொழி மெய்களால் இறைஞ்சி, எஞ்சியிருக்கும் மூன்று ஒப்புயர்வற்ற சிறப்புவாய்ந்த நான்காம் திருமுறை ஆறாந் திருமுறைப் பகுதிகளையும், அடிகளாரையும் அருட்பாவையும் பற்றிய மற்றைய நூல்களையும் விரைவில் இனிது முடித்துக் கொடுத்தருளுமாறு வேண்டுகிறேன். வாழ்க திரு அருள்! வாழ்க நம் அடிகளார்! வாழ்க திரு அருட்பா! வாழ்க எல்லா உயிரும்![243] இறைவன் திரு அருளால், எல்லா உலகங்களின் எப்பாங்கரும்,

> "கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
> அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
> நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்(து)
> எல்லோரும் வாழ்க இசைந்து."

அருட்பா வளாகம், தியாகராஜபுரம்,
மயிலாப்பூர், சென்னை-4
10-9-1957

ஆ. பாலகிருஷ்ணன்.

---

243. நம் அடிகளாரது முடிந்த நிலையான உயிர் இரக்கம் என்னும் நிறை நீர்மைத்தாய பேருண்மை, எங்ஙனம், பரந்த இந்நில உலகின் சீரிய ஆன்றோர்கள் பலரது ஆன்மப் போனுபவமாகவும் பொலிந்து திகழ்கிறது என்பதை, இந்நூலின் 9-ஆம் அநுபந்தத்தில் காணும் "கடவுளை வழிபடும் அருட்பெரு நெறி" யாம் அதனில் கண்டு, ஓதியும் ஓர்ந்தும் உணர்ந்தும் கடைப்பிடித்து உய்க. வாழ்க ஆன்றோர்! வாழ்க எல்லா உயிரும்!

உ

திருச்சிற்றம்பலம்

அடிகளார் வழிபாடு

அடிகளார் முதல் மாணாக்கர்
உபயகலாநிதிப் பெரும்புலவர்
தொழுவூர் வேலாயுத முதலியாரவர்களால்
திரு அருட்பா வரலாற்றில் சொல்லப்பட்டது.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகம திலாதசஞ் சீவிதம்நல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வராதஇன் பாரஎனை முனாளில்வந் தேஅருளி
மகாபலம் சேரஅருள் விராவுசெம் பாதநம!
இராமலிங் கார்மனதில் இராதசங் தோஷநம!
இராமலிங் காயநம! இராமலிங் காயநம!

அடிகளார் மாணாக்கர் புராணிகர்
பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களால்
செய்யப்பட்டது.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார் எங்கள்
சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க
ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்(து)
எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை
ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம்எழுத்(து) ஐந்தோ
அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ
வாய்மலர்ந்த(து) ஈரிரண்டு மறையோமூ விரண்டு
மாமுறையோ வகுத்துரையீர் மயக்கொழிமா தவரே.

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

நம் பெருமானுர் இராமலிங்க
அடிகளாரின் தெய்வத் திருக்கரத்தால்
எழுதிய ஒரு திருமுகத்தின்
முற்பகுதியின் வடிவம்[244]
உள்ளவாறு.



244. இந் நூல் முன்னுரை 10-ஆம் பத்தியும் திரு அருட்பா 5-ஆம் புத்தகம் திருமுகப் பகுதி 44-ஆம் பக்கமும் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

வாயுறை வாழ்த்து

1

பேராசிரியர், மஹாவித்துவான், புலவர்ஏறு,

அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் கூறும் ஆசி.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வள்ளலார் தோற்றம்

அறிவால் உயர்ந்த பிறவிமக்கள் அடைதற் கேற்ற அறமுதலாய்
நிறையும் பேறு நான்கனுள்ளும் நிகரற்(று) உயர்வீ(டு) அடைந்தின்பம்
பெறுதற் பொருட்டே இவ்வுடம்பு பெற்றேம் என்னக் கருதாதார்
அறிவு விளங்க அறியாமை அகற்றக் காலம் வருங்காலே. (1)

தனைப்போல் இன்பம் அடைந்துயர்மே தக்க ஞான சித்தர்களை
அனுப்பி மீட்டற்(கு) உரியாரை அருளால் மீட்பன் இறைவன்என
நுனித்த நூலோர் புகல்வர்அது நோக்கின் உண்மை எனவிளக்க
மனித்த உருவில் தோன்றினர்இம் மகிமேல் ஒருநூற் றாண்டுகள்முன்.(2)

வடபால் இராம கிருட்டினப்பேர் வயங்கும் தவமெய்ஞ் ஞானியுடன்
அடிசேர் விவேகா நந்தர்எனும் அம்மா தவரும் அவ்வாறே
படிமேல் புகழ்சேர் தமிழ்நாடு படைத்த பெரும்புண் ணியத்தாலே
வடலூர் இராம லிங்கர்எனும் வள்ளற் பெருமான் அவதரித்தார். (3)

வள்ளலார் பெருமை

இளமைப் பருவத்(து) ஓதாதே எல்லாம் முன்பே கற்றதுபோல்
அளவற் றுயர்வே தாகமநூ லாதிக் கலைநுண் பொருள்தெளிந்தே
உளமுற் றினிய அமுதப்பேர் ஊற்றாய்ப் பெருகிப் பொங்கிடல்போல்
எளிதே அரிய நுண்பொருட்கள் இசைக்கும் தமிழ்ப்பா வகையின்அம்மா.

பாலுந் தேனும் முக்கனியின் பயனும் சுவையும் செழுங்கரும்பும்
மேலும் விண்ணோர் பெறும்அமுதும் வேறும் இனிய பொருள்பலவும்
சாலக் கூடி னுலும்இது தனைப்போன்(று) இனியா இனியாதே
ஞாலத் துரைக்க உளதென்றே நன்காய்ந்(து) அறிஞர் திகைப்புறவே.

எல்லாக் குலமும் ஓர்நிறையே எடையிட்(டு) உயர்வு தாழ்வில்லை
எல்லாச் சமயங் களும்உறுப்பாய் இயையும் சமயம் ஒன்றேகாண்
கொல்லா விரதம் ஒன்றுகொண்மின் குலவிப் பரவும் சன்மார்க்கம்
அல்லால் வேறு வழியிலைநீர் அல்லல் படுவ(து) அழகன்றே. (6)

ஓடுங் கதிரோன் உடன்ஓடும் ஓகோ நுந்தம் வாழ்நாளும்
வாடும் இறுதி வரும்அந்தோ மக்காள் யாது செயவல்லீர்
நாடி நுமக்கின் னருள்சுரக்கும் நம்பன் உங்கள் உளந்தோறும்
ஆடிக் கலந்து நிற்பன்நீர் அறியீர் மயங்கல் அறிவன்றே. (7)

அழியும் பொருட்கண் பேராசை அழியா இன்பத்(து) ஆசையற்றீர்
பழியென்(று) எண்ணீர் தீதுசெய்யப் பதைத்துத் துடித்து முந்துகின்றீர்
வழியல் வழியே நயக்கின்றீர் மக்காள் நும்மைக் காண்தோறும்
அழுகை தோன்றி அலமருவேன் அமலற் றொழுவான் வாரீரோ. (8)

என்னக் கருணை பெருகும்இன்ப இசையால் கூவி வழிகாட்டிப்
பன்னிப் பனுவல் மழைபொழிந்த பண்பின் அருட்பா வழங்கினரே
என்னைப் பாரின் இருப்புமனம் இளகிக் குழைந்து நெக்குருகிச்
சொன்ன வாறு கேட்பனென்று சொல்லு மாயில் சொல்வதென்னே.(9)

செஞ்சொல் தெளிவும் அரும்பொருளும் திகழும் மோனைச் சந்தமுதல்
நெஞ்சம் இனிக்கும் எதுகைநலம் நிலவும் அணிகள் பலகுழும
விஞ்சிப் பெருமாக் கடலேபோல் விரிந்து பரந்து விளங்கினவால்
எஞ்சும் விரிப்பின் அளவுபடா(து) இதயங் கடந்த பெருமையதே.(10)

ஓர்செய் யுளைநாத் தொடுமுன்னே உள்ளம் உருகத் தொடங்கிவிடும்
சீர்ஒன் றிரண்டு படிக்குமுன்னே சேட்டை மனமாக் குரங்கடங்கும்
நீர்வார் கண்ணோர் புறம்தடுக்கும் நிகழ்த்த நாவும் தழுதழுக்கும்
ஓர்வம் என்னில் சிவாநந்தத் துள்ளே மூழ்கும் அறிவம்மா. (11)

மூவர் வழங்கும் தேவார முற்றும் பொதிந்த சுவைபெருகும்
மேவும் மணிவா சகச்செந்தேன் வெள்ளக் கடலில் மிதப்பிக்கும்
யாவும் புலன்கள் தொழிற்படாஅ அறைவ தென்னே இம்மையிலே
தேவ தேவன் கழலடைந்தால் அன்ன நனவும் செறிந்திடுமே (12)

உரையால் முடியா உணர்வோர்தம் உள்ளத் துணர்வே கரியாமால்
அரியவீடு பெறுமாறீ(து) அகிலத் தார்க்கும் பொதுநெறியே
உரிய தமிழ ரெனப்பிறந்தேம் ஒப்பில் லாத நமதன்னை
இருமைப் பேறும் அளிக்கின்றுள் எனுமோர் தருக்கும் உளதன்றே. (13)

இப் பதிப்பின் சிறப்பு

இன்ன வகையால் உலகையெலாம் இன்ப உருவாய்ச் சமைத்திடும்நூல்
முன்னம் அடிகள் திருக்கரத்தால் முனைந்தே எழுதும் ஏடுகளை
உன்னித் தேடிப் பலவிடத்தும் ஒருங்கே தொகுத்து முறைப்படுத்தி
மன்னும் எழுதா எழுத்திலிட்டு வழங்கும் வள்ளல் அறிவீரோ. (14)

பிறந்தார் பிறவிப் பயன்பெறுமா(று) இதுவே பிறிதொன் றில்லையெனச்
சிறந்தோர் போற்றும் திருப்பணியைச் செய்து முடிக்கும் திறனெளிதோ
குறைந்தும் கூடிப் பிறழ்ந்துமிகக் கோது பட்டும் பேதமுற்றும்
மறைந்தும் இருந்த பாத்தேடி வழுக்கள் அகற்றித் தூய்மையுற. (15)

பாம்பின் கால்பாம் பால்அறியப் படுதல் போல அருட்பாவைத்
தாம்பற் பலநாள் நாத்தழும்பு சாரப் படித்தும் ஆராய்ந்தும்
மேம்பட்(டு)உயர்ந்த அநுபவத்தால் விளங்கும் பொருள்கள் விளக்கமுற
நாம்பெற் றுய்ய அருள்சுரந்த நன்றிக்(கு) உளதோ கைம்மாறே. (16)

சீலன் சைவ சித்தாந்தச் செந்நூற் கடலும் தமிழ்க்கடலும்
மேலும் மேனாட்(டு) ஆங்கிலமாம் விரிந்த கடலும் கடந்தசைவன்
கோல ஆறு முகக்குரிசில் கோதை சின்னம் மைக்குதித்த
பால கிருட்டி ணப்பேரான் பரவும் அன்பர் உளம்பேரான். (17)

வம்மின் தமிழ ராய்ப்பிறக்க வரம்பெற்(று) உயர்ந்த மாண்புடையீர்
தம்மின் இன்பக் களஞ்சியத்தைத் தரணி மாந்தர் கொள்ளைகொள்ள
மெய்ம்மைச் சிவப்பே ராநந்தம் வேண்டின் இங்கே யேபெறலாம்
நம்மை உய்வித் திடற்கிந்த நவைதீர் நூலே சாலுமம்மா. (18)

வாழ்க அருட்பாத் திருத்தமுற வழியே செய்வோர் பொருள்கொடுத்தோர்
வாழ்க வேதா கமசார வடிவாய் இன்பம் வழங்கமக்கள்
வாழ்க கருணை சூர்அரசர் வள்ளல் செல்வர் நல்லறிஞர்
வாழ்க வாழ்க எனஎல்லாம் வல்லான் அடியை வணங்குதுமே. (19)

திருச்சிற்றம்பலம்

வாயுறை வாழ்த்து

2

முருகவேள் பன்னிரு திருமுறை பதிப்பாசிரியரும் உரையாசிரியரும்
தேவார ஒளி நெறி ஆசிரியரும் ஆன திருவாளர் ராவ்பகதூர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.
(Retired Personal Assistant to the Inspector-General of Registration)
அவர்கள் கூறும் ஆசி.

---

(1) பாராட்டுரை

திருத்தணிகேசன் துணை

1. *முருகவேளின் அடியார்களுள் யாரேனும்—கற்ற புலவராயினும் ஆகுக ; கல்வி அறிவு இலாத கடையராயினும் ஆகுக—பத்தித் துறை யிழிந்து ஆனந்தவாரியிற் படிய விரும்பின், இராமலிங்க அடிகளார் திருவாய்மலர்ந்த திரு அருட்பா ஐந்தாம் திருமுறையாய் விளங்கும் இத் திருத்தணிகைப் பதிகங்களை ஓதுவார்களாயின், அவர்கள் தாம் கருதிய பயனெலாம் அடையப்பெறுவர் என்பது திண்ணம். அந் நாள் மணிவாசகனார் உருகி உருகிப் பாடி அம்பலத்தாடும் ஜோதியிற் கலந்தனர். பல நூற்றாண்டுகளுக்குப் பின் அண்மையில் இராமலிங்க அடிகளாரும் அவ் வண்ணமே உருகி உருகிப் பாடி ஜோதியிற் கலந்தனர்.*

2. *திருவாசகத்தைக் குறித்து,*

> " *திருவா சகமிங் கொருகால் ஓதில்*
> *கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்*
> *தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய*
> *மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி*
> *அன்பர் ஆகுநர் அன்றி*
> *மன்பதை உலகில் மற்றையர் இலரே."*

என வியந்து சிவப்பிரகாச சுவாமிகள் கூறிய கூற்று நம் அடிகளாரின் திருத்தணிகைப் பகுதிப் பாடல்களுக்கு மிக நன்கு பொருந்துவதாகும். உதாரணமாக : (14) *" பணித்திறம் வேட்டல் " என்னும் தலைப்பின் கீழ் உள்ள பாடல்களை யாரேனும் " அழுதழுது படித்து இன்புறாமல் " இருக்க முடியுமோ ! " உள்ளம் உருகில் உடனாவர் " என்றார் ஞானசம்பந்தர்.*

"உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
தெள்ள அரியர்என் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற."

என்றார் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனர். எனவே, இராம லிங்க அடிகளாரின் உடனிருந்து விளங்கினர் சிற்பரச் செல்வராம் இறைவர். அதனால் அடிகளார் 'சித்தப் பிரசித்தராய்' விளங்கினர்; விளங்குகின்றார்; இனி எந்நாளும் விளங்குவர்.

3. அடிகளார் அருளிய பாடல்கள் வசனம் முதலிய யாவற்றையும் ஆய்ந்தாய்ந்து, உள்ளது உள்ளபடியே, அழகிய முறையில், அச்சுப் பிழை சிறிதும் இலாத வகையில் பதிப்பித்துத் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற்று மகிழ உதவியுள்ள உத்தம சீலராம் திருவாளர் பாலகிருஷ்ண பிள்ளை அவர்களை இத் திருப்பணிக் கென்றே உதித்துள்ள ஒரு "அவதார புருஷர்" எனப் பாராட்டுதல் மிகையாகாது.

4. ஒரு நூற்பதிப்பு எவ்வாறு தெளிவுற இருத்தல் வேண்டும் என்பது இப் பதிப்பாசிரியர் போன்ற தெள்ளிய அறிஞர்களுக்கே கைகூடுவதாகும். இவரது பதிப்பின் சிறப்பியல்புகள் இந் நூலின் பாயிரத்தில் குறிக்கப்பட்டுள. திருப்புகழ் தேவாரம் ஆகிய பல நூல்களினின்றும் ஆங்காங்குக் காட்டியுள்ள மேற்கோட்பாக்கள் பிள்ளை அவர்களின் பரந்த நூற்கேள்வியை வெளிப்படுத்துகின்றன. மேலும், அடிகளாருடைய பாக்களின் கருத்தைத் தழுவுகின்ற மேற்கோட் பாக்கள், துண்டு துண்டாகக் காட்டப்படாமல் பெரும்பாலும் முழுமையாகிய வகையில் காட்டப்பட்டுள. இத் தகைய முறை அடிகளாருடைய பாடல்களுக்கு நல்ல விளக்கந் தந்து பல பெரியோர்களின் அரிய பாடல்களைக் கற்றறிதற்கும் பெரிதும் பயன் படுகின்றது.

5. பிறிதோர் சிறப்பியல்: பதிப்பாசிரியரின் நன்முயற்சியாலும் மெய்வருத்தம் பாராத ஊக்கத்தாலும் இதுவரையும் வெளிவராத பல அரிய பகுதிகள் இப் பதிப்பில் இடம் பெற்றுத் திகழ்தல். இவ் வரிய தொண்டுக்குத் தமிழுலகம் பதிப்பாசிரியர்க்கு மிக்க கடமைப்பட்டுளது. பாடல்களின் மூலப் பிரதிகளை ஆய்ந்தாய்ந்து சரியான பாடல்களை வெளியிட்டு, பதிப்பில் யாதொரு பிழையும் தலைபிடாது அகமும் புறமும் ஒருங்கே திருத்தமாய் உலகுக்கு அளிக்கவேண்டும் என்னும் உயரிய நோக்கத்தைக் கொண்ட பதிப்பாளரின் விடாமுயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. அம் முயற்சி வீண்போகாமல் இப் பதிப்பு விளங்குகின்றது.

6. பிள்ளை அவர்கள் எடுத்துள்ள திருப்பணி தெய்வப் பணி ஆதலின், அப் பணியை முன்னவனே முன்னின்று முடித்து வைப்பான் என்பது திண்ணம். முக்காலும் திண்ணம்.

உ

(2) சிறப்புப் பாயிரம்

அவமாய பிறப்பறுக்க அவாக்கொண்டு
சிவகுமரன் அடிமலர்க்கே
நவமாய பாடல்பல உளம்உருக
மெய்சிலிர்ப்ப நயந்து பாடித்
தவமாய பெருநிலையின் உயர்நிலையில்
திளைத்துபெருஞ் சாந்தி எய்திச்
சிவமாய இராமலிங்க அடிகளருள்
அருட்பாவின் சிறப்பு ணர்ந்தே. 1

கலகநிலை நிறைஉலகில் உழலுயிர்கள்
உயவேண்டிக் கருணை கூர்ந்து
நலநிறையும் பாடல்களை ஆய்ந்தாய்ந்து
பிழையின்றி அச்சி லிட்டார்
பலகலைகள் கற்றுணர்ந்து அடக்கநிறை
பாலகிருஷ்ணப் பண்பார் சீலர்
பலநலமும் இவர்பெறநம் தணிகைஅமர்
பரமர்அருள் பாலிப் பாரே. 2

292, லிங்க செட்டித் தெரு,
சென்னை-1.
22-9-1957

வ. சு. செங்கல்வராய பிள்ளை.

உ

(3) திருமுகம்

சென்னை-1,
292, லிங்க செட்டித் தெரு,
11-6-57

என தன்பிற் குகந்த பெரும!

தங்கள் 30-5-57 கார்டு கிடைக்கது. திரு அருட்பா 7-ஆம் புத்தகத்தைப் பார்த்தேன்; அரிய பெரிய முகவுரையையும் படித்தேன்; மற்றுள்ள பகுதிகளையும் குறிப்புரைகளையும் பார்த்தேன். எழுத்துப் பிழை ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. குறிப்புரைகள் நிரம்ப உள்ளன கண்டு மகிழ்ந்தேன். ஒரு குறையும கூறுதற்கு

இடமில்லை. இவ்வளவு சீர்திருத்தத்துடன் அச்சிடப்பட்ட நூல் ஒன்றை நான் இதுவரையும் கண்டதில்லை. தங்கள் முயற்சியின் பயனை இந்நூலின் அமைப்பைக் கண்டபின்—

"கருத்தழிக கற்றதெல்லாம் எற்றே இவர்க்கு நாம் என்று"

என்னும் நீதி நன்கு புலப்படுகின்றது. தாங்கள் ஒரு அவதார புருஷர். அருட்பாவின் பிழையற்ற வெளியீட்டுக்கென்றே கடவுள் உங்களை இவ் வுலகுக்கு அனுப்பியுள்ளார். ஆதலால், தங்கள் கருத்தை அவரே இனிது முடித்து வைப்பார் என்பது திண்ணம். தங்கள் பதிப்புக்கு முன் அடியேனது முயற்சியிலே 'எற்றக்கோலின் முன் அரிவாள்' பழமொழிக்கு நிகராகும். வாழ்க தங்கள் முயற்சி. நீடுக தங்கள் ஆயுள். பெருக முருகன் திருவருள்.

வ. சு. செங்கல்வராயன்

இருட்பாச இவ்வாழ்வின் ஏக்கம் தொலைக்கும்
அருட்பாவி லேஊறி அண்ணல்—தெருட்பாக்கள்
எல்லாம் பயின்றுநல் லின்பநிலை யிற்றிளைக்கும்
நல்லாய்நீ வாழ்ந்திடுக நன்கு.[245]

வ. சு. செ.

---

245. இஃதோர் இறும்பூது. ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோரும், முருகப் பெருமான் மெய்யடியாரும், முது பெரும் புலவரும் ஆன திரு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் அகமும் புறமும் கனிந்து கனிந்துரைத்த இந்த ஆசியானது,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்னும் பொய்யாப் பெருமறையின் பேர் அநுபவத்தை இப் பதிப்பாசிரியர்க்கு என்றும் விளையாநிற்கும் பெருந்தகைமை வாய்க்கப் பெற்றுப் பொலிவ தொன்றாகும். உண்மை யாதாயினும் ஆகுக. அது இறைவன் திருவடி நீழலின்கண் கிடப்பது. ஆணவம் அற்றுத் தெய்வத்தன்மை நிறைந்த ஆன்றோர் அன்றி, உலகியல் வயப்பட்டார் யாரும், தம் காலத்து நூற்பதிப்பு ஒன்றினைச் சார்ந்து இங்ஙனம் வியந்து கூறற்கு ஒருகாலும் ஒருப்படார் என்பது தெளிவு. வாழ்க பிள்ளை அவர்கள்! வாழ்க அவர்கள் சால்பு! வாழ்க அவர்கள் மெய்ந்நெறி!

திரு அருட்பாவினுடைய
இப் பதிப்பின் நான்காம் புத்தகமாகிய
உபதேசப் பகுதியில் உள்ள
" சுப்பிரமணியமும் அருள்நெறியும் "
என்பதினின்றும் எடுத்தது.[246]

சுப்பிரமணியம்

"சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி யிருக்கின்றது. இந்த ஜோதி மணியை ஷண்முகம் என்று பெரியோர்கள் சொல்லு வார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடந் தாண்டி விசுத்தியாகிய இருதயஸ்தானத் தில் இடதுபுறத்தில் ஆறுதலையுடைய ஒரு நாடி யிருக் கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லு வார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் ஷண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களில் உள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாய் உள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்பிரமணியம்."

---

246. உபதேசப் பகுதி 1932-ஆம் ஆண்டு முதற் பதிப்பு 171—184-ஆம் பக்கங்கள் பார்த்தறிக. இந் நூல் முன்னுரையின் 14-ஆம் பத்தியினை யும் பார்க்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா

ரு. ஐந்தாம் திருமுறை

அல்லது

திருத் தணிகைப் பகுதி[1]

சிவகணபதி துணை

க. மூத்த பிள்ளையார் திருப் பதிகங்கள்[2]

1. சித்தி விநாயகர் பதிகம்[3]

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

அஞ்சுமுகத் தான்மகன்மால் அஞ்சுமுகத் தான்அருள்வான்
அஞ்சுமுகத் தான்அஞ் சனிகரத்தான்—அஞ்சுமுக
வஞ்சரையான் காணு வகைவதைத்தான் ஓர்அரையோ
டஞ்சரையான் கண்கள் அவை.[4] (க)

---

1. இப் பகுதியில் அடங்கியுள்ள திருப் பதிகங்கள், முதல் முதல், நம் இராமலிங்க அடிகளாரின் முதல் மாணக்கராகிய உபய கலாநிதிப் பெரும் புலவர், தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால், 1880-ஆம் ஆண்டில், 'திருத் தணிகைப் பதிகம்' என்ற தலைப்பின் கீழ், திரு அருட் பாவின் ஐந்தாம் திருமுறையாக வகுத்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இத் திருமுறையின்கண், வேண்டியபோது பதிகங்களை முன் பின் வரிசைப்படுத்தியவரும் அவற்றிற்குத் தலைப்புக்கள் கொடுத்தவரும் முதலியார் அவர்களே ஆவர். இப் பதிப்பின் மற்ற விவரங்களை நூலின் அநுபந்தத்தில் (பின் இணைப்பில்) உள்ள இதன் தலைப்பேட்டில் காண்க. இனி, இந் நூலில், இப் புலவர் பெருமான் பெயர் தொ. வே. என்று மட்டும் குறிக்கப்படும்.
2. இப் பகுதியின் முதல் பிரிவாகும் இத் திருப் பதிகங்கட்கு, அடிகளார் தெய்வத் திருக் கரத்தால் எழுதிய சுவடிகள் மூன்றும், அடிகளார்க்கு

வாதாகா வண்ண மணியேஎம் வல்லபைதன்
நாதாகா வண்ண நலங்கொள்வான்—போதார்
வனங்காத்து நீர்அளித்த வள்ளலே அன்பால்
இனங்காத் தருளாய் எனை.5 (உ)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகெலாம் தழைப்ப அருள்மத அருவி
ஒழுகுமா முகமும்ஐங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியும் இரண்டோ
டிரண்டென ஓங்குதிண் தோளும்
திலகவாள் நுதலார் சித்திபுத் திகளைச்
சேர்த்தணைத் திடும்இரு மருங்கும்
விலகுறா தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (௩)

---

2 (தொடர்ச்சி). ஆட்பட்டு அவர்களோடு வதிந்த ஓர் அன்பரது சுவடி ஒன்றும், மற்றும் ஓர் அன்பரின் காகித நோட்டு ஒன்றும் மூலங்களாகும்.

3. 2-ஆம் அடிக் குறிப்பில் சொல்லிய காகித நோட்டுப் புத்தகமே இங்கு அச்சிட்டிருக்கும் இப் பதிகத்தின் மூலம் ஆகும்.

4. இத் திருப் பதிகப் பாக்களில், அடிகளார், இறைவன் திருவடியில் ஒன்றுபட விரும்பிய தமக்கு, அவன், மெய்ப் பொருள் இன்னது என்று உரைத்துப் புலன்களை அடக்கி, ஆட்கொண்டருளினன் என்பது போல்வன இயம்பித் திருவடி பரவுதல் காண்க.

5. இப் பதிகப் பாக்களோடு பின்வரும் கபிலதேவ நாயனர், ஔவையார் அகமகிழ்ந்துரைக்கும் திருப்பாடல்கள் போல்வன பார்க்க :

"வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளும் அரன்சேயை—வாட்கதிர்கொள்
காந்தார மார்பில் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்தமரர் விண்."

"அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே."

உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும்
உறுபொருள் யாவும்நின் றனக்கே
கள்ளமும் கரிசும் நினைந்திடா துதவிக்
கழல்இணை நினைந்துநின் கருணை
வெள்ளம்உண் டிரவு பகல்அறி யாத
வீட்டினில் இருந்துநின் னோடும்
விள்ளல்இல் லாமல் கலப்பனோ சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (ச)

நாதமும் கடந்து நிறைந்துநின் மயமே
நான்என அறிந்துநான் தானும்
பேதமும் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையேன் பிடிப்பதெந் நாளோ
ஏதமும் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமும் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (ரு)

சச்சிதா னந்த வடிவம்நம் வடிவம்
தகும்அதிட் டானம்மற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை இவற்றைப்
போக்கியாங் கவ்வடி வாகி
அச்சிதா கார போதமும் அதன்மேல்
ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (சா)

ஒன்றல இரண்டும் அலஇரண் டொன்றே
டுருஅல அருஅல உவட்ட
நன்றல நன்றல் லாதல விந்து
நாதமும் அலஇவை அனைத்தும்
பொன்றல்என் றறிந்துட் புறத்தினும் அகண்ட
பூரண மாம்சிவம் ஒன்றே
வென்றல்என் றறிநீ என்றனை சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (எ)

சத்தசத் தியல்மற் றறிந்துமெய்ப் போதத்
தத்துவ நிலைபெற விழைவோர்
சித்தமுற் றகலா தொளித்தநின் கமலச்
சேவடி தொழஎனக் கருள்வாய்
சுத்தசற் குணத்தெள் அமுதெழு கடலே
சுகபரி பூரணப் பொருளே
வித்தக முக்கண் அத்தனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (அ)

மருள்உறு மனமும் கொடியவெங் குணமும்
மதித்தறி யாததுன் மதியும்
இருள்உறு நிலையும் நீங்கிநின் அடியை
எந்தநாள் அடைகுவன் எளியேன்
அருள்உறும் ஒளியாய் அவ்வொளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரஒளி நிறைவே
வெருள்உறு சமயத் தறியொணாச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (௯)

கேவல சகல வாதனை அதனால்
கீழ்ப்படும் அவக்கடல் மூழ்கி
ஓவற மயங்கி உழலும்இச் சிறியேன்
உன்அருள் அடையும்நாள் உளதோ
பாவலர் உளத்தில் பரவிய நிறைவே
பரமசிற் சுகபரம் பரனே
மேவுறும் அடியார்க் கருளிய சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (௧௦)

கானல்நீர் விழைந்த மான்என உலகக்
கட்டினை நட்டுழன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
என்றுகொண் டருளும்நாள் உளதோ
ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
வேல்நவில் கரத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. (௧௧)

பெரும்பொருட் கிடனும் பிரணவ வடிவில்
　　பிறங்கிய ஒருதனிப் பேறே
அரும்பொருள் ஆகி மறைமுடிக் கண்ணே
　　அமர்ந்தபேர் ஆனந்த நிறைவே
தரும்பர போக சித்தியும் சுத்த
　　தருமமும் முத்தியும் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
　　விநாயக விக்கினேச் சுரனே.　　(கஉ)

திருச்சிற்றம்பலம்

2. வல்லபை கணேசர் பிரசாத மாலை[6]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருநெடு மால்அன் றால்இடை நினது
　　சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தனிற்படப்[7] பாம்பின்
　　பேர்உரு அகன்றமை மறவேன்
கருநெடுங் கடலைக் கடத்து[8]நற் றுணையே
　　கண்கள்மூன் றுடையசெங் கரும்பே
வருநெடு மருப்பொன் றில்குவா ரணமே
　　வல்லபைக் கணேசமா மணியே.[9]　　(க)

நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன்
　　நண்ணிநின் துணைஅடி வழுத்திக்
களிநலன் உடன்இவ் வுலகெலாம் படைக்கக்
　　கடைக்கணித் ததைஉளம் மறவேன்

6. 3-ஆம் அடிக் குறிப்பினைப் பார்க்க. இதற்கும் அது பொருந்தும்.

7. தளிர்பட - தொ. வே. பதிப்பு.

8. கடற்று - தொ. வே. பதிப்பு.

9. இப் பதிகப் பாக்களில், அடிகளார், தாம் வழிபடும் இறைவன் திரு உருவையும் அவன் திருஅருட் செயல்களையும் என்றும் மறவார் என்று சொல்லிக் களித்தல் காண்க.

அளிநலன் உறுபேர் ஆனந்தக் கடலே
அருமருந் தேஅருள் அமுதே
வளிநிறை உலகுக் கொருபெருந் துணையே
வல்லபைக் கணேசமா மணியே.[10] (௨)

சீர்உருத் திரமூர்த் திகட்குமுத் தொழிலும்
செய்தருள் இறைமைதந் தருளில்
பேர்உருத் திரங்கொண் டிடச்செயும் நினது
பெருமையை நாள்தொறும் மறவேன்
ஆர்உருத் திடினும் அஞ்சுதல் செய்யா
ஆண்மைஎற் கருளிய அரசே
வார்உருத் திடுபூண் மணிமுகக் கொங்கை
வல்லபைக் கணேசமா மணியே. (௩)

விண்ணவர் புகழும் மெய்கண்ட நாதன்
வித்தகக் கபிலன்ஆ தியர்க்கே
கண்அருள் செயும்நின் பெருமையை அடியேன்
கனவிலும் நனவிலும் மறவேன்
தண்அருட் கடலே அருட்சிவ போக
சாரமே சராசர நிறைவே
வண்ணமா மேனிப் பரசிவ களிறே
வல்லபைக் கணேசமா மணியே. (௪)

நாரையூர் நம்பி அமுதுகொண் டூட்ட
நற்றிரு வாய்மலர்ந் தருளிச்
சீரைமே வுறச்செய் தளித்திடும் நினது
திருஅருள் நாள்தொறும் மறவேன்
தேரைஊர் வாழ்வும் திரம்அல எனும்நற்
றிடம்எனக் கருளிய வாழ்வே
வாரைஊர் முலையாள் மங்கைநா யகிஎம்
வல்லபைக் கணேசமா மணியே. (௫)

---

10. இப் பதிகப் பாடல்களோடு, பின்வரும் பதினோராம் திருமுறைத் திருப் பாடல் போல்வனவற்றை ஒத்துணர்க :

" கனிய நினைவொடு நாடொறும் காதற் படும்அடியார்க்
கினியன் இனியொரு இன்னுங் கிலம்எவ ரும்வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவனே."

கும்பமா முனியின் கரகநீர் கவிழ்த்துக்
குளிர்மலர் நந்தனம் காத்துச்
செம்பொன்நாட் டிறைவற் கருளிய நினது
திருஅருட் பெருமையை மறவேன்
நம்பனுர்க் கினிய அருள்மகப் பேறே
நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பறு மலர்த்தார் மழைமுகில் கூந்தல்
வல்லைக் கணேசமா மணியே. (௬)

அயன்தவத் தின்ற சித்திபுத் திகள்ஆம்
அம்மையர் இருவரை மணந்தே
இயன்றஅண் டங்கள் வாழ்வுறச் செயும்நின்
எழில்மணக் கோலத்தை மறவேன்
பயன்தரும் கருணைக் கற்பகத் தருவே
பரசிவத் தெழுபரம் பரமே
வயன்தரு நிமல நித்தியப் பொருளே
வல்லைக் கணேசமா மணியே. (௭)

முன்அருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்கள் இனிதுவீ டடைய
இன்அருள் புரியும் நின்அருட் பெருமை
இரவினும் பகலினும் மறவேன்
என்அரும் பொருளே என்உயிர்க் குயிரே
என்அர சேஎன துறவே
மன்அரு நெறியில் மன்னிய அறிவே
வல்லைக் கணேசமா மணியே. (௮)

துதிபெறும் காசி நகரிடத் தனந்தம்
தூயநல் உருவுகொண் டாங்கண்
விதிபெறும் மனைகள் தொறும்விருந் தினனாய்
மேவிய கருணையை மறவேன்
நதிபெறும் சடிலப் பவளநற் குன்றே
நான்மறை நாடரு நலமே
மதிபெறும் உளத்தில் பதிபெறும் சிவமே
வல்லைக் கணேசமா மணியே. (௯)

தடக்கைமா முகமும் முக்கணும் பவளச்
சடிலமும் சதுர்ப்புயங் களும்கை
இடக்கைஅங் குசமும் பாசமும் பதமும்
இறைப்பொழு தேனும்யான் மறவேன்
விடக்களம் உடைய வித்தகப் பெருமான்
மிகமகிழ்ந் திடஅருட் பேறே
மடக்கொடி நங்கை மங்கைநா யகிஎம்
வல்லபைக் கணேசமா மணியே. (௧0)

பெருவயல் ஆறு முகன்நகல் அமர்ந்துன்
பெருமைகள் பேசிடத் தினமும்
திருவளர் மேன்மைத் திறமுறச் சூழும்
திருஅருட் பெருமையை மறவேன்
மருவளர் தெய்வக் கற்பக மலரே
மனமொழி கடந்தவான் பொருளே
வருமலை வல்லிக் கொருமுதற் பேறே
வல்லபைக் கணேசமா மணியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

3. கணேசத் திருஅருள் மாலை[11]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும்சி றப்பும்உன்
திருவ டிப்புகழ் பாடுந்தி றமும்நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறு
உணர்வும் தந்தெனை துள்ளத்த மர்ந்தவா
குருவும் தெய்வமும் ஆகிஅன் பாளர்தம்
குறைத விர்க்குங்கு ணப்பெருங் குன்றமே
வெருவும் சிந்தைவி லகக்க ஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.[12] (௧)

11. 3-ஆம் அடிக் குறிப்பு இதற்கும் பொருந்தும்.

12. இப் பதிகப் பாக்களில், அடிகளார், திருவடிப் பற்றுடையாரை அருளும் இறைவன், அருளுமாறு வேண்டிய தம்மையும் ஆண்டருளினன் என்றும், இனியும் தம்மை அவன் கைவிட மாட்டான் என்றும் — இன்ன பலவும் இயம்புதல் காண்க.

சீத நாள்மலர்ச் செல்வனும் மாமலர்ச்
செல்வி மார்பகச் செல்வனும் காண்கிலாப்
பாதம் நாடொறும் பற்றறப் பற்றுவோர்
பாதம் நாடப்ப ரிந்தருள் பாலிப்பாய்
நாதம் நாடிய அந்தத்தில் ஓங்கும்மெய்ஞ்
ஞான நாடக நாயக நான்கெனும்
வேதம் நாடிய மெய்ப்பொரு ளேஅருள்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.[13] (உ)

என்னை வேண்டிஎ னக்கருள் செய்தியேல்
இன்னல் நீங்கும்நல் இன்பமும் ஓங்கும்நின்
தன்னை வேண்டிச்ச ரண்புகுந் தேன்என்னைத்
தாங்கிக் கொள்ளும்ச ரண்பிறி தில்லைகாண்
அன்னை வேண்டிஅ ழும்மகப் போல்கின்றேன்
அறிகி லேன்நின்தி ருவுளம் ஐயனே
மின்னை வேண்டிய செஞ்சடை யாளனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (ங)

நீண்ட மால்அர வாகிக்கி டந்துநின்
நேயத் தால்கலி நீங்கிய ஆறுகேட்
டாண்ட வாநின்அ டைக்கலம் ஆயினேன்
அடிய னேன்பிழை ஆயிர மும்பொறுத்
தீண்ட வாவின்ப டிகொடுத் தென்னைநீ
என்று கொள்வதற் கெண்ணுதி யாவரும்
வேண்டு வாழ்வுத ரும்பெருந் தெய்வமே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (ச)

தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தைநீ
தானும் இந்தச்ச கத்தவர் போலவே
வஞ்சம் எண்ணிஇ ருந்திடில் என்செய்வேன்
வஞ்சம் அற்றம னத்துறை அண்ணலே

---

13. இப் பதிகப் பாக்களோடு பின்வரும் திருமுறைத் திருப்பாடல் போல்வன வற்றை உய்த்துணர்க :

" கருதுங் கருத்துடையேன் கையுடையேன் கூப்பப்
பெரிதும் பிறதிறத்துப் பேசேன்—அரிதன்றே
ஆகப் பிறையான் இனிஎன் அகம்புகுந்து
போகப் பெறுமோ புறம்."

பஞ்ச பாதகம் தீர்த்தனை என்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்அருள் வேண்டித்த ருதியோ
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௫)

கள்ள நெஞ்சகன் ஆயினும் ஐயநான்
கள்ளம் இன்றிக்க முறுகின் றேன்என
துள்ளம் நின்திரு உள்ளம்அ றியுமே
ஓது கின்றதென் போதுக ழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப்பெ ரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும் பேறவ ழங்குவாய்
வெள்ள வேணிப்பெ ருந்தகை யேஅருள்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௬)

மண்ணில் ஆசைம யக்கற வேண்டிய
மாத வர்க்கும்ம திப்பரி யாய்உனை
எண்ணி லாச்சிறி யேனையும் முன்நின்றே
என்று கொண்டனை இன்றுவி டுத்தியோ
உண்ணி லாவிய நின்திரு உள்ளமும்
உவகை[14] யோடுவர்ப் பும்கொள ஒண்ணுமோ
வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௭)

ஆணி லேஅன்றி ஆருயிர்ப் பெண்ணிலே
அலியி லேஇவ்வ டியனைப் போலவே
காணி லேன்ஒரு பாவியை இப்பெருங்
கள்ள நெஞ்சக்க டையனை மாயையாம்[15]
ஏணி லேஇடர் எய்தவி டுத்தியேல்
என்செய் கேன்இனி இவ்வுல கத்திலே
வீணி லேஉழைப் பேன்அருள் ஐயனே
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௮)

14. ஆசை - தொ. வே. பதிப்பு.

15. ஆனையா - தொ. வே. பதிப்பு.

வாளி லேவிழி மங்கையர் கொங்கையாம்
　　மலையி லேமுக மாயத்தி லேஅவர்
தோளி லேஇடைச் சூழலி லேஉந்திச்
　　சுழியி லேநிதம் சுற்றும்என் நெஞ்சம்நின்
தாளி லேநின்த ளித்தபு கழிலே
　　தங்கும் வண்ணம் தரஉளம் செய்தியோ
வேளி லேஅழ கானசெவ் வேளின்முன்
　　விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௯)

நாவி னல்உனை நாள்தொறும் பாடுவார்
　　நாடு வார்தமை நண்ணிப்பு கழவும்
ஓவி லாதுனைப் பாடவும் துன்பெலாம்
　　ஓட வும்மகிழ் ஓங்கவும் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக்
　　கடவு ளேகற்க ருங்குழி என்னும்ஊர்
மேவி அன்பர்க்க ருள்கண நாதனே
　　விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. (௧0)

திருச்சிற்றம்பலம்

4. தனித் திரு மாலை[16]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திங்கள்அம் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கைவல் லபைக்கு வாய்த்த மகிழ்நநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண் அருட்சிவ களிறே போற்றி
கங்கையை மகிழும் செல்வக் கணேசநின் கழல்கள் போற்றி.[17] (௧)

கலி வண்ணத் துறை

உலகம் பரவும் பொருள்என் கோஎன் உறவென்கோ
கலகம் பெறும்ஐம் புலன்வென் றுயரும் கதிஎன்கோ

16. அடிகளாரால் தனித் தனியாகப் பாடப்பட்ட பாக்களாகும் இவற்றை இத் தலைப்பின் கீழ், தொ. வே. அவர்கள் தொகுத்திருக்கிறார்கள்.

17. இத் திருப்பாவானது, நம் அடிகளாரின் கை எழுத்துச் சுவடியில் உள்ள வாறு இங்கு அச்சிட்டிருக்கிறது மற்றும், இது வேறு ஒரு சுவடியிலும், 3-ஆம் அடிக்குறிப்பில் கண்ட காகிதப் படியிலும் காண்கிறது.

திலகம் பெறுநெய் எனநின் றிலகும் சிவம்என்கோ
இலகைங் கரஅம் பரநின் றனைஎன் என்கேனே.[18] (உ)

அடியார் உள்ளம் தித்தித் தூறும் அமுதென்கோ
கடியார் கொன்றைச் செஞ்சடை யானைக் கன்றென்கோ
பொடியார் மேனிப் புண்ணியர் புகழும் பொருள்என்கோ
அடிகேள் சித்தி விநாயக என்என் றறைகேனே. (ங.)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கமலமலர் அயன்நயனன் முதல்அமரர் இதயம்உறு கரிசகலஅருள்செய்பசுபதியாம்
நிமலநிறை மதியின்ஒளிர் நிரதிசய பரமசுக நிலையைஅருள் புரியும்அதி பதியாம்
விமலபிர ணவவடிவ விகடதட கடகரட விபுலகய முககசுண பதியாம்
அமலபர சிவஒளியின் உதயசய விசயசய அபயஎனும் எமதுகண பதியே.[19]

கட்டளைக் கலித்துறை

அம்பொன்று செஞ்சடை அப்பரைப் போல்தன் அடியர்தம்துக்[20]
கம்பொன்றும் வண்ணம் கருணைசெய் தாளும் கருதுமின்றே
வம்பொன்று பூங்குழல் வல்லபை யோடு வயங்கியவெண்
கொம்பொன்று கொண்டெமை ஆட்கொண் டருளிய குஞ்சரமே.[21] (ஈ)

திருச்சிற்றம்பலம்

---

18. கலி வண்ணத் துறையிலுள்ள இந்த இரண்டு பாக்களும் அடிகளார் கை எழுத்தில் உள்ள மற்றொரு சுவடியில் காண்கின்றன. இவை முன் சொன்ன காகிதப் படியிலும் உண்டு.
19. இத் திருப்பா அடிகளார் கை எழுத்தில் உள்ள மற்றும் ஒரு சுவடியில் காண்கிறது.
20. 19-ஆம் அடிக் குறிப்பு இதற்கும் அமையும். ஆனல், இது முற்குறித்த காகிதப் படியிலும் காண்கிறது.
21. இப் பதிகப் பாக்களில், அடிகளார், இறைவன் அருட் புகழைப் போற்றி இன்புறுகிறார்கள். இவற்றோடு, பின்வரும் சிவப்பிரகாச சுவாமிகள், அதிரா வடிகள் திருப்பாடல்கள் போன்றவற்றைப் பார்க்க :

"எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்."

"சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேல்
சேய்மூ வுலகம் வலம்வர வேய
கொன்றையம் படலந் துன்றுசடைக் கிடந்த
ஒங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளற் றீஞ்சுவை அருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந் திடுமே."

உ. திருத் தணிகைத் திருப் பதிகங்கள்[22]

1. பிரார்த்தனை மாலை[23]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பம்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே.[24] (க)

கண்மூன் றுறுசெங் கரும்பின்முத் தேபதம் கண்டிடுவான்
மண்மூன் றுலகும் வழுத்தும் பவள மணிக்குன்றமே
திண்மூன்று நான்கு புயங்கொண் டொளிர்வச் சிரமணியே
வண்மூன் றலர்மலை வாழ்மயில் ஏறிய மாணிக்கமே.[25] (உ)

---

22. இந்தத் தலைப்பின் கீழ்த் தொகுக்கப்பட்டிருக்கும் பதிகங்களில் பெரும் பாலன திருத் தணிகையையே வெளிப்படையாகக் குறிக்க, சிறுபான்மை யன அங்ஙனம் குறிக்கப்படாமல் பொதுவகையில் இயற்றப்பட்டிருக் கின்றன. இவற்றோடு இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் தெய்வமணி மாலையும் கந்தர் சரவணப் பத்தும் சென்னையில் கந்தகோட்டத்தைக் கருதி உண்டாயிருக்கின்றன. இன்னும், இவற்றினின்று வேறுபடும் ஓவ் வோர் பாவும் உண்டு. ஆங்காங்கே உள்ள அடிக் குறிப்புக்களில் அதனைக் கண்டு தெளிக.

இப் பதிகங்கள் சார்பாக உள்ள மூலங்கள் அடிகளார் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய சுவடிகள் நான்கும், அடிகளார்க்குத் தொண்டு பூண்ட ஓர் அன்பர் எழுதிய சுவடி ஒன்றும்,காகித நோட்டுப் புத்தகங்கள் இரண்டும் ஆகும். அவ்வவற்றைச் சார்ந்த அடிக்குறிப்புக்களில் அவ்வ வற்றின் விவரமும் பிறவும் காண்க.

23. இத் திருப்பதிகத்திற்கு உரிய அடிகளார் கையெழுத்துச் சுவடியின் எட்டெண்கள் உஙஉ, உஙங, உஙச, உஙரு, உஙசா. அவற்றில் முறையே, "உ. முருகன் றுணை. கட்டளைக் கலித்துறை." என்றும்,"உ. உ. சண்முக நம." என்றும், "உ. சண்முக நம." என்றும், "உ. சண்முக நம." என்றும், "உ. சிவசண்முக நம." என்றும் அடிகளார் வரைந்து இறை இன்பம் எய்தி யிருக்கிறார்கள்.

24. இப் பதிகப் பாக்களில், அடிகளார் இறைவன் திருவடியிணைப் போற்ற அறியாது உலகியலில் ஆழ்ந்திருந்த தமக்கும், இறைவன் திருத் தணிகை யில் காட்சி கொடுத்துத் தம்மை ஆட்கொண்டு, இறப்பைத் தவிர்த் தருளினன் என்பது போல்வன இயம்பி, வியந்து மகிழ்தல் காண்க.

25. இப் பாக்களோடு பின்வரும் காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதப் பெருமானர் அருளிய மெய்ம்மொழிகள் போல்வன கண்டுவக்க :

மாணித்த ஞான மருந்தேஎன் கண்ணின்உள் மாமணியே
ஆணிப்பொன் னேஎன தாருயி ரேதணி காசலனே
தாணிற்கி லேன்நினைத் தாழாத வஞ்சர் தமதிடம்போய்ப்
பேணித் திரிந்தனன் அந்தோஎன் செய்வன்இப் பேதையனே. (ரு)

அன்னே எனைத்தந்த அப்பாஎன் றேங்கி அலறுகின்றேன்
என்னேஇவ் வேழைக் கிரங்காது நீட்டித் திருத்தல்எந்தாய்
பொன்னே சுகுணப் பொருப்பே தணிகைப் பொருப்பமர்ந்த
மன்னே கலப மயில்மேல் அழகிய மாமணியே. (சா)

மணியே தினைப்புன வல்லியை வேண்டி வளர்மறைவான்
கணியே எனநின்ற கண்ணே என்உள்ளக் களிநறவே
பணியேன் எனினும் எனைவலிந் தாண்டுன் பதந்தரவே
நணியே தணிகைக்கு வாஎன ஓர்மொழி நல்குவையே. (கு)

நல்காத ஈனர்தம் பாற்சென் றிரந்து நவைப்படுதல்
மல்காத வண்ணம் அருள்செய்கண் டாய்மயில் வாகனனே
பல்காதல் நீக்கிய நல்லோர்க் கருளும் பரஞ்சுடரே
அல்காத வண்மைத் தணிகா சலத்தில் அமர்ந்தவனே. (கூ)

அமரா வதிஇறைக் காருயிர் ஈந்த அருட்குன்றமே
சமரா புரிக்கர சேதணி காசலத் தற்பரனே
குமரா பரம குருவே குகாஎனக் கூவிநிற்பேன்
எமராஜன் வந்திடுங் கால்ஐய னேஎனை ஏன்றுகொள்ளே. (எ)

கொள்உண்ட வஞ்சர்தம் கூட்டுண்டு வாழ்க்கையில் குட்டுண்டுமேல்
துள்உண்ட நோயினில் சூடுண்டு மங்கையர் தோய்வெனும்ஓர்
கள்உண்ட நாய்க்குன் கருணைஉண் டோகற் கடல்அமுதத்
தெள்உண்ட தேவர் புகழ்தணி காசலச் சிற்பரனே. (அ)

---

25 (தொடர்ச்சி). "காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேர்அறுத்தோம்—கோல
அாணூர் அவிந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சாணூ விந்தங்கள் சார்ந்து."

"கூகா எனஎன் கிளைகூ டிஅழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே."

சிற்பகல் மேவும்இத் தேகத்தை ஓம்பித் திருஅனையார்
தற்பக மேவிழைந் தாழ்ந்தேன் தணிகை தனில்அமர்ந்த
கற்பக மேநின் கழல்கரு தேன்இக் கடைப்படும்என்
பொற்பகம் மேவிய நின்அருள் என்என்று போற்றுவதே. (கூ)

போற்றேன் எனினும் பொறுத்திடல் வேண்டும் புலிநடையாம்
சேற்றே விழுந்து தியங்குகின் றேனைச் சிறிதும்இனி
ஆற்றேன் எனதர சேஅமு தேஎன் அருட்செல்வமே
மேற்றேன் பெருகு பொழில்தணி காசல வேலவனே. (கO)

வேல்கொண்ட கையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயில்
மேல்கொண்ட வீறும் மலர்முகம் ஆறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலும்கண் டால்அன்றிக் காமன்எய்யும்
கோல்கொண்ட வன்மை அறுமோ தணிகைக் குருபரனே. (கக)

குருவே அயன்அரி ஆதியர் போற்றக் குறைதவிர்ப்பான்
வருவேல் பிடித்து மகிழ்வள்ள லேகுண மாமலையே
தருவே தணிகைத் தயாநிதி யேதுன்பச் சாகரமாம்
கருவேர் அறுத்திக் கடையனைக் காக்கக் கடன்உனக்கே. (கஉ)

உனக்கே விழைவுகொண் டோலமிட் டோங்கி உலறுகின்றேன்
எனக்கே அருள்இத் தமியேன் பிழைஉளத் தெண்ணியிடேல்
புனக்கேழ் மணிவல்லி யைப்புணர்ந் தாண்டருள் புண்ணியனே
மனக்கேத மாற்றும் தணிகா சலத்தமர் வானவனே. (கூ)

வானோர் குடிகளை வாழ்வித்த தெய்வ மணிச்சுடரே
நான்ஓர் எளியன்என் துன்பறுத் தாள்என நண்ணிநின்றேன்
ஏனோநின் நெஞ்சம் இரங்காத வண்ணம் இருங்கணிப்பூந்
தேனோ டருவி பயிலும் தணிகைச் சிவகுருவே. (கச)

கையாத துன்பக் கடல்மூழ்கி நெஞ்சம் கலங்கிஎன்றன்
ஐயாநின் பொன்அடிக் கோலமிட் டேன்என்னை ஆண்டுகொள்வாய்
மையார் தடங்கண் மலைமகள் கண்டு மகிழ்செல்வமே
செய்யார் தணிகை மலைஅர சேஅயிற் செங்கையனே. (கரு)

செங்கைஅம் காந்தள் அனையமின் னார்தம் திறத்துழன்றே
வெங்கயம் உண்ட விளவாயி னேன்விறல் வேலினைஓர்
அங்கையில் ஏந்திய ஐயா குறவர் அரிதில்பெற்ற
மங்கை மகிழும் தணிகேச னேஅருள் வந்தெனக்கே. (கசு)

கேளாது போல்இருக் கின்றனை ஏழைஇக் கீழ்நடையில்
வாளா இடர்கொண் டலறிடும் ஓலத்தை மாமருந்தே
தோளா மணிச்சுட ரேதணி காசலத் தூய்ப்பொருளே
நாளாயின் என்செய்கு வேன்இறப் பாய நவைவருமே. (கஎ)

நவையே தருவஞ்ச நெஞ்சகம் மாயவும் நான்உன்அன்பர்
அவையே அணுகவும் ஆனந்த வாரியில் ஆடிடவும்
சுவையே அமுதன்ன நின்திரு நாமம் துதிக்கவும்ஆம்
இவையேஎன் எண்ணம் தணிகா சலத்துள் இருப்பவனே. (கஅ)

இருப்பாய மாய மனத்தால் வருந்தி இளைத்துநின்றேன்
பொருப்பாய கன்மப் புதுவாழ்வில் ஆழ்ந்தது போதும்இன்றே
கருப்பாழ் செயும்உன் கழல்அடிக் கேஇக் கடையவனைத்
திருப்பாய் எனில்என்செய் கேன்தணி காசலத் தெள்ளமுதே. (கசு)

தெள்அகத் தோங்கிய செஞ்சுட ரேசிவ தேசிகனே
கள்அகத் தேமலர்க் காஆர் தணிகைஎங் கண்மணியே
எள்அகத் தேஉழன் றென்நின் றலைத்தெழுந் திங்கும்அங்கும்
துள்அகத் தேன்சிரம் சேரும்கொ லோநின் துணைஅடியே. (உ0)

அடியேன் எனச்சொல்வ தல்லால்நின் தாள்அடைந் தாரைக்கண்டே
துடியேன் அருண கிரிபாடும் நின்அருள் தோய்புகழைப்
படியேன் பதைத்துரு கேன்பணி யேன்மனப் பந்தம்எலாம்
கடியேன் தணிகையைக் காணேன்என் செய்வென்எம் காதலனே. (உக)

தலனே அடியர் தனிமன மாம்புகழ் சார்தணிகா
சலனே அயன்அரி ஆதியர் வாழ்ந்திடத் தாங்கயில்வேல்
வலனேநின் பொன்அருள் வாரியின் மூழ்க மனோலயம்வாய்ந்
திலனேல் சனன மரணம்என் னும்கடற் கென்செய்வனே. (உஉ)

என்செய்கை என்செய்கை எந்தாய்நின் பொன்அடிக் கேஅலங்கல்
வன்செய்கை நீங்க மகிழ்ந்தணி யேன்துதி வாய்உரைக்க
மென்செய்கை கூப்ப விழிநீர் துளித்திட மெய்சிலிர்க்கத்
தன்செய்கை என்பதற் றேதணி காசலம் சார்ந்திலனே. (உங)

சாரும் தணிகையில் சார்ந்தோய்நின் தாமரைத் தாள்துணையைச்
சேரும் தொழும்பர் திருப்பதம் அன்றிஇச் சிற்றடியேன்
ஊரும் தனமும் உறவும் புகழும் உரைமடவார்
வாருந் தணிமுலைப் போகமும் வேண்டிலன் மண்விண்ணிலே. (உச)

மண்நீர் அனல்வளி வான்ஆகி நின்றருள் வத்துஎன்றே
தெண்நீர்மை யால்புகழ் மால்அய னேமுதல் தேவர்கள்தம்
கண்நீர் துடைத்தருள் கற்பக மேஉனைக் கண்டுகொண்டேன்
தண்நீர் பொழிற்கண் மதிவந் துலாவும் தணிகையிலே. (உரு)

தணியாத துன்பத் தடங்கடல் நீங்கநின் தன்மலர்த்தாள்
பணியாத பாவிக் கருளும்உண் டோபசு பாசம்அற்றோர்க்
கணியாக நின்ற அருட்செல்வ மேதணி காசலனே
அணிஆ தவன்முத லாம்அட்ட மூர்த்தம் அடைந்தவனே. (உசு)

அடையாத வஞ்சகர் பால்சென் றிரந்திங் கலைந்தலைந்தே
கடையான நாய்க்குன் கருணைஉண் டோதணி கைக்குள்நின்றே
உடையாத நல்நெஞ்சர்க் குண்மையைக் காண்பிக்கும் உத்தமனே
படையாத தேவர் சிறைமீட் டளித்தருள் பண்ணவனே. (உஎ)

பண்ணவ னேநின் பதமலர் ஏத்தும் பயன்உடையோர்
கண்ணவ னேதணி காசல னேஅயில் கையவனே
விண்ணவர் ஏத்திய மேலவ னேமயல் மேவுமனம்
புண்ணவ னேனையும் சேர்ந்தாய்என் னேஉன்றன் பொன்அருளே.(உஅ)

பொன்ஆர் புயத்தனும் பூஉடை யோனும் புகழ்மணியே
என்ஆவி யின்துணை யேதணி காசலத் தேஅமர்ந்த
மன்னுநின் பொன்அடி வாழ்த்தாது வீணில் வருந்துறுவேன்
இன்னு இயற்றும் இயமன்வந் தால்அவற் கென்சொல்வனே. (உகூ)

சொல்லார் மலர்புனை அன்பகத் தோர்க்கருள் சொல்லும்எல்லாம்
வல்லாய்என் றேத்த அறிந்தேன் இனிஎன்றன் வல்வினைகள்
எல்லாம் விடைகொண் டரியும்என் மேல்இய மன்சினமும்
செல்லாது காண்ஐய னேதணி காசலச் சீர்அரைசே. (௩௦)

திருச்சிற்றம்பலம்

2. எண்ணப் பத்து[26]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அணிகொள் வேல்உடை அண்ணலே நின்திரு அடிகளை அன்போடும்
பணிகி லேன்அகம் உருகிநின் றடிலேன் பாடிலேன் மனமாயைத்

26. இத் திருப்பதிகம் உள்ள அடிகளாரின் கையெழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உகூசு, உகூஎ. உகூஎ-ஆம் ஏட்டினை அடிகளார் " உ. சிவ சண்முக துமு." என்று எழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

தணிகி லேன்திருத் தணிகையை நினைகிலேன் சாமிநின் வழிபோகத்
துணிகி லேன்இருந் தென்செய்தேன் பாவியேன் துன்பமும் எஞ்சேனே.27

சேல்பி டித்தவன் தந்தைஆ தியர்தொழும் தெய்வமே சிவப்பேறே
மால்பி டித்தவர் அறியொணாத் தணிகைமா மலைஅமர்ந் திடுவாழ்வே
வேல்பி டித்தருள் வள்ளலே யான்சது ர் வேதமும் காணாநின்
கால்பி டிக்கவும் கருணைநீ செய்யவும் கண்டுகண் களிப்பேனோ.28 (உ)

களித்து நின்திருக் கழலிணை ஏழையேன் காண்பனோ அலதன்பை
ஒளித்து வன்துயர் உழப்பனோ இன்னதென் றுணர்கிலேன் அருட்போதம்
தெளித்து நின்றிடும் தேசிக வடிவமே தேவர்கள் பணிதேவே
தளிர்த்த தண்பொழில் தணிகையில் வளர்சிவ தாருவே மயிலோனே. (ரூ)

மயிலின் மீதுவந் தருள்தரும் நின்திரு வரவினுக் கெதிர்பார்க்கும்
செயலி னேன்கருத் தெவ்வணம் முடியுமோ தெரிகிலேன் என்செய்கேன்
அயிலின் மாமுதல் தடிந்திடும் ஐயனே ஆறுமா முகத்தேவே
கயிலை நேர்திருத் தணிகைஅம் பதிதனில் கந்தஎன் றிருப்போனே. (சு)

இருப்பு நெஞ்சகக் கொடியனேன் பிழைதனை எண்ணுறேல் இனிவஞ்சக்
கருப்பு காவணம் காத்தருள் ஐயனே கருணைஅம் கடலேஎன்
விருப்புள் ஊறிநின் றோங்கிய அமுதமே வேல்உடை எம்மானே
தருப்பு காஇனன் விலகுறும் தணிகைவாழ் சாந்தசற் குணக்குன்றே.

27. இப் பதிகப் பாக்களில், அடிகளார், இறைவனைப் போற்றாத தம்மை, இறைவன் மன்னித்து ஆட்கொண்டு, தன் அடியரொடு சேர்ப்பனோ அல்லனோ என்று இரங்குதல் காண்க.

28. இப் பா முதலியவற்றோடு பின்வரும் அருணகிரிநாதப் பெருமானார், குமரகுருபர சுவாமிகள் மெய்ம்மொழி போல்வன பார்த்துய்க :

“ புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்தில் புகட்டிஅன்பாய்
முத்தியை வாங்க அறிகின் றிலேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.”

“ . . . . . . —தம்மை விடுத்
தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.”

குன்று நேர்பிணித் துயரினல் வருந்திநின் குரைகழல் கருதாத
துன்று வஞ்சகக் கள்ளனேன் நெஞ்சகத் துயர்அறுத் தருள்செய்வான்
இன்று மாமயில் மீதினில் ஏறிஇவ் வேழைமுன் வருவாயேல்
நன்று நன்றதற் கென்சொல்வார் தணிகைவாழ் நாதநின் அடியாரே. (௬)

யாரை யுந்துணை கொண்டிலேன் நின்அடி இணைதுணை அல்லால்நின்
பேரை உன்னிவாழ்ந் திடும்படி செய்வையோ பேதுறச் செய்வாயோ
யாரை யும்உயிர்ப் பரப்பையும் படைத்தருள் பகவனே உலகேத்தும்
சீரை உற்றிடும் தணிகைஅம் கடவுள்நின் திருவுளம் அறியேனே. (எ)

உளங்கொள் வஞ்சக நெஞ்சர்தம் இடம்இடர் உழந்தகம் உலைவுற்றேன்
வளங்கொள் நின்பத மலர்களை நாள்தொறும் வாழ்த்திலேன் என்செய்கேன்
குளங்கொள் கண்ணனும் கண்ணனும் பிரமனும் குறிக்கரும் பெருவாழ்வே
தளங்கொள்பொய்கைசூழ் தணிகைஅம்பதியில்வாழ் தனிப்பெரும் புகழ்த்தேவே.

தேவர் நாயகன் ஆகியே என்மனச் சிலைதனில் அமர்ந்தோனே
மூவர் நாயகன் எனமறை வாழ்த்திடும் முத்தியின் வித்தேஇங்
கேவ ராயினும் நின்திருத் தணிகைசென் றிறைஞ்சிடில் அவரேஎன்
பாவ நாசம்செய் தென்றனை ஆட்கொளும் பரஞ்சுடர் கண்டாயே. (௯)

கண்ட னேகவா னவர்தொழும் நின்திருக் கழல்இணை தனக்காசை
கொண்ட னேகமாய்த் தெண்டன்இட் டானந்தக் கூத்தினை உகந்தாடித்
தொண்ட னேனும்நின் அடியரில் செறிவனே துயர்உழந் தலைவேனே
அண்ட னேதிருத் தணிகைவாழ் அண்ணலே அணிகொள்வேல் கரத்தோனே.

திருச்சிற்றம்பலம்

3. செழுஞ் சுடர் மாலை[29]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஊனே உடையே பொருளேஎன் றுருகி மனது தடுமாறி
வீணே துயரத் தழுந்துகின்றேன் வேறோர் துணைநின் அடிஅன்றிக்

29. இத் திருப்பதிகம் உள்ள அடிகளார் கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௩அ, உ௩௯. இவற்றின் தொடக்கத்தில் முறையே " உ. சண்முக நம. உ. " என்றும், " உ. சண்முக நம. " என்றும், அடிகளார் குறித்து எண்ணியிருக்கிறார்கள்.

காணேன் அமுதே பெருங்கருணைக் கடலே கனியே கரும்பேநல்
சேணவர் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே.[30] (௧)

பாரும் விசும்பும் அறியஎனைப் பயந்த தாயும் தந்தையும்நீ
ஓரும் போதிங் கெனில்எளியேன் ஓயாத் துயருற் றிடல்நன்றோ
யாரும் காண உனைவாதுக் கிழுப்பேன் அன்றி என்செய்கேன்
சேரும் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே.[31] (௨)

கஞ்சன் துதிக்கும் பொருளேஎன் கண்ணே நின்னைக் கருதாத
வஞ்சர் கொடிய முகம்பார்க்க மாட்டேன் இனிஎன் வருத்தம்அறத்
தஞ்சல் எனவந் தருளாயேல் ஆற்றேன் கண்டாய் அடியேனே
செஞ்சந் தனம்சேர் தணிகைமலைத் தேனே ஞானச் செழுஞ்சுடரே. (௩)

மின்நேர் உலக நடைஅதனால் மேவும் துயருக் காளாகிக்
கல்நேர் மனத்தேன் நினைமறந்தேன் கண்டேன் கண்டாய் கற்பகமே
பொன்னே கடவுள் மாமணியே போதப் பொருளே பூரணமே
தென்னேர் தணிகை மலைஅரசே தேவே ஞானச் செழுஞ்சுடரே. (௪)

---

30. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் கடைப்பட்டவராயினும், தமக்குத் தாயும் தந்தையுமாய இறைவன், தம்மை ஆட்கொண்டு, தன் அடியாரொடு சேர்த்தலைக் கடனாக உடையான் என்பது முதலியன கூறுதல் காண்க.

31. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் மணிவாசகப் பெருமானார், பட்டினத் தடிகளார்தம் பொய்யாமொழி போல்வன பார்த்தமைக :

"என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னைஒப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ மிக்கின்மெய்யே
உன்னைஒப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
அன்னைஒப் பாய்எனக் கத்தன்ஒப் பாய்என் அரும்பொருளே."

" . . . . . நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திரம் ஆக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல்நின் கடனே."

வளைத்தே வருத்தும் பெருந்துயரால் வாடிச் சவலை மகவாகி
இளைத்தேன் தேற்றும் துணைகாணேன் என்செய் துய்கேன் எந்தாயே
விளைத்தேன் ஒழுகும் மலர்த்தருவே விண்ணே விழிக்கு விருந்தேசீர்
திளைத்தோர் பரவும் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. (ரு)

அடுத்தே வருத்தும் துயர்க்கடலில் அறியா தந்தோ விழுந்திட்டேன்
எடுத்தே விடுவார் தமைக்காணேன் எந்தாய் எளியேன் என்செய்கேன்
கடுத்தேர் கண்டத் தெம்மான்தன் கண்ணே தருமக் கடலேஎன்
செடித்தீர் தணிகை மலைப்பொருளே தேனே ஞானச் செழுஞ்சுடரே.(சு)

உண்டால் குறையும் எனப்பசிக்கும் உலுத்தர் அசுத்த முகத்தைஎதிர்
கண்டால் நடுங்கி ஒதுங்காது கடைகாத் திரந்து கழிக்கின்றேன்
கொண்டார் அடியர் நின்அருளை யானோ ஒருவன் குறைபட்டேன்
திண்டார் அணிவேல் தணிகைமலைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. (எ)

வேட்டேன் நினது திருஅருளை வினையேன் இனிஇத் துயர்பொறுக்க
மாட்டேன் மணியே அன்னேஎன் மன்னே வாழ்க்கை மாட்டுமனம்
நாட்டேன் அயன்மால் எதிர்வரினும் நயக்கேன் எனக்கு நல்காயோ
சேட்டேன் அலறும் பொழில்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.

கல்லா நாயேன் எனினும்எனைக் காக்கும் தாய்நீ என்றுலகம்
எல்லாம் அறியும் ஆதலினால் எந்தாய் அருளா திருத்திஎனில்
பொல்லாப் பழிவந் தடையும்உனக் கரசே இனியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.

அன்னே அப்பா எனநின்தாட் கார்வம் கூர்ந்திங் கலைகின்றேன்
என்னே சற்றும் இரங்கிலைநீ என்நெஞ் சோநின் நல்நெஞ்சம்
மன்னே ஒளிகொள் மாணிக்க மணியே குணப்பொன் மலையேநல்
தென்னேர் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.

நடைஏய் துயரால் மெலிந்துநினை நாடா துழலும் நான்நாயில்
கடையேன் எனினும் காத்தல்என்றன் கண்ணே நினது கடன்அன்றோ
தடையேன் வருவாய் வந்துன்அருள் தருவாய் இதுவே சமயம்காண்
செடிதீர்த் தருளும் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. (கக)

திருச்சிற்றம்பலம்

4. குறை இரந்த பத்து[32]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சீர்பூத்த அருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே எனதுகுலத் தெய்வ மேநல்
கூர்பூத்த வேல்மலர்க்கை அரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி ஏழை
பிழைக்கஅருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்தில்உற விடில்என் செய்கேன்
பாவியேன் அந்தோஎவன் பயந்தீ ரேனே.33 (க)

தீராத துயர்க்கடலில் அழுந்தி நாளும்
தியங்கிஅழு தேங்கும்இந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயல்என்னே எந்தாய் எந்தாய்
பாவினை விட்டனையோ பண்ணு ளாக
ஏர்ஆய அருள்தருவாய் என்றே ஏமாந்
திருந்தேனே என்செய்கேன் யாரும் இல்லேன்
சீர்ஆருந் தணிகைவரை அமுதே ஆதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே.34 (உ)

---

32. இத் திருப்பதிகம் உள்ள அடிகளார் கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௪ம, உ௪௧. இவற்றை, அவர்கள், " ௳. சண்முக நம." என்று எழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

33. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் பிழை கருதித் தம்மை ஆட்கொளாது விடுத்தல் அருளுக்கு அழகன்று என்றும், அங்ஙனம் ஆட்கொளாது விடுத்தல் இறப்புக்குத் தம்மை உட்படுத்தும் என்றும்—இன்ன பலப்பல இயம்பி, முறையிடுதல் காண்க.

34. இப் பா முதலியவற்றோடு பின்வரும் அருணகிரிநாதப் பெருமானாரின் அநுபூதி போல்வனவற்றை ஒத்துணர்க :

" ஆதா ரம்இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே."

" சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயும்நாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே."

தெளிக்குமறைப் பொருளேஎன் அன்பே என்றன்
செல்வமே திருத்தணிகைத் தேவே அன்பர்
களிக்கும்மறைக் கருத்தேமெய்ஞ் ஞான நீதிக்
கடவுளே நின்அருளைக் காணேன் இன்னும்
சுளிக்கும்மிடித் துயரும்யமன் கயிறும் ஈனத்
தொடர்பும்மலத் தடர்பும்மனச் சோர்வும் அந்தோ
அளிக்கும்எனை என்செயுமோ அறியேன் நின்றன்
அடித்துணையே உறுதுணைமற் றன்றி உண்டோ. (௫)

உண்டாய உலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்தவ் வுயிர்வினைகள் ஒருங்கே நாளும்
கண்டாயே இவ்வேழை கலங்கும் தன்மை
காணாயோ பன்னிரண்டு கண்கள் கொண்டோய்
தண்டாத நின்அருட்குத் தகுமோ விட்டால்
தருமமோ தணிகைவரைத் தலத்தின் வாழ்வே
விண்டாதி தேவர்தொழும் முதலே முத்தி
வித்தேசொற் பதம்கடந்த வேற்கை யானே. (௬)

கையாத அன்புடையார் அங்கை மேவும்
கனியேஎன் உயிரேஎன் கண்ணே என்றும்
பொய்யாத பூரணமே தணிகை ஞானப்
பொருளேநின் பொன்அருள்இப் போதியான் பெற்றால்
உய்யாத குறைஉண்டோ துயர்சொல் லாமல்
ஓடுமே யமன்பாசம் ஒய்ந்து போம்என்
ஐயாநின் அடியரொடு வாழ்கு வேன்இங்
கார்உனைஅல் லால்எனக்கின் றருள்செய் வாயே. (௭)

வாய்க்கும்உன தருள்என்றே அந்தோ நாளும்
வழிபார்த்திங் கிளைக்கின்றேன் வருத்தும் பொல்லா
நோய்க்கும்உறு துயர்க்கும்இலக் கானேன் மாழ்கி
நொந்தேன்நின் அருள்காணேன் நுவலும் பாசத்
தேய்க்கும்அவன் வரில்அவனுக் கியாது சொல்வேன்
என்செய்கேன் துணைஅறியா ஏழை யேனே
தூய்க்குமர குருவேதென் தணிகை மேவும்
சோதியே இரங்காயோ தொழும்பா ளர்க்கே. (௮)

ஆளாயோ துயர்அளக்கர் வீழ்ந்து மாழ்கி
ஐயாவோ எனும்முறையை அந்தோ சற்றும்
கேளாயோ என்செய்கேன் எந்தாய் அன்பர்
கிளத்தும்உன தருள்எனக்குக் கிடையா தாகில்
நாளாய்ஓர் நடுவன்வரில் என்செய் வானே
நாயினேன் என்சொல்வேன் நாணு வேனே
தோளாஓர் மணியேதென் தணிகை மேவும்
சுடரேஎன் அறிவேசிற் சுகங்கொள் வாழ்வே. (எ)

வாழ்வேநற் பொருளேநல் மருந்தே ஞான
வாரிதியே தணிகைமலை வள்ள லேயான்
பாழ்வேலை எனுங்கொடிய துயருள் மாழ்கிப்
பதைத்தையா முறையோநின் பதத்துக் கென்றே
தாழ்வென்ற தறிந்திலையே நாயேன் மட்டும்
தயவிலையோ நான்பாவி தானே பார்க்குள்
ஆழ்வேன்என் றயல்விட்டால் நீதி யேயோ
அச்சோஇங் கென்செய்கேன் அண்ணல் அண்ணல். (அ)

அண்ணலே நின்அடியை அன்றி வேறோர்
ஆதரவிங் கறியேன்நெஞ் சழிந்து துன்பால்
புண்ணுவேன் தன்னைஇன் னும் வஞ்சர் பாற்போய்ப்
புலந்துமுக வாட்டம்உடன் புலம்பி நிற்கப்
பண்ணுதே யாவன்இவன் பாவிக் குள்ளும்
படுபாவி என்றென்னைப் பரிந்து தள்ள
எண்ணுதே யான்மிகவும் ஏழை கண்டாய்
இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்கும் கோவே. (கூ)

கோவேநல் தணிகைவரை அமர்ந்த ஞான
குலமணியே குகனேசற் குருவே யார்க்கும்
தேவேஎன் விண்ணப்பம் ஒன்று கேண்மோ
சிந்தைதனில் நினைக்கஅருள் செய்வாய் நாளும்
பூவேயும் அயன்திருமால் புலவர் முற்றும்
போற்றும்எழில் புரந்தரன்எப் புவியும் ஓங்கச்
சேவேறும் பெருமான்இங் கிவர்கள் வாழ்த்தல்
செய்துவக்கும் நின்இரண்டு திருத்தாள் சீரே. (கo)

திருச்சிற்றம்பலம்

5. ஜீவசாட்சி மாலை[35]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பண்ஏறும் மொழிஅடியர் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினைஇப் பாவி பார்க்கில்
கண்ஏறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டுகிலாய் கருணை ஈதோ
விண்ஏறும் அரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேஎன் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ஏறு பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.[36] (க)

பண்டுமன துவந்துகுணம் சிறிதும் இல்லாப்
பாவியேன் தனைஆண் டாய் பரிவால் இன்று
கொண்டுகுலம் பேசுதல்போல் எளியேன் குற்றம்
குறித்துவிடில் என்செய்கேன் கொடிய னேனைக்
கண்டுதிருத் தொண்டர்நகை செய்வார் எந்தாய்
கைவிடேல் உன்ஆணை காண்முக் காலும்
தண்துளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.[37] (உ)

---

35. இத் திருப்பதிகத்திற்கு உரிய அடிகளார் கைஎழுத்துச் சுவடியின் எட்டெண்கள் உசஉ, உசங, உசச, உசரு, உசசு. இவற்றின் முதல் எட்டின் முதலில், "உ. விருத்தம்." என்றும், மற்றவற்றின் முதலில் "உ" என்றும் அடிகளார் எழுதியிருக்கிறார்கள்.

36. இப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவன் திரு அடிக் காட்சியைத் தமக்குக் கனவிலாவது அருளவேண்டும் என்றும், இறைவனது கருணை காணாது அழும் தமக்கு அருள் வெளியில் இருக்க இடம் இல்லையோ என்று ஏங்கியும், உலக மயக்கில் அழுந்திய தம்மைத் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்றும், வேறுதுணை அறியாத தம்மைத் தனியே விடுதல் இறைவனுக்கு அழகன்று என்றும்—இன்ன பல இயம்புதல் காண்க.

37. இப் பதிகப் பாக்களோடு பின்வரும் திருவாசகம், திருப்புகழ் போன்ற தெய்வப் பெருமறை தேர்ந்து தெளிக :

"ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான் ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்ட(து) இரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே."

புன்புலைய வஞ்சகர்பால் சென்று வீணே
புகழ்ந்துமனம் அயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்
வன்புலைய வயிற்றேம்பிப் பிறவி நோய்க்கு
மருந்தாய நின்அடியை மறந்தேன் அந்தோ
இன்புலைய உயிர்கொள்வான் வரில்என் பால்அவ்
வியமனுக்கிங் கென்சொல்கேன் என்செய்கேனே
தன்புகழ்காண் அருந்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (௩)

பெருங்களப முலைமடவார் என்னும் பொல்லாப்
பேய்க்கோட்பட் டாடுகின்ற பித்த னேனுக்
கிரும்புலவர்க் கரியதிரு அருள்ஈ வாயேல்
என்சொலார் அடியர்அதற் கெந்தாய் எந்தாய்
கரும்பின்இழிந் தொழுகும்அருள் சுவையே முக்கண்
கனிகனிந்த தேனேஎன் கண்ணே ஞானம்
தரும்புனிதர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (௪)

கல்அளவாம் நெஞ்சம்என வஞ்ச மாதர்
கண்மாயம் எனும்கயிற்றால் கட்டு வித்துச்
சொல்அளவாத் துன்பம்எனும் கடலில் வீழ்த்தச்
சோர்கின்றேன் அந்தோநல் துணைஒன் றில்லேன்
மல்அளவாய்ப் பவம்மாய்க்கும் மருந்தாம் உன்றன்
மலர்ப்பாதப் புணைதந்தால் மயங்கேன் எந்தாய்
சல்லம்உலாத் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (௫)

அன்னைமுத லாம்பந்தத் தழுங்கி நாளும்
அலைந்துவயி றேம்பிமனம் அயர்ந்து நாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாம் சொல்லி
முடியேன்செய் பிழைகருதி முனியேல் ஐயா
பொன்னைநிகர் அருட்குன்றே ஒன்றே முக்கட்
பூமணமே நறவேகற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (௬)

---

37 (தொடர்ச்சி). " . . . . —வினையேனைக்
கருவி ழாது சீரோதி அடிமை பூண லாமாறு
கனவி லாள்சு வாமீநின்—மயில்வாழ்வும்
கருணை வாரி கூர்ஏக முகமும் வீரம் மாறாத
கழலும் நீப வேல்வாகும்—மறவேனே."

பன்அருவன் துயரால்நெஞ் சழிந்து நாளும்
　　பதைத்துருகி நின்அருட்பால் பருகக் கிட்டா
துன்னரும்பொய் வாழ்க்கைஎனும் கானத் திந்த
　　ஊர்நகைக்கப் பாவிஅழல் உணர்ந்தி லாயோ
என்அருமை அப்பாஎன் ஐயா என்றன்
　　இன்உயிர்க்குத் தலைவாஇங் கெவர்க்கும் தேவா
தன்இயல்சீர் வளர்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (எ)

கோவேநின் பதம்துதியா வஞ்ச நெஞ்சக்
　　கொடியோர்பால் மனவருத்தம் கொண்டாழ் கின்றேன்
சாவேனும் அல்லன்நின்பொன் அருளைக் காணேன்
　　தமியேனை உய்யும்வண்ணம் தருவ தென்றோ
சேஏறும் சிவபெருமான் அரிநின் ஈன்ற
　　செல்வமே அருள்ஞானத் தேனே அன்பர்
தாவேதம் தெறும்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (அ)

ஓயாது வரும்மிடியால் வஞ்சர் பால்சென்
　　றுளங்கலங்கி நாணிஇரந் துழன்றெந் நாளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
　　மருந்தாய நின்அடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
　　சற்குருவாய்த் தேவாகித் தழைத்த ஒன்றே
சாயாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கூ)

மின்னனும் இடைமடவார் அல்கு லாய
　　வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தேன் அல்லால்
எந்நாளும் உனைப்போற்றி அறியேன் என்னே
　　ஏழைமதி கொண்டேன்இங் கென்செய் கேனே
அன்னைஎன் அப்பாஎன் றாற்றும் அன்பர்க்
　　கார்அமுதே அருட்கடலே அமரர் கோவே
தன்னார்வத் தமர்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கo)

வன்சொலினர் இடைஅடைந்து மாழ்கும் இந்த
மாபாவி யேன்குறையை வகுத்து நாளும்
என்சொலினும் இரங்காமல் அந்தோ வாளா
இருக்கின்றாய் என்னேநின் இரக்கம் எந்தாய்
இன்சொல்அடி யவர்மகிழும் இன்ப மேஉள்
இருள்அகற்றும் செழுஞ்சுடரே எவர்க்கும் கோவே
தன்சொல்வளர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கக)

மீளாத வன்துயர்கொண் டுனர் தம்பால்
மெலிந்துநினை அழைத்தலறி விம்மா நின்றேன்
கேளாத கேள்விஎலாம் கேட்பிப் பாய்நீ
கேட்கிலையோ என்அளவில் கேள்வி இன்றோ
மாளாத தொண்டர்அக இருளை நீக்கும்
மதியேசிற் சுகஞான மழைபெய் விண்ணே
தாளாளர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கஉ)

மண்ணினால் மங்கையரால் பொருளால் அந்தோ
வருந்திமனம் மயங்கிமிக வாடி நின்றேன்
புண்ணியா நின்அருளை இன்னும் காணேன்
பொறுத்துமுடி யேன்துயரம் புகல்வ தென்னே
எண்ணினால் அளப்பரிய பெரிய மோன
இன்பமே அன்பர்தம திதயத் தோங்கும்
தண்ணினால் பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கங)

வஞ்சகராம் கானின்இடை அடைந்தே நெஞ்சம்
வருந்திஉறு கண்வெயிலால் மாழாந் தந்தோ
தஞ்சம்என்பார் இன்றிஒரு பாவி நானே
தனித்தருள்நீர்த் தாகம்உற்றேன் தயைசெய் வாயோ
செஞ்சொல்மறை முடிவிளக்கே உண்மை ஞானத்
தேறலே முத்தொழில்செய் தேவர் தேவே
சஞ்சலம்நீத் தருள்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கச)

வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா
　　வஞ்சகநெஞ் சால்உலகில் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பால் சிந்தை வைக்கும்
　　பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கும் ஞான
　　இன்பமே என்அரசே இறையே சற்றும்
தாழாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கசு)

உளந்தளர விழிசுருக்கும் வஞ்சர் பால்சென்
　　றுத்தமநின் அடியைமறந் தோயா வெய்யில்
இளந்தளிர்போல் நலிந்திரந்திங் குழலும் இந்த
　　ஏழைமுகம் பார்த்திரங்காய் என்னே என்னே
வளந்தருசற் குணமலையே முக்கட் சோதி
　　மணியின்இருந் தொளிர்ஒளியே மயிலூர் மன்னே
தளந்தரும்பூம் பொழில்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கசு)

கல்லாத வஞ்சகர்பால் சென்று வீணாள்
　　கழித்துநிற்கும் கடையன்இவன் கருணை இல்லாப்
பொல்லாத பாவிஎன எண்ணி என்னைப்
　　புறம்போக்கில் ஐயாயான் புரிவ தென்னே
எல்லாம்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
　　இறைவனே மயில்ஏறும் எம்பி ரானே
சல்லாப வளத்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கள)

கன்னேய நெஞ்சகர்மாட் டணுகி ஐயோ
　　கரைந்துருகி எந்தாய்நின் கருணை காணா
தென்னேஎன் றேங்கிஅழும் பாவி யேனுக்
　　கிருக்கஇடம் இலையோநின் இதயங் கல்லோ
பொன்னேஎன் உயிர்க்குயிராய்ப் பொருந்து ஞான
　　பூரணமே புண்ணியமே புனித வைப்பே
தன்நேரில் தென்தணிகை மணியே ஜீவ
　　சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கஅ)

பாவவினைக் கோர்இடமாம் மடவார் தங்கள்
பாழ்ங்குழிக்கண் வீழமனம் பற்றி அந்தோ
மாவல்வினை யுடன்மெலிந்திங் குழல்கின் றேன்நின்
மலர்அடியைப் போற்றேன்என் மதிதான் என்னே
தேவர்தொழும் பொருளேஎன் குலத்துக் கெல்லாம்
தெய்வமே அடியர்உளம் செழிக்கும் தேனே
தாவகன்றோர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (கக)

கன்னியர்தம் மார்பிடங்கொண் டலைக்கும் புன்சீழ்க்
கட்டிகளைக் கருதிமனம் கலங்கி வீணே
அன்னியனாய் அலைகின்றேன் மயக்கம் நீக்கி
அடிமைகொளல் ஆகாதோ அருட்பொற் குன்றே
சென்னிமிசைக் கங்கைவைத்தோன் அரிதில் பெற்ற
செல்வமே என்புருக்கும் தேனே எங்கும்
தன்இயல்கொண் டுறும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உ0)

உள்ளமனக் குரங்காட்டித் திரியும் என்றன்
உளவறிந்தோ ஐயாநீ உன்னைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை ஆட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்அமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேஎன் தெய்வமே தேவர் கோவே
தன்அரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உக)

வந்தாள்வாய் ஐயாவோ வஞ்சர் தம்பால்
வருந்துகின்றேன் என்றலறும் மாற்றம் கேட்டும்
எந்தாய்நீ இரங்காமல் இருக்கின் றையால்
என்மனம்போல் நின்மனமும் இருந்த தேயோ
கந்தாஎன் றுரைப்பவர்தம் கருத்துள் ஊறும்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்
தந்தாளும் திருத்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உஉ)

ஊர்ஆதி இகழ்மாயக் கயிற்றால் கட்டுண்
டோய்ந்தலறி மனம்குழைந்திங் குழலு கின்றேன்
பார்ஆதி அண்டம்எலாம் கணத்தில் காண்போய்
பாவியேன் முகவாட்டம் பார்த்தி லாயோ
சீர்ஆதி பகவன்அருட் செல்வ மேஎன்
சிந்தைமலர்ந் திடஊறுந் தேனே இன்பம்
சார்ஆதி மலைத்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உ௬)

வாஎன்பார் இன்றிஉன தன்பர் என்னை
வஞ்சகன்என் றேமறுத்து வன்க ணாநீ
போஎன்பார் ஆகில்எங்குப் போவேன் அந்தோ
பொய்யனேன் துணைஇன்றிப் புலம்பு வேனே
கோஎன்பார்க் கருள்தருமக் குன்றே ஒன்றே
குணங்குறிஅற் றிடஅருளும் குருவே வாழ்க்கைத்
தாஎன்பார் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உ௭)

மாயைநெறி யாம்உலக வாழ்க்கை தன்னில்
வருந்திநினை அழைத்தலறி மாழ்கா நின்றேன்
தாயைஅறி யாதுவருஞ் சூல்உண் டோஎன்
சாமிநீ அறியாயோ தயைஇல் லாயோ
பேயைநிகர் பாவிஎன நினைந்து விட்டால்
பேதையேன் என்செய்கேன் பெருஞ்சீர்க் குன்றே
சாயைகடல் செறிதணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உ௮)

மின்னைநிகர்ந் தழிவாழ்க்கைத் துயரால் நெஞ்சம்
மெலிந்துநின தருள்பருக வேட்டு நின்றேன்
என்னைஇவன் பெரும்பாவி என்றே தள்ளில்
என்செய்கேன் நான்பெறும்சேய் இயற்றும் குற்றம்
அன்னைபொறுத் திடல்நீதி அல்ல வோஎன்
ஐயாவே நீபொறுக்கல் ஆகா தோதான்
தன்னைநிகர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உ௯)

முந்தைவினை யால்நினது வழியில் செல்லா
மூடனேன் தனைஅன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவி என்றே
தள்ளிவிடில் தலைசாய்த்துத் தயங்கு வேனே
எந்தைநின தருள்சற்றே அளித்தால் வேறோர்
எண்ணமிலேன் ஏகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உஎ)

பன்னகநொந் துறுவஞ்ச உலகில் நின்று
பாதவித்துன் அருட்கெதிர்போய்ப் பார்க்கின் றேன்நின்
பொன்அருளைப் புணர்ந்துமன மகிழ்ந்து வாழப்
புண்ணியனே நாயேற்குப் பொருத்தம் இன்றோ
பின்னைஒரு துணைஅறியேன் தனியே விட்டால்
பெருமநினக் கழகேயோ பேதை யாம்என்
தன்னைஅளித் தருள்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. (உஅ)

திருச்சிற்றம்பலம்

6. ஆற்ரு முறை[38]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

விண்அ ருதுவாழ் வேந்தன் ஆதியர்
வேண்டி எங்கவும் விட்டென் நெஞ்சகக்
கண்அ ருதுநீ கலந்து நிற்பதைக்
கள்ள நாயினேன் கண்டு கொண்டிலேன்
எண்அ ருத்துயர்க் கடலுள் மூழ்கியே
இயங்கி மாழ்குவேன் யாது செய்குவேன்
தண்அ ருப்பொழில் சூலவும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே.39 (க)

38. இத் திருப்பதிகத்திற்குரிய, அடிகளார் கை எழுத்துச் சுவடியின் எண்கள் உஎஎ, உஎஅ. இவற்றின் முதற்கண் முறையே "உ. சண்முகநம. ஆசிரிய விருத்தம்." என்றும், "உ. சண்முக நம." என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

39. இப் பதிகப் பாக்களில், அடிகளார், தம் நெஞ்சில் இறைவன் கலந்துறைவதைக் காணமாட்டாத தம்மைத் தவறு கருதாது ஆட்கொள்வதன்றி

வாட்கண் ஏழையர் மயலில் பட்டகம்
 மயங்கி மால்அயன் வழுத்தும் நின்திருத்
தாட்கண் நேயம்அற் றுலக வாழ்க்கையில்
 சஞ்ச ரித்துழல் வஞ்ச னேன்இடம்
ஆட்க ணேசுழல் அந்த கன்வரில்
 அஞ்சு வேன்அலால் யாது செய்குவேன்
நாட்க ணேர்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
 நாய காதிருத் தணிகை நாதனே.40 (உ)

எண்ணில் புன்தொழில் எய்தி ஐயவோ
 இயல்பின் வாழ்க்கையில் இயங்கி மாழ்கியே
கண்ணின் உண்மணி யாய நின்தனைக்
 கருதி டாதுழல் கபட னேற்கருள்
நண்ணி வந்திவன் ஏழை யாம்என
 நல்கி ஆண்டிடல் நியாய மேசொலாய்
தண்இ ரும்பொழில் சூழும் போரிவாழ்
 சாமி யேதிருத் தணிகை நாதனே. (௩)

கூவி ஏழையர் குறைகள் தீரஆட்
 கொள்ளும் வள்ளலே குறுகும் வாழ்க்கையில்
பாவி யேன்படும் பாட னைத்தையும்
 பார்த்தி ருந்தும்நீ பரிந்து வந்திலாய்
சேவி யேன்எனில் தள்ளல் நீதியோ
 திருஅ ருட்கொரு சிந்து வல்லையோ
தாவி ஏர்வளைப் பயில்செய் போரிவாழ்
 சாமி யேதிருத் தணிகை நாதனே. (௪)

---

39 (தொடர்ச்சி). இறைவனுக்கு வேறு வழி இல்லை என்றும், பாலும் நீரும் என இறைவனோடு இரண்டறக் கலத்தலே தம் வேண்டுகோள் என்றும்—இன்ன பலவும் கூறுதல் காண்க.

40. இப் பா முதலியவற்றோடு பின் வரும் தாயுமான அடிகளார், அருணகிரி நாதப் பெருமானார்தம் மெய்ம்மொழிகள் போல்வனவற்றை ஓர்ந்துவக்க :

“ கள்ளத் தலைவர்அவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த உபாயம்என்னே பைங்கிளியே.”

“ நீவேறெ னாதி ருக்க நான்வேறெ னாதி ருக்க
 நேராக வாழ்வ தற்குன் —அருள்கூர
நீடார் ஷடாத ரத்தின் மீதேப ராப ரத்தை
 நீகாண்என வனைச்சொல்—அருள்வாயே.”

சந்தை நேர்நடை தன்னில் ஏங்குவேன்
சாமி நின்திருத் தாளுக் கன்பிலேன்
எந்தை நீமகிழ்ந் தென்னை ஆள்வையேல்
என்னை அன்பர்கள் என்சொல் வார்களோ
நிந்தை ஏற்பினும் கருணை செய்திடல்
நித்த நின்அருள் நீதி ஆகுமால்
தந்தை தாய்என வந்து சீர்தரும்
தலைவ னேதிருத் தணிகை நாதனே. (ரு)

செல்லும் வாழ்க்கையில் தியங்க விட்டுநின்
செய்ய தாள்துதி செய்தி டாதுழல்
கல்லும் வெந்நிடக் கண்டு மிண்டுசெய்
கள்ள நெஞ்சினேன் கவலை தீர்ப்பையோ
சொல்லும் இன்பவான் சோதி யேஅருள்
தோற்ற மேசுக சொருப வள்ளலே
சல்லி யங்கெட அருள்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. (சு)

ஏது செய்குவ னேனும் என்றனை
ஈன்ற நீபொறுத் திடுதல் அல்லதை
ஈது செய்தவன் என்றிவ் வேழையை
எந்த வண்ணம்நீ எண்ணி நீக்குவாய்
வாது செய்வன்இப் போது வள்ளலே
வறிய னேன்என மதித்து நின்றிடேல்
தாது செய்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. (எ)

பேயும் அஞ்சுறும் பேதை யார்களைப்
பேணும் இப்பெரும் பேய னேற்கொரு,
தாயும் அப்பனும் தமரும் நட்பும்ஆய்த்
தண்அ ருட்கடல் தந்த வள்ளலே
நீயும் நானும்ஓர் பாலும் நீருமாய்
நிற்க வேண்டினேன் நீதி ஆகுமோ
சாயும் வன்பவம் தன்னை நீக்கிடும்
சாமி யேதிருத் தணிகை நாதனே. (அ)

பொய்யர் தம்மனம் புகுதல் இன்றெனப்
புனித நூல்எலாம் புகல்வ தாதலால்
ஐய நின்திரு அருட்கி ரப்பஇங்
கஞ்சி நின்றென்இவ் விஞ்சு வஞ்சனேன்
மெய்யர் உள்ளுளே விளங்கும் சோதியே
வித்தி லாதவான் விளைந்த இன்பமே
தைய லார்இரு வோரும் மேவுதோள்
சாமி யேதிருத் தணிகை நாதனே. (௯)

மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறந்து முன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலின் நீர்என நின்அ டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையில்
தியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்உளம் தான்எவ் வண்ணமோ
சாற்றி டாய்திருத் தணிகை நாதனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

7. இரந்த விண்ணப்பம்[41]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நாளை ஏகியே வணங்குதும் எனத்தினம் நாளையே கழிக்கின்றோம்
ஊளை நெஞ்சமே என்னையோ என்னையோ உயர்திருத் தணிகேசன்
தாளை உன்னியே வாழ்ந்திலம் உயிர்உடல் தணந்திடல் தனைஇந்த
வேளை என்றறி வுற்றிலம் என்செய்வோம் விளம்பரும் விடையோமே.[42]

---

41. இப் பதிகம் உள்ள அடிகளாரது கைஎழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௪௯, உ௫0. இவற்றின் முதற்கண் “உ. சண்முகநம.” என்று அடிக ளார் குறித்திருக்கிறார்கள்.

42. இப் பதிகப் பாக்களில், பெருமானார், உலக வாழ்க்கையை விரும்பும் தமக்கு எழு பிறப்பும் உரிமைச் சொத்து என்றாலும், இறைவனும் தாமும் கலந்து உறவாடும் நாளை எதிர்நோக்கும் தம்மை இறைவன் ஆளவேண்டும் என்றும்—இதன் சார்பான பிறவகையிலும் முறையிடுதல் காண்க.

விடையவாழ்க்கையை விரும்பினன் நின்திரு விரைமலர்ப் பதம்போற்றேன்
கடையநாயினேன் எவ்வணம் நின்திருக் கருணைபெற் றுய்வேனே
விடையில் ஏறிய சிவபரஞ் சுடர்உளே விளங்கிய ஒளிக்குன்றே
தடையி லாதபேர் ஆனந்த வெள்ளமே தணிகைஎம் பெருமானே.[43] (உ)

பெருமை வேண்டிய பேதையில் பேதையேன் பெருந்துயர் உழக்கின்றேன்
ஒருமை ஈயும்நின் திருப்பதம் இறைஞ்சிலேன் உய்வதெப் படியேயோ
அருமை யாம்தவத் தம்மையும் அப்பனும் அளித்திடும் பெருவாழ்வே
தரும வள்ளலே குணப்பெருங் குன்றமே தணிகைமா மலையானே. (ங)

மலையும் வேற்கணார் மையலில் அழுந்தியே வள்ளல்நின் பதம்போற்றா
தலையும் இப்பெருங் குறையினை ஐயகோ யாவரோ டுரைசெய்கேன்
நிலைகொள் ஆனந்த நிருத்தனுக் கொருபொருள் நிகழ்த்திய பெருவாழ்வே
தலைமை மேவிய சற்குரு நாதனே தணிகைஅம் பதியானே. (ச)

பதியும் அப்பனும் அன்னையும் குருவும்நற் பயன்தரு பொருளாய
கதியும் நின்திருக் கழல்அடி அல்லது கண்டிலன் எளியேனே
விதியும் மாலும்நின் றேத்திடும் தெய்வமே விண்ணவர் பெருமானே
வதியும் சின்மய வடிவமே தணிகைமா மலைஅமர்ந் திடுவாழ்வே. (ரு)

வாழும் நின்திருத் தொண்டர்கள் திருப்பதம் வழுத்திடா துலகத்தே
தாழும் வஞ்சர்பால் தாழும்என் தன்மைஎன் தன்மைவன் பிறப்பாய
ஏழும் என்னதே ஆகிய தையனே எவர்எனைப் பொருகின்றோர்
ஊழும் நீக்குறும் தணிகைஎம் அண்ணலே உயர்திரு அருள்தேனே.

தேனும் தெள்ளிய அமுதமும் கைக்கும்நின் திருஅருள் தேன்உண்டே
யானும் நீயும்ஆய்க் கலந்துற வாடும்நாள் எந்தநாள் அறியேனே
வானும் பூமியும் வழுத்திடும் தணிகைமா மலைஅமர்ந் திடுதேவே
கோனும் தற்பர குருவுமாய் விளங்கிய குமாரசற் குணக்குன்றே.

---

43. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருப்புகழ் போல்வனற்றை ஒத் துணர்க :

"அக்ஷா தேவி கோவின்வி திப்படி மாறி மாறிஅ
னேத்துரு வாய காயம—தடைவேகொண்
டிப்படி யோனி வாய்தொறும் உற்பவி யாவி ழாஉல
கிற்றடு மாறி யேதிரி—தருகாலம்
எத்தனை ஊழி காலமெ னத்தெரி யாது வாழிஇ
னிப்பிற வாது நீஅருள்—புரிவாயே."

குன்று பொய்உடல் வாழ்வினை மெய்எனக் குறித்திவண் அலைகின்றேன்
இன்று நின்திரு அருள்அடைந் துய்வனோ இல்லைஇவ் வுலகத்தே
என்றும் இப்படிப் பிறந்திறந் துழல்வனோ யாதும்இங் கறிகில்லேன்
நன்று நின்திருச் சித்தம்என் பாக்கியம் நல்தணி கையில்தேவே. (௯)

தேவ ரும்தவ முனிவரும் சித்தரும் சிவன்அரி அயன்ஆகும்
மூவ ரும்பணி முதல்வநின் அடியில்என் முடிஉற வைப்பாயேல்
ஏவ ரும்எனக் கெதிர்இலை முத்திவீ டென்னுடை யதுகண்டாய்
தாவ ரும்பொழில் தணிகைஅம் கடவுளே சரவண பவகோவே. (௧)

வேயை வென்றதோள் பாவையர் படுகுழி விழுந்தலைந் திடும்இந்த
நாயை எப்படி ஆட்கொளல் ஆயினும் நாதநின் செயல்அன்றே
தாயை அப்பனைத் தமரினை விட்டுனைச் சார்ந்தவர்க் கருள்கின்றோய்
மாயை நீக்கிநல் அருள்புரி தணிகைய வந்தருள் இந்நாளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

8. கருணை மாலை[44]

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

சங்க பாணியைச் சதுமு கத்தனைச்
செங்கண் ஆயிரத் தேவர் நாதனை
மங்க லம்பெற வைத்த வள்ளலே
தங்க ருள்திருத் தணிகை ஐயனே.[45] (௧)

44. இப் பதிகம் உள்ள அடிகளாரது கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௫௧, உ௫உ. இவற்றைத் தொடங்கும்போது அடிகளார் "வ. சிவசண் முக நம." என்றெழுதி எண்ணியிருக்கிறார்கள்.

45. இப் பதிகப் பாக்களில், அடிகளார், இறைவன் திருஅடியின்கண் அடைக்கலம் புகுந்த தம்மை இறப்பான நவை உறாதென்றும், தாம் இறைவன் வடிவழகைக் காண வேட்கை யுற்றார் என்றும், இறைவன் தம்மை அருள் வெளியில் நிறுவியது ஓர் இறும்பூது என்றும், இதைச் சார்ந்த பிற வகையிலும் கூறி இன்புறுதல் காண்க.

ஐய னேஙினை அன்றி எங்கணும்
பொய்ய னேற்கொரு புகல்இ லாமையால்
வெய்ய னேன்என வெறுத்து விட்டிடேல்
மெய்ய னேதிருத் தணிகை வேலனே.46 (உ)

வேலன் மாதவன் வேதன் ஏத்திடும்
மேலன் மாமயில் மேலன் அன்பர்உள்
சால நின்றவன் தணிகை நாயகன்
வால நற்பதம் வைப்பென் நெஞ்சமே. (ங)

நெஞ்ச மேஇஃ தென்னை நின்மதி
வஞ்ச வாழ்வினில் மயங்கு கின்றனை
தஞ்சம் என்றருள் தணிகை சார்தியேல்
கஞ்ச மாமலர்க் கழல்கி டைக்குமே. (ச)

கிடைக்குள் மாழ்கியே கிலம்செய் அந்தகன்
படைக்குள் பட்டிடும் பான்மை எய்திடேன்
தடைக்குள் பட்டிடாத் தணிகை யான்பதத்
தடைக்க லம்புகுந் தருள்செ ழிப்பனே. (ரு)

செழிக்கும் சீர்திருத் தணிகைத் தேவநின்
கொழிக்கும் நல்அருள் கொள்ளை கொள்ளவே
தழிக்கொண் டன்பரைச் சார்ந்தி லேன்இவண்
பழிக்குள் ஆகும்என் பான்மை என்னையோ. (சு)

---

46. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போன்ற பெரு மொழிகளை ஒத்துணர்ந்து தெளிக :

" மரணப்ர மாதம் நமக்கில்லை யாம்என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும்உண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான காசுர பாஸ்கரனே."

" மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேல்ஆர் வயற்பொழில் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேஅந்த நான்முகனே."

" சொல்லுகைக் கில்லைஎன் றெல்லாம் இழந்துசும் மாஇருக்கும்
எல்லையுள் செல்ல எனைவிட்ட வாஇகல் வேலன்நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச்செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோள்அண்ணல் வல்லபமே."

என்னை என்னைஈ தென்றன் மாதவம்
முன்னை நன்னெறி முயன்றி லேனெனின்
பொன்னை அன்னதாள் போற்ற வைத்தனை
அன்னை என்னும்நல் தணிகை அண்ணலே. (எ)

அண்ணி லேன்நினை ஐய நின்அடி
எண்ணி லேன்இதற் கியாது செய்குவேன்
புண்ணி னேன்பிழை பொறுத்துக் கோடியால்
தண்ணின் நீள்பொழில் தணிகை அப்பனே. (அ)

அப்பன் என்னுடை அன்னை தேசிகன்
செப்பன் என்குலத் தெய்வம் ஆனவன்
துப்பன் என்உயிர்த் துணைவன் யாதும்ஓர்
தப்பில் அன்பர்சேர் தணிகை வள்ளலே. (௯)

வள்ளல் உன்அடி வணங்கிப் போற்றஎன்
உள்ளம் என்வசத் துற்ற தில்லையால்
எள்ளல் ஐயவோ ஏழைஎன் செய்கேன்
தள்ள ரும்பொழில் தணிகை வெற்பனே. (க0)

வெற்ப னேதிருத் தணிகை வேலனே
பொற்ப னேதிருப் போரி நாதனே
கற்ப மேல்பல காலம் செல்லுமால்
அற்ப னேன்துயர்க் களவு சாற்றவே. (கக)

சாறு சேர்திருத் தணிகை எந்தைநின்
ஆறு மாமுகத் தழகை மொண்டுகொண்
டூறில் கண்களால் உண்ண எண்ணினேன்
ஈறில் என்னுடை எண்ணம் முற்றுமோ. (கஉ)

முற்று மோமனம் முன்னி நின்பதம்
பற்று மோவினைப் பகுதி என்பவை
வற்று மோசுக வாழ்வு வாய்க்குமோ
சற்றும் ஓர்கிலேன் தணிகை அத்தனே. (கங)

அத்த னேதணி காச லத்தருள்
வித்த னேமயில் மேற்கொள் வேலனே
பித்த னேன்பெரும் பிழைபொ றுத்திடல்
சுத்த அன்பர்கள் சொல்வர் ஏதமே. (கச)

ஏதி லார்என எண்ணிக் கைவிடில்
நீதி யோஎனை நிலைக்க வைத்தவா
சாதி வான்பொழில் தணிகை நாதனே
ஈதி நின்அருள் என்னும் பிச்சையே. (கரு)

பிச்சை ஏற்றவன் பிள்ளை நீஎனில்
இச்சை ஏற்றவர்க் கியாது செய்குவாய்
பச்சை மாமயில் பரம நாதனே
கச்சி நேர்தணி கைக்க டம்பனே. (கசு)

கடப்ப மாமலர்க் கண்ணி மார்பனே
தடப்பெ ரும்பொழில் தணிகைத் தேவனே
இடப்ப டாச்சிறி யேனை அன்பர்கள்
தொடப்ப டாதெனில் சொல்வ தென்கொலோ. (கஎ)

என்சொல் கேன்இதை எண்ணில் அற்புதம்
வன்சொ லேன்பிழை மதித்தி டாதுவந்
தின்சொ லால்இவண் இருத்தி என்றனன்
தன்சொல் செப்பரும் தணிகைத் தேவனே. (கஅ)

தேவ தேசனே சிறக்கும் ஈசனே
பாவ நாசனே பரம தேசனே
சாவ காசனே தணிகை வாசனே
கோவ பாசனே குறிக்கொள் என்னையே. (ககூ)

குறிக்கொள் அன்பரைக் கூடு றுதஇவ்
வெறிக்கொள் நாயினை வேண்டி ஐயநீ
முறிக்கொள் வாய்கொலோ முனிகொள் வாய்கொலோ
நெறிக்கொள் வோர்புகழ் தணிகை நித்தனே. (உ0)

தணிகை மேவிய சாமி யேநினை
எணிகை விட்டிடேல் என்று தோத்திரம்
அணிகை நின்அடிக் கயர்ந்து நின்றுவீண்
கணிகை போல்எனைக் கலக்கிற் றுள்ளமே. (உக)

உள்ளம் நெக்குவிட் டுருகும் அன்பர்தம்
நள்அ கத்தினில் நடிக்கும் சோதியே
தள்அ ருந்திறல் தணிகை ஆனந்த
வெள்ள மேமனம் விள்ளச் செய்வையே. (உஉ)

செய்வ தன்றவன் சிறிய னேன்றனை
வைவர் அன்பர்கள் என்னில் மத்தனேன்
உய்வ தெவ்வணம் உரைசெய் அத்தனே
சைவ நாதனே தணிகை மன்னனே. (உ௩)

மன்னும் நின்அருள் வாய்ப்ப தின்றியே
இன்னும் இத்துயர் எய்க்கில் என்செய்கேன்
பொன்னின் அம்புயன் போற்றும் பாதனே
தன்னில் நின்றிடும் தணிகை மேலனே. (உ௪)

மேலை வானவர் வேண்டும் நின்திருக்
காலை என்சிரம் களிக்க வைப்பையோ
சாலை ஓங்கிய தணிகை வெற்பனே
வேலை ஏந்துகை விமல நாதனே. (உ௫)

வேத மாமுடி விளங்கும் நின்திருப்
பாதம் ஏத்திடாப் பாவி யேன்தனக்
கீதல் இன்றுபோ என்னில் என்செய்கேன்
சாதல் போக்கும்நல் தணிகை நேயனே. (உ௬)

நேயம் நின்புடை நின்றி டாதஎன்
மாய நெஞ்சினுள் வந்தி ருப்பையோ
பேய னேன்பெரும் பிழைபொ றுத்திடத்
தாய நின்கடன் தணிகை வாணனே. (உ௭)

வாணு தல்பெரு மாட்டி மாரொடு
காணு தற்குனைக் காதல் கொண்டனன்
ஏணு தற்கென தெண்ணம் முற்றுமோ
மாணு தற்புகழ்த் தணிகை வண்ணனே. (உ௮)

வண்ண னேஅருள் வழங்கும் பன்னிரு
கண்ண னேஅயில் கரங்கொள் ஐயனே
தண்ண னேர்திருத் தணிகை வேலனே
திண்ணம் ஈதருள் செய்யும் காலமே. (உ௯)

கால்கு றித்தஎன் கருத்து முற்றியே
சால்வ எத்திருத் தணிகை சார்வன்என்
மால்ப கைப்பிணி மாறி ஓடவே
மேல்கு றிப்பனல் வெற்றிச் சங்கமே. (௩0)

திருச்சிற்றம்பலம்

9. மருண்மாலை விண்ணப்பம்[47]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சொல்லும் பொருளும் ஆய்நிறைந்த சுகமே அன்பர் துதிதுணையே
புல்லும் புகழ்சேர் நல்தணிகைப் பொருப்பின் மருந்தே பூரணமே
அல்லும் பகலும் நின்நாமம் அந்தோ நினைந்துன் ஆளாகேன்
கல்லும் பொருவா வன்மனத்தால் கலங்கா நின்றேன் கடையேனே.[48] ()

கடையேன் வஞ்ச நெஞ்சகத்தால் கலுழ்கின் றேன்நின் திருக்கருணை
அடையேன் அவமே திரிகின்றேன் அந்தோ சிறிதும் அறிவில்லேன்
விடையே றீசன் புயம்படும்உன் விரைத்தாள் கமலம் பெறுவேனோ
கொடைஏர் அருளைத் தருமுகிலே கோவே தணிகைக் குலமணியே.[49] (உ)

47. இப் பதிகம் கொண்ட அடிகளாரது கைஎழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௫௩, உ௫௪. இவற்றின் முதலில் முறையே, அடிகளார், "உ" என்றும், "உ. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்." என்றும் குறித்திருக்கிறார்கள்.

48. இப் பதிகப் பாக்களில், பெருமானார், உலகியல் துயரான் சூழப்பட்ட தமக்கு, இறைவன் பதம் காணும் விருப்பம் மேலிட்டிருப்பதால், அதை முன்னிட்டு அவன், தம்மை ஆட்கொண்டால், இன்றே, இறப்பும் அதன் சார்பான பிறப்பும் தம்மை விட்டு நீங்கும் என்றும் பிறவகையிலும் விண்ணப்பித்தல் காண்க.

49. இப் பா முதலியவற்றோடு, அடியிற்கண்ட அருணகிரிநாதப் பெருமானார், குமாரதேவர் இவர்கள்தம் மெய்ம்மொழி போல்வனவற்றை ஓர்ந்துணர்ந்து உவகை உறுக :

"தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே
வைவைத்த வேல்படை வானவ னேமற வேன்உனைநான்
ஐவர்க் கிடம்பெறக் கால்இரண் டோட்டி அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையும்முன் னேவந்து காத்தருளே."

"மண்ணினின் தடுக்கச் சலத்தினில் நனைக்க
வருங்கன லில்சுட வளியால்
நண்ணிநின் றசைக்க வெளியிடம் விடவே
நணுகிடா(து) என்றும்நின் றிலகும்
புண்ணிய சீவன் முத்தர்தம் வடிவம்
பொற்புறவ் வடிவுகண் டளவே
விண்ணில்மண் ணினில்பா தலத்தினின் உள்ளோர்
வியப்பொடும் எழுந்திறைஞ் சிடுவார்."

மணியே அடியேன் கண்மணியே மருந்தே அன்பர் மகிழ்ந்தணியும்
அணியே தணிகை அரசேதெள் அமுதே என்றன் ஆருயிரே
பிணிஎய் துயரால் வருந்திமனப் பேயால் அலைந்து பிறழ்கின்றேன்
தணியேன் தாகம் நின்அருளைத் தருதல் இலையேல் தாழ்வேனே. (ரு)

தாழ்வேன் வஞ்ச நெஞ்சகர்பால் சார்வேன் தனக்குன் அருள்தந்தால்
வாழ்வேன் இலையேல் என்செய்கேன் வருத்தம் பொறுக்க மாட்டேனே
எழ்வே தனையும் கடந்தவர்தம் இன்பப் பெருக்கே என்உயிரே
போழ்வேல் கரங்கொள் புண்ணியனே புகழ்சேர் தணிகைப் பொருப்பரசே.(சா)

அரைசே அடியர்க் கருள்குகனே அண்ணா தணிகை ஐயாவே
விரைசேர் கடம்ப மலர்ப்புயனே வேலா யுதக்கை மேலோனே
புரைசேர் மனத்தால் வருந்திஉன் றன் பூம்பொற் பதத்தைப் புகழ்கில்லேன்
தரைசேர் வாழ்வில் தயங்குகின்றேன் அந்தோ நின்று தனியேனே. (ரு)

தனியே துயரில் வருந்திமனம் சாம்பி வாழ்க்கைத் தளைப்பட்டிங்
கினிஎ துறுமோ என்செய்கேன் என்றே நின்றேற் கிரங்காயோ
கனியே பாகே கரும்பேஎன் கண்ணே தணிகைக் கற்பகமே
துனிஎய் பிறவி தனைஅகற்றும் துணையே சோதிச் சுகக்குன்றே. (சு)

குன்றே மகிழ்ந்த குணக்குன்றே கோவே தணிகைக் குருபரனே
நன்றே தெய்வ நாயகமே நவிலற் கரிய நல்உறவே
என்றே வருவாய் அருள்தருவாய் என்றே புலம்பி ஏங்குற்றேன்
இன்றே காணப் பெறில்எந்தாய் இறவேன் பிறவேன் இருப்பேனே.(எ)

இருப்பேன் துயர்வாழ் வினில்எனினும் எந்தாய் நினது பதங்காணும்
விருப்பேன் அயன்மால் முதலோரை வேண்டேன் அருள வேண்டாயோ
திருப்பேர் ஒளியே அருட்கடலே தெள்ளார் அமுதே திருத்தணிகைப்
பொருப்பே மகிழ்ந்த புண்ணியமே புனித ஞான போதகமே. (அ)

போதா நந்த அருட்கனியே புகலற் கரிய பொருளேஎன்
நாதா தணிகை மலைஅரசே நல்லோர் புகழும் நாயகனே
ஓதா தவமே வருந்துயரால் உழன்றே பிணியில் உலைகின்றேன்
ஏதாம் உனதின் அருள்ஈயா திருந்தால் அந்தோ எளியேற்கே. (கூ)

எளியேன் நினது திருவருளுக் கெதிர்நோக் குற்றே இரங்குகின்ற
களியேன் எனைநீ கைவிட்டால் கருணைக் கியல்போ கற்பகமே
அளியே தணிகை அருட்சுடரே அடியர் உறவே அருள்ஞானத்
துளியே அமையும் எனக்கெந்தாய் வாஎன் றொருசொல் சொல்லாயே. (க0)

திருச்சிற்றம்பலம்

10. பொறுக்காப் பத்து[50]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மெய்யர்உள் ளகத்தின் விளங்கும்நின் பதமாம்
விரைமலர்த் துணைதமை விரும்பாப்
பொய்யர்தம் இடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஐயரும் இடப்பால் அம்மையும் வருந்தி
அளித்திடும் தெள்ளிய அமுதே
தையலர் மயக்கற் றவர்க்கருள் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே.[51] (க)

நன்மைய எல்லாம் அளித்திடும் உனது
நளினமா மலர்அடி வழுத்தாப்
புன்மையர் இடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
சின்மயப் பொருள்நின் தொண்டர்பால் நாயேன்
சேர்ந்திடத் திருஅருள் புரியாய்
தன்மயக் கற்றோர்க் கருள்தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே.[52] (உ)

---

50. இப் பதிகம் கொண்ட அடிகளாரின் கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௰௫, உ௰௬. இவற்றின் முதற்கண் " ௳. சிவமய." என்று அடிகளார் எழுதி அநுபவித்திருக்கிறார்கள்.

51. இப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவன் திருவடிக் கன்பிலாத புன்மையரிடம் புகுந்து கலந்து வாழ்தல் பொறுத்தற்கரிய துன்பம் பயக்கிறது என்றும், இறைவனுக்கு ஆட்பட்ட அன்பர்பால் தம்மைச் சேர்த்து வாழ விடும்படியும், பிறவாற்றானும் முறையிடுதல் காண்க.

52. இப் பா முதலியவற்றோடு பின் வரும் அருணகிரிநாதப் பெருமானார், பட்டினத்தடிகளார் இவர்கள்தம் பொய்யாமொழி போல்வனவற்றை உய்த்துணர்க :

"—ஒருஞான
எல்லைக்கும் ஆர ணங்கள் சொல்லித்தொ ழாவ ணங்கும்
எல்லைக்கும் வாவி நின்றன்—அருள்நாமம்
எள்ளற்கு மால்அ யர்ந்து உள்ளத்தில் ஆவ என்றும்
உள்ளப்பெ றாரி ணங்கை—ஒழிவேனோ."

மருள்இலா தவர்கள் வழுத்தும்நின் அடியை
　　மனமுற நினைந்தகத் தன்பாம்
பொருள்இலா தவர்பால் ஏழையேன் புகுதல்
　　பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
அருள்எலாம் திரண்ட ஆனந்த உருவே
　　அன்பர்பால் இருந்திட அருளாய்
தாளவான் மழைபெய் திடும்திருப் பொழில்சூழ்
　　தணிகைவாழ் சரவண பவனே. (௫)

நிலைஅருள் நினது மலர்அடிக் கன்பு
　　நிகழ்ந்திட நாள்தொறும் நினையாப்
புலையர்தம் இடம்இப் புன்மையேன் புகுதல்
　　பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
மலைஅர சளித்த மரகதக் கொம்பர்
　　வருந்திஈன் றெடுத்தமா மணியே
தலைஅர சளிக்க இந்திரன் புகழும்
　　தணிகைவாழ் சரவண பவனே. (௬)

வல்இருள் பவம்தீர் மருந்தெனும் நினது
　　மலர்அடி மனம்உற வழுத்தாப்
புல்லர்தம் இடம்இப் பொய்யனேன் புகுதல்
　　பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஒல்லைநின் எனைமீட் டுன்அடி யவர்பால்
　　உற்றுவாழ்ந் திடச்செயின் உய்வேன்
சல்லமற் றவர்கட் கருள்தரும் பொருளே
　　தணிகைவாழ் சரவண பவனே. (௭)

---

52 (தொடர்ச்சி). "நின்னை அடைந்த அடியார் அடியார்க்
கென்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்டபச் சிலைகொண்(டு) ஒட்டி அறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
நீத்திரண் டன்ன செஞ்சடை யோனே."

கற்பிலார் எனினும் நினைந்திடில் அருள்நின்
கருணைஅம் கழல்அடிக் கன்பாம்
பொற்பிலா தவர்பால் ஏழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
அற்பிலேன் எனினும் என்பிழை பொறுத்துன்
அடியர்பால் சேர்த்திடில் உய்வேன்
தற்பரா பரமே சற்குண மலையே
தணிகைவாழ் சரவண பவனே. (௬)

பத்திகொண் டவருள் பரவிய ஒளியாம்
பரஞ்சுடர் நின்அடி பணியும்
புத்திகொள் எவர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நித்திய அடியர் தம்முடன் கூட்ட
நினைந்திடில் உய்குவன் அரசே
சத்திசெங் கரத்தில் தரித்திடும் அமுதே
தணிகைவாழ் சரவண பவனே. (எ)

நீற்றணி விளங்கும் அவர்க்கருள் புரியும்
நின்அடிக் கமலங்கள் நினைந்தே
போற்றிடா தவர்பால் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஆற்றல்கொள் நின்பொன் அடியருக் கடியன்
ஆச்செயில் உய்குவன் அமுதே
சாற்றிடும் பெருமைக் களவிலா தோங்கும்
தணிகைவாழ் சரவண பவனே. (அ)

பரிந்திடும் மனத்தோர்க் கருள்செயும் நினது
பாததா மரைகளுக் கன்பு
புரிந்திடா தவர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
தெரிந்திடும் அன்பர் இடம்உறில் உய்வேன்
திருவுளம் அறிகிலன் தேனே
சரிந்திடும் கருத்தோர்க் கரியநற் புகழ்கொள்
தணிகைவாழ் சரவண பவனே. (கூ)

எண்உறும் அவர்கட் கருளும்நின் அடியை
ஏத்திடா தழிதரும் செல்வப்
புண்உறும் அவர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்

கண் உறு மணியாம் நின் அடி யவர்பால்
கலந்திடில் உய்குவன் கரும்பே
தண் உறும் கருணைத் தனிப்பெருங் கடலே
தணிகைவாழ் சரவண பவனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

11. வேட்கை விண்ணப்பம்[53]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மன்னே என்றன் உயிர்க்குயிரே மணியே தணிகை மலைமருந்தே
அன்னே என்னை ஆட்கொண்ட அரசே தணிகை ஐயாவே
பொன்னே ஞானப் பொங்கொளியே புனித அருளே பூரணமே
என்னே எளியேன் துயர்உழத்தல் எண்ணி இரங்கா திருப்பதுவே.[54]()

இரங்கா நின்றிங் கலைதரும்இவ் வெளியேன் கனவின் இடத்தேனும்
அரங்கா அரவின் நடித்தோனும் அயனும் காண்டற் கரிதாய
உரங்கா முறும்மா மயில்மேல்நின் உருவம் தரிசித் துவப்படையும்
வரங்கா தலித்தேன் தணிகைமலை வாழ்வே இன்று வருவாயோ.[55] ()

---

53. இப் பதிகம் உள்ள அடிகளாராது கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ௫௭, உ௫அ. இவ்வேடுகள் "உ" இட்டுத் தொடங்கப்பட்டிருக்கின்றன.

54. இப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவன் அருள் இன்றித் தாம் இப் பிறப்பினின்றும் தவிர முடியாதென்றும், தம் கனவிடத்தேனும் இறைக் காட்சி தரல்வேண்டும் என்றும்—இன்ன பலவும் இயம்புதல் காண்க.

55. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருப்புகழ், அற்புதத் திரு அந்தாதி திருப்பாடல்கள் போல்வன கண்டு நுகர்க :

"—எரிதனில் இடும்வாழ்வே
இணையடிகள் பரவும்உன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே."

" எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிரா
தெமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய்—அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம்."

இவற்றோடு இப் புலவர் புராணச் செய்யுளையும் ஓர்க :

" சிவத லந்தொறும் சென்று தினந்தினம்
தவமு டிக்கும் தகவுடைக் கீரனுள்
உவகை யால்பல் கனவில் ஒளிர்ந்தனன்
குவடு தோறும் குலாவும் குமரனே."

வருவாய் என்று நாள்தோறும் வழிபார்த் திரங்கி மனந்தளர்ந்தேன்
கருவாய் பவன்என் றெனைத்தள்ளக் கருது வாயோ அன்றிஅருள்
உருவாய் வந்து தருவாயோ தணிகா சலத்துள் உற்றமர்ந்த
ஒருவா உன்றன் திருஉளத்தை உணரேன் என்செய் துய்கேனே. (௩)

உய்யும் பொருட்டுன் திருப்புகழை உரையேன் அந்தோ உரைக்கடங்காப்
பொய்யும் களவும் அழுக்காறும் பொருளாக் கொண்டேன் புலையேனை
எய்யும் படிவந் தடர்ந்தியமன் இழுத்துப் பறிக்கில் என்னையான்
செய்யும் வகைஒன் றறியேனே தென்பால் தணிகைச் செஞ்சுடரே. (௪)

செஞ்சொல் சுவையே மெய்ஞ்ஞானச் செல்வப் பெருக்கே தெள்அமுதே
விஞ்சைப் புலவர் புகழ்தணிகை விளக்கே துளக்கில் வேலோனே
வெஞ்சொல் புகலும் வஞ்சகர்பால் மேவி நின்தாள் மலர்மறந்தே
பஞ்சில் தமியேன் படும்பாட்டைப் பார்த்தும் அருட்கண் பார்த்திலையே. (௫)

பார்க்கின் றிலையே பன்னிருகண் படைத்தும் எளியேன் பாடனைத்தும்
தீர்க்கின் றிலையே என்னையான் செய்வேன் சிறியேன் சீமானே
போர்க்குன் றொடுசூர் புயக்குன்றும் பொடிசெய் வேற்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனும்நல் வளத்தணிகைத் தேவே மயில்ஊர் சேவகனே. (௬)

சேவற் கொடிகொள் குணக்குன்றே சிந்தா மணியே யாவர்கட்கும்
காவற் பதியே தணிகைவளர் கரும்பே கனியே கற்பகமே
மூவர்க் கிறையே வேய்ஈன்ற முத்தன் அளித்த முத்தேநல்
தேவர்க் கருள்நின் சேவடிக்கே விழைந்தேன் யாதும் தெரியேனே. (௭)

தெரியேன் உனது திருப்புகழைத் தேவே உன்றன் சேவடிக்கே
பரியேன் பணியேன் கூத்தாடேன் பாடேன் புகழைப் பரவசமாய்த்
தரியேன் தணிகை தனைக்காணேன் சாகேன் நோகேன் கும்பிக்கே
உரியேன் அந்தோ எதுகொண்டிங் குய்கேன் யாது செய்கேனே. (௮)

செய்வ துனது திருவடிக்காம் திறனே சிந்தை நின்பாலே
வைவ துன்னை நினையாத வஞ்ச கரையே வழுத்திநிதம்
உய்வ துனது திருநாமம் ஒன்றைப் பிடித்தே மற்றொன்றால்
எய்வ தறியேன் திருத்தணிகை எந்தாய் எந்தாய் எளியேனே. (௯)

எளியேன் நினது சேவடியாம் இன்ப நறவை எண்ணிஎண்ணி
அளியேன் நெஞ்சம் சற்றேனும் அன்பொன் றில்லேன் அதுசிறிதும்
ஒளியேன் எந்தாய் என்உள்ளத் தொளித்தே எவையும் உணர்கின்றாய்
வளியே முதலாய் நின்றருளும் மணியே தணிகை வாழ்மன்னே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

12. ஆறெழுத் துண்மை[56]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பெருமை நிதியே மால்விடைகொள் பெம்மான் வருந்திப் பெறும்பேறே
அருமை மணியே தணிகைமலை அமுதே உன்றன் ஆறெழுத்தை
ஒருமை மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
இருமை வளனும் எய்தும்இடர் என்ப தொன்றும் எய்தாதே.[57] (க)

எய்தற் கரிய அருட்சுடரே எல்லாம் வல்ல இறையோனே
செய்தற் கரிய வளத்தணிகைத் தேவே உன்றன் ஆறெழுத்தை
உய்தற் பொருட்டிங் குச்சரித்தே உயர்ந்த திருவெண் ணீறிட்டால்
வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் வன்கண் ஒன்றும் வாராதே.[58] (உ)

---

56. இப் பதிகம் உள்ள அடிகளாரது கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உடுக, உசுய. இவற்றின் முதற்கண் முறையே அடிகளார், "உ" என்றும், "உ. முருகன் றுணை." என்றும் எழுதி எண்ணியிருக்கிறார்கள்.

57. இப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவனை இடைவிடாது எண்ணினால், இருமை வளனும், நற்புகழ்ச்சியும், செல்வமும், இன்ப வாழ்வும், திருவடிச்சார்பும், மேலான ஞானமும், திருவடிக் காட்சியும், தாயொத்த அருளும் விளைந்து எல்லாவித இடர்களும் கெடும் என்பது முதலியன வற்றைத் தெளிவுபடுத்தி இன்புறுதல் காண்க.

58. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கல்லாடனார், அருணகிரிநாதப் பெருமானார், கச்சியப்ப சிவாசாரியர், சிதம்பர சுவாமிகள் இவர்கள்தம் நிறைமொழிகள் போல்வனவற்றை ஓர்ந்து உணர்ந்து உய்க :

"ஆறு திரு எழுத்தும் கூறுநிலை கண்டு
நின்தாள் புகழுநர் கண்ணுட் பொலிந்தோய்."

"ஐம்பத் தொன்றில் எட்டாறில் மூன்றினில்
ஐந்தில் தங்கும்அப் பாலை வான்பொருள்."

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதம்இல் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்."

"குமரா நமஎன்று கூறினோர் ஓர்கால்
அமரா வதிஆள்வர் அன்றி—யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாய்உதரப்
பைபுகுதார் சேரார் பயம்."

வாரா இருந்த அடியவர்தம் மனத்தில் ஒளிரும் மாமணியே
ஆரா அமுதே தணிகைமலை அரசே உன்றன் ஆறெழுத்தை
ஓரா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஏரார் செல்வப் பெருக்கிகவா இடும்பை ஒன்றும் இகந்திடுமே. (ந)

இகவா அடியர் மனத்தூறும் இன்பச் சுவையே எம்மானே
அகவா மயில்ஊர் திருத்தணிகை அரசே உன்றன் ஆறெழுத்தை
உகவா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
சுகவாழ் வின்பம் அதுதுன்னும் துன்பம் ஒன்றும் துன்னாதே. (ச)

துன்னும் மறையின் முடிவில்ஒளிர் தூய விளக்கே சுகப்பெருக்கே
அன்னை அனையாய் தணிகைமலை அண்ணா உன்றன் ஆறெழுத்தை
உன்னி மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
சென்னி அணியாய் அடிசேரும் தீமை ஒன்றும் சேராதே. (ரு)

சேரும் முக்கண் கனிகனிந்த தேனே ஞானச் செழுமணியே
யாரும் புகழும் தணிகைஎம தன்பே உன்றன் ஆறெழுத்தை
ஓரும் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
பாரும் விசும்பும் பதஞ்சாரும் பழங்கண் ஒன்றும் சாராதே. (சு)

சார்ந்த அடியார்க் கருள்அளிக்கும் தருமக் கடலே தற்பரமே
வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை மணியே உன்றன் ஆறெழுத்தை
ஓர்ந்து மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஆர்ந்த ஞானம் உறும்அழியா அலக்கண் ஒன்றும் அழிந்திடுமே. (எ)

அழியாப் பொருளே என்உயிரே அயில்செங் கரங்கொள் ஐயாவே
கழியாப் புகழ்சேர் தணிகைஅமர் கந்தா உன்றன் ஆறெழுத்தை
ஒழியா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
பழியா இன்பம் அதுபதியும் பனிமை ஒன்றும் பதியாதே. (அ)

பதியே எங்கும் நிறைந்தருளும் பரம சுகமே பரஞ்சுடரே
கதியே அளிக்கும் தணிகைஅமர் கடம்பா உன்றன் ஆறெழுத்தை
உதியோர் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
துதிவர் நினது பதந்தோன்றும் துன்பம் ஒன்றும் தோன்றாதே. (கூ)

தோன்றா ஞானச் சின்மயமே தூய சுகமே சுயஞ்சுடரே
ஆன்றோர் புகழும் தணிகைமலை அரசே உன்றன் ஆறெழுத்தை
ஊன்றா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஈன்றோள் நிகரும் அருள்அடையும் இடுக்கண் ஒன்றும் அடையாதே.

திருச்சிற்றம்பலம்

13. போக் குரையீடு[59]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கற்கி லேன்உன தருட்பெயர் ஆம்குக கந்தஎன் பவைநாளும்
நிற்கி லேன்உன தாகம நெறிதனில் நீசனேன் உய்வேனே
சொற்கி லேசமில் அடியவர் அன்பினுள் தோய்தரு பசுந்தேனே
அற்கி லேர்தரும் தணிகைஆர் அமுதமே ஆனந்த அருட்குன்றே.[60]

பாவ வாழ்க்கையில் பாவியேன் செய்திடும் பண்பிலாப் பிழைநோக்கித்
தேவ ரீர்மன திரக்கமுற் றேஅருள் செய்திடா திருப்பீரேல்
காவ லாகிய கடும்பிணித் துயரம்இக் கடையனேன் தனக்கின்னும்
யாவ தாகுமோ என்செய்கோ என்செய்கோ இயலும்வேல் கரத்தீரே.[61]

சேவி யாதஎன் பிழைகளை என்னுளே சிறிதறி தரும்போதோ
பாவி யேன்மனம் பகீலென வெதும்பியுள் பதைத்திடக் காண்கின்றேன்
ஆவி யேஅருள் அமுதமே நின்திரு அருள்தனக் கென்னுமோ
பூவில் நாயகன் போற்றிடும் தணிகைஅம் பொருப்பமர்ந் திடுவாழ்வே.(௩)

---

59. இப் பதிகத் திரு ஏடுகளின் எண்கள் உ௯௧, உ௯உ. இந்த ஏடுகளின் முதலில், அடிகளார், "ட. ஆசிரிய விருத்தம்." என்றெழுதியிருக்கிறார்கள்.

60. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் பிழைகளும் இச்சைகளும் தமக்கே வெறுப்பாக இருக்கின்றன என்றால், இறைவனுக்கு அவை எங்ஙனம் தோன்றும் என்றும், கடைப்பட்ட தம்மையும் தம் துயரத்திற்கு இரங்கி ஆட்கொள்ளுதல் இறைவனுக்கு உரிய அருட்கடன் என்றும் பலப் பலவாறு இரங்கி இறைவனிடம் முறையிடுதல் காண்க.

61. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகம், கந்தர் அலங்காரம் போன்ற உணர்வமுதை உண்டு களிக்க :

"தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நான்நின் அடியேன் நீஎன்னை ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம் தன்மை யாம்என் தன்மையே."

"படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காஎன் கிலைமுசி யாமல்இட்டு
மிடிக்கின் றிலைபர மானந்தம் மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்சம் ஏது நமக்கினியே."

துன்பி னால்அகம் வெதும்பிநைந் தயர்ந்துநின் துணைஅடி மலர்ஏத்தும்
அன்பி லாதஇப் பாவியேன் செய்பிழை அனைத்தையும் பொறுப்பாயேல்
வன்பி லாதநின் அடியவர் தம்திரு மனத்தினுக் கென்னாமோ
இன்பி னால்சுரர் போற்றிடும் தணிகைவாழ் இறைவனே எம்மானே.

என்செய் கேன்இனும் திருஅருள் காண்கிலேன் எடுக்கரும் துயர்உண்டேன்
கன்செய் பேய்மனக் கடையனேன் என்னினும் காப்பதுன் கடன்அன்றே
பொன்செய் குன்றமே பூரண ஞானமே புராதனப் பொருள்வைப்பே
மன்செய் மாணிக்க விளக்கமே தணிகைவாழ் வள்ளலே மயிலோனே.

மண்ணில் நண்ணிய வஞ்சகர் பால்கொடு வயிற்றினால் அலைப்பட்டேன்
கண்ணில் நண்ணரும் காட்சியே நின்திருக் கடைக்கண்ணோக் கருள்நோக்கி
எண்ணி எண்ணிநெஞ் சழிந்துகண் ணீர்கொளும் ஏழையேன் தனக்கின்னும்
புண்ணில் நண்ணிய வேல்எனத் துயர்உறில் புலையன்என் செய்கேனே.

மலங்கி வஞ்சகர் மாட்டிரந் தையகோ வருந்திநெஞ் சயர்வுற்றே
கலங்கி நின்திருக் கருணையை விழையும்என் கண்அருள் செய்யாயோ
இலங்கி எங்கணும் நிறைந்தருள் இன்பமே எந்தையே எந்தாயே
நலங்கி ளர்ந்திடும் தணிகைஅம் பதிஅமர் நாயக மணிக்குன்றே. (எ)

சைவ நாயக சம்பந்தன் ஆகிய தமிழ்அருட் குன்றேஎன்
தெய்வ மேநினை அன்றிஓர் துணையிலேன் திருஅருள் அறியாதோ
வைவ தேகொளும் வஞ்சகர் தம்இடை வருந்திநெஞ் சழிகின்றேன்
செய்வ தோர்கிலேன் கைவிடில் என்செய்கேன் தெளிவிலாச் சிறியேனே.

வாழ்வில் ஆம்சிறு களிப்பினால் உன்றனை மறந்திறு மாக்கின்றேன்
தாழ்வி லேசிறி தெண்ணிநொந் தயர்வன்என் தன்மைநன் றருள்ஆளா
கேழ்வி மேவிய அடியவர் மகிழ்வுறக் கிடைத்தருள் பெருவாழ்வே
வேழ்வி ஓங்கிய தணிகைமா மலைதனில் விளங்கிவீற் றிருப்போனே.

என்றும் மாதர்மேல் இச்சைவைத் துன்றனை எண்ணுவேன் துயருற்றால்
கன்று நெஞ்சகக் கள்வனேன் அன்பினைக் கருத்திடை எணில்சால
நன்று நன்றெனக் கெவ்வணம் பொன்அருள் நல்குவை அறிகிலேன்
துன்று மாதவர் போற்றிடும் தணிகைவாழ் சோதியே சுகவாழ்வே.

திருச்சிற்றம்பலம்

14. பணித்திறம் வேட்டல்[62]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

நண்ணேனோ மகிழ்விநோடும் திருத்தணிகை மலைஅதனை நண்ணி என்றன்
கண்ணேநீ அமர்ந்தஎழில் கண்குளிரக் காணேனோ கண்டு வாரி
உண்ணேனோ ஆனந்தக் கண்ணீர்கொண் டாடிஉனக் குகப்பாத் தொண்டு
பண்ணேனோ நின்புகழைப் பாடேனோ வாயாரப் பாவி யேனே.[63](க)

பாவியேன் படுந்துயருக் கிரங்கிஅருள் தணிகையில்என் பால்வா என்று
கூவிநீ ஆட்கொளஓர் கனவேனும் காணேனோ குணப்பொற் குன்றே
ஆவியே அறிவேஎன் அன்பேஎன் அரசேநின் அடியைச் சற்றும்
சேவியேன் எனினும்எனைக் கைவிடேல் அன்பர்பழி செப்பு வாரே.[64] (உ)

வாரேனோ திருத்தணிகை வழிநோக்கி வந்தென்கண் மணியே நின்று
பாரேனோ நின்அழகைப் பார்த்துலக வாழ்க்கைதனில் படும்இச் சோபம்
தீரேனோ நின்அடியைச் சேவித்தா னந்தவெள்ளம் திளைத்தா டேனோ
சாரேனோ நின்அடியார் சமுகம்அதைச் சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனோ.

கொள்ளேனோ நீஅமர்ந்த தணிகைமலைக் குறஎண்ணம் கோவே வந்தே
அள்ளேனோ நின்அருளை அள்ளிஉண்டே ஆனந்தத் தழுந்தி ஆடித்
துள்ளேனோ நின்தாளைத் துதியேனோ துதித்துலகத் தொடர்பை எல்லாம்
தள்ளேனோ நின்அடிக்கீழ்ச் சாரேனோ துணைஇல்லாத் தனிய னேனே.

தனியேஇங் குழல்கின்ற பாவியேன் திருத்தணிகா சலம்வாழ் ஞானக்
கனியேநின் சேவடியைக் கண்ஆரக் கண்டுமனம் களிப்பு றேனோ
துனியேசெய் வாழ்வில்அலைந் தென்எண்ணம் முடியாது சுழல்வேன் ஆகில்
இனிஎது செய்வேன்மற் றொருதுணையும் காணேன்இவ் வேழை யேனே.

---

62. இப் பதிகத் திரு ஏடுகளின் எண்கள் உகூரு, உகூச. இந்த ஏடுகளின் தொடக்கத்தில், அடிகளார், "உ. சரவணபவ நம." என்று குறித்து உணர்ந்திருக்கிறார்கள்.

63. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் இறைவழிபாடு இயற்றி, உலக மயக்கம் நீங்கி, அடியருடன் கூடி, ஆநந்தாநுபவம் கொண்டு வாழ, தமக்குள்ள முடியா விருப்பம் கூறுமாறு காண்க.

64. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போன்ற பெருண்மைகளை ஓர்ந்து உவகை உறுக :

"ஆங்கா ரமும்அடங் கார்ஒடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவம்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார்என் செய்வார்யம தூதருக்கே."

இவ்வேளை அருள்தணிகை அமர்ந்தருளும் தேவைஎன திருகண் ஆய
செவ்வேளை மனங்களிப்பச் சென்றுபுகழ்ந் தானந்தத் தெளிதேன் உண்டே
எவ்வேளை யும்பரவி எத்தேனோ அவன்பணிகள் இயற்றி டேனோ
தெவ்வேளை அடர்க்கவகை தெரியாமல் உழல்தருமிச் சிறிய னேனே. (௬)

சிறியேன்இப் போதேகித் திருத்தணிகை மலைஅமர்ந்த தேவின் பாதம்
குறியேனோ ஆனந்தக் கூத்தாடி அன்பர்கள்தம் குழாத்துள் சென்றே
அறியேனோ பொருள்நிலையை அறிந்தெனதென் பதைவிடுத்திவ் வகில மாயை
முறியேனோ உடல்புளகம் மூடேனோ நன்னெறியை முன்னி இன்றே.

முன்னேனோ திருத்தணிகை அடைந்திடநின் சந்நிதியின் முன்னே நின்று
மன்னேனோ அடியருடன் வாழேனோ நின்அடியை வாழ்த்தி டேனோ
உன்னேனோ நன்னிலையை உலகத்தோர் எல்லீரும் உங்கே வாரும்
என்னேனோ நின்பெயரை யார்கூறி னும்அவர்க் கிதங்கூ றேனோ.

கூறேனோ திருத்தணிகைக் குற்றுன்அடிப் புகழ்தனைக் கூறி நெஞ்சம்
தேறேனோ நின்அடியர் திருச்சமுகம் சேரேனோ தீராத் துன்பம்
ஆறேனோ நின்அடியன் ஆகேனோ பவக்கடல்விட் டகன்றே அப்பால்
ஏறேனோ அருட்கடலில் இழியேனோ ஒழியாத இன்பம் ஆர்ந்தே. (௯)

தேடேனோ என்காதன் எங்குற்றான் எனஓடித் தேடிச் சென்றே
நாடேனோ தணிகைதனில் நாயகனே நின்அழகை நாடி நாடிக்
கூடேனோ அடியருடன் கோவேஎம் குகனேஎம் குருவே என்று
பாடேனோ ஆனந்தப் பரவசம்உற் றுன்கமலப் பதம்நண் ணேனோ.

திருச்சிற்றம்பலம்

15. நெஞ்சொடு புலத்தல்[65]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வாவா என்ன அருள்தணிகை மருந்தை என்கண் மாமணியைப்
பூவாய் நறவை மறந்தவநாள் போக்கின் றதுவும் போதாமல்
மூவா முதலின் அருட்கேலா மூட நினைவும் இன்றெண்ணி
ஆவா நெஞ்சே எனைக்கெடுத்தாய் அந்தோ நீதான் ஆவாயோ.[66] (௧)

65. இப் பதிகத் திரு ஏடுகளின் எண்கள் உ௬௫, உ௬௬. இந்த ஏடுகளை அடிகளார், " ௳. குமரநம." என்றெழுதிச் சிந்தித்துத் தொடங்கியிருக்கிறார்கள்.

66. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் நெஞ்சம், இறைவனை உன்னுதொழிந்து, உலகியலில் மூழ்கித் தமக்குரிய பெரிய இன்பப் பேற்றினைக் கெடுக்கிறது என்று வருத்தங் கொள்ளுதல் காண்க.

வாயாத் துரிசற் றிடும்புலவோர் வழுத்தும் தணிகை மலைஅமுதைக்
காயாக் கனியை மறந்தவநாள் கழிக்கின் றதுவும் போதாமல்
ஈயாக் கொடியர் தமக்கன்றி ஏலா நினைவும் இன்றெண்ணி
மாயா என்றன் வாழ்வழித்தாய் மனமே நீதான் வாழ்வாயோ.67 (உ)

வாழும் படிநல் அருள்புரியும் மருவுந் தணிகை மலைத்தேனைச்
சூழும் கலப மயில்அரசைத் துதியாப் பவமும் போதாமல்
வீழும் கொடியர் தமக்கன்றி மேவா நினைவும் மேவிஇன்று
தாழும் படிஎன் தனைஅலைத்தாய் சவலை மனம்நீ சாகாயோ. (ந)

காயோம் எனநின் றவர்க்கினிய கனியாம் தணிகைக் கற்பகத்தைப்
போய்ஓர் கணமும் போற்றுகிலாய் புன்மை புரிந்தாய் புலங்கெட்டாய்
பேயோ எங்கும் திரிந்தோடிப் பேணு என்னைப் பேணுகின்ற
நாயோ மனமே நீஉனைநான் நம்பி வாளா நலிந்தேனே. (ச)

தேனும் கடமும் திகழ்தணிகைத் தேவை நினையாய் நீநரகம்
மானும் நடையில் உழல்கின்றாய் மனமே உன்றன் வஞ்சகத்தால்
நானும் இழந்தேன் பெருவாழ்வை நாய்போல் அலைந்திங் கவமேநீ
தானும் இழந்தாய் என்னேஉன் தன்மை இழிவாம் தன்மையதே.

தன்னால் உலகை நடத்தும்அருட் சாமி தணிகை சாராமல்
பொன்னால் மண்ணால் பூவையரால் புலம்பி வருந்தும் புல்நெஞ்சே
உன்னால் என்றன் உயர்விழந்தேன் உற்றார் இழந்தேன் உன்செயலைச்
சொன்னால் நகைப்பர் எனைவிட்டும் தொலையாய் இங்கு நிலையாயே.

நிலைக்கும் தணிகை என்அரசை நீயும் நினையாய் நினைப்பதையும்
கலைக்கும் தொழில்கொண் டெனைக்கலக்கம் கண்டாய் பலன்என் கண்டாயே
முலைக்கும் கலைக்கும் விழைந்தவமே முயங்கும் மூட முழுநெஞ்சே
அலைக்கும் கொடிய விடம்நீஎன் றறிந்தேன் முன்னர் அறிந்திலனே.

---

67. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அநுபூதி, பிரபுலிங்கலீலை இவற்றின் திருப்பாடல்கள் போல்வனவற்றைத் தெரிந்து தெளிக :

"மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயன்இங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயில்ஏ றியவா னவனே."

"கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றதை
அடக்க வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ."

இலதை நினைப்பாய் பித்தர்கள்போல் எங்கா நிற்பாய் தணிகையில்என்
குலதெய் வமுமாய்க் கோவாய்ச்சற் குருவாய் நின்ற குகன்அருளே
நலதென் றறியாய் யான்செய்த நன்றி மறந்தாய் நாணுதென்
வலதை அழித்தாய் வலதொடுநீ வாழ்வாய் கொல்லோ வல்நெஞ்சே.

நெஞ்சே உகந்த துணைஎனக்கு நீஎன் றறிந்தே நேசித்தேன்
மஞ்சேர் தணிகை மலைஅமுதை வாரிக் கொளும்போ தென்னுள்ளே
நஞ்சே கலந்தாய் உன்உறவு நன்றே இனிஉன் நட்பகன்றால்
உய்ந்தேன் இலையேல் வன்னரகத் தள்ளேன் கொள்ளேன் ஒன்றையுமே.

கொள்ளும் பொழில்சூழ் தணிகைமலைக் கோவை நினையா தெனைநரகில்
தள்ளும் படிக்கோ தலைப்பட்டாய் சகத்தின் மடவார் தம்மயலாம்
கள்ளுண் டந்தோ வெறிகொண்டாய் கலைத்தாய் என்னைக் கடந்தோர்கள்
எள்ளும் படிவந் தலைக்கின்றாய் எனக்கென் றெங்கே இருந்தாயோ. (கo)

இருந்தாய் இங்கு கண்டவிடத் தேகா நின்றாய் அவ்விடத்தும்
பொருந்தாய் மீண்டும் புகுவாய்பின் போவாய் வருவாய் புகழ்த்தணிகை
மருந்தாய் நின்ற குகன்அடியை வழுத்தாய் எனையும் வலிக்கின்றாய்
திருந்தாய் நெஞ்சே நின்செயலைச் செப்ப எனக்குத் திடுக்கிடுமே.

திருச்சிற்றம்பலம்

16. புன்மை நினைந் திரங்கல்[68]

கட்டளைக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

மஞ்சட் பூச்சின் மினுக்கில்இ ளைஞர்கள்
மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பால்
கெஞ்சிக் கொஞ்சி நிறைஅழிந் துன்அருட்
கிச்சை நீத்துக் கிடந்தனன் ஆயினேன்
மஞ்சுற் றோங்கும் பொழில்தணி காசல
வள்ளல் என்வினை மாற்றுதல் நீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடும் அன்பர்கள்
தம்மைக் காக்கும் தனிஅருட் குன்றமே.[69] (க)

---

68. இப் பதிகத் திரு ஏடுகளின் எண்கள் உகள, உகஅ. இவ் வேடுகளின் முதற்கண், அடிகளார் "உ. குருவே நம." என்றெழுதிச் சிந்தித்திருக்கிறார்கள்.

69. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், காமத்தில் சிக்கி இறை அன்பை மறந்திருக்கும் தம்மை, அதை மாற்றி, ஆட்கொளல் இறைவன் கடன் எனல் காண்க.

முலையைக் காட்டி மயக்கினன் ஆருயிர்
முற்றும் வாங்குறும் முண்டைகள் நன்மதி
குலையக் காட்டும் கலவிக்கி சைந்துநின்
கோலங் காணக் குறிப்பிலன் ஆயினேன்
நிலையைக் காட்டும்நல் ஆனந்த வெள்ளமே
நேச நெஞ்சகம் நின்றொளிர் தீபமே
கலையைக் காட்டும் மதிதவழ் நற்றணி
காச லத்தமர்ந் தோங்கதி காரனே.70 (உ)

வஞ்ச மேகுடி கொண்டு விளங்கிய
மங்கை யர்க்கு மயல்உழந் தேஅவர்
நஞ்சம் மேவு நயனத்தில் சிக்கியே
நாயி னேன்உனை நாடுவ தென்றுகாண்
கஞ்சம் மேவும் அயன்புகழ் சோதியே
கடப்ப மாமலர்க் கந்தசு கந்தனே
தஞ்ச மேஎன வந்தவர் தம்மைஆள்
தணிகை மாமலைச் சற்குரு நாதனே. (ங)

பாவம் ஓர்உரு வாகிய பாவையர்
பண்ணு கண்வலைப் பட்டும யங்கியே
கோவை வாய்இதழ்க் கிச்சைய தாகிநின்
குரைக ழற்கன்பு கொண்டிலன் ஆயினேன்
மேவு வார்வினை நீக்கிஅ ளித்திடும்
வேல னேதணி காசல மேலனே
தேவர் தேடரும் சீர்அருட் செல்வனே
தெய்வ யானை திருமண வாளனே. (ச)

கரத்தைக் காட்டியே கண்களை நீட்டியே
கடைய னேன்உயிர் வாட்டிய கன்னியர்
உரத்தைக் காட்டி மயக்கம யங்கினேன்
உன்றன் பாத உபயத்தைப் போற்றிலேன்

---

70. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போல்வனவற்றை ஆராய்ந்து தெளிக :

" பந்தாடும் மங்கையர் செங்கயற் பார்வையில் பட்டுழலும்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றில்நிற்கும்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே."

புரத்தைக் காட்டு நகையினா ரித்தகோர்
புண்ணி யற்குப் புகல்குரு நாதனே
வரத்தைக் காட்டும் மலைத்தணி கேசனே
வஞ்ச னேற்கருள் வாழ்வுகி டைக்குமோ. (ரு)

காசம் மேகம் கடும்பிணி சூலைமோ
காதி யால்தந்து கண்கலக் கம்செயும்
மோச மேகிசம் என்றுபெண் பேய்களை
முன்னி னேன்நினை முன்னிலன் ஆயினேன்
பாசம் நீக்கிடும் அன்பர்கள் போல்எனைப்
பாது காக்கும் பரம்உனக் கையனே
தேசம் யாவும் புகழ்தணி காசலச்
செல்வ மேஅருட் சிற்சுக வாரியே. (சு)

ஐயம் ஏற்றுத் திரிபவர் ஆயினும்
ஆசை ஆம்பொருள் ஈந்திட வல்லரேல்
குய்யம் காட்டும்ம டந்தையர் வாய்ப்பட்டுன்
கோல மாமலர்ப் பாதம்கு றித்திலேன்
மைஉ லாம்பொழில் சூழும்த ணிகைவாழ்
வள்ள லேவள்ளி நாயக னேபுவிச்
சைய றும்பர ஞானிகள் போற்றிடும்
சாமி யேஎனைக் காப்பதுன் தன்மையே. (எ)

கண்ணைக் காட்டி இருமுலை காட்டிமோ
கத்தைக் காட்டி அகத்தைக்கொண் டேஅழி
மண்ணைக் காட்டிடும் மாய வனிதைமார்
மாலைப் போக்கிநின் காலைப் பணிவனோ
பண்ணைக் காட்டி உருகும்அ டியர்தம்
பத்திக் காட்டிமுத் திப்பொருள் ஈதென
விண்ணைக் காட்டும் திருத்தணி காசல
வேல னேஉமை யாள்அருள் பாலனே. (அ)

படியின் மாக்களை வீழ்த்தும் படுகுழி
பாவம் யாவும் பழகுறும் பாழ்ங்குழி
குடிகொள் நாற்றக் குழிசிறு நீர்தரும்
கொடிய ஊற்றுக் குழிபுழுக் கொள்குழி
கடிம லக்குழி ஆகும் கருக்குழிக்
கள்ள மாதரைக் கண்டும யங்கினேன்
ஓடிவில் சீர்த்தணி காசல நின்புகழ்
ஓதி லேன்எனக் குண்டுகொல் உண்மையே. (கூ)

கச்சுக் கட்டி மணங்கட்டிக் காமுகர்
    கண்ணைக் கட்டி மனங்கட்டி வஞ்சகம்
வச்சுக் கட்டிய வன்கழற் கட்டியும்
    மண்ணின் கட்டியும் மானும்மூ லக்கட்டிக்
கிச்சைக் கட்டிஇ டும்பைஎ னும்சுமை
    ஏறக் கட்டிய எற்கருள் வாய்கொலோ
பிச்சைக் கட்டிய பித்தன் புதல்வனே
    பெருமை கட்டும் பெருந்தணி கேசனே. (௧0)

திருச்சிற்றம்பலம்

17. திருவடி சூட விழைதல்[71]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனார் அலங்கல் குழல்மடவார் திறத்தின் மயங்காத் திறல்அடைதற்
கானார் கொடிஎம் பெருமான்தன் அருட்கண் மணியே அற்புதமே
கானார் பொழில்சூழ் திருத்தணிகைக் கரும்பே கருணைப் பெருங்கடலே
வானார் அமுதே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.[72]

தாழும் கொடிய மடவியர்தம் சழக்கால் உழலாத் தகைஅடைந்தே
ஆழும் பரமா னந்தவெள்ளத் தழுந்திக் களிக்கும் படிவாய்ப்ப
ஊழ்உந் தியசீர் அன்பர்மனத் தொளிரும் சுடரே உயர்தணிகை
வாழும் பொருளே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.[73]

---

71. இப் பதிகத் திரு ஏட்டின் எண்கள் உ௯௬, உ௯௭. இவ் வேடுகளின் முதலில் முறையே "உ. சண்முக நம." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்து எண்ணியிருக்கிறார்கள்.

72. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவன் தம்மைக் காமக் கடலினின்றும் கரையேற்றி, தனது தாளை வழுத்தும்படி ஆட்கொளல் வேண்டும் என்று முறையிடல் காண்க.

73. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அநுபூதி போல்வன பார்த்துத் தெளிவுறுக :

"மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரி(சு)என் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே."

மின்னுண் மருங்குல் பேதையர்தம் வெளிற்று மயக்குள் மேவாமே
உன்னும் பரம யோகியர்தம் உடனே மருவி உனைப்புகழ்வான்
பின்னும் சடைஎம் பெருமாற்கோர் பேறே தணிகைப் பிறங்கலின்மேல்
மன்னும் சுடரே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

ஆறாத் துயரம் தருங்கொடியார்க் காளாய் உழன்றிங் கலையாதே
கூறாப் பெருமை நின்அடியார் கூட்டத் துடன்போய்க் குலாவும்வண்ணம்
தேறாப் பொருளாம் சிவத்தொழுகும் தேனே தணிகைத் திருமலைவாழ்
மாறாச் சுகமே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

விரதம் அழிக்கும் கொடியார்தம் விழியால் மெலியா துனைப்புகழும்
சரதர் அவையில் சென்றுநின்சீர் தனையே வழுத்தும் தகைஅடைவான்
பரதம் மயில்மேல் செயும்தணிகைப் பரனே வெள்ளிப் பருப்பதம்வாழ்
வரதன் மகனே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

வெயில்மேல் கீடம் எனமடவார் வெய்ய மயற்கண் வீழாமே
அயில்மேல் கரங்கொள் நினைப்புகழும் அடியார்சவையின் அடையும்வகைக்
குயில்மேல் குலவும் திருத்தணிகைக் குணப்பொற் குன்றே கொள்கலப
மயில்மேல் மணியே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

தனமும் கடந்தே நாரியர்மால் தனையும் கடந்தே தவம்அழிக்கும்
சினமும் கடந்தே நினைச்சேர்ந்தோர் தெய்வச் சபையில் சேர்ந்திடவே
வனமும் கடமும் திகழ்தணிகை மலையின் மருந்தே வாக்கினொடு
மனமும் கடந்தோய் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

கல்லாக் கொடிய மடவார்தம் காமக் குழிக்கண் வீழாமே
நல்லார்க் கெல்லாம் நல்லவநின் நாமம் துதிக்கும் நலம்பெறவே
சொல்லாற் புனைந்த மாலையொடும் தொழுது தணிகை தனைத்துதிக்க
வல்லார்க் கருளும் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

கள்ளக் கயற்கண் மடவார்தம் காமத் துழலா துனைநினைக்கும்
உள்ளத் தவர்பால் சேர்ந்துமகிழ்ந் துண்மை உணர்ந்தங் குற்றிடுவான்
அள்ளற் பழனத் திருத்தணிகை அரசே ஞான அமுதளிக்கும்
வள்ளற் பெருமான் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

பாகைப் பொருவும் மொழியுடையீர் என்று மடவார்ப் பழிச்சாமல்
ஓகைப் பெறும்நின் திருத்தொண்டர் உடன்சேர்ந் துண்மை யுணர்ந்திடுவான்
தோகைப் பரிமேல் வருந்தெய்வ சூளா மணியே திருத்தணிகை
வாகைப் புயனே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

திருச்சிற்றம்பலம்

18. ஆற்றா விரகம்[74]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தணிகை மலையைச் சாரேனோ சாமி அழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் பேரேனோ பேரா அன்பு கூரேனோ
அணிசெய் அருள்நீர் ஆரேனோ ஆறாத் தாகம் தீரேனோ
பணிசெய் தொழும்பில் சேரேனோ பார்மீ திரங்கும் நீரேனே.[75] (க)

எளியேன் என்ன இருப்பாரோ ஏழைக் கிரங்கும் விருப்பாரோ[76]
அளியேன் பேர்நெஞ் சிருப்பாரோ அழியாக் காமம் திருப்பாரோ
களியேன் என்ன உருப்பாரோ கருதும் அருட்குக் கருப்பாரோ
தெளியேன் யான்என் செய்கேனே தென்பால் தணிகைப் பொருப்பாரே.

செய்கொள் தணிகை நாடேனோ செவ்வேள் புகழைப் பாடேனோ
கைகள் கூப்பி ஆடேனோ கருணைக் கடலில் நீடேனோ
மெய்கொள் புளகம் மூடேனோ மெய்அன் பர்கள்பால் கூடேனோ
பொய்கொள் உலகோ டோடேனோ புவிமீ திருகால் மாடேனே. (ந)

வந்தென் எதிரில் நில்லாரோ மகிழ ஒருசொல் சொல்லாரோ
முந்தம் மதனை வெல்லாரோ மோகம் தீரப் புல்லாரோ
கந்தன் எனும்பேர் அல்லாரோ கருணை நெஞ்சம் கல்லாரோ
சந்தத் தணிகை இல்லாரோ சகத்தில் எல்லாம் வல்லாரே. (ச)

---

74. இப் பதிகத் திரு எட்டின் எண்கள் உஎக, உஎஉ. இவ் வேடுகளின் தொடக்கத்தில் முறையே "ட. நன்றாக." என்றும், "ட" என்றும் அடிகளார் குறித்து வழிபட்டிருக்கிறார்கள்.

75. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவனை வழிபட்டு இன்ப முறும் தமது கழிபேருணர்வை எடுத்தெடுத் துரைப்பதும், இறைவன் தம்மை ஆட்கொளாது விடுப்பனோ ஆட்கொண்டு இன்பம் ஊட்டுவனோ என்று மனந்தளர்ந்து ஊசலாடுவதும் கண்டுணர்க.

76. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானப் பெருமானாரின் பைங்கிளிக் கண்ணிகள் போன்ற அடியார்களுடைய காதல் மொழிகள் கண்டு இன்புற்று நிறைவுறுக :

"கண்ணுள்மணி போல்இன்பம் காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே."

"காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தால் என்னஅருள்
வேந்தன் எமைஇழுத்து மேவுவனோ பைங்கிளியே."

"மண்உறங்கும் விண்உறங்கும் மற்றுளஎ லாம்உறங்கும்
கண்உறங்கேன் எம்இறைவர் காதலால் பைங்கிளியே."

நாட்டும் தணிகை நண்ணேனோ நாதன் புகழை எண்ணேனோ
கூட்டும் தொழும்பு பண்ணேனோ குறையா அருள்நீர் உண்ணேனோ
சூட்டும் மயக்கை மண்ணேனோ தொழும்பர் இடத்தை அண்ணேனோ
காட்டும் அவர்தாள் கண்ணேனோ கழியா வாழ்க்கைப் புண்ணேனே.

காமப் பயலைத் தடுப்பாரோ கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ
ஏமத் தனத்தைக் கடுப்பாரோ என்மேல் அன்பை விடுப்பாரோ
மாமற் றெருவீ டடுப்பாரோ மனத்தில் கோபம் தொடுப்பாரோ
தாமத் தாழ்வைக் கெடுப்பாரோ தணிகை தனில்வேல் எடுப்பாரே.

காவி மலைக்கண் வதியேனோ கண்ணுள் மணியைத் துதியேனோ
பாவி மயலை மிதியேனோ பரமா னந்தத் துதியேனோ
ஓவில் அருளைப் பதியேனோ உயர்ந்த தொழும்பில் கதியேனோ
தாவில் சுகத்தை மதியேனோ சற்றும் பயனில் ஒதியேனே. (எ)

வருந்தும் தனிமுன் மன்னுரோ வருத்தம் உனக்கேன் என்னுரோ
இருந்தென் இடத்தே துன்னுரோ இணைத்தாள் ஈய உன்னுரோ
பொருந்திங் கயலார் அன்னுரோ பொருள்ஈ தென்று பன்னுரோ
செருந்தி மலரும் திருத்தணிகைத் தேவர் எவர்க்கும் முன்னுரே. (அ)

தணிகா சலம்போய்த் தழையேனோ சாமி திருத்தாள் விழையேனோ
பணிகா தலித்துப் பிழையேனோ பாடி மனது குழையேனோ
திணிகாண் உலகை அழையேனோ சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனோ
பிணிகாண் உலகில் பிறந்துழன்றே பேதுற் றலையும் பழையேனே.

மன்னும் குவளை ஈயாரோ மதவேள் மதத்தைக் காயாரோ
இன்னும் கோபம் ஓயாரோ என்தாய் தனக்குத் தாயாரோ
துன்னும் இரக்கம் தோயாரோ துகளேன் துயரை ஆயாரோ
பன்னும் வளங்கள் செறிந்தோங்கும் பணைகொள் தணிகைத் தூயாரே.

திருச்சிற்றம்பலம்

19. ஏழைமையின் இரங்கல்[77]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தேனே உளங்கொள் தெளிவே அகண்ட
சிதம்பரமேவி நின்ற சிவமே
கோனே கனிந்த சிவபோத ஞான
குருவே விளங்கு குகனே

77. இப் பதிகத் திரு எட்டெண்கள் உஎஅ, உஎசு. இவ் வேடுகளை அடிகளார், " ௳. சிவமயம்." என்றெழுதி வழிபட்டுத் தொடங்கியிருக்கிறார்கள்.

தானே தனக்கு நிகராய் விளங்கு
　　தணிகா சலத்தெம் அரசே
நானே ழைஇங்கு மனம்நொந்து நொந்து
　　நலிகின்ற செய்கை நலமோ.78 (க)

நலமேவு தொண்டர் அயன்ஆதி தேவர்
　　நவைஏக நல்கு தணிகா
சலமேவி உன்றன் இருதாள் புகழ்ந்து
　　தரிசிப்ப தென்று புகலாய்
நிலமேவு கின்ற சிவயோகர் உள்ளம்
　　நிகழ்கின்ற ஞான நிறைவே
வலமேவு வேல்கை ஒளிர்சேர் கலாப
　　மயில்ஏறி நின்ற மணியே.79 (உ)

---

78. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் உலகியல் துன்பத்தில் நோவது பொறுக்க முடியாததொன்று என்றும், இறைவன் தம்மை ஆளும் காலமும் உண்டோ என்றும், இறைவன் தம்மைக் கைவிடில் யார் எதிர் சொல்வார் என்றும், இறைவன் தமக்கு அருள் வெளியில் இடங் கொடுத்தால், பழ அடியார்களுக்கு இறைவன் அது குறித்து என்ன சமாதானம் சொல்லமுடியும் என்றும்—இன்ன பலவும் எடுத்தெடுத்துக் கூறுதல் காண்க.

79. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தாயுமானப் பெருமானார், அருணகிரி நாத அடிகளார் மெய்ம்மொழி போல்வனவற்றை ஓர்ந்து உணர்க :

"ஒருமைமன தாகியே அல்லல்அற நின்அருளில்
　　ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறுததோ மாயா விசித்ரம்என
　　ஓயுமோ இடம்இல்லையோ
அருளுடைய நின்அன்பர் சங்கைசெய் திடுவரோ
　　அலதுகிர்த் தியகர்த்தராய்
அகிலம் படைத்(து)எம்மை ஆள்கின்ற பேர்சிலர்
　　அடா(து)என் பரோஅகன்ற
பெருமைபெறு பூரணம் குறையுமோ பூதங்கள்
　　பேய்க்கோல மாய்விதண்டை
பேசுமோ அலதுதான் பரிபாக காலம்
　　பிறக்கஇலை யோதொல்லையாம்
இருமைசெறி சடவினை எதிர்த்துவாய் பேசுமோ
　　ஏதுளவு சிறிதுபுகலாய்
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
　　எங்குநிறை கின்றபொருளே."

மணியே கலாப மலைமேல் அமர்ந்த
மதியே நினைச்சொல் மலரால்
அணியேன் நல்அன்பும் அமையேன் மனத்தில்
அடியார் அடிக்கண் மகிழ்வாய்ப்
பணியேன் நினைந்து பதையேன் இருந்து
பருகேன் உவந்த படியே
எணியே நினைக்கில் அவமாம்இவ் வேழை
எதுபற்றி உய்வ தரசே. (௩)

உய்வண்ணம் இன்றி உலகா தரத்தில்
உழல்கின்ற மாய மடவார்
பொய்வண்ணம் ஒன்றின் மனமாழ்கி அன்மை
புரிதந்து நின்ற புலையேன்
மெய்வண்ணம் ஒன்று தணிகா சலத்து
மிளிர்கின்ற தேவ விறல்வேல்
கைவண்ண உன்றன் அருள்வண்ணம் ஆன
கழல்வண்ணம் நண்ணல் உளதோ. (௪)

நண்ணாத வஞ்சர் இடம்நாடி நெஞ்சம்
நனிநொந்து நைந்து நவையாம்
புண்ணாகி நின்ற எளியேனை அஞ்சல்
புரியாது நம்பொன் அடியை
எண்ணாத பாவி இவன்என்று தள்ளின்
என்செய்வ துய்வ தறியேன்
தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு
தணிகா சலத்தி றைவனே. (௫)

---

79 (தொடர்ச்சி). " சயிலாங்க னைக்கு ருகிஇ டப்பக்
கங்கொ டுத்த கம்பர்—வெகுசாரி
சதிதாண்ட வத்தர் சடையி டத்துக்
கங்கை வைத்த நம்பர்—உமைமாளச்
செயல்மாண்டு சித்தம் அவிழ நித்தத்
த்வம்பெ றப்ப கர்ந்த—உபதேசம்
சிறியேன்த னக்கும் உரைசெ யில்சற்
றங்கு ருத்து வங்கு—றையுமோதான்."

இறையேனும் உன்றன் அடிஎண்ணி அங்கி
 இழுதென்ன நெஞ்சம் இளகேன்
மறைஓதும் உன்றன் அருள்பெற்ற தொண்டர்
 வழிபட் டலங்கல் அணியேன்
குறையோடும் இங்கு மயல்கொண்டு நின்ற
 கொடியேனை ஆளல் உளதோ
நிறையோர் வணங்கு தணிகா சலத்தில்
 நிலைபெற் றிருக்கும் அவனே. (௬)

அவம்நாள் கழிக்க அறிவேன் அலாதுன்
 அடிபேணி நிற்க அறியேன்
தவம்நாடும் அன்ப ரொடுசேர வந்து
 தணிகா சலத்தை அடையேன்
எவன்நான் எனக்கும் அவண்நீ இருக்கும்
 இடம்ஈயில் உன்றன் அடியார்
இவன்ஆர் இவன்றன் இயல்பென்ன என்னில்
 எவன்என் றுரைப்பை எனையே. (௭)

எனையான் அறிந்துன் அடிசேர உன்னை
 இறையேனும் நெஞ்சி னிதமாய்
நினையேன் அயர்ந்து நிலையற்ற தேகம்
 நிசம்என் றுழன்று துயர்வேன்
தனையே நின்அன்பன் எனவோதி லியாவர்
 தகும்என் றுரைப்பர் அரசே
வனைஏர் கொளுஞ்செய் தணிகா சலத்து
 மகிழ்வோ டமர்ந்த அமுதே. (௮)

முதுவோர் வணங்கு தணிகா சலத்து
 முதலேஇவ் வேழை முறியேன்
மதுவால் மயங்கும் அளிபோல் மயங்கி
 மதியாது நின்ற பிழையால்
விதுவாகி அன்பர் உளம்மேவும் நீதை
 விடில்ஏழை எங்கு மெலிவேன்
இதுநீதி அல்ல என உன் றனக்கும்
 எவர்சொல்ல வல்லர் அரசே. (௯)

திருச்சிற்றம்பலம்

20. பணித்திறஞ் சாலாப் பாடிழிவு[80]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அடுத்திலேன் நின்அடியர் அவைக்குட் சற்றும்
அன்பிலேன் நின்தொழும்பன் ஆகேன் வஞ்சம்
தடுத்திலேன் தணிகைதனில் சென்று நின்னைத்
தரிசனம்செய் தேமதுரத் தமிழ்ச்சொல் மாலை
தொடுத்திலேன் அழுதுநின தருளை வேண்டித்
தொழுதுதொழு தானந்தத் தூய்நீர் ஆடேன்
எடுத்திலேன் நல்லன்எனும் பெயரை அந்தோ
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே.[81] (க)

திரப்படுவேன் மையல்புரி மாய வாழ்வில்
தியங்குவேன் சிறிதேனும் தெளிவொன் றில்லேன்
மரப்படுவேன் சிதடருடன் திரிவேன் வீணே
மங்கையர்தம் கண்கள்எனும் வலைக்குள் வீழ்வேன்
கரப்பவர்க்கு முற்படுவேன் கருணை இல்லேன்
கண்அனையாய் நின்தணிகை மலையைக் காணேன்
இரப்பவர்க்கோர் அணுவளவும் ஈயேன் பேயேன்
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே.[82] (உ)

---

80. இப் பதிகத் திரு எட்டெண்கள் உஎ௫, உஎ௬. இவ் வேடுகளின் முதற் கண், அடிகளார், "௨. சண்முக நம." என்றெழுதி வழிபட்டிருக்கிறார்கள்.

81. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமானார், இறைவழிபாட்டிற்கு ஆவன வற்றுள் ஒன்றேனும் செய்யாமலும், ஏலாதவற்றுள் ஒன்றேனும் தள்ளி வைக்காமலும் இயங்கும் தாம் பிறந்தது புலிச்சுமைதான் எனல் காண்க.

82. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருநாவுக்கரசு நாயனார், அருணகிரிப் பெருமானார் இவர்கள்தம் அமுதமொழி போல்வனவற்றை அறிந்துணர்க :

"நாடி நந்தமர் ஆயின தொண்டர்காள்
ஆடு மின்அழு மின்தொழு மின்அடி
பாடு மின்பர மன்பயி லும்இடம்
கூடு மின்குரங் காடுது றையையே."

"கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமாநின் தண்டைஅந் தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே."

செய்திலேன் நின்தொண்டர் அடிக்குற் றேவல்
திருத்தணிகை மலையைவலஞ் செய்து கண்ணீர்ப்
பெய்திலேன் புலன்ஐந்தும் ஒடுக்கி வீதல்
பிறத்தல்எனும் கடல்நீந்தேன் பெண்கள் தம்மை
வைதிலேன் மலர்கொய்யேன் மாலை சூட்டேன்
மணியேநின் திருப்புகழை வழுத்தேன் நின்பால்
எய்திலேன் இவ்வுடல்கொண் டேழை யேன்யான்
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே. (௩)

சீர்கொண்டார் புகழ்தணிகை மலையிற் சேரேன்
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநின்
பேர்கொண்டார் தமைவணங்கி மகிழேன் பித்தேன்
பெற்றதே அமையும்எனப் பிறங்கேன் மாதர்
வார்கொண்டார் முலைமலைவீழ்ந் துருள்வேன் நாளும்
வஞ்சமே செய்திடுவேன் மதிஒன் றில்லேன்
ஏர்கொண்டார் இகழ்ந்திடஇங் கேழை யேன்யான்
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே. (௪)

காமாந்த காரியாய் மாதர் அல்குல்
கடல்வீழ்ந்தேன் மதிதாழ்ந்தேன் கவலை சூழ்ந்தேன்
நாமாந்த கனைஉதைத்த நாதன் ஈன்ற
நாயகமா மணியேநல் நலமே உன்றன்
பூமாந்தண் சேவடியைப் போற்றேன் ஓங்கும்
பொழில்கொள்தணி காசலத்தைப் புகழ்ந்து பாடேன்
ஏமாந்த பாவியேன் அந்தோ அந்தோ
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே. (௫)

நன்றறியேன் தீங்கனைத்தும் பறியேன் பொல்லா
நங்கையர்தம் கண்மாய நவையைச் சற்றும்
வென்றறியேன் கொன்றறிவார் தம்மைக் கூடும்
வேடனேன் திருத்தணிகை வெற்பின் நின்பால்
சென்றறியேன் இலையென்ப தறிவேன் ஒன்றும்
செய்தறியேன் சிவதருமம் செய்வோர் நல்லோர்
என்றறியேன் வெறியேன்இங் கந்தோ அந்தோ
என்பிறந்தேன் புலிச்சுமையா இருக்கின் றேனே. (௬)

அல்லார்க்கும் குழலார்மேல் ஆசை வைப்பேன்
ஐயாநின் திருத்தாள்மேல் அன்பு வையேன்
செல்லார்க்கும் பொழிற்றணிகை எங்கே என்று
தேடிடேன் நின்புகழைச் சிந்தை செய்யேன்
கல்லார்க்கும் கடுமனத்தேன் வன்க ணேன்புன்
கண்ணினேன் உதவாத கையேன் பொய்யேன்
எல்லார்க்கும் பொல்லாத பாவி யேன்யான்
என்பிறந்தேன் புவிச்சுமையா இருக்கின் றேனே. (எ)

அரும்பாய நகைமடவார்க் காளாய் வாளா
அலைகின்றேன் அறிவென்ப தறியேன் நின்பால்
திரும்பாத பாதகனேன் திருஒன் றில்லேன்
திருத்தணிகை மலைக்கேகச் சிந்தை செய்யேன்
கரும்பாய வெறுத்துவேம் பருந்தும் பொல்லாக்
காக்கைஒத்தேன் சற்றேனும் கனிதல் இல்லா
இரும்பாய வன்நெஞ்சக் கள்வ னேன்யான்
என்பிறந்தேன் புவிச்சுமையா இருக்கின் றேனே. (அ)

அம்பாதல் நெடுங்கண்ணார்க் கிச்சை கொள்வேன்
அகமலரா முகமலர்வோ டருள்செய் உன்றன்
செம்பாத மலர்ஏத்தேன் இலவு காத்தேன்
திருத்தணிகை யேநமது செல்வம் என்றே
நம்பாத கொடியேன்நல் லோரைக் கண்டால்
நாணிலேன் நடுங்கிலேன் நாயிற் பொல்லேன்
எம்பாத கத்தைஎடுத் தியார்க்குச் சொல்வேன்
என்பிறந்தேன் புவிச்சுமையா இருக்கின் றேனே. (கூ)

பண்ணேன்நின் புகழ்சொல்வோர் தமக்குப் பூசை
பாடேன்நின் திருச்சீரைப் பரமன் ஈன்ற
கண்ணேநின் தணிகைதனைக் கண்டு போற்றேன்
கைகுவியேன் மெய்குளிரேன் கண்ணீர் பாயேன்
உண்ணேன்நல் ஆனந்த அமுதை அன்பர்
உடன்ஆகேன் ஏகாந்தத் துறஓர் எண்ணம்
எண்ணேன்வன் துயர்மண்ணேன் மனஞ்செம் புண்ணேன்
என்பிறந்தேன் புவிச்சுமையா இருக்கின் றேனே. (கo)

திருச்சிற்றம்பலம்

21. காணாப் பத்து[83]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வரங்கொள் அடியார் மனமலரில் மகிழ்வுற் றமர்ந்த மாமணியே[84]
திரங்கொள் தணிகை மலைவாழும் செல்வப் பெருக்கே சிற்பரமே
தரங்கொள் உலக மயல்அகலத் தாழ்ந்துள் உருக அழுதழுது
கரங்கொள் சிரத்தோ டியான்உன்னைக் கண்கள் ஆரக் கண்டிலனே.

வல்லி ஒருபால் வானவர்தம் மகளா ரொருபால் வரமயில்மேல்
எல்லின் இலங்கு கொட்டிலைவேல் ஏந்தி வரும்என் இறையவனே
சொல்லி அடங்காத் துயர்இயற்றும் துகள்சேர் சனனப் பெருவேரைக்
கல்லி எறிந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே.[85] (உ)

உருத்துள் இகலும் சூர்முதலை ஒழித்து வானத் தொண்பதியைத்
திருத்தும் அரசே தென்தணிகைத் தெய்வ மணியே சிவஞானம்
அருத்தும் நினது திருஅருள்கொண் டாடிப் பாடி அன்பதனால்
கருத்துள் உருகி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (ங)

---

83. இப் பதிகத் திரு எட்டெண்கள் உள்ள, உஎஅ. இவ் வேடுகளின் முதலில் அடிகளார் " ௳. சண்முகநம." என்று எழுதி வழிபட்டிருக்கிறார்கள்.

84. இத் திருப்பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் திருஅருள் பெற்று, உலகமயக்கினின்றும் விடுபட்டு, உளம் உருகி, இறைவன் திரு உருவத்தைத் தம் கண்கள் ஆர இன்னும் காணவில்லையே என வருந்துதல் காண்க.

85. இப் பா முதலியவற்றோடு பின் வரும் பட்டினத்தடிகளார், அருணகிரி நாதப் பெருமானார்—இவர்கள்தம் பொய்யாப் பெருமொழி போல்வன பார்த்து உளமகிழ்க :

" தெய்வத் திருஅருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையுங் கண்டேன் என்னே
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே."

" வரைஅற் றவுணர் சிரம்அற்று வாரிதி வற்றச்செற்ற
புரைஅற்ற வேலவன் போதித்த வாபஞ்ச பூதமும்அற்(று)
உரைஅற் றுணர்வற் றுடல்அற் றுயிர்அற் றுபாயம்அற்றுக்
கரைஅற் றிருள்அற் றெனதற் றிருக்கும்அக் காட்சியதே."

போதல் இருத்தல் எனவினையாப் புனிதர் சனனப் போரோடு
சாதல் அகற்றும் திருத்தணிகைச் சைவக் கனியே தற்பரமே
ஓதல் அறியா வஞ்சகர்பால் உழன்றே மாதர்க் குள்ளுருகும்
காதல் அகற்றி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (ச)

வீட்டைப் பெறுவோர் உள்அகத்து விளங்கும் விளக்கே விண்ணோர்தம்
நாட்டை நலஞ்செய் திருத்தணிகை நகத்தில் அமர்ந்த நாயகமே
கேட்டைத் தருவஞ் சகஉலகில் கிடைத்த மாய வாழ்க்கையெனும்
காட்டைக் கடந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (ரு)

மட்டித் தளறு படக்கடலை மலைக்கும் கொடிய மாஉருவைச்
சட்டித் தருளும் தணிகையில்எந் தாயே தமரே சற்குருவே
எட்டிக் கனியாம் இவ்வுலகத் திடர்விட் டகல நின்பதத்தைக்
கட்டித் தழுவி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (சு)

இலக்கம் அறியா இருவினையால் இம்மா னிடம்ஒன் றெடுத்தடியேன்
விலக்கம் அடையா வஞ்சகர்பால் வீணுட் போக்கி மேவிமனத்
தலக்கண் இயற்றும் பொய்வாழ்வில் அலைந்தேன் தணிகை அரசேஅக்
கலக்கம் அகன்று நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (எ)

விரைவாய் கடப்பந் தார்அணிந்து விளங்கும் புயனே வேலோனே
தரைவாய் தவத்தால் தணிகைஅமர் தருமக் கடலே தனிஅடியேன்
திரைவாய் சனனக் கடற்படிந்தே தியங்கி அலைந்தேன் சிவஞானக்
கரைவாய் ஏறி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (அ)

பள்ள உலகப் படுகுழியில் பரிந்தங் குழலா தானந்த
வெள்ளத் தழுந்தும் அன்பர்விழி விருந்தே தணிகை வெற்பரசே
உள்ளம் அகல அங்கும்இங்கும் ஓடி அலையும் வஞ்சநெஞ்சக்
கள்ளம் அகற்றி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (கூ)

அடலை அணிந்தோர் புறங்காட்டில் ஆடும் பெருமான் அளித்தருளும்
விடலை எனமூ வரும்புகழும் வேலோய் தணிகை மேலோயே
நடலை உலக நடைஅளற்றை நண்ணு தோங்கும் ஆனந்தக்
கடலை அடுத்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. (கO)

திருச்சிற்றம்பலம்

22. பணித்திறஞ் சாலாமை[86]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வஞ்சகப் பேதையர் மயக்கில் ஆழ்ந்துழல்
நெஞ்சகப் பாவியேன் நினைந்தி லேன்ஐயோ
வெஞ்சகப் போரினை விட்டு ளோர்புகழ்
தஞ்சகத் தணிகைவாழ் தரும வானையே.[87] (க)

வான்நிகர் கூந்தலார் வன்க ணால்மிக
மால்நிகழ் பேதையேன் மதித்தி லேனையோ
தான்இரும் புகழ்கொளும் தணிகை மேல்அருள்
தேன்இருந் தொழுகிய செங்க ரும்பையே.[88] (உ)

கருங்கடு நிகர்நெடுங் கண்ணி னார்மயல்
ஒருங்குறு மனத்தினேன் உன்னி லேன்ஐயோ
தரும்புகழ் மிகுந்திடுந் தணிகை மாமலை
மருங்கமர்ந் தன்பருள் மன்னும் வாழ்வையே. (ங)

வைவளர் வாட்கணார் மயக்கில் வீழ்ந்தருப்
பொய்வளர் நெஞ்சினேன் போற்றி லேன்ஐயோ
மெய்வளர் அன்பர்கள் மேவி ஏத்துறும்
செய்வளர் தணிகையில் செழிக்கும் தேனையே. (ச)

செழிப்படும் மங்கையர் தீய மாயையில்
பழிப்படும் நெஞ்சினேன் பரவி லேன்ஐயோ
வழிப்படும் அன்பர்கள் வறுமை நீக்கியே
பொழிற்படும் தணிகையில் பொருந்த பொன்னையே. (ரு)

---

86. இப் பதிகத் திரு எட்டெண் உஎஅ. இப் பதிக முதலில் "ட. வேலும் மயிலும்." என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

87. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமானார், தாம், காம உணர்ச்சியால் தடைப்பட்டு, இறைவழிபாடு இயற்றவில்லை என்று இரங்குதல் காண்க.

88. இப் பா முதலியவற்றோடு அடியில் கண்ட அருணகிரிநாதப் பெருமானாரின் நெஞ்சு நிலைக்கிரங்கல் போல்வனவற்றை ஒத்துணர்ந்து தெளிக :

" தெள்ளிய ஏனலில் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே."

பொதிதரும் மங்கையர் புளகக் கொங்கைமேல்
வதிதரும் நெஞ்சினேன் மதித்தி லேன்ஐயோ
மதிதரும் அன்பர்தம் மனத்தில் எண்ணிய
கதிதரும் தணிகைவாழ் கற்ப கத்தையே. (௬)

திருச்சிற்றம்பலம்

23. குறை நேர்ந்த பத்து[89]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வான்பிறந்தார் புகழ்தணிகை மலையைக் கண்டு
வள்ளலே நின்புகழை மகிழ்ந்து கூறேன்
தேன்பிறந்த மலர்க்குழலார்க் காளா வாளா
திரிகின்றேன் புரிகின்றேன் தீமை நாளும்
ஊன்பிறந்த உடல்ஓம்பி அவமே வாழ்நாள்
ஒழிக்கின்றேன் பழிக்காளாய் உற்றேன் அந்தோ
ஏன்பிறந்தேன் என்பிறந்தேன் பாவி யேன்யான்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே.[90] (௧)

மெய்யாவோ நற்றணிகை மலையைச் சார்ந்து
மேன்மையுறும் நின்புகழை விரும்பி ஏத்தேன்
உய்யாவோ வல்நெறியேன் பயன்ப டாத
ஓதிஅனையேன் எட்டிதனை ஒத்தேன் அன்பர்
பொய்யாஓ டெனமடவார் போகம் வேட்டேன்
புலையனேன் சற்றேனும் புனிதம் இல்லேன்
ஐயாவோ நாணுமல் பாவி யேன்யான்
யார்க்கெடுத்தென் குறைதன்னை அறைகு வேனே.[91] (௨)

89. இப் பதிகத் திரு ஏட்டெண்கள் உஎக, உஅம. இவ் வேடுகளின் தொடக்கத்தில் முறையே அடிகளார் "ட... சிவ." என்றும், "ட" என்றும் எழுதிச் சிவசிந்தனை செய்திருக்கிறார்கள்.

90. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தாம், காம உணர்வின் வயப்பட்டு, இறைவனைக் கருதாது, இப் பிறவியை வீணாக்கிய குறையை யாரிடம் சொல்லி முறையிட்டுக் கொள்வது என்று இரங்குதல் காண்க.

91. இப் பா முதலியவற்றோடு பின் வரும் பட்டினத்தடிகளாரின் தூமொழி போல்வனவற்றை ஒத்துணர்க :

"நாமம்நவிற் றுய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல்—ஆமோ
பொருதவனத் தானைஉரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வனைந்து."

வாட்செல்லா நெடுங்கண்ணார் மயலில் வீழ்ந்து
மனம்போன வழிசென்று வருந்தா நின்றேன்
சேட்செல்லார் வரைத்தணிகைத் தேவ தேவே
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநான்
நாட்செல்லா நின்றதினி என்செய் கேனோ
நாயினேன் பிழைதன்னை நாடி நின்பால்
கோட்சொல்லா நிற்பர்எனில் என்னோ மேஎன்
குறையைஎடுத் தெவர்க்கெளியேன் கூறு கேனே. (௫)

பொல்லாத மங்கையர்தம் மயற்குள் ஆகும்
புலையமனத் தால்வாடிப் புலம்பு கின்றேன்
கல்லாத பாவிஎன்று கைவிட் டாயோ
கருணைஉரு வாகியசெங் கரும்பே மேரு
வில்லான்றன் செல்வமே தணிகை மேவும்
மெய்ஞ்ஞான ஒளியேஇவ் வினையேன் துன்பம்
எல்லாம்நீ அறிவாயே அறிந்தும் வாரா
திருந்தால்என் குறையைஎவர்க் கியம்பு கேனே. (௬)

முன்அறியேன் பின்அறியேன் மாதர் பால்என்
மூடமனம் இழுத்தோடப் பின்சென் றெய்த்தேன்
புன்னெறியேன் பொய்யரொடும் பயின்றேன் நின்றன்
புனிதஅருட் கடலாடேன் புளகம் மூடேன்
பொன்அரையன் தொழும்சடிலப் புனிதன் ஈன்ற
புண்ணியமே தணிகைவளர் போத வாழ்வே
என்அரைசே என்அமுதே நின்பால் அன்றி
எவர்க்கெடுத்தென் குறைதன்னை இயம்பு கேனே. (௭)

விடுமாட்டில் திரிந்துமட மாத ரார்தம்
வெய்யநீர்க் குழிவீழ்ந்து மீளா நெஞ்சத்
தடுமாற்றத் தொடும்புலைய உடலை ஓம்பிச்
சார்ந்தவர்க்கோர் அணுஅளவும் தான்ஈ யாது
படுகாட்டில் பலன்உதவாப் பனைபோல் நின்றேன்
பாவியேன் உடற்சுமையைப் பலரும் கூடி
இடுகாட்டில் வைக்குங்கால் என்செய் வேனோ
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. (௮)

மின்னைநேர் இடைமடவார் மயல்செய் கின்ற
வெங்குழியில் வீழ்ந்தழுந்தி வெறுத்தேன் போலப்
பின்னையே எழுந்தெழுந்து மீட்டும் மீட்டும்
பேய்போல வீழ்ந்தாடி மயற்குள் மூழ்கிப்
பொன்னையே ஒத்தஉன தருளை வேண்டிப்
போற்றாது வீணைநாள் போக்கு கின்ற
என்னையே யான்சிரிப்பேன் ஆகில் அந்தோ
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. (எ)

முலைஒருபால் முகம்ஒருபால் காட்டும் பொல்லா
மூடமட வார்கள்தமை முயங்கி நின்றேன்
இலைஒருபால் அனம்ஒருபால் மலஞ்சேர்த் துண்ணும்
ஏழைமதி யேன்தணிகை ஏத்த லேபொன்
மலைஒருபால் வாங்கியசெவ் வண்ண மேனி
வள்ளல்தரு மருந்தேநின் மலர்த்தாள் ஏத்தேன்
புலைஉருவா வஞ்சகநெஞ் சுடையேன் என்றன்
புன்மைதனை எவர்க்கெடுத்துப் புகலு வேனே. (அ)

வேய்ப்பால்மென் தோள்மடவார் மறைக்கும் மாய
வெம்புழுச்சேர் வெடிப்பினிடை வீழ்ந்து நின்றேன்
தாய்ப்பாலை உண்ணாது நாய்ப்பால் உண்ணும்
தகையனேன் திருத்தணிகை தன்னைச் சார்ந்து
ஆய்ப்பாலை ஒருமருங்கான் ஈன்ற செல்வத்
தாரமுதே நின்அருளை அடையேன் கண்டாய்
எய்ப்பாலை நடுங்கருங்கல் போல்நின் றெய்த்தேன்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. (கூ)

வஞ்சமட மாதரார் போகம் என்னும்
மலத்தினிடைக் கிருமியென வாளா வீழ்ந்தேன்
கஞ்சமலர் மனையானும் மாலும் தேடக்
காணாத செங்கனியில் கனிந்த தேனே
தஞ்சம் என்போர்க் கருள்புரியும் வள்ளலேநல்
தணிகைஅரை சேஉனது தாளைப் போற்றேன்
எஞ்சல்இலா வினைச்சேம இடமாய் உற்றேன்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. (க0)

திருச்சிற்றம்பலம்

24. முறையிட்ட பத்து[92]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பொன்னைப் பொருளா நினைப்போர்பால் போந்து மிடியால் இரந்துலுத்தேன்
நின்னைப் பொருள்என் றுணராத நீசன் இனிஓர் நிலைகாணேன்
மின்னைப் பொருவும் சடைப்பவள வெற்பில் விளைந்த வியன்கரும்பே
முன்னைப் பொருளே தணிகையனே முறையோ முறையோ முறையேயோ.[93]

மக்கட் பிறவி எடுத்தும்உனை வழுத்தாக் கொடிய மரம்அனையேன்
துக்கக் கடலில் வீழ்ந்துமனம் சோர்கின் றேன்ஓர் துணைகாணேன்
செக்கர்ப் பொருவு வடிவேற்கைத் தேவே தெவிட்டாத் தெள்ளமுதே
முக்கட் கரும்பின் முழுமுத்தே முறையோ முறையோ முறையேயோ.[94]

அன்பின் உனது திருஅடிக்கே ஆளாய்த் தொண்டொன் றுற்றுதே
துன்பின் உடையோர் பால்அணுகிச் சோர்ந்தேன் இனிஓர் துணைகாணேன்
என்பில் மலிந்த மாலைபுனை எம்மான் தந்த பெம்மானே
முன்பின் நடுவாய் முளைத்தோனே முறையோ முறையோ முறையேயோ.

அருகா மலத்தின் அலைந்திரக்கம் அறியா வஞ்ச நெஞ்சகர்பால்
உருகா வருந்தி உழன்றலைந்தேன் உன்தாள் அன்றித் துணைகாணேன்
பெருகா தரவில் சிவன்பெறும்நற் பேறே தணிகைப் பெருவாழ்வே
முருகா முகமூ விரண்டுடையாய் முறையோ முறையோ முறையேயோ.

பொன்னின் றொளிரும் மார்பன்அயன் போற்றும் உன்தாள் புகழ்மறந்தே
கன்னின் றணங்கும் மனத்தார்பால் கனிந்தேன் இனிஓர் துணைகாணேன்
மின்னின் றிலங்கு சடைக்கனியுள் விளைந்த நறவே மெய்அடியார்
முன்னின் றருளும் தணிகையனே முறையோ முறையோ முறையேயோ.

---

92. இப் பதிகத் திரு எட்டெண்கள் உ௮௧, உ௮உ. இவ் வேடுகளை அடிகளார் "௨" என்று கருதித் தொடங்கியிருக்கிறார்கள்.

93. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமானார், தாம் உலகரொடு கூடி, பொன்னைப் பொருளாக மதித்து, இறைவன் ஒருவனே எல்லாப் பொருளும் என்பதை மறந்து, திருஅருள் துணையின்றி இருப்பதற்காகப் பெரிதும் வருந்தி முறையிடுதல் காண்க.

94. இப் பா முதலியவற்றோடு பின் வரும் கந்தர் அலங்காரம் போல்வன கண்டுவக்க :

"சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வமெல்லாம
நீரில் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே."

வெதிர்உள் ளவரின் மொழிகேளா வீண ரிடம்போய் மிகமெலிந்தே
அதிரும் கழற்சே வடிமறந்தேன் அந்தோ இனிஓர் துணைகாணேன்
எதிரும் குயில்மேல் தவழ்தணிகை இறையே முக்கண் இயற்கனியின்
முதிரும் சுவையே முதற்பொருளே முறையோ முறையோ முறையேயோ.

ஈனத் திவறும் மனக்கொடியோர் இடம்போய் மெலிந்து நாள்தோறும்
ஞானத் திருத்தாள் துணைசிறிதும் நாடேன் இனிஓர் துணைகாணேன்
தானத் தறுகண் மலைஉரியின் சட்டை புனைந்தோன் தரும்பேறே
மோனத் தவர்தம் அகவிளக்கே முறையோ முறையோ முறையேயோ.(எ)

தேவே எனநிற் போற்றுத சிறிய ரிடம்போய்த் தியங்கினன்றன்
கோவே நின்றன் திருத்தாளைக் குறிக்க மறந்தேன் துணைகாணேன்
மாவே ழத்தின் உரிபுனைந்த வள்ளற் கினிய மகப்பேறே
மூவே தனையை அறுத்தருள்வோய் முறையோ முறையோ முறையேயோ.

வேதா நந்த நெடுபோற்றி மேவப் படும்நின் பதம்மறந்தே
ஈதா னம்தக் திடுவீரன் றீன ரிடம்போய் இரந்தலைந்தேன்
போதா னந்தப் பரசிவத்தில் போந்த பொருளே பூரணமே
மூதா னந்த வாரிதியே முறையோ முறையோ முறையேயோ. (௯)

வடியாக் கருணை வாரிதியாம் வள்ளல் உன்தாள் மலர்மறந்தே
கொடியா ரிடம்போய்க் குறையிரந்தேன் கொடியேன் இனிஓர் துணைகாணேன்
அடியார்க் கெளிய முக்கணுடை அம்மான் அளித்த அருமருந்தே
முடியா முதன்மைப் பெரும்பொருளே முறையோ முறையோ முறையேயோ.

திருச்சிற்றம்பலம்

25. நெஞ்சவலங் கூறல்[95]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இழுதை நெஞ்சினேன் என்செய்வான் பிறந்தேன்
ஏழை மார்முலைக் கேவிழைந் துழன்றேன்
பழுதை பாம்பென மயங்கினன் கொடியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்

95. இப் பதிகம் உள்ள அடிகளார் கை எழுத்துச் சுவடியின் ஏட்டெண்கள் உ அ௯, உ அச.

அழுது கண்கள்நீர் ஆர்ந்திடும் அடியர்
    அகத்துள் ஊறிய ஆனந்த அமுதே
தொழுது மால்புகழ் தணிகைஎன் அரசே
    தோன்ற லேபரஞ் சுடர்தரும் ஒளியே.[96] (க)

வஞ்ச நெஞ்சினேன் வல்விலங் கனையேன்
    மங்கை மார்முலை மலைதனில் உருள்வேன்
பஞ்ச பாதகம் ஓர்உரு எடுத்தேன்
    பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
கஞ்சன் மால்புகழ் கருணைஅங் கடலே
    கண்கள் மூன்றுடைக் கரும்பொளிர் முத்தே
அஞ்சல் அஞ்சல்என் றன்பரைக் காக்கும்
    அண்ண லேதணி காசலத் தரசே.[97] (உ)

மையல் நெஞ்சினேன் மதியிலேன் கொடிய
    வாட்க ணார்முலை மலைக்குப சரித்தேன்
பைய பாம்பினை நிகர்த்தவெங் கொடிய
    பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
மெய்யர் உள்ளகம் விளங்கொளி விளக்கே
    மேலை யோர்களும் விளம்பரும் பொருளே
செய்ய மேனிஎம் சிவபிரான் அளித்த
    செல்வ மேதிருத் தணிகையந் தேவே. (ங)

மதியில் நெஞ்சினேன் ஒதியினை அனையேன்
    மாதர் கண்எனும் வலையிடைப் பட்டேன்
பதியில் ஏழையேன் படிற்றுவஞ் சகனேன்
    பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
பொதியில் ஆடிய சிவபிரான் அளித்த
    புண்ணி யாஅருட் போதக நாதா
துதிஇ ராமனுக் கருள்செயும் தணிகைத்
    தூய னேபசுந் தோகைவா கனனே. (ச)

---

96. இத் திருப்பதிகப் பாக்களில், நம்பெருமானார், காமத்தினால் கட்டுண்டு கலங்கும் தாம் எங்ஙனம் இறைவன் திருவடி அடைதல் கூடும் என்று ஏங்குதல் காண்க.

97. இப் பா முதலியவற்றோடு பின்வரும் அருணகிரிநாதப் பெருமானாரின் முறையீடு போல்வனவற்றை ஓர்ந்து உளங்கொள்க :

" கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேல்கந்த னேதுறந் தோர்உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்கும் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னைஎந் நாள்வந் திரட்சிப்பையே."

துட்ட நெஞ்சினேன் எட்டியை அனையேன்
துயர்செய் மாதர்கள் சூழலுள் தினமும்
பட்ட வஞ்சனேன் என்செய உதித்தேன்
பாவியேன் எந்தப் பரிசுகொண் டடைவேன்
நட்டம் ஆடிய நாயகன் அளித்த
நல்ல மாணிக்க நாயக மணியே
மட்ட றுப்பொழில் சூழ்திருத் தணிகை
வள்ள லேமயில் வாகனத் தேவே. (௫)

காயும் நெஞ்சினேன் பேயினை அனையேன்
கடிகொள் கோதையர் கண்வலைப் பட்டேன்
பாயும் வெம்புலி நிகர்த்தவெஞ் சினத்தேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
தாயும் தந்தையும் சாமியும் எனது
சார்பும் ஆகிய தணிகையங் குகனே
ஆயும் கொன்றைசெஞ் சடைக்கணிந் தாடும்
ஐயர் தந்தருள் ஆனந்தப் பேறே. (௬)

தீங்கு நெஞ்சினேன் வேங்கையை அனையேன்
தீய மாதர்தம் திறத்துழல் கின்றேன்
பாங்கி லாரொடும் பழகிய வெறியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
தேங்கு கங்கையைச் செஞ்சடை இருத்தும்
சிவபி ரான்செல்வத் திருஅருட் பேறே
ஓங்கு நற்றணி காசலத் தமர்ந்த
உண்மை யேஎனக் குற்றிடும் துணையே. (௭)

கள்ள நெஞ்சினேன் நஞ்சினை அனையேன்
கடிய மாதர்தங் கருக்குழி எனும்ஓர்
பள்ளம் ஆழ்ந்திடு புலையனேன் கொலையேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
வெள்ள வார்சடை வித்தகப் பெருமான்
வேண்ட நற்பொருள் விரித்துரைத் தோனே
புள்அ லம்புதண் வாவிசூழ் தணிகைப்
பொருப்ப மர்ந்திடும் புனிதபூ ரணனே. (௮)

மத்த நெஞ்சினேன் பித்தரில் திரிவேன்
மாதர் கண்களின் மயங்கிநின் றலைந்தேன்
பத்தி என்பதோர் அணுவும்உற் றில்லேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
பித்த நாயகன் அருள்திருப் பேறே
பிரமன் மாலுக்கும் பேசரும் பொருளே
தத்தை பாடுறும் பொழிற்செறி தணிகா
சலத்தின் மேவிய தற்பர ஒளியே. (௯)

அழுக்கு நெஞ்சினேன் பொய்யல தறியேன்
அணங்க னார்மயல் ஆழத்தில் விழுந்தேன்
பழுக்கும் மூடருள் சேர்ந்திடுங் கொடியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
மழுக்கை ஏந்திய மாசிலா மணிக்குள்
மன்னி ஓங்கிய வளர்ஒளிப் பிழம்பே
வழுக்கி லார்புகழ் தணிகைஎன் அரசே
வள்ள லேஎன்னை வாழ்விக்கும் பொருளே. (௧0)

திருச்சிற்றம்பலம்

26. ஆற்றுப் புலம்பல்[98]

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

அண்ணாவோ என்அருமை ஐயாவோ பன்னிரண்டு
கண்ணாவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ என்றென்றே
எண்ணாவோ துன்பத் திருங்கடற்குள் மன்னினனே.[99] (௧)

98. இப் பதிகத் திரு எட்டெண் உடிறு. இதன் தொடக்கத்தில் அடிகளார் "கொச்சகக் கலிப்பா" என்று குறித்திருக்கிறார்கள்.

99. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தாம் உலகியல் துன்பங்களுக்குள் மூழ்கி யிருப்பதற்காக வருந்தியும், எந்நாள் தாம் இறைவனைத் தொழுது தம் துன்பம் துடைக்கப் பெறுவார் என்றும், நோய்க்கு விருந்தாக இருப்பதற்காகவா இறைவன் தம்மைப் பெற்றெடுத்தான் என்றும், தம் துயர்க்கிரங்கி அருளும்படி இறைவனை வேண்டியும் முறையிடுதல் காண்க.

மன்னப்பார் போற்று மணியேநின் பொன்னருளைத்
துன்னப்பா ராது சுழன்றேன் அருணைகிரி
தன்னப்பா நற்றணிகை தன்னில் அமர்ந்தருளும்
என்னப்பா இன்னும்இந்த ஏழைக் கிரங்காயோ.[100] (௨)

காய்நின்ற நெஞ்சக் கடையேன் திருத்தணிகை
வாய்நின் றுனதுபுகழ் வாய்பாடக் கைகுவித்துத்
தூய்நின்றே நானைத் தொழுதாடித் துன்பமெலாம்
போய்நின் றடைவேனோ புண்ணியநின் பொன்அருளே. (௩)

பொன்பிணிக்கும் நெஞ்சப் புலையேனை இவ்வுலகில்
வன்பிணிக்கோ பெற்று வளர்த்தாய் அறியேனே
என்பிணைத்தார் வள்ளற் கினிமை பெறும்மணியே
அன்பிணைத்தோர் போற்றும் அருட்டணிகை மன்னவனே. (௪)

வன்நோயும் வஞ்சகர்தம் வன்சார்பும் வன்துயரும்
என்னையுங் கொண்டதனை எண்ணி இடிவேனே
அன்னை முறைபோகி ஐயா முறையேயோ
மன்னை முறைதணிகை வாழ்வே முறையேயோ. (௫)

திருச்சிற்றம்பலம்

---

100. இப் பா முதலியவற்றோடு பின் வரும் பட்டினத்தடிகளார், அருணகிரி நாதப் பெருமானார் இவர்கள்தம் தெய்வத் திருமொழி போல்வன கண்டுணர்க :

"இடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்(கு)
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்றுள் ஆடும்
இறையவன் என்கிலை என்நினைந் தனையே."

"மாவேழ் சனனம் கெடமா யைவிடா
மூவே டணைஎன் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவசங் கரதே சிகனே."

27. திரு அருள் விழைதல்[101]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

தாணு என்றருள் செல்வமே தணிகையில் சாமியே நினைத்திக்
காணு வேன்இலை அருள்இவண் புன்மையில் காலங்கள் கழிக்கின்றேன்
மாணும் அன்பர்கள் என்சொலார் ஐயநீ வந்தெனக் கருள்வாயேல்
நாணு வேன்அலன் நடுங்கலன் ஒடுங்கலன் நாயினும் கடையேனே.[102]

கடைப்பட் டேங்கும்இந் நாயினுக் கருள்தரக் கடவுள்நீ வருவாயேல்
மடைப்பட் டோங்கிய அன்பகத் தொண்டர்கள் வந்துனைத் தடுப்பாரேல்
தடைப்பட் டாய்எனில் என்செய்வேன் என்செய்வேன் தளர்வது தவிரேனே
அடைப்பட் டோங்கிய வயல்திருத் தணிகைஅம் பதிஅமர்ந் திடுதேவே.[103]

தேவ ரேமுதல் உலகங்கள் யாவையும் சிருட்டிஆ தியசெய்யும்
மூவ ரேஎதிர் வருகினும் மதித்திடேன் முருகநின் பெயர்சொல்வோர்
யாவ ரேனும்என் குடிமுழு தாண்டெனை அளித்தவர் அவரேகாண்
தாவ நாடொறுத் தணிகைஅம் பதியில்வாழ் சண்முகப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

---

101. இப் பதிகத் திரு எட்டெண் உஅ. இப் பதிகத் தொடக்கத்தில், அடிகளார், " உ. தனிப்பாடல்." என்று குறித்திருக்கிறார்கள்.

102. இத் திருப்பதிகப் பாக்களில், பெருமானார், தாம் இறைவனை எண்ணு தொழிந்து அருளடையா திருத்தற்காக வருந்தியும், இறைவனைத் தவிர்த்து வேறு யார்க்கும் தாம் அடிமைப்பட விரும்பவில்லை என்றும் கூறுதல் காண்க.

103. இப் பா முதலியவற்றோடு பின் வரும் அருணகிரிநாதப் பெருமானாரின் திருப்புகழ் போல்வனவற்றைத் தெரிந்து தெளிக :

" எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி—அவதாரம்
இனிஉன தபயம் எனதுயிர் உடலும்
இனிஉடல் விடுக—முடியாது
கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனும் மிகவும்—அயர்வானார்
கடன்உன தபயம் அடிமைஉன் அடிமை
கடுகிஉன் அடிகள்—தருவாயே."

28. புண்ணிய நீற்று மான்மியம்[104]

வண்ணக் கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திவசங்கள் தொறும்கொண் டிடுதீமைப்பிணி தீரும்
பவசங்கடம் அறும்இவ்விக பரமும்புகழ் பரவும்
கவசங்கள்எனச்சூழ்ந்துறு கண்ணேறது தவிரும்
சிவசண்முக எனவே அருள் திருநீறணிந் திடிலே.[105] (க)

மால்ஏந்திய குழலார்தரு மயல்போம்இடர் அயல்போம்
கோல்ஏந்திய அரசாட்சியும் கூடும்புகழ் நீடும்
மேல்ஏந்திய வானாடர்கள் மெலியாவிதம் ஒருசெவ்
வேல்ஏந்திய முருகாஎன வெண்ணீறணிந் திடிலே.[106] (உ)

104. இப் பதிகத்தின் முதல் ஐந்து பாக்கள், அடிகளாரது கை எழுத்துச் சுவடியின் உஅசு-ஆம் ஏட்டிலும், பின் ஐந்து பாக்கள், அடிகளார்கை எழுத்தில், அவர்களுக்கு ஆட்பட்டு அவர்களோடு வதிந்த பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியாரது காகித நோட்டுப் புத்தகத்திலும் காண்கின்றன. இவை அடிகளார்அன்பர்கள் வேறு இருவரின் திருத் தணிகைப் பதிகக் காகித நோட்டுக்களிலும் படி செய்யப்பட்டிருக் கின்றன. தொ. வே. அவர்களது 1880-ஆம் ஆண்டு முதல் பதிப்பில் முன் ஐந்து பாக்கள் மட்டுமே உண்டு. பின் ஐந்து பாக்கள் இப் பதிப் பாசிரியரால் முதல் முதலாக 1933-ஆம் ஆண்டு திருஅருட்பா ஆறும் புத்தகம் தனிப் பாசுரப்பகுதியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இது குறித்து, தனிப் பாசுரப்பகுதி 39, 40-ஆம் பக்கங்களும் 19-ஆம் அடிக்குறிப்பும் பார்க்க. மேற்குறித்த உஅசு-ஆம் ஏட்டின் முதலில் "உ. வண்ண விருத்தம்." என்று அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

105. இத் திருப்பதிகப் பாக்களில், நம் பெருமானார் இறைவனை நினைந்து நீறிடத் தீவினை அறும், எல்லா வளமும் எய்தும், அடியார் சார்பு கூடும், சாவையும் தவிர்க்கலாம் என்றியம்பி இன்புறுதல் காண்க.

106. இப் பா முதலியவற்றோடு பின்வரும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் தெரிக்கும் தெய்வப் பெருமறை போல்வனவற்றை ஓதி உணர்ந்து கடைப்பிடிக்க :

"மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திருநீறே."

"பேசப் பட்டேன் நின்அடி யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல ரால்உன் அடியான் என்(று)
ஏசப் பட்டேன் இனிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே."

தவம்உண்மையொ டுறும்வஞ்சகர் தம்சார்வது தவிரும்
நவம்அண்மிய அடியாரிடம் நல்கும்திறன் மல்கும்
பவனன்புனல் கனல்மண்வெளி பலவாகிய பொருளாம்
சிவசண்முக எனவேஅருள் திருநீறணிந் திடுலே. (ந)

துயில்எறிய சோர்வும்கெடும் துயரம்கெடும் நடுவன்
கையில்எறிய பாசம்துணி கண்டேமுறித் திடுமால்
குயில்வறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும்
மயில்எறிய மணியேஎன வளர்நீறணிந் திடுலே. (ச)

தேறுப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறுப்பிணி மாயும்திரு மருவும்கரு ஒருவும்
வீறுப்பொடு வருசூர்முடி வேறுக்கிட வரும்ஓர்
ஆறுக்கரப் பொருளேஎன அருள்நீறணிந் திடுலே. (டு)

அமராவதி இறையோடுநல் அயனுந்திரு மாலும்
தமராகுவர் சிவஞானமுந் தழைக்குங்கதி சாரும்
எமராஜனை வெல்லுந்திறல் எய்தும்புகழ் எய்தும்
குமராசிவ குருவேஎனக் குளிர்நீறணிந் திடுலே. (சு)

மேலாகிய உலகத்தவர் மேவித்தொழும் வண்ணம்
மாலாகிய இருள்நீங்கிநல் வாழ்வைப்பெறு வார்காண்
சீலாசிவ லீலாபர தேவாஉமை யவள்தன்
பாலாகதிர் வேலாஎனப் பதிநீறணிந் திடுலே. (எ)

அகமாறிய நெறிசார்குவர் அறிவாம்உரு அடைவார்
மிகமாறிய பொறியின்வழி மேவாநல மிகுவார்
சகமாறினும் உயர்வானிலை தாமாறினும் அழியார்
முகமாறுடை முதல்வாஎன முதிர்நீறணிந் திடுலே. (அ)

சிந்தாமணி நிதியைந்தரு செழிக்கும்புவ னமும்ஓர்
நந்தாஎழில் உருவும்பெரு நலனும்கதி நலனும்
இந்தாஎனத் தருவார்தமை இரந்தார்களுக் கெல்லாம்
கந்தாசிவன் மைந்தாஎனக் கனநீறணிந் திடுலே. (கூ)

---

106 (தொடர்ச்சி).

"பூரணச்சிவ ஞான காவியம்
ஓது தற்புணர் வான நேயர்கள்
பூசு மெய்த்திரு நீறி டாஇரு—வினையேனைப்
பூசி மெய்ப்பதம் ஆன சேவடி
காண வைத்தருள் ஞானம் ஆகிய
போத கத்தினை யும் ஆ(று)அருள்—புரிவாயே."

எண்ணார்புரம் எரித்தார்அருள் எய்தும்திரு நெடுமால்
நண்ணாததோர் அடிநீழலில் நண்ணும்படி பண்ணும்
பண்ணார்மொழி மலையாள்அருள் பாலாபனி ரண்டு
கண்ணாளம தண்ணாளனக் கனநீறணிந் திடிலே. (க0)

திருச்சிற்றம்பலம்

29. உறுதி உணர்த்தல்[107]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மஞ்சேர் பிணிமிடி யாதியை நோக்கி வருந்துறும்என்
நெஞ்சே தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எஞ்சேல் இரவும் பகலுந் துதிசெய் திடுதிகண்டாய்
அஞ்சேல் இதுசத் தியம்ஆம்என் சொல்லை அறிந்துகொண்டே.[108] (க)

அறியாத நம்பிணி ஆதியை நீக்கும் அருள்மருந்தின்
நெறியாம் தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எறியா திரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
குறியா திருக்கலை என்ஆணை என்றன் குணநெஞ்சமே.[109] (உ)

---

107. இப் பதிகத் திரு எட்டெண் உஅஎ. இவ் வேட்டை, அடிகளார், "உ. தனிப்பாடல்." என்றெழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

108. இத் திருப்பதிகப் பாக்களில், நம் பெருமானார், இரவும் பகலும் இறைவனை ஏத்தினால், பிணி முதலிய எல்லாத் துன்பங்களும் நீங்கும் எனல் காண்க.

109. இப் பா முதலியவற்றோடு பின்வரும் பட்டினத்தடிகளார், அருணகிரி நாதப் பெருமானார் இவர்கள்தம் ஆநந்தாநுபவம் அறிந்து இன்புறுக:

"வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகில் புகுகின்றி லேன்புகழ் மாமருதின்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றில் ஆசைஇன்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்றுமே."

"பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்அன்பி னால்மெல்ல மெல்லஉள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம் தித்தித்(து) அறிந்தஅன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும் புளித்(து)அறக் கைத்ததுவே."

என்றே பிணிகள் ஒழியும்என் றேதுயர் எய்தியிடேல்
நின்றே தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
இன்றே இரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
நன்றேஎக் காலமும் வாழிய வாழிய நன்னெஞ்சமே. (௯)

திருச்சிற்றம்பலம்

30. எண்ணத் தேங்கல்[110]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போதுகொண் டவனும் மாலும்நின் றேத்தும்
புண்ணிய நின்திரு அடிக்கே
யாதுகொண் டடைகேன் யாதுமேற் செய்கேன்
யாதுநின் திருஉளம் அறியேன்
தீதுகொண் டவன்என் றெனக்கருள் சிறிதும்
செய்திடா திருப்பையோ சிறியோன்
ஏதிவன் செயல்ஒன் றிலைஎனக் கருதி
ஈவையோ தணிகைவாழ் இறையே.[111] (௧)

வாழ்வனோ நின்பொன் அடிநிழல் கிடைத்தே
வயங்கும்ஆ னந்தவெள் ளத்துள்
ஆழ்வனோ எளியேன் அல்லதிவ் வுலகில்
அறஞ்செயாக் கொடியர்பாற் சென்றே
தாழ்வனோ தாழ்ந்த டணிபுரிந் தவமே
சஞ்சரித் துழன் றுவெந் நரகில்
வீழ்வனோ இஃதென் றறிகிலேன் தணிகை
வெற்பினுள் ஒளிர்அருள் விளக்கே.[112] (௨)

திருச்சிற்றம்பலம்

---

110. இப் பதிகமும் 107-ஆம் அடிக்குறிப்பில் கண்ட ௨௮௭-ஆம் திரு ஏட்டில் காண்கிறது.

111. இத் திருப்பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம்மைத் தீதுள்ளவர் என்று இறைவன் தள்ளி வைப்பனோ அல்லது தம் செயல் ஏதுவும் இல்லையென்று கருதித் தம்மை ஆட்கொண்டருள்வனோ என்று இரங்குதல் காண்க.

112. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகம், திருப்புகழ் போன்ற நிறைமொழிகளைத் தெரிந்து தெளிக :

31. கையடை முட்டற் கிரங்கல்[113]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

கார்பூத்த கண்டத் தொடுமேவு முக்கட் கனிகனிந்து
சீர்பூத் தொழுகுசெந் தேனே தணிகையில் தெள்அமுதே
பேர்பூத்த ஒற்றியில் நின்முன்னர் ஏற்றிடப் பேதையனேன்
ஏர்பூத்த ஒண்பளி தம்காண் கிலன்அதற் கென்செய்வனே.[114] (க)

கருமருந் தாய மணிகண்ட நாயகன் கண்மணியாம்
அருமருந் தேதணி காசலம் மேவும்என் ஆருயிரே
திருமருங் கார்ஒற்றி யூர்மே வியநின் திருமுன்னராய்
ஒருமருங் கேற்றஎன் செய்கேன் கற்பூர ஒளியினுக்கே.[115] (உ)

112 (தொடர்ச்சி).

" தெய்வம் என்பதோர் சித்தம்உண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின."

" என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும்
என்னால் துதிக்கவும்—கண்களாலே
என்னால் அழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னால் இருக்கவும்—பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும்—தொந்தநோயை
என்னால் எரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும்—இங்கு நான்ஆர்."

113. இப் பதிகத் திரு எட்டின் எண் உஅஅ. இதன் முன்பின் பக்கத் தொடக்கத்தில், முறையே " உ. சண்முக நம." என்றும், "உ. சிவ நம." என்றும் அடிகளார் எழுதி இறை வழிபாடு இயற்றியிருக்கிறார்கள்.

114. இப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் இறைவழிபாடு இயற்றக் கற்பூரம் கிடைக்கவில்லை என்று வருந்தியும், உலக மாயையினின்றும் தம்மை விடுவித்தருளும்படி இறைவனிடம் முறையிட்டும் உளம் உருகி நிற்பது காண்க.

115. இப் பா முதலியவற்றோடு பின்வரும் மணிவாசகம், திருக்குறள், கந்தர் அநுபூதி ஆகியவற்றின் மெய்ம்மொழிகள் போல்வன பார்த்துணர்க :

" நல்குர(வு) என்னும் தொல்விடம் பிழைத்தும்."

" இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்."

பால்எடுத் தேத்தும்நற் பாம்பொடு வேங்கையும் பார்த்திடஓர்
கால்எடுத் தம்பலத் தாடும் பிரான்திருக் கண்மணியே
வேல்எடுத் தோய்தென் தணிகா சலத்தமர் வித்தகநின்
பால்எடுத் தேற்றக் கிடைக்குங் கொலோவெண் பளிதம்எற்கே. (௩)

கண்ணப்பன் என்னும் திருப்பெய ரால்உல கம்புகழும்
திண்ணப்பன் ஏத்தும் சிவனார் மகனுக்குத் தெண்டன்இட்ட
விண்ணப்பம் ஒன்றிந்த மேநினி மாயையில் வீழ்வதறுத்
தெண்ணப் படும்நின் திருவருள் ஈகஇவ் வேழையற்கே. (௪)

திருச்சிற்றம்பலம்

32. பொது[116]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

எப்பா லவரும் இறைஞ்சும் தணிகை இருந்தருள்என்
அப்பாஉன் பொன்னடிக் கென்நெஞ் சகம்இட மாக்கிமிக்க
வெப்பான நஞ்சன வஞ்சகர் பாற்செலும் வெந்துயர்நீத்
திப்பாரில் நின்அடி யார்க்கேவல் செய்ய எனக்கருளே.[117] (௧)

எய்யா தருள்தணி காசலம் மேவிய என்அருமை
ஐயா நினது திருவடி ஏத்திஅன் றேஅய னும்
செய்யாள் மருவும் புயனுடைத் தேவனும் சேணவனும்
நையாத ஆயுளும் செல்வமும் வண்மையும் நண்ணினரே.[118] (௨)

115 (தொடர்ச்சி).

"வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடிஅந் தம்இலா அயில்வேல் அரசே
மிடிஎன் றொருபா விவெளிப் படினே."

116. இப் பதிகத் திரு வட்டெண் உஅக. இதன் முதற்கண் அடிகளார் "உ. சிவமம." என்று வரைந்து உணர்ந்திருக்கிறார்கள்.

117. இத் திருப்பதிகப் பாக்களில், நம் பெருமானார், தம் நெஞ்சில் இறைவன் குடிகொண்டு, தமது உலக மயக்கத்தை ஒழித்து, அடியார்க்குத் தொண்டு பூண்டொழுகும் பேற்றைத் தமக்கு அளித்து, தம்மை ஆட்கொளவேண்டும் என்று உளங் கனிந்து உரைத்தல் காண்க.

118. இப் பா முதலியவற்றோடு பின்வரும் பட்டினத்தடிகளார், அருணகிரி நாதப் பெருமானார்தம் மெய்யுரைகள் போல்வன காண்க :

"நின்சீர் அடியார் தஞ்சீர் அடியார்க்(கு)
அடிமை பூண்டு நெடுநாள் பழகி

வாளாருங் கண்ணியர் மாயையை நீக்கி மலிகரணக்
கோளாகும் வாதனை நீத்துமெய்ஞ் ஞானக் குறிகொடுநின்
தாளாகும் நீழல் அதுசார்ந்து நிற்கத் தருந்ததிரு
நாளாகும் நாள்எந்த நாள்அறி யேன்தணி காசலனே. (௩)

ஊன்பார்க்கும் இவ்வுடற் பொய்மையைத் தேர்தல் ஒழிந்தவமே
மான்பார்க்கும் கண்ணியர் மையலில் வீழும் மயக்கம்அற்றே
தேன்பார்க்கும் சோலைத் தணிகா சலத்துன் திருஅழகை
நான்பார்க்கும் நாள்எந்த நாள்மயில் ஏறிய நாயகனே. (௪)

என்னே குறைநமக் கேழைநெஞ் சேமயில் ஏறிவரும்
மன்னே எனநெடு மாலும் பிரமனும் வாழ்த்திநிற்கும்
தன்னேர் தணிகைத் தடமலை வாழுமநற் றந்தைஅருள்
பொன்னேர் திருஅடிப் போதுகண் டாய்நம் புகலிடமே. (௫)

பேதைநெஞ் சேஎன்றன் பின்போந் திடுதிஇப் பேயுலக
வாதைஅஞ் சேல்பொறி வாய்க்கலங் கேல்இறை யும்மயங்கேல்
போதையெஞ் சேல்தணி காசலம் போய்அப் பொருப்பமர்ந்த
தாதைஅஞ் சேவடிக் கீழ்க்குடி யாகத் தயங்குவமே. (௬)

திருச்சிற்றம்பலம்

33. நாள் அவம்படாமை வேண்டல்[119]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

குன்றமொத் திலங்கு பணைமுலை நெடுங்கண்
கோதையர் பால்விரைந் தோடிச்
சென்றஇப் புலையேன் மனத்தினை மீட்டுன்
திருவடிக் காக்கும்நாள் உளதோ

118 (தொடர்ச்சி).
முடைலை யாக்கையொடு புடைபட் டொழுகிஅவர்
கால்தலை ஏவல்என் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணின் அல்லதொன்(று)
உண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே."
"மோக வாரிதி தனிலே நாள்தொறும்
மூழ்கு வேனுன தடியார் ஆகிய
மோன ஞானிகள் உடனே சேரவும்—அருள்வாயே."

119. இப் பதிகத் திரு எட்டெண்கள் உகக, உகஉ. இவ் வேடுகளின் முதற் கண், அடிகளார் "உ. குமரநம." என்று எழுதி இறை வழிபாடு இயற்றியிருக்கிறார்கள்.

என் தனி உயிரே என்னுடைப் பொருளே
　　என் உளத் தினிதெழும் இன்பே
மன்றலம் பொழில்சூழ் தணிகையம் பொருப்பில்
　　வந்தமர்ந் தருள்செயும் மணியே.[120] (க)

மணிக்குழை அடர்த்து மதர்த்தவேற் கண்ணார்
　　வஞ்சக மயக்கினில் ஆழ்ந்து
கணிக்கரும் துயர்கொள் மனத்தினை மீட்டுன்
　　கழலடிக் காக்குநாள் உளதோ
குணிக்கரும் பொருளே குணப்பெருங் குன்றே
　　குறிகுணங் கடந்ததோர் நெறியே
எணிக்கரும் மாலும் அயனும்நின் றேத்தும்
　　எந்தையே தணிகைஎம் இறையே.[121] (உ)

இறைக்குளே உலகம் அடங்கலும் மருட்டும்
　　இலைநெடு வேற்கணார் அளகச்
சிறைக்குளே வருந்தும் மனத்தினை மீட்டுன்
　　திருவடிக் காக்குநாள் உளதோ
மறைக்குளே மறைந்தம் மறைக்கரி தாய
　　வள்ளலே உள்ளகப் பொருளே
அறைக்குளே மடவார்க் கனநடை பயிற்றும்
　　அணிதிருத் தணிகைவாழ் அரைசே. (ங)

அரைமதிக் குறழும் ஒண்ணுதல் வாட்கண்
　　அலர்முலை அணங்கனார் அல்குல்
புரைமதித் துழலும் மனத்தினை மீட்டுன்
　　பொன்னடிக் காக்குநாள் உளதோ

---

120. இப் பதிகப் பாக்களில், நம்பெருமானார், இறைவன், துன்ப வடிவமான காமவாழ்வினின்றும் தம்மை மீட்டு, தன் திருவடிக்குத் தம்மை மீளா ஆளாக ஆட்படுத்தும் நாளும் உளதோ என்று இரங்கி முறையிடுதல் காண்க.

121. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருப்புகழ் போன்றவற்றை ஓர்ந்துணர்க :

　　"துயில்கொ ளாத வாளேரும் மயல்கொ ளாத ஆவேத
　　　துறவர் ஆன பேர்யாரும்—மடல்எறத்
　　துணியும் ஆறு லாநீல நயன மாதரா ரோடு
　　　துவளு வேனை ஈடேறும்—நெறிபாராய்."

பரைமதித் திடஞ்சேர் பராபரற் கருமைப்
பாலனே வேலுடை யவனே
விரைமதித் தோங்கும் மலர்ப்பொழில் தணிகை
வெற்பினில் ஒளிரும்மெய் விளக்கே. (ச)

விளக்குறழ் மணிப்பூண் மேல்அணிந் தோங்கி
விம்முறும் இளமுலை மடவார்
களக்கினில் ஆழ்ந்த மனத்தினை மீட்டுன்
கழல்அடிக் காக்கும்நாள் உளதோ
அளக்கருங் கருணை வாரியே ஞான
அமுதமே ஆனந்தப் பெருக்கே
கிளக்கரும் புகழ்கொள் தணிகையம் பொருப்பில்
கிளர்ந்தருள் புரியும்என் கிளையே. (ரு)

கிளைக்குறும் பிணிக்கோர் உறையுளாம் மடவார்
கீழ்றும் அல்குல்என் குழிவீழ்ந்
திளைக்கும்வன் கொடிய மனத்தினை மீட்டுன்
இணைஅடிக் காக்கும்நாள் உளதோ
விளைக்கும்ஆ னந்த வியன்தனி வித்தே
மெய்அடி யவர்உள விருப்பே
திளைக்கும்மா தவத்தோர்க் கருள்செயுந் தணிகைத்
தெய்வமே அருட்செழுந் தேனே. (சு)

தேன்வழி மலர்ப்பூங் குழல்துடி இடைவேல்
திறல்விழி மாதரார் புணர்ப்பாம்
கான்வழி நடக்கும் மனத்தினை மீட்டுன்
கழல்வழி நடத்தும்நாள் உளதோ
மான்வழி வரும்என் அம்மையை வேண்டி
வண்புனத் தடைந்திட்ட மணியே
வான்வழி அடைக்கும் சிகரிசூழ் தணிகை
மாமலை அமர்ந்தருள் மருந்தே. (எ)

மருந்தென மயக்கும் குதலைஅந் தீஞ்சொல்
வாணுதல் மங்கையர் இடத்தில்
பொருந்தென வலிக்கும் மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்கும்நாள் உளதோ

அருந்திடா தருந்த அடியருள் ஓங்கும்
    ஆனந்தத் தேறலே அமுதே
இருந்தரு முனிவர் புகழ்செயும் தணிகை
    இனிதமர்ந் தருளிய இன்பே. (அ)

இன்பமற் றுறுகண் விளைவிழி நிலமாம்
    ஏந்திழை யவர்புழுக் குழியில்
துன்பமுற் றுழலும் மனத்தினை மீட்டுன்
    துணையடிக் காக்கும்நாள் உளதோ
அன்பர்முற் றுணர அருள்செயும் தேவே
    அரிஅயன் பணிபெரி யவனே
வன்பதை அகற்றி மன்பதைக் கருள்வான்
    மகிழ்ந்துறும் தணிகையின் வாழ்வே. (கூ)

வாழும்இவ் வுலக வாழ்க்கையை மிகவும்
    வலித்திடும் மங்கையர் தம்பால்
தாழும்என் கொடிய மனத்தினை மீட்டுன்
    தாள்மலர்க் காக்கும்நாள் உளதோ
சூழும்நெஞ் சிருளைப் போழும்மெய் ஒளியே
    தோற்றமா றற்றசிற் சுகமே
ஊழும்உற் பவம்ஓர் ஏழும்விட் டகல
    உதவுசீர் அருட்பெருங் குன்றே. (க0)

திருச்சிற்றம்பலம்

---

34. அன்பிற் பேதுறல்[122]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மூடர்கள் தமக்குள் முற்படுங் கொடிய
    முறியனேன் தனக்குநின் அடியாம்
ஏடவிழ் கமலத் திருநற வருந்த
    என்றுகொல் அருள்புரிந் திடுவாய்

---

122. இப் பதிகத் திரு எட்டெண்கள் உகூஙு, உகூச. இவ் வேடுகளின் முதற் கண் முறையே “ ட. சண்முகசும.” என்றும், ‘ ‘ உ ” என்றும் அடிகளார் எழுதி அனுபவித்திருக்கிறார்கள்.

ஆடர வணிந்தே அம்பலத் தாடும்
ஐயருக் கொருதவப் பேறே
கோடணி தருக்கள் குலவும்நற் றணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.[123] (க)

கற்றவர் புகழ்நின் திருவடி மலரைக்
கடையனேன் முடிமிசை அமர்த்தி
உற்றஇவ் வுலக மயக்கற மெய்ம்மை
உணர்த்தும்நாள் எந்தநாள் அறியேன்
நற்றவர் உணரும் பரசிவத் தெழுந்த
நல்அருட் சோதியே நவைதீர்
கொற்றவேல் உகந்த குமரனே தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.[124] (உ)

ஞாலவாழ் வெனும்புன் மலமிசைந் துழலும்
நாயினும் கடையஇந் நாய்க்குன்
சீலவாழ் வளிக்கும் திருவடிக் கமலத்
தேன்தரு நாளும்ஒன் றுண்டோ
ஆலவாய் உகந்த ஒருசிவ தருவில்
அருள்பழுத் தளிந்தசெங் கனியே
கோலவா னவர்கள் புகழ்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (ங)

---

123. இப் பதிகப் பாக்களில், பெருமானார், மூடரில் மூடரான தம்மை இறைவன் ஆட்கொள்ளும் நாளும் உளதோ என்றும், பாவியாகிய தம்மைக் காத்தளிப்பது இறைவன் கடன் என்றும், தம் துயரம் இறைவனுக்கு எட்டாதிருப்பதன் காரணம் என்ன என்றும், தம்மை இறைவன் ஆட்கொளாது விடுத்தால் தாம் துன்பத்தால் அழிந்துபோதல் தவிராது என்றும்—இன்ன பல இயம்பி இரங்குதல் காண்க.

124. இப் பா முதலியவற்றோடு அடியிற்காணும் அருணகிரிநாதப் பெருமானார் தம் முறையீடு போல்வன பார்க்க :

" —அணுகாத
இருடி அயன்மால் அமரர் அடியார்
இசையும் ஒலிதான்—இவைகேளா(து)
ஒருவன் அடியேன் அலறும் மொழிதான்
ஒருவர் பரிவாய்—மொழிவாரோ
உனது பததூள் புவன கிரிதான்
உனது கிருபா—கரம்எதோ."

பவம்எனும் கடற்குள் வீழ்ந்துழன் றேங்கும்
  பாவியேன் தன்முகம் பார்த்திங்
கெவையும்நா டாமல் என்னடி நிழற்கீழ்
  இருத்திடென் றுரைப்பதெந் நாளோ
சிவம்எனும் தருமக் கடல்அகத் தெழுந்த
  தெள்ளிய அமுதமே தேனே
குவிமுலை வல்லிக் கொடியொடுந் தணிகை
  குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (௪)

முலைமுகங் காட்டி மயக்கிடும் கொடியார்
  முன்புழன் றேங்கும்இவ் எளியேன்
நிலைமுகங் காட்டும் நின்திருப் பாத
  நீழல்வந் தடையும்நாள் என்றோ
மலைமுகம் குழைய வளைத்திடும் தெய்வ
  மணிமகிழ் கண்மணி யுள் மணியே
கொலைமுகம் செல்லார்க் கருள்தருந் தணிகைக்
  குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (௫)

வருபயன் அறியா துழன்றிடும் ஏழை
  மதியினேன் உய்ந்திடும் வண்ணம்
ஒருவரும் நினது திருவடிப் புகழை
  உன்னும்நாள் எந்தநாள் அறியேன்
அருவுரு ஆகும் சிவபிரான் அளித்த
  அரும்பெறல் செல்வமே அமுதே
குருவுரு ஆகி அருள்தரும் தணிகைக்
  குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (௬)

அழிதரும் உலக வாழ்வினை மெய்யென்
  றலைந்திடும் பாவியேன் இயற்றும்
பழிதரும் பிழையை எண்ணுறேல் இன்று
  பாதுகாத் தளிப்பதுன் பரமே
மொழிதரும் முக்கட் செங்கரும் பீன்ற
  முத்தமே முத்தியின் முதலே
கொழிதரும் அருவி பொழிதருந் தணிகைக்
  குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (௭)

நின்நிலை அறியா வஞ்சகர் இடத்தில்
நின்றுநின் றலைதரும் எளியேன்
தன்நிலை அறிந்தும் ஐயகோ இன்னும்
தயைஇலா திருந்ததென் என்னே
பொன்நிலைப் பொதுவில் நடஞ்செயும் பவளப்
பொருப்பினுள் மலர்ந்திடும் பூவே
கொல்நிலை வேல்கைக் கொளும்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (அ)

பாடிநின் திருச்சீர் புகழ்ந்திடாக் கொடிய
பதகர்பால் நாள்தொறும் சென்றே
வாடிநின் றேங்கும் ஏழையேன் நெஞ்ச
வாட்டம்இங் கறிந்திலை என்னே
ஆடிநீ றாடி அருள்செயும் பரமன்
அகம்மகிழ் அரும்பெறல் மருந்தே
கோடிலங் குயர்வான் அணிதிருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (கூ)

வன்பொடு செருக்கும் வஞ்சர்பால் அலையா
வண்ணம்நின் றருள்செயாய் என்னில்
துன்பொடு மெலிவேன் நின்திரு மலர்த்தாள்
துணைஅன் றித் துணைஒன் றும் காணேன்
அன்பொடும் பரமன் உமைகையில் கொடுக்க
அகமகிழ்ந் தணைக்கும்ஆர் அமுதே
கொன்பெறும் இலைவேல் கரத்தொடும் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. (க0)

திருச்சிற்றம்பலம்

35. கூடல் விழைதல்[125]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சகம்ஆ றுடையார் அடையா நெறியார்
சடையார் விடையார் தனிஆனார்
உகமா றுடையார் உமைஓர் புடையார்
உதவும் உரிமைத் திருமகனார்

125. இப் பதிகத் திரு ஏட்டெண்கள் உகூடு, உகக. இவ் வேடுகள் " உ " இட்டு அடிகளாரால் தொடங்கப்பட்டிருக்கின்றன.

முகம்ஆ றுடையார் முகம்மா றுடையார்
எனவே எனது முன்வந்தார்
அகமா றுடையேன் பதியா தென்றேன்
அலைவாய் என்றார் அஃதென்னே.126 (க)

விதுவாழ் சடையார் விடைமேல் வருவார்
விதிமால் அறியா விமலனார்
மதுவாழ் குழலாள் புடைவாழ் உடையார்
மகனார் குகனார் மயில்ஊர்வார்
முதுவாழ் வுடையா தவமே அலேவன்
முன்வந் திடயான் அறியாதே
புதுவாழ் வுடையார் எனவே மதிபோய்
நின்றேன் அந்தோ பொல்லேனே.127 (உ)

காயோ டுடனாய்க் கனல்கை ஏந்திக்
காடே இடமாக் கணங்கொண்ட
பேயோ டாடிப் பலிதேர் தரும்ஓர்
பித்தப் பெருமான் திருமகனார்
தாயோ டுறமும் தணிகா சலனார்
தகைசேர் மயிலார் தனிவேலார்
வேயோ டுறழ்தோள் பாவையர் முன்என்
வெள்வளை கொண்டார் வினவாமே. (ஙு)

---

126. இத் திருப்பதிகப் பாக்களில், அடிகளார், இறைவனோடு ஒன்று சேர்ந்து இரண்டற வாழும் வாழ்வினை உளம் ஒன்றி விரும்பி நிற்றல் காண்க.

127. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருநாவுக்கரசுநாயனார், அருணகிரி நாதப்பெருமானார், சிவப்பிரகாச சுவாமிகள் இவர்கள்தம் மெய்யுணர் வினவாய தேமொழிகள் போல்வன கருத்துட்கொண்டு களிகூர்க :

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே ஆயிடினும்
பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழல்ஓம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே."

"நானே நீயாய் நீயே நானாய்
நானா வேதப்—பொருளாலும்
நாடா வீடா ஈடே றாதே
நாயேன் மாயக்—கடவேனோ."

"கண்புனல் துளிப்ப அழற்படும் இழுதில்
கரைந்துகு நெஞ்சில்நின் தளேயே
பெண்பயில் உருவ மொடுநினைந் தெனது
பெண்மயல் அகற்றுநாள் உளதோ

பொன்னார் புயனார் புகழும் புகழார்
புலியின் அதளார் புயம்நாலார்
தென்னார் சடையார் கொடிமேல் விடையார்
சிவனார் அருமைத் திருமகனார்
என்நா யகனார் என்னுயிர் போல்வார்
எழின்மா மயிலார் இமையோர்கள்
தந்நா யகனார் தணிகா சலனார்
தனிவந் திவண்மால் தந்தாரே. (ச)

கல்லால் அடியார் கல்லடி உண்டார்
கண்டார் உலகங் களைவேதம்
செல்லா நெறியார் செல்லுறும் முடியார்
சிவனார் அருமைத் திருமகனார்
எல்லாம் உடையார் தணிகா சலனார்
என்னா யகனார் இயல்வேலார்
நல்லார் இடைஎன் வெள்வளை கொடுபின்
நண்ணார் மயில்மேல் நடந்தாரே. (ரு)

காரூர் சடையார் கனலார் மழுவார்
கலவார் புரமூன் றெரிசெய்தார்
ஆரூர் உடையார் பலிதேர்ந் திடும்எம்
அரனார் அருமைத் திருமகனார்
போரூர் உறைவார் தணிகா சலனார்
புதியார் எனஎன் முனம்வந்தார்
ஏரூர் எமதா ரினில்வா என்றார்
எளியேன் ஏமாந் திருந்தேனே. (சா)

கண்ணார் நுதலார் விடமார் களனார்
கரமார் மழுவார் கனகண்ணார்
பெண்ணார் புயனார் அயன்மாற் கரியார்
பெரியார் கைலைப் பெருமானார்
தண்ணார் சடையார் தருமா மகனார்
தணிகா சலனார் தனிவேலார்
எண்ணார் எளியாள் இவள்என் றெனையான்
என்செய் கேனோ இடர்கொண்டே. (எ)

---

127 (தொடர்ச்சி). வண்புனல் வேந்தன் ஆர்கலிக் குடத்து
மணிமுகில் கலயத்தின் முகந்து
தண்புனல் ஆட்ட ஆடுறும் சோண
சைலனே கைலைநா யகனே.”

மழுவார் தருகைப் பெருமான் மகனார்
மயில்வா கனனார் அயில்வேலார்
தழுவார் வினையைத் தணியார் அணியார்
தணிகா சலனார் தம்பாதம்
தொழுவார் அழுவார் விழுவார் எழுவார்
துதியா நிற்பார் அவர்நிற்கப்
புழுவார் உடலோம் பிடும்என் முனர்வந்
தருள்தந் தருளிப் போனாரே. (௮)

நிருத்தம் பயின்றார் கடல்நஞ் சயின்றார்
நினைவார் தங்கள் நெறிக்கேற்க
அருத்தம் பகர்வார் அருமைப் புதல்வர்
அறுமா முகனார் அயில்வேலார்
திருத்தம் பெறுவார் புகழும் தணிகைத்
திருமா மலையார் ஒருமாதின்
வருத்தம் பாரார் வளையும் தாரார்
வாரார் அவர்தம் மனம்என்னே. (௯)

பிரமன் தலையில் பலிகொண் டெருதில்
பெயரும் பிச்சைப் பெருமானார்
திரமன் றினிலே நடனம் புரிவார்
சிவனார் மகனார் திறல்வேலார்
தரமன் றலைவான் பொழில்சார் எழில்சேர்
தணிகா சலனார் தமியேன்முன்
வரமன் றவும்மால் கொளநின் றனனால்
மடவார் அலரால் மனநொந்தே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

36. தரிசனை வேட்கை[128]

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேல்கொளும் கமலக் கையனை எனையாள்
மெய்யனை ஐயனை உலக
மால்கொளும் மனத்தர் அறிவரும் மருந்தை
மாணிக்க மணியினை மயில்மேல்

128. இப் பதிகத் திருஎட்டெண்கள் ௨௧௭, ௨௧௮. இவற்றின் முதலில் அடிகளார், "உ. சிவ." என்றெழுதி இறை இன்பம் நுகர்ந்திருக்கிறார்கள்.

கால்கொளும் குகனை எந்தையை எனது
கருத்தனை அயன்அரி அறியாச்
சால்கொளும் கடவுள் தனிஅருள் மகனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே.[129] (௧)

கண்ணனை அயனை விண்ணவர் கோனைக்
காக்கவைத் திட்டவேற் கரனைப்
பண்ணனை அடியர் பாடலுக் கருளும்
பதியினை மதிகொள்தண் அருளாம்
வண்ணனை எல்லா வண்ணமும் உடைய
வரதன்ஈன் றெடுத்தருள் மகனைத்
தண்ணனை எனது கண்ணனை அவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே.[130] (௨)

---

129. இப் பதிகப் பாக்களில், வள்ளற் பெருமானார், கங்கு கரையின்றி முடிவற்ற சிறப்பியல்புகள் பொருந்திய இறைவனைத் தாம் தணிகையில் கண்ணாரக் கண்டு மகிழ்வார் எனல் காண்க.

130. இப் பா முதலியவற்றோடு பின்வரும் நக்கீர தேவ நாயனார், அருணகிரி நாதப் பெருமானார்தம் தெய்வத் திருவருள் மெய்ம்மொழி போல்வன வற்றைக் கண்டு உணர்ந்துய்க :

"தெய்வம் சான்ற திறல்விளங்(கு) உருவின்
வான்தோய் நிவப்பில் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்(து) இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்(று)
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்(து)
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி."

"செந்நிலை உணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை அறிந்தறிந் தறிவினில்
சென்றுசெரு கும்தடம் தெளிதரத்—தணியாத
சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந் துரையொழித்(து)
என்செயல் அழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப்—படுவேனோ."

என்னுடை உயிரை யான்பெறும் பேற்றை
என்னுடைப் பொருளினை எளியேன்
மன்னுடைக் குருவின் வடிவினை என்கண்
மணியினை அணியினை வரத்தை
மின்னுடைப் பவள வெற்பினில் உதித்த
மிளிர்அருள் தருவினை அடியேன்
தன்னுடைத் தேவைத் தந்தையைத் தாயைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (௩)

பரங்கிரி அமருங் கற்பகத் தருவைப்
பராபரஞ் சுடரினை எளியேற்
கிரங்கிவந் தருளும் ஏரகத் திறையை
எண்ணுதற் கரியபேர் இன்பை
உரங்கிளர் வானோர்க் கொருதனி முதலை
ஒப்பிலா தோங்கிய ஒன்றைத்
தரங்கிளர் அருண கிரிக்கருள் பவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (௪)

அரும்பெறல் மணியை அமுதினை அன்பர்
அன்பினுக் கெளிவரும் அரசை
விரும்புமா தவத்தோர் உள்ளகத் தொளிரும்
விளக்கினை அளக்கரும் பொருளைக்
கரும்பினை என்னுட் கனிந்திடும் கனியை
முனிந்திடா தருள்அருட் கடலைத்
தரும்பர சிவத்துள் கிளர்ந்தொளிர் ஒளியைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (௫)

மாரனை எரித்தோன் மகிழ்திரு மகனை
வாகையம் புயத்தனை வடிவேல்
தீரனை அழியாச் சீரனை ஞானச்
செல்வனை வல்வினை நெஞ்சச்
சூரனைத் தடிந்த வீரனை அழியாச்
சுகத்தனைத் தேன்துளி கடப்பந்
தாரனைக் குகன்என் பேருடை யவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (௬)

வேதனைச் சிறைக்குள் வேதனை படச்செய்
விமலனை அமலனை அற்பர்
போதனைக் கடங்காப் போதனை ஐந்தாம்
பூதனை மாதவர் புகழும்
பாதனை உமையாள் பாலனை எங்கள்
பரமனை மகிழ்விக்கும் பரனைத்
தாதனை உயிர்க்குள் உயிரனை யவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (எ)

குழகனை அழியாக் குமரனை அட்ட
குணத்தனைக் குறித்திடல் அரிதாம்
அழகனைச் செந்தில் அப்பனை மலைதோ
ருடல்வாழ் அண்ணலைத் தேவர்
கழகனைத் தண்டைக் காலனைப் பிணிக்கோர்
காலனை வேலனை மனதில்
சழகிலார்க் கருளும் சாமிநா தனைத்தென்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (அ)

முத்தனை முத்திக் கொருதனி வித்தை
முதல்வனை முருகனை முக்கண்
பித்தனை அத்தன் எனக்கொளும் செல்வப்
பிள்ளையைப் பெரியவர் உளஞ்சேர்
சுத்தனைப் பத்தி வலைப்படும் அவனைத்
துரியனைத் துரியமும் கடந்த
சத்தனை நித்த நின்மலச் சுடரைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (கூ)

வள்அயில் கரங்கொள் வள்ளலை இரவில்
வள்ளிநா யகிதனைக் கவர்ந்த
கள்ளனை அடியர் உள்ளகத் தவனைக்
கருத்தனைக் கருதும்ஆ னந்த
வெள்ளம்நின் றூட அருள்குரு பரனை
விருப்புறு பொருப்பனை வினையைத்
தள்ளவந் தருள்செய் திடுந்தயா நிதியைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. (க0)

திருச்சிற்றம்பலம்

37. நாள் எண்ணி வருந்தல்[131]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

இன்னும் எத்தனை நாள்செலும் ஏழையேன் இடர்க்கடல் விடுத்தேற
மின்னும் வேற்படை மிளிர்தரும் கைத்தல வித்தகப் பெருமானே
துன்னும் நற்றணி காசலத் தமர்ந்தருள் தோன்றலே மயில்ஏறி
மன்னும் உத்தம வள்ளலே நின்திரு மனக்கருத் தறியேனே.[132] (க)

ஈறி லாதநின் அருள்பெற எனக்கினும் எத்தனை நாட்செல்லும்
மாறி லாதவர் மனத்தொளிர் சோதியே மயில்மிசை வரும்வாழ்வே
தூறி லாவளச் சோலைசூழ் தணிகைவாழ் சுத்தசின் மயத்தேவே
ஊறி லாப்பெரு நிலையஆ னந்தமே ஒப்பிலான் அருட்பேறே.[133] (உ)

கூழை மாமுகில் அனையவர் முலைத்தலைக் குளித்துழன் றலைகின்ற
ஏழை நெஞ்சினேன் எத்தனை நாள்செல்லும் இடர்க்கடல் விடுத்தேற
மாழை மேனியன் வழுத்துமா ணிக்கமே வாழ்த்துவா ரவர்பொல்லா
ஊழை நீக்கிநல் அருள்தருந் தெய்வமே உத்தமச் சுகவாழ்வே. (ங)

---

131. இப் பதிகத் திரு ஏடுகள் இரண்டிலும் எண் குறிக்கப்படவில்லை. அவற்றின் தொடக்கத்தில் மட்டும் முறையே, "உ. தணிகைப் பதிகம்." என்றும் "உ" என்றும் அடிகளார் குறித்திருக்கிறார்கள்.

132. இத் திருப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், தாம் இடர்க் கடல் விட்டேறி, இறைவன் திருவடிக்கண் எய்த இன்னும் எத்தனை நாள் செல்லும் என்று ஏங்குதல் காண்க.

133. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் போல்வனவற்றை உய்த்துணர்ந்து தெளிக :

"முருகன் குமரன் குகன்என் றுமொழிந்(து)
உருகும் செயல்தந் துணர்(வு)என் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே."

"வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளஇங்ஙன் காண்பதல் லால்மனம் வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய் அருஉரு வாகிஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ் வாறு புகல்வதுவே."

ஐய இன்னும்நான் எத்தனை நாள்செலும் அல்லல்விட் டருள்மேவத்
தூய்ய நன்னெறி மன்னிய அடியர்தம் துயர்தவிர்த் தருள்வோனே
வெய்ய நெஞ்சினர் எட்டொணு மெய்யனே வேல்கொளும்காத்தோனே
செய்ய மேனிஎஞ் சிவபிரான் பெற்றநற் செல்வனே திறலோனே.

பாவி யேன்இன் னும் எத்தனை நாள்செலும் பருவரல் விடுத்துய்யக்
கூவி யேஅன்பர்க் கருள்தரும் வள்ளலே குணப்பெருங் குன்றேஎன்
ஆவி யேஎனை ஆள்குரு வடிவமே ஆனந்தப் பெருவாழ்வே
வாவி ஏர்தரும் தணிகைமா மலைமிசை மன்னிய அருள்தேனே. (ரு)

எளிய னேன்இன் னும் எத்தனை நாள்செலும் இடர்க்கடல் விடுத்தேற
ஒளிஅ னேகமாய்த் திரண்டிடும் சிற்பர உருவமே உருவில்லா
வெளிய தாகிய வத்துவே முத்தியின் மெய்ப்பயன் தருவித்தே
அளிய தாகிய நெஞ்சினர்க் கருள்தரும் ஆறுமா முகத்தேவே. (சு)

தொண்ட னேன்இன் னும் எத்தனை நாள்செலும் துயர்க்கடல் விடுத்தேற
அண்ட னேஅண்டர்க் கருள்தரும் பரசிவன் அருளிய பெருவாழ்வே
கண்ட னேகர்வந் தனைசெய அசுரனைக் களைந்தருள் களைகண்ணே
விண்ட னேர்புகுஞ் சிகரிசூழ் தணிகையில் விளங்கிய வேலோனே.

வீண னேன்இன் னும் எத்தனை நாள்செல்லும் வெந்துயர்க் கடல்நீந்தக்
காண வானவர்க் கரும்பெருந் தலைவனே கருணையங் கண்ணனே
தூண னேர்புயச் சுந்தர வடிவனே துளக்கிலார்க் கருள்ஈயும்
ஏண னேஎனை ஏன்றுகொள் தேசிக இறைவனே இயலோனே. (அ)

கடைய னேன்இன் னும் எத்தனை நாள்செலும் கடுந்துயர்க் கடல்நீந்த
விடையின் ஏறிய சிவபிரான் பெற்றருள் வியன்திரு மகப்பேறே
உடைய நாயகிக் கொருபெருஞ் செல்வமே உலகெலாம் அளிப்போனே
அடைய நின்றவர்க் கருள்செயுந் தணிகைவாழ் ஆனந்தத் தெளிதேனே.

பேய னேன்இன் னும் எத்தனை நாள்செலும் பெருந்துயர்க் கடல்நீந்த
மாய னேமுதல் வானவர் தமக்கருள் மணிமிடற் றிறையோர்க்குச்
சேய னேஅகந் தெளிந்தவர்க் கினியனே செல்வனே எனைக்காக்குந்
தாய னேஎன்றன் சற்குரு நாதனே தணிகைமா மலையானே. (கo)

திருச்சிற்றம்பலம்

38. ஏத்தாப் பிறவி இழிவு[134]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கல்லை ஒத்தஎன் நெஞ்சினை உருக்கேன்
　　கடவுள் நின்அடி கண்டிட விழையேன்
அல்லை ஒத்தகோ தையர்க்குளங் குழைவேன்
　　அன்பி லாரொடும் அமர்ந்தவம் உழல்வேன்
தில்லை அப்பன்என் றுலகெடுத் தேத்தும்
　　சிவபி ரான்தருஞ் செல்வநின் தணிகை
எல்லை உற்றுனை ஏத்திநின் றிடேன்
　　என்செய் வான்பிறந் தேன்எளி யேனே.[135]　　(௧)

மையல் நெஞ்சினேன் மதிசிறி தில்லேன்
　　மாத ரார்முலை மலைஇவர்ந் துருள்வேன்
ஐய நின்திரு அடித்துணை மறவா
　　அன்பர் தங்களை அடுத்துளம் மகிழேன்
உய்ய நின்திருத் தணிகையை அடையேன்
　　உடைய நாயகன் உதவிய பேறே
எய்ய இவ்வெறும் வாழ்க்கையில் உழல்வேன்
　　என்செய் வான்பிறந் தேன்எளி யேனே.[136]　　(உ)

---

134. இப் பதிகத் திரு ஏடுகள் இரண்டினும் எண் இல்லை. இவை " உ " என்றெழுதி அடிகளாரால் தொடங்கப்பட்டிருக்கின்றன.

135. இத் திருப் பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், தாம், காமம் முதலிய கூடாதனவற்றில் ஆழ்ந்து இடர்ப்பட்டும், இறைவன் திருவடியின்கண் அன்பு செலுத்திச் செய்ய வேண்டியன செய்யாமலும், வீண்காலம் கழித்ததில் தம் பிறப்புப் பயனற்று ஒழிந்தது என்று ஏங்கி வருந்துவது காண்க.

136. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போல்வன காண்க :

" பாலே அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண்(டு) உய்யும் வகைஅறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகஉண்டு காலே இலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன் மருகசெவ் வேலவனே."

புலைய மாதர்தம் போகத்தை விழைந்தேன்
புன்மை யாவைக்கும் புகலிடம் ஆனேன்
நிலைய மாம்திருத் தணிகையை அடையேன்
நிருத்தன் ஈன்றருள் நின்மலக் கொழுந்தே
விலையி லாதநின் திருவருள் விழையேன்
வீணர் தங்களை விரும்பிநின் றலைந்தேன்
இலைஎ னாதணு வளவும்ஒன் றீயேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (௩)

மருட்டு மங்கையர் புழுக்குழி ஆழ்ந்து
வருந்தி நாள்தொறும் மனம்இளைக் கின்றேன்
தெருட்டும் நின்திருத் தணிகையை அடையேன்
சிவபி ரான்பெற்ற செல்வமே நினது
அருட்டி றத்தினை நினைந்துநெக் குருகி
அழுது கண்கள்நீர் ஆர்ந்திட நில்லேன்
இருட்டு வாழ்க்கையில் இடறிவீழ் கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (௪)

நச்சி லேபழ கியகருங் கண்ணார்
நலத்தை வேட்டுநற் புலத்தினை இழந்தேன்
பிச்சி லேமிக மயங்கிய மனத்தேன்
பேதை யேன்கொடும் பேயனேன் பொய்யேன்
சச்சி லேசிவன் அளித்திடும் மணியே
தங்கமே உன்றன் தணிகையை விழையேன்
எச்சி லேவிழைந் திடர்உறு கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (௫)

மின்னை அன்னநுண் இடைஇள மடவார்
வெய்ய நீர்க்குழி விழுந்திளைத் துழன்றேன்
புன்னை யஞ்சடை முன்னவன் அளித்த
பொன்னை அன்னநின் பூங்கழல் புகழேன்
அன்னை என்னநல் அருள்தரும் தணிகை
அடைந்து நின்றுநெஞ் சகம்மகிழ்ந் தாடேன்
என்னை என்னைஇங் கென்செயல் அந்தோ
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (௬)

பட்டி மாடெனத் திரிதரும் மடவார்
பாழ்ங்கு ழிக்குள்வீழ்ந் தாழ்ந்திளைக் கின்றேன்
தட்டி லார்புகழ் தணிகையை அடையேன்
சம்பு என்னும்ஓர் தருஒளிர் கனியே
ஒட்டி லேன்நினை உளத்திடை நினையேன்
உதவு றுதுநச் சுறுமரம் ஆனேன்
எட்டி என்முனம் இனிப்புறும் அந்தோ
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (எ)

ஓங்கி நீண்டவாள் உறழ்கருங் கண்ணார்
உவர்ப்புக் கேணியில் உழைத்தகம் இளைத்தேன்
வீங்கி நீண்டதோர் ஒதிஎன நின்றேன்
விழலுக் கேஇறைத் தலந்தனன் வீணே
தாங்கி னேன்உடற் சுமைதனைச் சிவனார்
தனய நின்திருத் தணிகையை அடையேன்
ஏங்கி னேன்சுழற் படுதுரும் பெனவே
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (அ)

பண்அ ளாவிய மொழியினால் மயக்கும்
படிற்று மங்கையர் பால்விழை வுற்றேன்
தண்அ ளாவிய சோலைசூழ் தணிகைத்
தடத்த ளாவிய தருமநல் தேவே
பெண்அ ளாவிய புடையுடைப் பெருமான்
பெற்ற செல்வமே அற்றவர்க் கமுதே
எண்அ ளாவிய வஞ்சக நெஞ்சோ
டென்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (கூ)

கான்அ றுஅள கத்தியர் அளக்கர்
காமத் தாழ்ந்தகங் கலங்குற நின்றேன்
வான மேவுறும் பொழில்திருத் தணிகை
மலையை நாடிநின் மலர்ப்பதம் புகழேன்
ஞான நாயகி ஒருபுடை அமர்ந்த
நம்ப னார்க்கொரு நல்தவப் பேறே
ஈனன் ஆகிஇங் கிடர்ப்படு கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. (கo)

திருச்சிற்றம்பலம்

39. பவனிச் செருக்கு[137]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

பூவுண்டவெள் விடைஏறிய புனிதன்தரு மகனார்
பாவுண்டதொர் அமுதன்னவர் பசுமாமயில் மேல்வந்
தாவுண்டனர் எனதின்னலம் அறியார்என இருந்தால்
நாவுண்டவர் திருமுன்பிது நலம்அன்றுமக் கெனவே.[138] (௧)

ஒன்றார்புரம் எரிசெய்தவர் ஒற்றித்திரு நகரார்
மன்றார்நடம் உடையார்தரு மகனார்பசு மயில்மேல்
நின்றார்அது கண்டேன்கலை நில்லாது கழன்ற
தென்றாரொடு சொல்வேன்எனை யானேமறந் தேனே.[139] (௨)

---

137. இப்பதிகம், அடிகளார் கை எழுத்தில், பின்னும் ஒரு சுவடியில், உ௯௯, உ௯௫ எண்கள் உள்ள திரு ஏடுகளில் காண்கிறது. அவ் வேடுகளை, அவர்கள் " ௨ " என்றெழுதித் தொடங்கியிருக்கிறார்கள்.

138. இத் திருப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவன், தம் மீது கருணை கூர்ந்து, வலிய வந்து, ஒன்றுக்கும் பற்றாத தம்மை ஆட்கொண்டருளியது அடியார் உலகு அறியலாயிற்று என்று இயம்பி வியத்தல் காண்க.

139. இப் பாக்களோடு பின்வரும் சுந்தரமூர்த்தி நாயனார், அருணகிரிநாதப் பெருமானார், தாயுமான அடிகளார் இவர்கள்தம் அக இன்பம் பொங்கித் ததும்பும் அருள்மொழிகள் போல்வனவற்றை ஓர்ந்து உணர்ந்து இன்பம் நுகர்க :

" குரவம் நாறிய குழலி னார்வளை கொள்வ தேதொழில் ஆகிநீர்
இரவும் இம்மனை அறிதி ரேஇங்கே நடந்து போகவும் வல்லிரே
பரவி நாள்தொறும் பாடு வார்வினை பற்றறுக் கும்பைஞ் ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லி ரோசொலும் ஆர ணீயவி டங்கரே."

" அடர்பவள ஒளிபாய அரியபரி புரம்ஆட
அயில்கரமொ டெழில்தோகை—மயில்ஏறி
அடியன்இரு வினைதீற படஅமரர் இதுபூரை
அதிசயமெ னருள்பாட—வரவேணும்."

" பேதைப் பருவத்தே பின்தொடர்ந்தென் பக்குவமும்
சோதித்த அண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே."

சின்னாட்களுக்கு முன் தென்னாட்டில் திகழ்ந்த முருகவேள் தொண்டரான அண்ணாமலைரெட்டியார் அவர்களும் தமது சிறுகாலையில் இந்த இன்ப அநுபவம் எய்தப் பெற்றிருக்கிறார் என்பது பின்வரும் அவர் அகங் கனிந்து இன்புற்ற செஞ்சொற்களால் தெளிவாகிறது :

வாரார்முலை உமையாள்திரு மணவாளர்தம் மகனார்
ஆராஅமு தனையார்உயிர் அனையார்அயில் அவனார்
நேரார்பணி மயிலின்மிசை நின்றார்அது கண்டேன்
நீரார்விழி இமைநீங்கின நிறைநீங்கிய தன்றே. (௫)

ஒன்றோடிரண் டெனுங்கண்ணினர் உதவுந்திரு மகனார்
என்றோடிகல் எழிலார்மயில் ஏறிஅங் குற்றார்
நன்றோடினன் மகிழ்கூர்ந்தவர் நகைமாமுகங் கண்டேன்
கன்றோடின பசுவாடின கலையூடின அன்றே. (௬)

மலைவாங்குவில் அரனார்திரு மகனார்பசு மயிலின்
நிலைதாங்குற நின்றார்அவர் நிற்கும்நிலை கண்டேன்
அலைநீங்கின குழல்தூங்கின அகம்ஏங்கின அரைமேல்
கலைநீங்கின முலைவீங்கின களிஓங்கின அன்றே. (௭)

மான்கண்டகை உடையார்தரு மகனார்தமை மயில்மேல்
நான்கண்டனன் அவர்கண்டனர் நகைகொண்டனம் உடனே
மீன்கண்டன விழியார்அது பழியாக விளைத்தார்
ஏன்கண்டனை என்றாள்அனை என்என்றுரைக் கேனே. (௮)

செங்கண்விடை தனில்ஏறிய சிவனார்திரு மகனார்
எங்கண்மணி அனையார்மயி லின்மீதுவந் திட்டார்
அங்கண்மிக மகிழ்வோடுசென் றவர்நின்றது கண்டேன்
இங்கண்வளை இழந்தேன்மயல் உழந்தேன்கலை எனவே. (௯)

தண்தேன்பொழி இதழிப்பொலி சடையார்தரு மகனார்
பண்தேன்புரி தொடையார்தமைப் பசுமாமயில் மீதில்
கண்டேன்வளை காணேன்கலை காணேன்மிகு காமம்
கொண்டேன்துயில் விண்டேன்ஒன்றும் கூறேன்வரு மாறே.

மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயில்மேல்
நீவீழ்ந்திட நின்றார்அது கண்டேன்என்றன் நெஞ்சே
பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே
நாவீழ்ந்தது மலரேகழை நாண்வீழ்ந்தது மலரே. (௧0)

139 (தொடர்ச்சி).

"அஞ்சுவய தான பருவம் தனில்எனது சிறுமனைமுன்
அங்கசவேள் போலே உருவம்—பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையின் நெஞ்சழிந்து மயங்கவேபுணர்
ஆறுமுக வேலவனையே நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லை என்ன வினையே."

வெற்றூர்புரம் எரித்தார்தரும் மேலார்மயில் மேலே
உற்றூர்அவர் எழில்மாமுகத் துள்ளேநகை கண்டேன்
பொற்றூர்புயங் கண்டேன்துயர் விண்டேன்எனைப் போல
மற்றூர்பெறு வாரோஇனி வாழ்வேன்மனம் மகிழ்ந்தே. (௧0)

திருச்சிற்றம்பலம்

40. திருவருள் விலாசப் பத்து[140]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே அரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே ஆனந்த வெள்ள மேமுன்
தேறுமுகப் பெரியஅருட் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.[141] (௧)

கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கட்
கரும்பேஎன் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநல் நிலைஉடையோர் உளத்தில் வாய்க்கும்
புத்தமுதே ஆனந்த போக மேஉள்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லாம் எளிதில் ஈந்த
என்அரசே ஆறுமுகத் திறையாம் வித்தே
திண்ணியஎன் மனம்உருக்கிக் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.[142] (௨)

---

140. இப் பதிகம் அடிகளார் கை எழுத்துச் சுவடி ஒன்றின் உ௰௧, உ௰௨ எண்களுள்ள ஏடுகளில் காண்கிறது. இவற்றின் தொடக்கத்தில் முறையே "வ. சண்முக பவ." என்றும், "வ. சண்முக நம." என்றும் அடிகளார் எழுதி இறை நுகர்வு எய்தியிருக்கிறார்கள்.

141. இத் திருப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவன் அருள் தன்மையை விவரித்தும், அவன் தம்மைச் சிறுகாலையே ஆட்கொண் டருளினன் என்றும்—இன்ன பலவும் விவரித்தல் காண்க.

142. இப் பா முதலியவற்றோடு பின்வரும் அருணகிரிநாதப் பெருமானார் சிதம்பர சுவாமிகள் இவர்கள்தம் தேன் பிலிற்றும் அமுத மொழிகளை ஓதியும் ஓர்ந்தும் இன்புறுக :

நின்னிருதாள் துணைபிடித்தே வாழ்கின் றேன்நான்
நின்னைஅலால் பின்னைஒரு நேயம் காணேன்
என்னைஇனித் திருவுளத்தில் நினைதி யோநான்
ஏழையினும் ஏழைகண்டாய் எந்தாய் எந்தாய்
பொன்னைஅன்றி விரும்பாத புல்லர் தம்பால்
போகல்ஒழிந் துன்பதமே போற்றும் வண்ணம்
சின்னம்அளித் தருட்குருவாய் என்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௩)

கல்விஎலாம் கற்பித்தாய் நின்பால் நேயம்
காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே
ஒல்லும்வகை அறிவித்தாய் உள்ளே நின்றென்
உடையானே நின்அருளும் உதவு கின்றாய்
இல்லைஎனப் பிறர்பால்சென் றிரவா வண்ணம்
ஏற்றம்அளித் தாய்இரக்கம் என்னே என்னே
செல்வஅருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௪)

எந்தைபிரான் என்இறைவன் இருக்க இங்கே
என்னகுறை நமக்கென்றே இறுமாப் புற்றே
மந்தஉல கினில்பிறரை ஒருகா சுக்கும்
மதியாமல் நின்அடியே மதிக்கின் றேன்யான்
இந்தஅடி யேனிடத்துன் திருஉ ளந்தான்
எவ்வாறோ அறிகிலேன் ஏழை யேனால்
சிந்தைமகிழ்ந் தருட்குருவாய் என்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௫)

மாறாத பெருஞ்செல்வ யோகர் போற்றும்
மாமணியே ஆறுமுக மணியே நின்சீர்
கூறாத புலைவாய்மை உடையார் தம்மைக்
கூடாத வண்ணம்அருட் குருவாய் வந்து

---

142 (தொடர்ச்சி).

"பரம மாயையின் நேர்மையை யாவரும்
அறியொ ணாதனை நீகுரு வாய்இது
பகரும் ஆறுசெய் தாய்முதல் நாள்உறு—பயனேதான்."

"ஆரணன் நாரணன் இன்னமும் காண்டற் கரியபரி
பூரணம் தோன்றிய பூரண னேதிருப் போரியில்வாழ்
காரண னேஒரு நாள்நீ அளித்த கரையில்சுக
பாரணம் என்றருள் வாய்கடை யேற்கெம் பரம்பொருளே."

தேருத நிலையெல்லாம் தேற்றி ஓங்கும்
சிவஞானச் சிறப்படைந்து திகைப்பு நீங்கிச்
சீருத வாழ்வடைநான் வாழ என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௬)

கற்றறிந்த மெய்உணர்ச்சி உடையோர் உள்ளக்
கமலத்தே ஓங்குபெருங் கடவு ளேநின்
பொற்றகைமா மலரடிச்சீர் வழுத்து கின்ற
புண்ணியர்தங் குழுவில்எனைப் புகுத்தி என்றும்
உற்றவருள் சிந்தைதநிந் தின்ப மேவி
உடையாய்உன் அடியவன்என் ருேங்கும் வண்ணம்
சிற்றறிவை அகற்றிஅருட் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௭)

ஞாலம்எலாம் படைத்தவனைப் படைத்த முக்கண்
நாயகனே வடிவேற்கை நாத னேநான்
கோலம்எலாம் கொடியேன்நற் குணம்ஒன் றில்லேன்
குற்றமே விழைந்தேன்இக் கோது ளேனைச்
சாலம்எலாம் செயும்மடவார் மயக்கின் நீக்கிச்
சன்மார்க்கம் அடையஅருள் தருவாய் ஞானச்
சீலம்எலாம் உடையஅருட் குருவாய் வந்து
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௮)

கற்பனையே எனும்உலகச் சழக்கில் அந்தோ
கால்ஊன்றி மயங்குகின்ற கடைய னேனைச்
சொற்பனம்இவ் வுலகியற்கை என்று நெஞ்சம்
துணிவுகொளச் செய்வித்துன் துணைப்பொற் ருளை
அற்பகலும் நினைந்துகனிந் துருகி ஞான
ஆனந்த போகம்உற அருளல் வேண்டும்
சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௯)

பன்னிருகண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேஎந் தாயே என்னை
ஈன்றுனே என்அரசே என்றன் வாழ்வே

மின்னிருவர் புடைவிளங்க மயில்மீ தேறி
விரும்பும்அடி யார்காண மேவுந் தேவே
சென்னியில்நின் அடிமலர்வைத் தென்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. (௰)

திருச்சிற்றம்பலம்

41. திருவருட் பேற்று விழைவு[143]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகம் பரவும் பரஞ்சோதி உருவாம் குருவே உம்பரிடைக்
கலகம் தருசூர்க் கிளைகளைந்த கதிர்வேல் அரசே கவின்தருசீர்த்
திலகம் திகழ்வாள் நுதற்பரையின் செல்வப் புதல்வா திறல்அதனால்
இலகும் கலப மயிற்பரிமேல் ஏறும் பரிசென் இயம்புகவே.[144] (க)

புகுவா னவர்தம் இடர்முழுதும் போக்கும் கதிர்வேல் புண்ணியனே
மிகுவான் முதலாம் பூதம்எலாம் விதித்தே நடத்தும் விளைவனைத்தும்
தகுவான் பொருளாம் உனதருளே என்றால் அடியேன் தனைஇங்கே
நகுவான் வருவித் திருள்நெறிக்கே நடத்தல் அழகோ நவிலாயே.[145] (உ)

---

143. இப் பதிகத் திரு எட்டெண்கள் உஉஅ, உஉகூ. இவ் வேடுகளின் முதலில் " வ. சிவமயம். " என்று அடிகளார் வரைந்து சிவாநுபவச் சிந்தனையோடு இருந்திருக்கிறார்கள்.

144. இத் திருப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவன் திருவடி மறவாத பெரும் பேற்றினால், தமக்கு இறப்பான நவை இல்லை என்றும், தாம் வீடு எய்துவர் என்றும்—இன்ன பலப்பல இயம்பி இன்புறுதல் காண்க.

145. இப் பா முதலியவற்றோடு, பின்வரும் திருப்புகழ்த் தெய்வ மெய்ம் மொழியையும், நம் காலத்தவரான பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் உளங்கனிந்த முறையீட்டினையும் பார்த்து ஆராய்ந்தறிக :

" கதிய தாய்க்கரு தரிய தாய்ப்பரு
கமுத மாய்ப்புலன்—ஐந்தும்மாயக்
கரண மாய்த்தெனை மரணம் மாற்றிய
கருணை வார்த்தைஇ—ருந்தஆறென்."

அழகா அமலா அருளாளா அறிவா அறிவார் அகம்மேவும்
குழகா குமரா எனை ஆண்ட கோவே நின்சீர் குறியாரைப்
பழகா வண்ணம் எனக்கருளிப் பரனே நின்னைப் பணிகின்றோர்க்
கழகா தரவாம் பணிபுரிவார் அடியார்க் கடிமை ஆக்குகவே. (௩)

ஆக்கும் தொழிலால் களித்தானை அடக்குந் தொழிலால் அடக்கிப்பின்
காக்கும் தொழிலால் அருள்புரிந்த கருணைக் கடலே கடைநோக்கால்
நோக்கும் தொழில்ஓர் சிறிதுன்பால் உளதேல் மாயா நொடிப்பெல்லாம்
போக்கும் தொழில்என் பால்உண்டாம் இதற்கென் புரிவேன் புண்ணியனே. (௪)

புரிவேன் விரதம் தவந்தானம் புரியா தொழிவேன் புண்ணியமே
பரிவேன் பாவம் பரிவேன்இப் பரிசால் ஒன்றும் பயன்காணேன்
திரிவேன் நினது புகழ்பாடிச் சிறியேன் இதனைத் தீர்வேனேல்
எரிவேன் எரிவாய் நரகத்தே இருப்பேன் இளைப்பேன் விளைப்பேனே.

விளைப்பேன் பவமே அடிச்சிறியேன் வினையால் விளையும் வினைப்போகம்
திளைப்பேன் எனினும் கதிர்வடிவேல் தேவே என்னும் திருமொழியால்
இளைப்பேன் அலன்இங் கியம்புகிற்பேன் எனக்கென் குறையுண் டெமதுதன்
வளைப்பேன் எனவந் திடில்அவனை மடிப்பேன் கருணை வலத்தாலே. (௬)

---

145 (தொடர்ச்சி).

"எடுத்ததா லத்தினை விடுத்தரிய பரகதியை
எய்துநெறி உண்டென்பதற்(கு)
ஏறுதி மெய்ப்பொருளர் பெருமிழலை யார்கரி
எடுத்ததா லத்தொ(டு)அருள் தான்
அடுத்தமுதம் உற்றதற்(கு) ஆரூரர் சோதியில்
அடைந்ததற்(கு) அமணசிங்கம்
அமலலிங் கத்தூழி அடைந்ததற்(கு) ஆள்அரையர்
ஆக்கைவே றுயதற்கு
நடித்ததிரு நந்தனார் சாட்சிமுத் தாவரமும்
ஞாலமிசை வீழாமலே
ஞானவெளி உற்றதற்(கு) எசில்சுகர் வாதவூர்
நாயனார் கரியாம்உப
நிடத்தின்முடி வானஎம் பெருமஇவை களில்உனை
நினைக்கும்எற்(கு) ஏதுவருமோ
நித்ததக ராலய சிதானந்த சோதியே
நிட்களா னந்தகுகனே."

வலத்தால் வடிவேல் கரத்தேந்தும் மணியே நின்னை வழுத்துகின்ற
நலத்தால் உயர்ந்த பெருந்தவர்பால் நண்ணும் பரிசு நல்கினையேல்
தலத்தால் உயர்ந்த வானவரும் தமியேற் கிணையோ சடமான
மலத்தால் வருந்தாப் பெருவாழ்வால் மகிழ்வேன் இன்பம் வளர்வேனே.

இன்பப் பெருக்கே அருட்கடலே இறையே அழியா இரும்பொருளே
அன்பர்க் கருளும் பெருங்கருணை அரசே உணர்வால் ஆம்பயனே
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி வடிவேல் மணியே அணியேஎன்
துன்பத் திடரைப் பொடியாக்கிச் சுகந்தந் தருளத் துணியாயே. (௯)

சுகமே அடியர் உளத்தோங்கும் சுடரே அழியாத் துணையேஎன்
அகமே புகுந்த அருள்தேவே அருமா மணியே ஆரமுதே
இகமே பரத்தும் உனக்கன்றி எத்தே வருக்கும் எமக்கருள
முகமே இலைஎம் பெருமானே நினக்குண் டாறு முகமலரே. (௰)

ஆறு முகமும் திணிதோள்ஈ ராறும் கருணை அடித்துணையும்
வீறு மயிலும் தனிக்கடவுள் வேலும் துணைஉண் டெமக்கிங்கே
சீறும் பிணியும் கொடுங்கோளும் தீய வினையும் செறியாவே
நாறும் பகட்டான் அதிகாரம் நடவா துலகம் பரவுறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

42. செல்வச் சீர்த்தி மாலை[146]

இரட்டை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அடியார்க் கெளியர் எனும்முக்கண் ஐயர் தமக்கும் உலகீன்ற
அம்மை தனக்கும் திருவாய்முத் தளித்துக் களிக்கும் அருமருந்தே
கடியார் கடப்ப மலர்மலர்ந்த கருணைப் பொருப்பே கற்பகமே
கண்ணுள் மணியே அன்பர்மனக் கமலம் விரிக்கும் கதிரொளியே

146. இப் பதிகத்திற்கு அடிகளார் கை எழுத்து மூலம் கிடைக்கவில்லை. அடிகளார்க்கு ஆட்பட்டு அவர்களோடு வதிந்த பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியார் அவர்கள் நோட்டுப் பிரதியிலும், மற்றொரு அன்பரது காகிதப் படியிலும் இப் பதிகம் காண்கிறது. இவையே இங்கு மேற்கொண்ட மூலம் ஆகும்.

படியார் வளிவான் தீமுதல்ஐம் பகுதி யாய பரம்பொருளே
பகர்தற் கரிய மெய்ஞ்ஞானப் பாகே அசுரப் படை[147]முழுதும்
தடிவாய் என்னச் சுரர்வேண்டத் தடிந்த வேற்கைத் தனிமுதலே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே.[148] (க)

காயா தளியக் கனிந்தன்பால் கல்லால் அடிநின் றருள்ஒழுகும்
கனியுட் சுவையே அடியர்மனக் கவலை அகற்றும் கற்பகமே
ஓயா துயிர்க்குள் ஒளித்தெவையும் உணர்த்தி அருளும் ஒன்றேஎன்
உள்ளக் களிப்பே ஐம்பொறியும் ஒடுக்கும் பெரியோர்க் கோர்உறவே
தேயாக் கருணைப் பாற்கடலே தெளியா அசுரப் போர்க்கடலே[149]
தெய்வப் பதியே முதற்கதியே திருச்செந் தூரில் திகழ்மதியே
தாயாய் என்னைக் காக்கவரும் தனியே பரம சற்குருவே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே.[150] (உ)

நாணும் அயன்மால் இந்திரன்பொன் நாட்டுப் புலவர் மணம்வேட்ட
நங்கை மார்கள் மங்கலப்பொன் நாண்காத் தளித்த நாயகமே
சேணும் புவியும் பாதலமும் தித்தித் தொழுகும் செந்தேனே
செஞ்சொற் சுவையே பொருட்சுவையே சிவன்கைப் பொருளே செங்கழுநீர்ப்
பூணும் தடந்தோட் பெருந்தகையே பொய்யர் அறியாப் புண்ணியமே
போகங் கடந்த யோகியர்முப் போகம் விளைக்கும் பொற்புலமே
தாணு என்ன உலகமெலாம் தாங்கும் தலைமைத் தயாநிதியே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (ங)

---

147. அசுரர்படை - தொ. வே. பதிப்பு.

148. இத் திருப் பதிகப் பாக்களில், வள்ளற் பெருமானார், உலகியலாரொடு தொழிற்பட்டு உழலும் தாம் இறப்பு வரின் என் செயக்கடவர் என்றும், துயர்கொண்ட தம்மை ஆள்வது இறைவனது அருட்கடன் என்றும், இறைவன் அருளின்பாற்பட்ட திறங்களும் செயல்களும் இவை இவை என்றும் இயம்புதல் காண்க.

149. அசுரர் போர்க்கடல் - தொ. வே. பதிப்பு.

150. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகம், கந்தர் அலங்காரம் போன்ற உண்மைப் பேர்உரைகள் ஆராய்ந்து தெளிந்து உணரத்தக்கன:

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ஆள்வான் மதித்தும்இரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே."

"ஆவிக்கு மோசம் வரும்ஆ(று) அறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க என்றும் நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழும் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடிஉடை யானே அமர சிகாமணியே."

முன்னைப் பொருட்கு முதற்பொருளே முடியா தோங்கும் முதுமறையே
முக்கட் கரும்பின் றெடுத்தமுழு முத்தே முதிர்ந்த முக்கனியே
பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும் பொன்னே புனித பூரணமே
போத மணக்கும் புதுமலரே புலவர் எவரும் புகும்பதியே
மின்னைப் பொருவும் உலகமயல் வெறுத்தோர் உள்ள விளக்கொளியே
மேலும் கீழும் நடுவும்என விளங்கி நிறைந்த மெய்த்தேவே
தன்னைப் பொருவும் சிவயோகம் தன்னை உடையோர் தம்பயனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (௪)

பித்தப் பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான் தனக்கருமைப்
பிள்ளைப் பெருமான் எனப்புலவர் பேசிக் களிக்கும் பெருவாழ்வே
மத்தப் பெருமால் நீக்கும்ஒரு மருந்தே எல்லாம் வல்லோனே
வஞ்சச் சமண வல்இருளை மாய்க்கும் ஞான மணிச்சுடரே
அத்தக் கமலத் தயிற்படைகொள் அரசே மூவர்க் கருள்செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தல்எனும் அம்முத் தொழிலும் தருவோனே
சத்த உலக சராசரமும் தாளில் ஒடுக்கும் தனிப்பொருளே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (௫)

ஏதம் அகற்றும் என்அரசே என்ஆ ருயிரே என்அறிவே
என்கண் ஒளியே என்பொருளே என்சற் குருவே என்தாயே
காத மணக்கும் மலர்கடப்பங் கண்ணிப் புயனே காங்கெயனே
கருணைக் கடலே பன்னிருகண் கரும்பே இருவர் காதலனே
சீத மதியை முடித்தசடைச் சிவனார் செல்வத் திருமகனே
திருமா லுடன்நான் முகன்மகவான் தேடிப் பணியும் சீமானே
சாதல் பிறத்தல் தவிர்த்தருளும் சாணும் புயனே சத்தியனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (௬)

வன்பிற் பொறிந்த மனத்தினர்பால் வருந்தி உழல்வேன் அல்லால்உன்
மலர்த்தாள் நினையேன் என்னேஇம் மதியி லேனும் உய்வேனோ
அன்பிற் கிரங்கி விடமுண்டோன் அருமை மகனே ஆரமுதே
அகிலம் படைத்தோன் காத்தோன்நின் றழித்தோன் ஏத்த அளித்தோனே
துன்பிற் கிடனும் வன்பிறப்பைத் தொலைக்கும் துணையே சுகோதயமே
தோகை மயில்மேல் தோன்றுபெருஞ் சுடரே இடராற் சோர்வுற்றே
தன்பிற் படும்அச் சுரர்ஆவி தரிக்க வேலைத் தரித்தோனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (௭)

மாலும் அயனும் உருத்திரனும் வானத் தவரும் மானிடரும்
மாவும் புள்ளும் ஊர்வனவும் மலையும் கடலும் மற்றவையும்
ஆலும் கதியும் சதகோடி அண்டப் பரப்புந் தாஞக
அன்றோர் வடிவம் மேருவிற்கொண் டருளுந் தூய அற்புதமே
வேலும் மயிலும் கொண்டுருவாய் விளையாட் டியற்றும் வித்தகமே
வேதப் பொருளே மதிச்சடைசேர் விமலன் தனக்கோர் மெய்ப்பொருளே
சாலும் சுகுணத் திருமலையே தவத்தோர் புகழும் தற்பரனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (அ)

ஏதம் நிறுத்தும் இவ்வுலகத் தியல்பின்[151] வாழ்க்கை யிடத்தெளியேன்
எண்ணி அடங்காப் பெருந்துயர்கொண் டெந்தாய் அந்தோ இளைக்கின்றேன்
வேதம் நிறுத்தும் நின்கமல மென்தாள் துணையே துணைஅல்லால்
வேறொன் றறியேன் அஃதறிந்திவ் வினையேற் கருள வேண்டாவோ
போத நிறுத்தும் சற்குருவே புனித ஞானத் தறிவுருவே
பொய்யர் அறியாப் பரவெளியே புரம்மூன் றெரித்தோன் தரும்ஒளியே
சாதல் நிறுத்தும் அவருள்ளத் தலம்தாள் நிறுத்தும் தயாநிதியே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (க)

முருகா எனநின் றேத்தாத மூட ரிடம்போய் மதிமயங்கி
முன்னும் மடவார் முலைமுகட்டின் முயங்கி அலைந்தே நினைமறந்தேன்
உருகா வஞ்ச மனத்தேனை உருத்திர்த் தியமன் ஒருபாசத்
துடலம் நடுங்க விசிக்கில்அவர்க் குரைப்ப தறியேன் உத்தமனே
பருகா துள்ளத் தினித்திருக்கும்[152] பாலே தேனே பகர்அருட்செம்
பாகே தோகை மயில்நடத்தும் பரமே யாவும் படைத்தோனே
தருகா தலித்தோன் முடிகொடுத்த தரும துரையே தற்பரனே
தணிகா சலமாந் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. (கo)

திருச்சிற்றம்பலம்

---

151. இயல்புன் - படி வேறுபாடு.
152. தித்திக்கும் - படி வேறுபாடு.

43. செவி அறிவுறுத்தல்[153]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உலகியற் கடுஞ்சுரத் துழன்று நாள்தொறும்
அலகில்வெந் துயர்கிளைத் தழுங்கு நெஞ்சமே
இலகுசிற் பரகுக என்று நீறிடில்
கலகமில் இன்பமாம் கதிகி டைக்குமே.[154] (க)

மருளுறும் உலகிலாம் வாழ்க்கை வேண்டியே
இருளுறு துயர்க்கடல் இழியும் நெஞ்சமே
தெருளுறு நீற்றினைச் சிவஎன் றுட்கொளில்
அருளுறு வாழ்க்கையில் அமர்தல் உண்மையே.[155] (உ)

வல்வினைப் பகுதியால் மயங்கி வஞ்சர்தம்
கொல்வினைக் குழியிடைக் குதிக்கும் நெஞ்சமே
இல்வினைச் சண்முக என்று நீறிடில்
நல்வினை பழுக்கும்ஓர் நாடு வாய்க்குமே. (௩)

---

153. இப் பதிகத்து முதல் ஆறு பாக்களுக்கு அடிகளார் கைஎழுத்தும், எஞ்சிய நான்கிற்கும் 146-ஆம் அடிக்குறிப்பில் கண்ட காகிதப் படிகள் இரண்டும் இங்கு மேற்கொண்ட மூலங்களாகும்.

154. இத் திருப் பதிகப் பாக்களில், பெருமானுர், உலகியல் சூழலில் உள்ள துன்பத்துக்கு இரையாய நெஞ்சுக்கு இறைவனை எண்ணி எண்ணி அன்புற்ருல், இன்பநிலை தானே வந்தெய்தும் என்று அறிவுறுத்தல் காண்க.

155. இப் பா முதலியவற்ருேடு பின்வரும் அருணகிரிநாதப் பெருமானுர், தாயுமான அடிகளார்தம் மெய்ம்மொழிகள் போல்வன காண்க :

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே."

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே."

கடும்புலைக் கருத்தர்தம் கருத்தின் வண்ணமே
விடும்புனல் எனத்துயர் விளைக்கும் நெஞ்சமே
இடும்புகழ்ச் சண்முக என்று நீறிடில்
நடுங்கும்அச் சமனிலை நண்ணற் கென்றுமே. (ச)

அன்பிலா வஞ்சர்தம் அவலச் சூழலில்
என்பிலாப் புழுஎன இரங்கு நெஞ்சமே
இன்பருச் சண்முக என்று நீறிடில்
துன்புறுத் தனிக்கதிச் சூழல் வாய்க்குமே. (ரு)

செறிவிலா வஞ்சகச் செல்வர் வாயிலில்
அறிவிலா துழலும்என் அவல நெஞ்சமே
எறிவிலாச் சண்முக என்று நீறிடில்
மறிவிலாச் சிவகதி வாயில் வாய்க்குமே. (சு)

மறிதரு கண்ணினர் மயக்கத் தாழ்ந்துவீண்
வெறியொடு மலைந்திடர் விளைக்கும் நெஞ்சமே
நெறிசிவ சண்முக என்று நீறிடில்
முறிகொளீஇ நின்றஉன் மூடம் தீருமே. (எ)

காயமாம் கானலைக் கருதி நாள்தொறும்
மாயமாம் கானிடை வருந்தும் நெஞ்சமே
நேயமாம் சண்முக என்று நீறிடில்
தோயமாம் பெரும்பிணித் துன்பம் நீங்குமே. (அ)

சதிசெயும் மங்கையர் தமது கண்வலை
மதிகெட அழுந்தியே வணங்கும் நெஞ்சமே
நிதிசிவ சண்முக என்று நீறிடில்
வதிதரும் உலகில்உன் வருத்தம் தீருமே. (கூ)

பசையறு வஞ்சகர் பாற்சென் றேங்கியே
வசைபெற நாள்தொறும் வருந்து நெஞ்சமே
இசைசிவ சண்முக என்று நீறிடில்
திசைபெற மதிப்பர்உன் சிறுமை நீங்குமே. (கo)

திருச்சிற்றம்பலம்

44. தேவ ஆசிரியம்[156]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

யாரை யுங்கடு விழியினல் மயக்குறும் ஏந்திழை அவர்வெந்நீர்த்
தாரை தன்னையும் விரும்பிவீழ்த் தாழ்ந்தஎன் தனக்கருள் உண்டேயோ
காரை முட்டிஅப் புறம்செலும் செஞ்சுடர்க் கதிரவன் இவர்ஆழித்
தேரை எட்டுறும் பொழில்செறி தணிகையில் தேவர்கள் தொழுந்தேவே.[157]

மறிக்கும் வேற்கணர் மலக்குழி ஆழ்ந்துழல் வன்தசை அறும்என்பைக்
கறிக்கும் நாயினும் கடையநாய்க் குன்திருக் கருணையும் உண்டேயோ
குறிக்கும் வேய்மணி களைக்கதிர் இரதவான் குதிரையைப் புடைத்தெங்கும்
தெறிக்கும் நல்வளம் செறிதிருத் தணிகையில் தேவர்கள் தொழுந்தேவே.[158]

பிரியம் மேயவன் மடந்தையர் தங்களைப் பிடித்தலைத் திடுவஞ்சக்
கரிய பேயினும் பெரியபேய்க் குன்திருக்[159] கருணையும் உண்டேயோ
அரிய மால்அயன் இந்திரன் முதலினோர் அமர்உல கறிந்தப்பால்
தெரிய ஓங்கிய சிகரிசூழ் தணிகையில் தேவர்கள் தொழுந்தேவே.(ந)

திருச்சிற்றம்பலம்

---

156. 42-ஆம் பதிகத்துக்கு உள்ள 146-ஆம் அடிக் குறிப்பு இப் பதிகத்திற்கும் பொருந்தும். இதன் 4-ஆம் பா "மருளு மங்கையர் தங்கள்கண் வலைக்கு" என்று தொடங்குகிறது. பிறகு "இதைச் சார்ந்த மற்ற பாடல்களும் கைசோர்ந்து போய்விட்டன" என்று இரண்டு படிகளிலும் குறித்திருக்கிறது.

157. இத் திருப் பதிகப் பாக்களில், பெருமான் அவர்கள், உலகியல் துறையில் படிந்து காமச் சூழலில் சிக்கித் துன்புறும் தமக்கு, இறைவன் அருள் புரியும் நாளும் உளதோ எனல் காண்க.

158. இப் பா முதலியவற்றோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போல்வன கண்டு தெரிப்படுக :

"பால்என் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேல்என் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை
வேல்என் கிலைகொற்ற மயூரம் என்கிலை வெட்சித்தண்டைக்
கால்என் கிலைமன மேஎங்ங னேமுத்தி காண்பதுவே."

159. பேய்க்குந் திரு – தொ. வே. பதிப்பு.

45. இங்கிதப் பத்து[160]

கலிநிலை வண்ணத்துறை

திருச்சிற்றம்பலம்

சீர்வளர் குவளைத் தார்வளர் புயனார் சிவனார்தம்
பேர்வளர் மகனார் கார்வளர் தணிகைப் பெருமானார்
ஏர்வளர் மயில்மேல் ஊர்வளர் நியமத் திடைவந்தால்
வார்வளர் முலையார் ஆர்வளர் கில்லார் மயல்அம்மா.[161] (க)

மந்தா ரம்சேர் பைம்பொழி லின்கண் மயிலேறி
வந்தார் அந்தோ கண்டனன் அங்கை வளைகாணேன்
சந்தா ரம்சூழ் தண்கிளர் சாரல் தணிகேசர்
தந்தார் என்பால் தந்தார் என்னைத் தந்தாரே.[162] (உ)

---

160. இத் திருப் பதிகம், அடிகளாரது மற்றும் ஓர் கைஎழுத்துச் சுவடியில், எட்டெண் இன்றி, "உ. சிவமயம்." என்னும் தொடக்கத்தோடு காண்கிறது. மற்றும், அடிகளார்க்கு ஆட்பட்ட அன்பர்களுடைய காகிதப் படிகள் நான்கிலும் இது எழுதப்பட்டிருக்கிறது.

161. இத் திருப் பதிகப் பாக்களில், பெருமானார், இறைவனையும் தம்மையும் தலைவன் தலைவியாகக் கொண்டு, தலைவன் தலைவிபால் கொண்டுள்ள பேரன்பையும், தலைவன் தலைவியிடம் உண்டாக்கிய அன்பு வெள்ளத்தையும், தலைவி தலைவன்பால் தூது விடுத்தலையும், தலைவன் தலைவியிடம் அளவளாவும் முகத்தான் திருவாய் மலர்ந்தருளிய இங்கித மொழிகளையும், தலைவி எண்ணி எண்ணி, நகர்ந்து நகர்ந்து, கூறிக் கூறிப் பெருங் களிப்பில் திளைப்பதனைத் தெரித்தல் காண்க.

162. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருஞானசம்பந்தப் பெருமானார் தம் பேரனுபவத்தில் பிறந்த பேரின்ப மொழிகளையும், அருணகிரிநாத அடிகளாரின் ஆன்ம நிறைவுற்ற வேண்டுகோளினையும், சிவப்பிரகாச சுவாமிகளின்—உளங்கனிந்து உவகையுற்று அளவளாவும்—தேமொழியினையும் ஓதியும் ஓர்ந்தும் உணர்ந்தும் உய்க :

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே."

"சிவமா துடனே அநுபோ கமதாய்
சிவஞா னமுதே—பசிஆறித்
திகழ்வோ டிருவோர் ஒருரு பமதாய்
திசைலோ கமெலாம்—அநுபோகி

நதியும் மதியும் பொதியும் சடையார் நவின்மாலும்
விதியுந் துதிஜம் முகனார் மகனார் மிகுசீரும்
நிதியும் பதியும் கதியும் தருவார் நெடுவேலார்
வதியும் மயின்மேல் வருவார் மலரே வரும்ஆறே. (௫)

சந்தார் வரையுள் சிந்தா மணிநேர் தணிகேசர்
மந்தா நிலம்மே வுந்தார் மறுகில் மயிலேறி
வந்தார் நிலவோர் செந்தா மரையின் மலர்வாசக்
கொந்தார் குழல்என் நிலையுங் கலையுங் கொண்டாரே. (௬)

தந்தே நயமாம்[163] மாதவர் புகழும் தணிகேசர்
சந்தே னொழிவாய் அந்தேன் மொழியாய் தனிஇன்று
வந்தேன் இனிமேல் வாரேன் என்றார் மனமாழ்கி
நொந்தேன் மூலமீ தவ்வுரை என்றார் நுவல்என்னே.[164] (௭)

தண்தணி காந்தள்ஓர்[165] சண்பக மலரின் தளர்வெய்தத்
தெண்டணி நீலம்ஓர்[165] செங்குவ ளையினிற் றிகழ்வேன்பால்[166]
வண்டணி கேசரும் வந்தருள் வாரோ வாராரோ
தொண்டணி வீர்ஒரு சோதிட மேனும் சொல்லீரே. (௮)

காமலர் நறவுக் கேமலர் மூவிரு காலேநீ
தேமலர் தணிகைத் தேவர் மருங்கில்[167]சேர்வாயேல்
ஆமல ருடையாட் கென்பெயர் பலவாம் அவையுள்ளே
ஓமலர் அடிகேள் ஒன்றினை ஒன்றென் றுரையாயே. (௯)

---

162 (தொடர்ச்சி).

இவனே எனமால் அயனொ டமரோர்
இளையோன் எனவே—மறைஓத
இறையோன் இடமாய் விளையா டுகவே
இயல்வேல் உடன்மா—அருள்வாயே."

"நங்குற்றம் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண்(டு)
அங்குற்று மென்துகில் போக்கினள் வெற்றரை ஆகிஅந்தோ
இங்குற் றனைஎன எம்பெரு மான்இவ் விருநிலத்தில்
தங்குற்றம் பார்க்கு மவர்உள ரோஎனத் தாழ்ந்தனளே."

163. தந்தேனயமாம் - படி வேறுபாடு.

164. என்னேல் - படி வேறுபாடு.

165. காந்தளோர், நீலமோர் - தொ. வே. பதிப்பு.

166. திகழ்வென்பால் - தொ. வே. பதிப்பு.

167. மருகில் - படி வேறுபாடு.

தேடுங் கிளிநீ நின்னை விளம்பித் திருஅன்னார்
ஆடுந் தணிகையில் என்உயிர் அன்னார் அருகேபோய்க்
கூடும் தனமிசை என்பெயர் வைத்தக் கோதைக்கே
ஈடும் கெடஇன் றென்னையும் ஈந்தருள் என்பாயே. (அ)

பொன்னை இருத்தும் பொன்மலர் எகினப்[168] புள்ளேநீ
அன்னை இகழ்ந்தே அங்கலர் செய்வான் அனுராகம்
தன்னை அளிக்குந் தண்டணி கேசர் தம்பாற்போய்
என்னை இகழ்ந்தாள்[169] என்செயல் கொண்டாள் என்பாயே.(கூ)

வதியும் தணிகையில் வாழ்வுறும் என்கண் மணிஅன்னார்
மதியுந் தழல்கெட மாமயின் மீதிவண் வருவாரேல்
திதியும் புவிபுகல் நின்பெயர் நெறியைத் தெரிவிப்பான்
நதியுந் துணவுத வுவனங் கொடிநீ நடவாயே. (கo)

மன்றோர் தணிகையி னின்றீர் கதிதர வந்தீரோ[170]
என்றே னசைதரு மின்றேன் மொழியாய் யானுன்பால்
இன்றே சுரருல கெய்திட வந்தே னென்றூர்காண்
குன்றோர் முலையா யென்னடி யவர்சொற் குறிதானே. (கக)

சேதன நந்தார் சென்று வணங்குந் திறல்வேலார்
தாதன வண்ணத் துள்ளொளிர் கின்ற தணிகேசர்
மாதன முந்தா வந்தென வந்தே வாதாதா
ஆதன மென்றா ரென்னடி யம்மா வவர்சூதே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

46. போற்றித் திரு விருத்தம்[171]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

கங்கையஞ் சடைசேர் முக்கட் கரும்பருள் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி அருட்பெருங் கடலே போற்றி

168. பொன்மலரேன - படி வேறுபாடு.
169. இழந்தாள் - படி வேறுபாடு.
170. வந்தீரே - படி வேறுபாடு.
171. இப் பதிகத்திற்கு, அடிகளார் கைஎழுத்து முதல் கிடைக்கவில்லை. அடிகளாருடைய அன்பர்கள் இருவரின் காகிதப் படிகளில் கண்டவாறு இங்கு இது அச்சிட்டிருக்கிறது. அவற்றில் " தனிப் பதிகங்கள் " என்ற பிரிவின் கீழ், இது காண்கிறது.

பங்கையன் முதலோர் போற்றும் பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளும் தெய்வச் சரவண பவனே போற்றி.[172]   (க)

பணிப்பற அருளும் முக்கட் பரஞ்சுடர் ஒளியே போற்றி
இனிப்புறு கருணை வான்தேன் எனக்கருள் புரிந்தாய் போற்றி
துனிப்பெரும் பவந்தீர்த் தென்னைச் சுகம்பெற வைத்தோய் போற்றி
தனிப்பெருந் தவமே போற்றி சண்முகத் தரசே போற்றி.[173]   (உ)

மணப்புது மலரே தெய்வ வான்சுவைக் கனியே போற்றி
தணப்பற அடியர்க் கின்பம் தரும்ஒரு தருவே போற்றி
கணப்பெருந் தலைவர் ஏத்தும் கழற்பதத் தரசே போற்றி
குணப்பெருங் குன்றே போற்றி குமரசற் குருவே போற்றி.   (௩)

தவம்பெறு முனிவ ருள்ளத் தாமரை அமர்ந்தோய் போற்றி
பவம்பெறுஞ் சிறியேன் தன்னைப் பாதுகாத் தளித்தோய் போற்றி
நவம்பெறு நிலைக்கும் மேலாம் நண்ணிய நலமே போற்றி
சிவம்பெறும் பயனே போற்றி செங்கதிர் வேலோய் போற்றி.   (௪)

மூவடி வாகி நின்ற முழுமுதற் பரமே போற்றி
மாவடி அமர்ந்த முக்கண் மலைதரு மணியே போற்றி
சேவடி வழுத்தும் தொண்டர் சிறுமைதீர்த் தருள்வோய் போற்றி
தூவடி வேல்கைக் கொண்ட சுந்தர வடிவே[174] போற்றி.   (௫)

---

172. இத் திருப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவனுடைய அருட் பண்புகளையும் அருட் செயல்களையும் விவரித்து இன்புறுதலும், தம் பிழை பொறுத்து இறைவன் தம்மை ஆட்கொள்ள வேண்டும் எனலும், தம்முள் இறைவன் தங்கி உறைகிறான் எனலும் காண்க.

173. இப் பதிகப் பா முதலியவற்றோடு கீழ்க்கண்ட காரைக்கால் அம்மையார், அருணகிரிநாதப் பெருமானார் இவர்கள்தம் மெய்ம்மொழிகள் போல்வனவற்றை ஓதியும் ஓர்ந்தும் ஒருமையுற்று இன்புறுக :

“ பிரான்அவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரான்அவன்றன் பேரருளே வேண்டிப்—பிரான்அவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது.”

“ ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.”

174. வடிவ - படி வேறுபாடு.

விண்ணுறு சுடரே என்னுள் விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே என்னைக் கலந்தநற் களிப்பே போற்றி
பண்ணுறு பயனே என்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறும் அடியார் தங்கட் கினியதெள் அமுதே போற்றி. (சு)

மறைஎலாம் பரவ நின்ற மாணிக்க மலையே போற்றி
சிறைஎலாம் தவிர்ந்து வானோர் திருவுறச் செய்தோய் போற்றி
குறைஎலாம் அறுத்தே இன்பம் கொடுத்தஎன் குருவே போற்றி
துறைஎலாம் விளங்கு ஞானச் சோதியே போற்றி போற்றி. (எ)

தாருகப் பதகன் தன்னைத் தடிந்தருள் செய்தோய் போற்றி
வேருகச் சூர மாவை வீட்டிய வேலோய் போற்றி
ஆருகச் சமயக் காட்டை அழித்தவெங் கனலே போற்றி
போருகத் தகரை ஊர்ந்த புண்ணிய மூர்த்தி போற்றி. (அ)

சிங்கமா முகனைக் கொன்ற திறலுடைச் சிம்புள் போற்றி
துங்கவா ரணத்தோன் கொண்ட துயர்தவிர்த் தளித்தோய் போற்றி
செங்கண்மால் மருக போற்றி சிவபிரான் செல்வ போற்றி
எங்கள்ஆர் அமுதே[175] போற்றி யாவர்க்கும் இறைவ போற்றி. (கூ)

முத்தியின் முதல்வ போற்றி மூவிரு முகத்த போற்றி
சத்திவேற் கரத்த போற்றி சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருளும் தேவர் சிகாமணி போற்றி போற்றி
பத்தியின் விளைந்த இன்பப் பரம்பர போற்றி போற்றி. (க0)

தெருளுடை யோர்க்கு வாய்த்த சிவானந்தத் தேனே போற்றி
பொருளுடை மறையோர் உள்ளம் புகுந்தபுண் ணியமே போற்றி
மருளுடை மனத்தி னேனை வாழ்வித்த வாழ்வே போற்றி
அருளுடை அரசே எங்கள் அறுமுகத் தமுதே போற்றி. (கக)

பொய்யனேன் பிழைகள் எல்லாம் பொறுத்திடல் வேண்டும் போற்றி
கையனேன் தன்னை இன்னும் காத்திடல் வேண்டும் போற்றி
மெய்யனே மெய்யர் உள்ளம் மேவிய விளைவே போற்றி
ஐயனே அப்ப னேஎம் அரசனே போற்றி போற்றி. (கஉ)

முருகநின் பாதம் போற்றி முளரியங் கண்ணற் கன்பாம்
மருகநின் கழல்கள் போற்றி வானவர் முதல்வ போற்றி

175. அமுத - படி வேறுபாடு.

பெருகருள் வாரி போற்றி பெருங்குணப் பொருப்பே[176] போற்றி
தருகநின் கருணை போற்றி சாமிநின் அடிகள் போற்றி. (கங)

கோதிலாக் குணத்தோய் போற்றி குகேசநின் பாதம் போற்றி
தீதிலாச் சிந்தை மேவும் சிவபரஞ் சோதி போற்றி
போதில்நான் முகனும் காணாப் பூரண வடிவ போற்றி
ஆதிநின் தாள்கள் போற்றி அநாதிநின் அடிகள் போற்றி. (கச)

வேதமும் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமும் கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி
போதமும் பொருளும் ஆகும் புனிதநின் பாதம் போற்றி
ஆதரம் ஆகி என்னுள் அமர்ந்தஎன் அரசே போற்றி. (கரு)

திருச்சிற்றம்பலம்

47. தனித் திருத் தொடை[177]

திருச்சிற்றம்பலம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

என்னிரு கண்ணின்மேவும் இலங்கொளி மணியே போற்றி
பன்னிரு படைகொண் டோங்கும் பன்னிரு கரத்தோய் போற்றி

---

176. பெருங்குணப் பெரும - படி வேறுபாடு.

177. கிடைத்த அடிகளாருடைய கைஎழுத்துச் சுவடிகளில் இப் பதிகத்தில் முதல் ஒன்பது பாக்களும் பதினொன்றாம் பாவும் காண்கின்றன. அடிகளாரின் அன்பர் இருவர் காகிதப் படிகளில் இப் பதிகத்தின் 14 பாக்களும், மற்றும் ஓர் அன்பர் காகிதப் படியில் இறுதிப் பாக்கள் மூன்று மட்டும் இருக்கின்றன. மூன்றாவது பாவிற்கு முன் " உ. சிவமயம். சிவமயம். சிவமயம். சிவமயம். சிவமயம். " என்றும், அதன் இறுதியில் " நமசிவாய. சிவசண்முக. சிவாயநம. நமசிவாய. சிவசண்முக. சிவாயநம. நமசிவாய. சிவசண்முக. சிவாயநம. நமசிவாய. சிவசண்முக. சிவாயநம. " என்றும், இவற்றைத் தொடர்ந்து எண்முறை " சிவாயநம " என்றும் அடிகளார் வரைந்து வரைந்து ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து சிவானுபவச் செல்வராகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

மின்னிரு நங்கை மாருள் மேவிய மணாள போற்றி
நின்னிரு பாதம் போற்றி நீள்வடி வேல போற்றி.[178] (க)

கலிநிலைத்துறை

மதிவளர் சடைமுடி மணிதரு சுரர்முடி மணிஎன்கோ
பதிவளர் சரவண பவநவ சிவகுரு பதிஎன்கோ
துதிவளர் துணைஅடி தொழும்அடி யவர்பெறு துணைஎன்கோ
நிதிவளர் பரசுக நிலைபெறும் நெறிதரு நினையானே. (உ)

கட்டளைக் கலித்துறை

முருகா சரணம் சரணம்என் றுன்பதம் முன்னிஉள்ளம்
உருகாத நாயனை யேற்குநின் றண்ணருள் உண்டுகொலோ
அருகாத பாற்கடல் மீதே அனந்தல் அமர்ந்தவன்றன்
மருகாமுக் கண்ணவன் மைந்தா எழில்மயில் வாகனனே.[179] (ங)

---

178. இத் திருப் பதிகப் பாக்களில், நம் பெருமானார், இறைவனது அருள் வடிவத்தில் திளைத்தும், உளம் உருகாத தமக்கும் அருள் உண்டு கொல் என அஞ்சியும், தம் துன்பம் இறைவனால் அன்றி ஒழிக்கற் பாலது அன்று என்று எண்ணியும், தம் பிழைக்கிரங்கித் தமக்கு அருளும்படி வேண்டியும், முன்னர் தம்மைத் தகுதி குறியாது ஆட் கொண்ட இறைவன் இஞ்ஞான்று தகுதியின்மை கருதித் தள்ளுதல் அருளுக்கு அழகன்று என்றும்—இன்ன பலவும் இயம்பி விண்ணப் பித்தல் காண்க.

179. இப் பா முதலியவற்றோடு பின்வரும் திருவாசகம், திருப்புகழ் போன்ற நிறை நீர் மெய்ம்மொழிகளை ஓதி உணர்ந்து களிகூர்க :

"புகவே தகேன்உனக் கன்பருள் யான்என்பொல் லாமணியே
தகவே எனைஉனக் காட்கொண்ட தன்மைஎப் புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்திஅண் ணாஅமுதே
நகவே தகும்எம்பி ரான்என்னை நீசெய்த நாடகமே."

"வாடைபற்று வேளை அடாஅடா என
நீமயக்கம் ஏது சொலாய்சொலாய் என
வாரம்வைத்த பாதம் இதோஇதோ என —அருள்வாயே."

"நான்ஆர் ஒடுங்க நான்ஆர் வணங்க
நான்ஆர் மகிழ்ந்து—உனைஓத
நான்ஆர் இரங்க நான்ஆர் உணங்க
நான்ஆர் நடந்து—விழநான்ஆர்

வெண்பா

உலகம் பரவும் ஒருமுதல்வா தெய்வத்
திலகம் திகழிடத்துத் தேவே—இலகுதிருப்
புள்ளிருக்கு வேளூர்ப் புனிதா அடியேன்றன்
உள்ளிருக்கும் துன்பை ஒழி. (ச)

செக்கச் சிவந்தே திகழ்ஒருபால் பச்சையதாய்
அக்கட் பரிதிபுரத் தார்ந்தோங்கும்—முக்கண்
குழைக்கரும்பின் முத்துக் குமார மணியேஎன்
பிழைக்கிரங்கி ஆளுதியோ பேசு. (ரு)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருமாலைப் பணிகொண்டு கிரிகொண்ட தாருகனைச் செறித்து வாகைப்
பெருமாலை அணிதிணிதோள் பெருமானே ஒருமான்றன் பெண்மேற் காமர்
வருமாலை உடையவர்போல் மணமாலை புனைந்தமுழு மணியே முக்கட்
குருமாலைப் பொருள்உரைத்த குமாரகுரு வேபரம குருவே போற்றி.

தோடேந்து கடப்பமலர்த்தொடையொடுசெங்குவளைமலர்த்தொடையும்வேய்ந்து
பாடேந்தும் அறிஞர்தமிழ்ப் பாவொடுநா யடியேன்சொற் பாவும்ஏற்றுப்
பீடேந்தும் இருமடவார் பெட்பொடும்ஆங் கவர்கண்முலைப் பெரியயானைக்
கோடேந்தும் அணிநெடுந்தோட் குமாரகுரு வேபரம குருவே போற்றி.(எ)

நீர்வேய்ந்த சடைமுடித்துத் தோலுடுத்து நீறணிந்து நிலவுங் கொன்றைத்
தார்வேய்ந்து விடங்கலந்த களங்காட்டி நுதலிடைஓர் தழற்கண் காட்டிப்
பேர்வேய்ந்த மணிமன்றில் ஆடுகின்ற பெரும்பித்தப் பெருமானீன்ற
கூர்வேய்ந்த வேல்அணிதோள் குமாரகுரு வேபரம குருவே போற்றி. (அ)

பெண்குணத்தில் கடைப்படும்ஓர் பேய்க்குணங்கொள்
நாயேன்றன் பிழைகள் எல்லாம்
எண்குணப்பொற் குன்றேநின் திருஉளத்தில்
சிறிதேனும் எண்ணேல் கண்டாய்

---

179. (தொடர்ச்சி).

தானே புணர்ந்து தானேஅறிந்து
தானே மகிழ்ந்து—அருள்ஊறித்
தாய்போல் பரிந்த தேனே டுகந்து
தானே தழைந்து—சிவமாகித்
தானே வளர்ந்து தானே இருந்த
தார்வேணி எந்தை—அருள்பாலா.”

பண்குணத்தில் சிறந்திடும்நின் பத்தர்தமைப்
புரப்பதுபோல் பாவி யேனை
வண்குணத்தில் புரத்தியிலை யேனும்எனைக்
கைவிடேல் வடிவே லோனே. (௯)

கலி விருத்தம்

சத்திவேல் கரத்தநின் சரணம் போற்றிமெய்ப்
பத்தியோ டருச்சனை பயிலும் பண்பினால்
முத்திசார் குவர்என மொழிதல் கேட்டுநல்
புத்தியோ டுன்பதம் புகழ்வர் புண்ணியர். (௧0)

கலித் துறை

தேனே அமுதே சிவமே தவமே தெளிவேஎங்
கோனே குருவே குலமே குணமே குகனேயோ
வானே வளியே அனலே புனலே மலையேஎன்
ஊனே உயிரே உணர்வே எனதுள் உறைவானே. (௧௧)

கட்டளைக் கலித்துறை

ஆறுமு கங்கொண்ட ஐயாஎன் துன்பம் அனைத்தும்இன் னும்
ஏறுமு கங்கொண்ட தல்லால் இறங்குமு கம்இலையால்
வீறுமு கங்கொண்ட கைவேலின் வீரம் விளங்கஎன்னைச்
சீறுமு கங்கொண்ட அத்துன்பம் ஓடச் செலுத்துகவே. (௧௨)

பண்கொண்ட சண்முகத் தையா அருள்மிகும் பன்னிரண்டு
கண்கொண்ட நீசற்றுங் கண்டிலை யோஎன் கவலைவெள்ளம்
திண்கொண்ட எட்டுத் திசைகொண்டு நீள்சத்த தீவுங்கொண்டு
மண்கொண்டு விண்கொண்டு பாதாளங் கொண்டு வளர்கின்றதே. (௧௩)

வன்குலஞ் சேர்கடன் மாமுதல் வேர்அற மாட்டிவண்மை
நன்குலஞ் சேர்விண் நகர்அளித் தோய்அன்று நண்ணிஎன்னை
நின்குலஞ் சேர்த்தனை இன்றுவி டேல்உளம் நேர்ந்துகொண்டு
பின்குலம் பேசுகின் றாரும்உண் டோஇப் பெருநிலத்தே. (௧௪)

திருச்சிற்றம்பலம்

48. தனிப் பாசுரங்கள்[180]

திருச்சிற்றம்பலம்

வண்ண விருத்தம்

திருமால் ஆதியர் உள்ளம் கொள்ளும்ஓர் செவ்விய வேலோனே[181]
குருமா மணியே குணமணி யேசுரர் கோவே மேலோனே
கருமா மலம்அறு வண்ணம் தண்அளி கண்டே கொண்டேனே
கதியே பதியே கனநிதி யேகற் கண்டே தண்தேனே
அருமா தவர்உயர் நெஞ்சம் விஞ்சிய அண்ணா விண்ணவனே
அரசே அமுதே அறிவுரு வேமுரு கையா மெய்யவனே
உருவா கியபவ பந்தம் சிந்திட ஓதிய வேதியனே
ஒளியே வெளியே உலகமெ லாம்உடை யோனே வானவனே.[182]

---

180. இப் பதிகத்தின் முதல் மூன்று பாக்களும் அடிகளாரது கைஎழுத்தில், பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியாருடைய திருத்தணிகைப் பதிகக் காகிதப் படியில் காண்கின்றன. இவை மற்ற அன்பரது காகிதப் படியிலும் இருக்கின்றன. நான்காம் பாவிற்கு அடிகளாரது கைஎழுத்தாவது அன்பர்கள்தம் படியாவது கிடைக்கவில்லை. ஆனால், இது, நம்பெருமான் அவர்களின் "பல்வகைய தனிப் பாடல்கள்" என்ற தலைப்பின்கீழ், திரு. ஆ. சபாபதி சிவாச்சாரியாரால் 1891-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டிருக்கிறது. ஐந்தாம் பாவானது, பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியாரது 1892-ஆம் ஆண்டுத் திருஅருட்பாப் பதிப்பில் ஆறாந்திருமுறையின் இறுதியில் மற்ற நான்கு பாக்களோடும் சேர்க்கப் பட்டிருக்கின்றது. இப் பதிப்பின் விவரம் இந்நூலின் பின் இணைப்பில் காண்க. ஆறும் பாவோ எனில், பழைய காகிதப் படி ஒன்றில் "வள்ளலார் வாக்கு" என்ற தலைப்போடு பிற்காலத்தில் சேர்த்திருக் கிறது. இந்த ஆறு பாக்களும், இப் பதிப்பின் ஆறும் புத்தகமாகிய தனிப்பாசுரப் பகுதியில் "முருகவேள் தனித் திருத்தொடை" என்ற தலைப்பில் தொகுத்து, 1933-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் அவற்றைச் சார்ந்த குறிப்புக்களையும் அப் பகுதியின் 44, 45, 46, 47-ஆம் பக்கங்களில், மேலும் பார்த்தறிக.

181. இத் தனிப் பாசுரத் திருப்பாக்களில், பெருமான் அவர்கள், இறைவன் அருட்செயல் இத் தன்மைத்து என்றும், தம் வாழ்க்கை வீணாயிற்று என்றும், தமக்கு உள்ளும் புறம்பும் ஆதரவில்லை என்றும், சில அறிவிலி களைச் சன்மார்க்கத்தில் பயிற்றுதல் அரிது என்றும்—பிற வகையிலும் கூறுவது காண்க.

182. இப் பதிகப் பாக்களோடு பின்வரும் கந்தர் அலங்காரம் போல்வன பார்க்க :

"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த

கொச்சகக் கலிப்பா

கூழுக் கழுவேனோ கோத்தணிகைக் கோவேளன்
ஊழுக் கழுவேனோ ஓயாத் துயர்ப்பிறவி
ஏழுக் கழுவேனோ என்செய்கேன் என்செய்கேன்
பாழுக் கிறைத்தேனீ துன்செயலோ பார்க்குமிடம். (௨)

கட்டளைக் கலிப்பா

சிந்தைக் கும்வழி இல்லைஉன் தன்மையைத்
தெரிதற் கென்னும் திருத்தணி கேசனே
உந்தைக் கும்வழி இல்லைஎன் றால்இந்த
உலகில் யாவர் உனைஅன் றி நீர்மொள்ள
மொந்தைக் கும்வழி இல்லை வரத்திரு
முண்டைக் கும்வழி இல்லை அரையில்சாண்
கந்தைக் கும்வழி இல்லை அரகர
கஞ்சிக் கும்வழி இல்லைஇங் கையனே. (௩)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கறிபிடித்த ஊன்கடையில் கண்டவர்தம் கால்பிடித்துக் கவ்வும் பொல்லா
வெறிபிடித்த நாய்க்கேனும் வித்தைபயிற் றிடலாகும் வேண்டி வேண்டி
மறிபிடித்த சிறுவனைப்போல் வாத்தியார் மனமறுகி வருந்தத் தங்கள்
குறிபிடித்துக் காட்டுவோர்க் கியாவர்படிப் பிக்கவலார் குமர வேளே. (௪)

நேரிசை வெண்பா

தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதுமியாம்
ஓதா தவமே யுழனெஞ்சே—மீதாத்
ததிதி யெனமயிலிற் றூடி நாளுந்
திதிதி தருந்தணிகைத் தே. (௫)

இதுவுமது

நின்னிலையை என்னருளால் நீபுணர்ந்து நின்றடங்கின்
என்னிலையை அந்நிலையே எய்துதிகாண்—முன்னிலையை
இற்குருவி ளுட்டாதே என்றுரைத்தான் ஏரகம்வாழ்
சற்குருஎன் சாமிநா தன். (௬)

திருச்சிற்றம்பலம்

---

182 (தொடர்ச்சி).

பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே."

49. சண்முகர் கொம்மி[183]

திருச்சிற்றம்பலம்

ஆனந்தபைரவி ராகம் - ஆதி தாளம்

குறவர் குடிசை நுழைந்தாண்டி - அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி - அவன்
தோற்றத்தைப் பாடி அடிபுங்கடி.[184] (க)

---

183. இந்தச் சண்முகர் கொம்மியும், அடுத்துவரும் சண்முகர் காலைப்பாட்டும் ஆகிய இந்த இரண்டு இசை உருப்படிகளும் பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியாரது திருத்தணிகைப் பதிகப் படியிலும், இதுகாறும் குறித்து வந்த மற்ற அன்பர் படியிலும் காண்கின்றன. ஆனால், இவை தொ. வே. அவர்களது 1880-ஆம் ஆண்டு ஐந்தாம் திருமுறைப் பதிப்பில் காணவில்லை. எனினும், இவை 1892-ஆம் ஆண்டு வெளி வந்த பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியாரது திருஅருட்பாவில், ஆறாந் திருமுறை இறுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது குறித்த மற்ற விவரங்களை அநுபந்தத்தில் காணலாம். இப் பதிப்பின் முதல் புத்தகமாகிய கீர்த்தனைப் பகுதியின் முதல் இரண்டாம் பதிப்புக்களில், 1931, 1933-ஆம் ஆண்டுகளில், இவை வெளிவந்திருக்கின்றன. 1933-ஆம் ஆண்டுப் பதிப்பில் இவற்றை இசைத்து இன்புறுவதற்கு உதவும் இராக தாள ஸ்வரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்துப் பயன்கொள்ள விரும்புவோர் அப்பகுதியின் 69,70, 71, 84, 85-ஆம் பக்கங்கள் பார்க்க.

இந்தத் திருத்தணிகைப் பகுதியின் தனிமையையும் முழுமையையும் கருதி, சிற்றளவினவாய இவை இரண்டும் இங்கேயும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்விரண்டு இசை உருப்படிகளும் இப் பதிப்பின் ஆறும் புத்தகமாகிய தனிப்பாசுரப் பகுதியிலும், அப் பகுதியின் முன்னுரையில் கண்ட காரணத்திற்காக, 1933-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றைக் காண விழைவார் அப் பகுதியின் சு, 35, 36, 37, 38-ஆம் பக்கங்கள் பார்க்க.

184. இந்த இசை உருப்படியில், நம் பெருமானார், இறைவனுடைய அருள் திறங்களை ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து இன்புறுவது காண்க.

செந்தமிழ் வளம்செறிந்த தென்தமிழ் நாட்டின்கண், மஞ்சு தவழ்ந்து தளர்நடை பயிலும் குற்றாலப் பொருப்பின் பாங்கர், வடியா வளம் பெறு பொருநை ஆற்றருகில், ஒளி கிளர் தெண்ணீர் அருவியின் வெள்ளி வீழ்ந்தன்ன பெரு நீர் வீழ்ச்சி விளங்கா நிற்கும் பக்கல், இறைவன் திருக்கோயிலின் திருமுன்னர் வதிந்து, தமிழ்ப் பெருமகனாரான கம்பநாடரது இராமாயணம், அகப்பொருள் ஆன்ற முத்தொள்ளாயிரம், நிறைமொழிப் பெருமறைகளான திருவாசகம் திருக்குறள் உள்ளிட்ட பெருநூல் சிறுநூல்களில், பெருவாரியாகப் பார்ப்பார் அற்றுப்

மாமயில் ஏறி வருவாண்டி - அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி - அவன்
சீர்த்தியைப் பாடி அடியுங்கடி.[185] (உ)

பன்னிரு தோள்கள் உடையாண்டி - கொடும்
பாவிகள் தம்மை அடையாண்டி
என்னிரு கண்கள் அனையாண்டி - அவன்
ஏற்றத்தைப் பாடி அடியுங்கடி. (௩)

வேங்கை மரமாகி நின்றாண்டி - வந்த
வேடர் தமைஎலாம் வென்றாண்டி
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி - அந்தத்
தீரனைப் பாடி அடியுங்கடி. (௪)

---

184 (தொடர்ச்சி). பொதிந்து கிடக்கும் பாவின் சுவையையும், கருத்தின் பெருமிதத்தையும், உணர்ச்சியின் நுண்மையையும், எடுத்தெடுத்துச் சுவைத்துச் சுவைத்துத் தாம் இன்புறும் ஆற்றானே, அளப்பரும் தொன்மையும், வரையற்ற வளமையும், மாறா இளமையும், களங்கமில் கட்டழகும் பொருந்திய தமிழ்த் தாயை, அவளது தெய்வத்தன்மை, உயிர் இரக்கம், கண்ணோட்டம், உரை நயம், நடையின் சாயல், அவிர் ஒளிர் அணி இழை முதலிய அருஞ் சிறப்புக்களோடு, தம்மைப் பார்ப்பார் கேட்பாரின் இமையாக் கண்முன் தோற்றுவித்து, அன்னாரோடு பழமை பாராட்டி, உழுவல் அன்பு ததும்ப அளவளாவச் செய்தவரும்; தெய்வக் கற்புடைய தம் வாழ்க்கைத் துணைவியரோடு, இரவு பகல் என்னும் எல்லை இன்றி, ஆற்றொழுக்காக, விருந்தாற்றுதலையே தம் வாழ்நாளின் பெருநோன்பாக் கொண்டவரும்; காலத்தான் அலக்கண் உறா நிலைபெற்ற நட்பாளரும்; இப் பதிப்பாசிரியரின் அரும் பெரு ஆன்ம நேயப் பெருந்தகையாரும் ஆன ‘ரசிகமணி’ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், இப் பதிப்பின் கீர்த்தனைப் பகுதியின்கண் உள்ள இசை உருக்களின் பேரழகை வாய்மடுத்துண்டு இறுமாந்திருக்கும் காலத்தே, இந்தச் சண்முகர் கொம்மியைப் பல்கால் பாடிப் பாடி உளம் உருகி, வெள்ளி வெண்குடத்துப் பால் சொரிந்தன்ன அதன் தெள்ளிய தமிழ்த் தன்மையையும் ஒள்ளிய கடவுட் பண்பினையும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறும் காட்சி, இவ் வெளிய மக்கட்பிறப்பில் காணத்தக்க தொன்று.

185. இந்த இசைப் பாட்டோடு கீழ்க்காணும் கந்தர் அலங்காரம்போன்ற திரு அமுதத்தை உண்டு களிக்க :

“பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத்(து) உருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.”

சீர்திகழ் தோகை மயில்மேலே - இளஞ்
　　செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான் - வருங்
　　கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள். (ரு)

ஆறு முகங்களில் புன்சிரிப்பும் - இரண்
　　டாறு புயந்திகழ் அற்புதமும்
வீறு பரஞ்சுடர் வண்ணமும்ஓர் - திரு
　　மேனியும் பாருங்கள் வெள்வளைகாள். (சு)

ஆனந்த மான அமுதனடி - பர
　　மானந்த நாட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி - சிவ
　　சண்முகன் நங்குரு சாமியடி. (எ)

வேதமுடி சொல்லும் நாதனடி - சதுர்
　　வேதமு டிதிகழ் பாதனடி
நாத வடிவுகொள் நீதனடி - பர
　　நாதங் கடந்த நலத்தனடி. (அ)

தத்துவத் துள்ளே அடங்காண்டி - பர
　　தத்துவம் அன்றித் துடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி - சிவ
　　சண்முக நாதனைப் பாடுங்கடி. (கூ)

சச்சிதா னந்த உருவாண்டி - பர
　　தற்பர போகந் தருவாண்டி
உச்சிதாழ் அன்பர்க் குறவாண்டி - அந்த
　　உத்தம தேவனைப் பாடுங்கடி. (க0)

அற்புத மான அழகனடி - துதி
　　அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி - அந்தச்
　　சேவகன் சீர்த்தியைப் பாடுங்கடி. (கக)

சைவந் தழைக்கத் தழைத்தாண்டி - ஞான
　　சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி
பொய்வந்த உள்ளத்தில் போகாண்டி - அந்தப்
　　புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி. (கஉ)

வாசி நடத்தித் தருவாண்டி - ஒரு
வாசியில் இங்கே வருவாண்டி
ஆசில் கருணை உருவாண்டி - அவன்
அற்புதத் தாள்மலர் ஏத்துங்கடி. (கஙு)

இராப்பகல் இல்லா இடத்தாண்டி - அன்பர்
இன்ப உளங்கொள் நடத்தாண்டி
அராப்பளி ஈந்த திடத்தாண்டி - அந்த
அண்ணலைப் பாடி அடியுங்கடி. (கச)

ஒன்றிரண் டான உளவாண்டி - அந்த
ஒன்றிரண் டாகா அளவாண்டி
மின்திரண் டன்ன வடிவாண்டி - அந்த
மேலவன் சீர்த்தியைப் பாடுங்கடி. (கரு)

திருச்சிற்றம்பலம்

50. சண்முகர் காலைப்பாட்டு[186]

திருச்சிற்றம்பலம்

காபி ராகம் - சாபு தாளம்

வாரும் வாரும்தெய்வ வடிவேல் முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலோரே வாரும்.[187] (க)

சங்கம் ஒலித்தது தாழ்கடல் விம்மிற்று
சண்முக நாதரே வாரும்
உண்மை விநோதரே வாரும்.[188] (உ)

186. 183-ஆம் அடிக்குறிப்பு இதற்கும் உரியது. அதனைப் பார்த்தறிக.

187. இந்த இசை உருவில், அடிகளார், இறைவனை, தூய்மையாக்கிய தம் உள்ளத்தில் வந்து வீற்றிருக்குமாறு, காதலால் கனிந்து அழைத்தலைக் காண்க.

188. இந்த இசை உருவின் பகுதிகளோடு பின்வரும் பட்டினத்தடிகளாரின் பொய்யாமொழி போல்வனவற்றைப் பார்த்தறிக :

"கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்எனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறல்
மைஇருள் நிறத்து மதனுடை அடுசினத்(து)
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்(து) அகற்றி

பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்று
பொன்னனை வேலரே வாரும்
மின்னார்முந் நூலரே வாரும். (௩)

காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கண்ணுதல் சேயரே வாரும்
ஒண்ணுதல் நேயரே வாரும். (௪)

செங்கதிர் தோன்றிற்றுத் தேவர்கள் சூழ்ந்தனர்
செங்கல்வ ராயரே வாரும்
எங்குரு நாதரே வாரும். (௫)

அருணன் உதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும்
மாறில்அகத் தோரே வாரும். (௬)

சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சூரசங் காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும். (௭)

வீணை முரன்றது வேதியர் சூழ்ந்தனர்
வேலாயுதத் தோரே வாரும்
காலாயுதத் தோரே வாரும். (௮)

சேவல் ஒலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
மூவர் முதல்வரே வாரும். (௯)

பத்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். (௧0)

---

188 (தொடர்ச்சி).

அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்எனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழ்அறை உனக்குப் பள்ளிஅறை ஆக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி(சு)
எந்தைநீ இருக்க இட்டனன்.”

மாலை கொணர்ந்தனர் மஞ்சனம் போந்தது
மாமயில் வீரரே வாரும்
தீமையில் தீரரே வாரும். (கக)

தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்
சுப்பிர மணியரே வாரும்
வைப்பின் அணியரே வாரும். (கஉ)

திருச்சிற்றம்பலம்

51. தெய்வ மணி மாலை[189]

இரட்டை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருஓங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பருள்[190]
திறலோங்கு செல்வம்ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து

---

189. இத் திருப்பதிகத்திற்கும், இதனை அடுத்து வரும் கந்தர் சரணப்பத்து என்னும் திருப்பதிகத்திற்கும் அடிகளாரின் கைஎழுத்துச்சுவடியாவது, அவர்களைச் சார்ந்து வதிந்த அன்பர்களின் படிஓலையாவது கிடைக்க வில்லை. இவை, நம்பெருமானாரால், இளம்போதில், சென்னைக் கந்தசாமி கோயிலில் நாள் நாளும் நெடுநேரம் தங்கிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்து வரும் காலத்தில், தம்முள் பொங்கித் ததும்பும் இறைஉணர்ச்சியான் உள்ளும் புறமும் கனிவுற்று, இயற்றப்பெற்று, அத் திருக்கோயிலைச் சார்ந்தார் ஒருவர் வேண்டுகோள் முகத்தான் வெளிப்பட்டுப் பின்னர், மற்றும் ஓர் அறிஞரால் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இப் பதிப்பில், பதிப்பித்த ஆண்டு குறிக்கப்படவில்லை. ஆனாலும், இது அடிகளார் ஒழிவிலொடுக்க நூலை அச்சிற் பதிப்பித்த 1851-ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாக இருக்கும் என்றே தொன்று தொட்டு வரும் கேள்வியால் அறியக்கிடக்கிறது. இப் பதிப்பினைக் குறித்து, இந்நூலின் அநுபந்தம் பார்க்க. இம் முதற்பதிப்பே இங்கு இவ்விரண்டு பதிகங் களுக்கும் மேற்கொண்ட முதலாகும்.

190. இந்தத் தெய்வமணிமாலைப் பாக்களில், அடிகளார், இறைவன் திருவடி தம் நெஞ்சில் குடிகொள்ளும் நாள் எதுவோ என்றும் ; அடியார்களின் சேர்க்கை தமக்கு என்றுஎன்று வாய்க்கும் என்றும் ; தம் நெஞ்சு தம் வயத்தில் நின்று தொழிற்படவில்லை என்றும் : தமக்கு இறைவன் அன்றிப் புகல் வேறில்லை என்றும் ; இறை சிந்தனையே முடிவான பேறு என்றும் ; உலகியலில் கொலை, புலை முதலிய தீச்செயல்கள் வெறுத்து ஒழிக்கப்பட்டு நற்செயல்கள் கைக்கொள்ளப்படல் வேண்டும் என்றும்; 'நாம் பிரமம்' என்பது, நடைமுறையில் விபரீதமாக முடிகிறது என்றும் ; இறைவன் எண்ணம் அல்லாதது பயன்அற்றது என்றும் ;

மருவோங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கிஓர்
வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான

190 (தொடர்ச்சி).

இறை எண்ணம் எல்லா நற்பேறுகளையும் ஈர்த்துக் கொடுக்கும் என்றும்; தாம் இறைவனால் ஆளப்பட்டுப் பெற்ற பேறு இன்னது என்றும்; தம் இழிவும் இறைவன் நிறைவும் இன்னின்ன வகையன என்றும்; இளமை நிலையாமை, பொருள் நிலையாமை, உடல் நிலையாமை அறிந்துவைக்கத் தக்கவை என்றும்; இறையை வழிபடுங்கால் வாய்க்கும் உடல் தூய்மையும், இறையை வழிபடாதபோது உறையும் உடல் புன்மையும் இத்தகையன என்றும்; உலகியலார்க்கும் அருளாளர்க்கும் உள்ள வேறுபாடு இது இது என்றும்; தம்மை ஆட்கொண்டருள்வது இறைவன் கடன் என்றும்; இறை அருளால் மறவினைகள் அப்போதப்போது அழிவடைகின்றன என்றும்—இன்ன பலப்பலவும் பசுமரத்தாணியே எனப் பகர்கின்றது பார்த்தறிக.

அடுத்து வரும் கந்தர் சரணப் பத்தோடு, இப் பதிகம்தான், அடிகளாருடைய அருட்பாக்களில் முதல் முதல் அச்சிடப்பட்டது எனத் தெரிகிறது ஆதலாலும்; இப் பதிகப் பாக்களை, அக்காலந் தொட்டே, தமிழ் மக்கள், பெருவாரியாக, ஓதி உணர்ந்து பத்திமைகொண்டு இன்புற்றிருக்கிறார்கள் ஆதலாலும்; இவை ஒவ்வொன்றிலும் பல திறத்தனவாய கருத்துக்களும் உணர்ச்சிகளும் செறிந்திருக்கின்றன ஆதலாலும்; அடிகளாரது சின்னஞ்சிறு வயதில், இவை, சென்னைக் கந்தகோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருமுன்னர் இயற்றப்பெற்று, அவர்களோடு அளவளாவித் திகழ்ந்து, ஆங்கு வதிந்த சில நல் இளைஞர்கள் இவற்றை மனப்பாடம்செய்து உணர்ச்சியோடு ஓதிக் கொண்டிருந்ததைக் கேட்ட காஞ்சிபுரம் மஹாவித்துவான் தேவாரம் சபாபதி முதலியார் அவர்கள், இவ்வரும் பெரு நிகழ்ச்சியை, அவரது நண்பரும் அடிகளாரின் தமையனாரும் ஆன புராணிகர் சிதம்பரம் சபாபதிப்பிள்ளை அவர்களுக்குக் கூறி, அடிகளார் இளமகனார் ஆயினும் ஓர் சித்த மஹாபுருஷர் எனக் குறிப்பிட்டுப் பெரு மகிழ்வெய்தினார் எனும் தொன்று தொட்ட கேள்வி ஒன்று உண்டாதலாலும்; இவ் வண்ணம் அடிகளாரது தெய்வப் பிறப்பை, முதன் முதல், தமிழ்ப் பெருமறையின் திருநெறியில் ஊன்றித் ததும்பும் உள்ளமும் உடலும் உடைய தமிழ்த் திருமகனார் ஒருவர்க்கு அறிவித்தருளிய அருள் நிகழ்ச்சி இப் பதிகத்தின் வாயிலான் ஆதலாலும்—இப் பதிகத்தின் பா ஒவ்வொன்றிற்கும் அதன் அதனில் உள்ள பெருங் கருத்துக்களில் இரண்டொன்றின் விளக்கத்தின் பொருட்டு, பெரும்பாலும் பொய்யாமொழிப் பெருமறைகளினின்றும் மேற்கோள்கள் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை, இப் பதிகப் பாக்களோடு பத்திமையுடையார் ஓதியும், ஓர்ந்தும், உணர்ந்தும், இன்புற்று அருட்பெரு நலம் அடைவார்களாக.

உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள்எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.191 (க)

பரம்எது வினைசெயும் பயன்எது பதிஎது
பசுஎது பாசம்எது
பத்திஎ தடைகின்ற முத்திஎ தருள்எது
பாவபுண் யங்கள்எது
வரம்எது தவம்எது விரதம்எ தொன்றும்இலை
மனம்விரும் புணவுண்டுநல்
வத்திரம் அணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடிமேல்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்துமகிழ் கின்றசுகமே
கண்கண்ட சுகம்இதே கைகண்ட பலன்எனும்
கயவரைக் கூடாதருள்
தரமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.192 (உ)

---

191. இப் பாவொடு பின்வரும் தாயுமான அடிகளாரின் என்புருக்கும் எந் நாட் கண்ணிகள் கண்டு இன்புறுக :

“ எங்கெங்கும் பார்த்தாலும் இன்புருவாய் நீக்கம் இன்றித்
தங்கும் தனிப்பொருளைச் சாரும்நாள் எந்நாளோ.”

“ உள்ளத்தின் உள்ளேதான் ஊறும் சிவாநந்த
வெள்ளம் திளைந்து விடாய்தீர்வ தெந்நாளோ.”

192. இப் பாவொடு கீழ்க்குறித்த அருணகிரி நாதப் பெருந்தகையாரின் பிரார்த்தனை பார்க்க :

விழுதா தெனவே கருதா துடலை
வினைசேர் வதுவே—புரிதாக
விருதா வினிலே உலகா யதமேல்
இடவே மடவார்—மயலாலே

துடிஎன்னும் இடைஅனம் பிடிஎன்னும் நடைமுகில்
துணைஎனும் பிணையல் அளகம்
சூதென்னும் முலைசெழுந் தாதென்னும் அலைபுனல்
சுழிஎன்ன மொழிசெய் உந்தி
வடிஎன்னும் விழிநிறையும் மதிஎன்னும் வதனம்என
மங்கையர்தம் அங்கம்உற்றே
மனம்என்னும் ஒருபாவி மயல்என்னும் அதுமேவி
மாழ்கநான் வாழ்கஇந்தப்
படிஎன்னும் ஆசையைக் கடிஎன்ன என்சொல்இப்
படிஎன்ன அறியாதுநின்
படிஎன்ன என்மொழிப் படிஇன்ன வித்தைநீ
படிஎன்னும் என்செய்குவேன்
தடிதுன்னும் மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.193 (க)

வள்ளல்உனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றிமற்றை
வானவரை மதிஎன்னில் நான்அவரை ஒருகனவின்
மாட்டினும் மறந்தும்மதியேன்
கள்ளம்அறும் உள்ளம்உறும் நின்பதம்அ லால்வேறு
கடவுளர் பதத்தைஅவர்என்
கண்எதிர் அடுத்தைய நண்எனஅளிப்பினும்
கடுஎன வெறுத்துநிற்பேன்

---

192 (தொடர்ச்சி).

அழுதா கெடவே அவமா கிடநாள்
அடைவே கழியா—துனைஓதி
அலர்தாள் அடியேன் உறவாய் மருவோர்
அழியா வரமே—தருவாயே.''

193. இப் பாவொடு அடியிற்காணும் சிதம்பர சுவாமிகளது உளங்குவித்த வேண்டுகோள் கண்டுணர்க :

"மெய்யா நெறிக்கண் அடியேன் செலுத்த விலங்கிமிகு
பொய்யா நெறிக்கண் எனைக்கொடு போம்உளப் போர்க்களிற்றை
ஐயா நினதருள் ஆம்கயிற் றால்பிணித் தானதண்டைச்
செய்யாரும் தாட்கந்து சேர்ப்பாய்தென் போரிஅம் சேவலனே."

என்அளவும் இம்மொழியி லேசுமொழி அன்றுண்மை
என்னைஆண் டருள்புரிகுவாய்
என்தந்தை யேஎனது தாயேஎன் இன்பமே
என்றன்அறி வேஎன்அன்பே
தன்அரிய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.194 (௭)

பதிபூசை முதலநற் கிரியையால் மனம்என்னும்
பசுகரணம் ஈங்கசுத்த
பாவனை அறச்சுத்த பாவனையில் நிற்கும்மெய்ப்
பதியோக நிலைமைஅதனுல்
மதிபாசம் அற்றதின் அடங்கிடும் அடங்கவே
மலைவில்மெய்ஞ் ஞானமயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடும்என எனதுளே
வந்துணர்வு தந்தகுருவே
துதிவாய்மை பெறுசாந்த பதம்மேவு மதியமே
துரிசறு சுயஞ்சோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்லதுணையே
தநிபெறும் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.195 (௮)

---

194. இப் பாவொடு பின்தொடரும் தாயுமானப் பெருமானுர் அகம் நெகிழ்த் துரைக்கும் பராபரக் கண்ணிகள் போல்வன பார்த்தமைக :

" எனக்கினியார் உன்போலும் இல்லைஎன் ருல்யானும்
உனக்கினியான் ஆகா உளவேன் பராபரமே."

" என்னளவும் நின்னைவிட இல்லா எனைமயக்கில்
தள்ளுதலால் என்னபலன் சாற்ருய் பராபரமே."

195. இப் பாவொடு கீழ்வரும் சாந்தலிங்க அடிகளார்தம் அவிரோத உந்தியார் போன்றவற்றை ஆராய்ந்தறிக :

" ஆதலால் பந்தம் அறுப்பான் மனேலய
சாதகம் செய்வனுல் உந்தீபற
தற்பரம் தோன்றும்ஆ(று) உந்தீபற."

காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம்இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல்அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனை உவந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே[196]
தாமம்ஓளிர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.[197] (அ)

நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்
நீக்கும்அறி வாம்துணைவனும்

---

196. சிகாரதனமே—தொ. வே. பதிப்பு.

197. இப் பாவொடு பின்வரும் திருக்குறள், தாயுமானவர் பாடல், கந்தர் அந்தாதி ஆகிய பெருமறைகளையும், பிற்காலத்திய புலவர் புராணச் செய்யுள் போல்வனவற்றையும் தெரிந்து தெளிக :

" கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

" கொல்லா விரதம் குவலயம்எல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே."

" திதா வச(வு)அ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலும்செந்
திதா(வு) அசஅ னியாயம்செய் வேதிய ரேதியங்காத்
திதா வசவ நிமலர்செல் வாசாக் கிரவசத்(து)அ
திதா வசஅன் புறப்பார் எனும்முத்தி சித்திக்கவே."

" யாகக் கொலைநலம்என் றெண்ணுகின் றோ ரும்ஒருவன்
போகத் தயக்கமற்றுப் போய்ப்புகும்தொல் வீட்டினிலும்
சாகக் கொலைசகியாத் தண்அருள்உற் றோன்ஒருவன்
ஆகத் துடன்வீழ் அளறுயர்வென் பார்உளரே."

மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்லவனும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.198 (எ)

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.199 (அ)

---

198. இப் பாவொடு கீழ்க்காணும் பொன் வண்ணத் தந்தாதி போல்வன பார்க்க :

“ படிறு யினசொல்லிப் பாழ்உடல் ஓம்பிப் பலகடைச்சென்(று)
இடறு தொழிதும் எழுநெஞ்ச மேஎரி ஆடிஎம்மான்
கடல்தா யினநஞ்சம் உண்டபி ரான்கழல் சேர்தல்கண்டாய்
உடல்தான் உளபயன் ஆவசொன் னேன்இவ் வுலகின்உள்ளே.”

199. இப் பாவொடு பின்வரும் பரிபாடல், நால்வர் நான்மணிமாலை போன்ற வற்றை ஒத்துணர்க :

ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும்இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள்
நினைவிடா நெறியும்அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும்உலகில்
சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர்தமைத்
தீங்குசொல் லாததெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.200　　　(கூ)

199　(தொடர்ச்சி).

"நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் அல்லதை
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா அறத்துச் சீரிலோரும்
அழிதவப் படிவத் தயரியோரும்
மறுபிறப் பில்எனும் மடவோரும் சேரார்
நின்நிழல்."

"வேண்டும்நின் அடியார் மெய்அன் பெனக்கும்
அருள்செய் சிவனே அலந்தேன் அந்தோ
முறையோ முறையோ இறையோ னேஎன்(று)
அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளால் பெற்ற அன்பினில் ஒருசிறி(து)
அடிய னேற்கும் அருளல் வேண்டும்."

200.　இப் பாவொடு ஒழ்க்குறித்த குறட் பாக்கள் போல்வன கண்டு உணர்க:

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

"நல்லா(று) எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று."

கரையில்வீண் கதைஎலாம் உதிர்கருங் காக்கைபோல்
கதறுவார் கள்ளுண்டதீக்
கந்தம்நா றிடஊத்தை காதம்நா றிடஉறு
கடும்பொய்இரு காதம்நாற
வரையில்வாய் கொடுதர்க்க வாதம்இடு வார்சிவ
மணங்கமழ் மலர்ப்பொன்வாய்க்கு
மவுனம்இடு வார்இவரை மூடர்என ஓதுறு
வழக்குநல் வழக்கெனினும்நான்
உரையிலவர் தமையுறு துனதுபுகழ் பேசும்அவ
ரோடுறவு பெறஅருளுவாய்
உயர்தெய்வ யானையொடு குறவர்மட மானும்உள்
உவப்புறு குணக்குன்றமே
தரையில்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.201 (௧0)

நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மைதீ மைகளும்இல்லை
நவில்கின்ற வாகிஆந் தரம்இரண் டினும்ஒன்ற
நடுகின்ற தென்றுவீணர்
போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர்தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினைஒன்று
போந்திடில் போகவிடுவார்
சாம்பிரம மாம்இவர்கள் தாம்பிரமம் எனும்அறிவு
தாம்புபாம் பெனும்அறிவுகாண்
சத்துவ அகண்டபரி பூரண காரஉப
சாந்தசிவ சிற்பிரமநீ

---

201. இப் பாவொடு பின்தொடரும் தனிகைப் புராணச் செய்யுள் போல்வன பார்த்து ஆராய்க :

"நூலினை அறிந்தார் போன்றும் நுண்ணறி வுடையார் போன்றும்
மாலினைத் தவிர்ந்தார் போன்றும் வழிஅறிந் தடைந்தார் போன்றும்
மேலெனத் தத்தம் கோளே விதந்தலை கின்றார் நந்தி
சாலஅன் றருளு நூலில் தலைப்படா உள்ளத் தாரே."

தாம்பிரிவில் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.202 (௧௧)

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நல் நிதியும்உணர்வும்
சீர்கொண்ட நிறையும்உட் பொறையும்மெய்ப் புகழும்நோய்த்
தீமைஒரு சற்றும்அணுகாத்
திறமும்மெய்த் திடமும்நல் இடமும்நின் அடியர்புகழ்
செப்புநின் றோர்அடைவர்காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும்ஒரு
கோழியங் கொடியும்விண்ணோர்
கோமான்தன் மகளும்ஒரு மாமான்தன் மகளும்மால்
கொண்டநின் கோலமறவேன்

---

202. இப் பாவொடு அடியிற்காணும் திருவள்ளுவர், அருணகிரிநாதர், தாயுமானார் ஆகிய பெருந்தகையார்களின் நிறைமொழி போல்வனவற்றைக் கூர்ந்து நோக்கி அறிக :

"யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்."

"அமல வாயு ஓடாத கமல நாபி மேல்மூல
அமுத பான மேமூல—அனல்மூள
அசைவு றாது பேராத விதமு மேவி ஓவாது
அரிச தான சோபானம்—அதனாலே
எமனை மோதி ஆகாச கமன மாம னோபாவம்
எளிது சால மேலாக—உரையாடும்
எனது யானும் வேறாகி எவரும் யாதும் யான்ஆகும்
இதய பாவ னாதீதம்—அருள்வாயே."

"நாம்பிரமம் என்றால் நடுவேஒன் றுண்டாமால்
தேம்பிஎல்லாம் ஒன்றாய்த் திகழும்நாள் எந்நாளோ."

இவற்றுடன் இத் தணிகைப் புராணச் செய்யுளையும் கருத்துட்கொள்க :

"ஆங்கவன் போல யானும் அறுகுணம் உடையேன் என்பார்
ஓங்கவன் தொழில்கள் எல்லாம் உஞற்றுவல் யானே என்பார்
தேங்கிய பிரமம் யானே தெளிவுறின் வேறின் றென்பார்
ஈங்கிவ்வா றுரைப்போர் எல்லாம் உயிர்இயல்(பு) உணரா தோரே."

தார்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.[203] (கஉ)

வன்பெரு நெருப்பினைப் புன்புழுப் பற்றுமோ
வானைஒரு மான்தாவுமோ
வலிவுள்ள புலியைஓர் எலிசென்று மோபெரிய
மலையைஓர் ஈச்சிறகினால்
துன்புற அசைக்குமோ வச்சிரத் தூண்ஒரு
துரும்பினால் துண்டமாமோ
சூரியனை இருள்வந்து சூழுமோ காற்றில்மழை
தோயுமோ இல்லைஅதுபோல்
அன்புடைய நின்அடியர் பொன்அடியை உன்னும்அவர்
அடிமலர் முடிக்கணிந்தோர்க்
கவலமுறு மோகாமம் வெகுளிஉறு மோமனத்
தற்பமும்வி கற்பம்உறுமோ
தன்புகழ்செய் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.[204] (கங)

கானலிடை நீரும்ஒரு கட்டையில் கள்வனும்
காண்உறு கயிற்றில்அரவும்
கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்
கதித்தபித் தளையின்இடையும்

---

203. இப் பாவொடு பின்தொடரும் தாயுமானாரின் பராபரக் கண்ணி போல்வன பார்க்க :

" தானம் தவம்தருமம் சந்ததமும் செய்வர்சிவ
ஞானம் தனைஅணைய நல்லோர் பராபரமே."

204. இப் பாவொடு கீழ்க் காணும் திருமந்திரப் பெருமறைபோல்வன கண்டு உவகை உறுக :

" திருவடி ஞானம் சிவம்ஆக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் நீக்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே."

மானலில் கண்டுள மயங்கல்போல் கற்பனையை
மாயையில் கண்டுவீணே
மனையென்றும் மகவென்றும் உறவென்றும் நிதியென்றும்
வாழ்வென்றும் மானமென்றும்
ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளமென்றும்
உள்ளென்றும் வெளியென்றும்வான்
உலகென்றும் அளவறுவி காரம்உற நின்றனை
உண்மைஅறி வித்தகுருவே
தானமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.205 (கச)

கற்றொளிகொள் உணர்வினோர் வேண்டாத இப்பெருங்
கன்மவுட லில்பருவம்நேர்
கண்டழியும் இளமைதான் பகல்வேட மோபுரைக்
கடல்நீர்கொ லோகபடமோ
உற்றொளியின் வெயில்இட்ட மஞ்சளோ வான்இட்ட
ஒருவிலோ நீர்க்குமிழியோ
உலைஅனல் பெறக்காற்றுள் ஊதும் துருத்தியோ
ஒன்றும்அறி யேன்இதனைநான்
பற்றறுதி யாக்கொண்டு வனிதையர்கண் வலையினில்
பட்டுமதி கெட்டுழன்றே
பாவமே பயில்கின்ற தல்லாது நின்அடிப்
பற்றணுவும் உற்றறிகிலேன்
சற்றைஅகல் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.206 (கரு)

---

205. இப் பாவொடு பின்வரும் தாயுமான அடிகளாரின் ஆனந்தக் களிப்பினையும் கண்டு இன்புறுக :

"நலமேதும் அறியாத என்னைச்—சுத்த
நாதாந்த மோனமாம் நாட்டந்தந் தேசஞ்
சலமேதும் இல்லாமல் எல்லாம்—வல்லான்
தாளால்என் தலைமீது தாக்கினன் தோழி—சங்கர சங்கர சம்பு."

206. இப் பாவொடு கீழ்க்குறித்த பட்டினத்தடிகளாரின் உடற்கூற்று வண்ணம் போல்வன பார்க்க :

சடமாகி இன்பம் தராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா காரமாகிச்
சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடும்இத்
தன்மைபெறு செல்வமந்தோ
விடமாகி ஒருகபட நடமாகி யாற்றிடை
விரைந்துசெலும் வெள்ளம்ஆகி
வேலைஅலை யாகிஆங் காரவலை யாகிமுதிர்
வேனில்உறு மேகம்ஆகிக்
கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்
காலோடும் நீராகியே
கற்பிலா மகளிர்போல் பொற்பிலா துழலும்இது
கருதாத வகைஅருளுவாய்
தடமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.207 (கக)

உப்புற்ற பாண்டம்என ஒன்பது துவாரத்துள்
உற்றசும் பொழுகும்உடலை
உயர்கின்ற வானிடை எறிந்தகல் என்றும்மலை
உற்றிழியும் அருவிஎன்றும்
வெப்புற்ற காற்றிடை விளக்கென்றும் மேகம்உறு
மின்என்றும் வீசுகாற்றின்
மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும் வினைதந்த
வெறுமாய வேடம்என்றும்

---

206 (தொடர்ச்சி).

"வாலிப கோலமும் வேறு பிரிந்து—
வளமையும்மாறி இளமையும்மாறி வன்பல்விழுந் திரு
கண்கள்இருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதம்அடைந்து—
செங்கையினில்ஓர் தடியும்ஆகியே."

207. இப் பாவொடு அடியில்வரும் கந்தர் அலங்காரம் போல்வனவற்றை ஆராய்க :

"சுழித்தோடும் ஆற்றில் பெருக்கா னதுசெல்வம் துன்பம்இன்பம்
கழித்தோடு கின்ற(து)எக் காலம்நெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன் என்கிலை குன்றம்எட்டும்
கிழித்தோடு வேல்என் கிலைஎங்ங னேமுத்தி கிட்டுவதே."

கப்புற்ற பறவைக் குடம்பைஎன் றும்பொய்த்த
　　கனவென் றும் நீரில்எழுதும்
　　கைஎழுத் தென் றும்உட் கண்டுகொண் டிலாசை
　　　　கைவிடேன் என்செய்குவேன்
தப்பற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
　　தலம்ஓங்கு கந்தவேளே
　　தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　　　சண்முகத் தெய்வமணியே.[208]　　　(௧எ)

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
　　எக்கற் றிருக்கும்வெறுவாய்
　　எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
　　　　இகழ்விற கெடுக்கும்தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
　　கலநீர் சொரிந்தஅழுகண்
　　கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
　　　　கைத்திழவு கேட்கும்செவி
பந்தம்அற நினைஎணாப் பாவிகள் தம்நெஞ்சம்
　　பகீரென நடுங்கும்நெஞ்சம்
　　பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
　　　　பலிஏற்க நீள்கொடுங்கை

---

208. இப் பாவொடு தொடர்ந்து வரும் திருமந்திரம், திருப்புகழ் போன்ற வற்றை அறிந்து அமைக :

" அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே."

" பெருங்கா ரியம்போல் வருங்கே டடம்பால்
　　ப்ரியங்கூர வந்து—கருஊறிப்
பிறந்தார் கிடந்தார் இருந்தார் தவழ்ந்தார்
　　நடந்தார் தளர்ந்து—பிணமானார்."

" இருவினை பொரியக் கோல திருஅருள் உருவத்தேகி
　　இருள்கதிர் இலிபொற் பூமி—தவகூடே
இருவரும் உருகிக் காயம் நிலைஎன மருவித்தேவர்
　　இளையவன் எனவித் தாரம்—அருள்வாயே."

சந்தமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.[209] (கஅ)

ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண் டுவந்ததிருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந்தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்தள்
மிக்கஒளி மேவுகண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும்செவி
துய்யநின் பதம்எண் ணும்மேலோர்கள் நெஞ்சம்மெய்ச்
சுகரூப மானநெஞ்சம்
தோன்றல்உன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்றகைகள்
சையம்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.[210] (கக)

---

209. இப் பாவொடு கீழ்க்கண்ட குறட்பா போல்வன பார்க்க :

"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

210. இப் பாவொடு பின்வரும் சேக்கிழார் நாயனாரின் உளம் உருகும் பொய்யாமொழி போல்வன பார்த்துணர்க :

"கையுந் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களும்உடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்."

உழல்உற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றிமலம்
ஒத்தபல பொருள்ஈட்டிவீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஓதிபோல் வளர்த்துநாளும்
விழல்உற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்
வெய்யஉடல் பொய்என்கிலேன்
வெளிமயக் கோமாய விடமயக் கோஎனது
விதிமயக் கோஅறிகிலேன்
கழல்உற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்துகொண்டெம்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன்இரு
கண்ணேஎ னப்புகழ்கிலேன்
தழைவுற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.211　　(உ0)

வானம்எங் கேஅமுத பானம்எங்கே அமரர்
வாழ்க்கைஅபி மானம்எங்கே
மாட்சிஎங் கேஅவர்கள் சூழ்ச்சிஎங் கேதேவ
மன்னன்அர சாட்சிஎங்கே
ஞானம்எங் கேமுனிவர் மோனம்எங் கேஅந்த
நான்முகன் செய்கைஎங்கே
நாரணன் காத்தலை நடத்தல்எங் கேமறை
நவின்றிடும் ஒழுக்கம்எங்கே
ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கம்உறு சிங்கமுகனை
எண்அரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலைஎனில்

211\. இப் பாவொடு பின் தொடரும் சிதம்பர அடிகளாரின் மனங் கசிந்த முறையீடு போல்வனவற்றை ஓர்க :

"இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவிஅல்லேன்
நல்லறத்து ஞானிஅல்லேன் நாயினேன்—சொல்அறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்."

தானமிங் கோர்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.212 (உக)

மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின்அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம
மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்
செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும்அந்தோ
என்சொல்கே ளான்எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவேன்
தனநீடு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.213 (உஉ)

---

212. இப் பாவொடு தொடர்ந்து காணும் கந்தர் அநுபூதி போல்வன காண்க:

" கார்மா மிசைகா லன்வரின் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரிஎனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே."

213. இப் பாவொடு பின்வரும் பிரபுலிங்க லீலைச் செய்யுட்கள் போன்ற வற்றைத் தேர்ந்து தெளிக :

" துயிலை இன்பெனச் சொல்லுதல் இந்தியத்(து)
இயலு நெஞ்சம் இலாமையி னல்அன்றோ
பயிலு நெஞ்சம் பரந்து திரிதரும்
செயலில் இல்லைச் சிறிதும் சுகம்அரோ."

" மறிந்தி டாது மனபவ னங்கள்தாம்
செறிந்த வாயில் சிவமயம் ஆகுமால்
அறிந்து வாயுவை அங்ஙனம் எய்தினேன்
இறந்தி டாதஇ லிங்கப் பிராணியாம்."

வாய்கொண் டுரைத்தல்அரி தென்செய்கேன் என்செய்கேன்
　　வள்ளல்உன் சேவடிக்கண்
　மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை
　　வாய்ந்துழலும் எனதுமனது
பேய்கொண்டு கள்உண்டு கோலினால் மொத்துண்டு
　　பித்துண்ட வன்குரங்கோ
　பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ
　　பேதைவிளை யாடுபந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
　　காற்றினாற் சுழல்கறங்கோ
　காலவடி வோஇந்த்ர ஜாலவடி வோஎனது
　　கர்மவடி வோஅறிகிலேன்
தாய்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
　　தலம்ஓங்கு கந்தவேளே
　தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　சண்முகத் தெய்வமணியே.214　　(உ௩)

கற்றமே லவரொடும் கூடிநில் லேன்கல்வி
　　கற்கும்நெறி தேர்ந்துகல்லேன்
　கனிவுகொண் டுனதுதிரு அடியைஒரு கனவினும்
　　கருதிலேன் நல்லன் அல்லேன்
குற்றமே செய்வதென் குணமாகும் அப்பெருங்
　　குற்றம்எல் லாம்குணம்எனக்
　கொள்ளுவது நின்அருட் குணமாகும் என்னில்என்
　　குறைதவிர்த் தருள்புரிகுவாய்
பெற்றமேல் வரும்ஒரு பெருந்தகையின் அருள்உருப்
　　பெற்றெழுந் தோங்குசுடரே
　பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
　　பேதமில் பரப்பிரமமே
தற்றகைய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
　　தலம்ஓங்கு கந்தவேளே
　தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　சண்முகத் தெய்வமணியே.215　　(உ௪)

214.　213-ஆம் அடிக் குறிப்பினைப் பார்க்க.　இதற்கும் அது பொருந்தும்.

215.　இப் பாவொடு அடியில் குறித்த செந்திற் கலம்பகச் செய்யுள் போல்வன பார்க்க :

பாய்ப்பட்ட புலிஅன்ன நாய்ப்பட்ட கயவர்தம்
பாழ்ப்பட்ட மனையில்நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட இன்னமுது
பட்டபா டாகும்அன்றிப்
போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும்நற்
பூண்பட்ட பாடுதவிடும்
புன்பட்ட உமியும்உயர் பொன்பட்ட பாடவர்கள்
போகம்ஒரு போகமாமோ
ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்அடிக்
காட்பட்ட பெருவாழ்விலே
அருள்பட்ட நெறியும்மெய்ப் பொருள்பட்ட நிலையும்உற
அமர்போக மேபோகமாம்
தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.216 (உரு)

சேவலம் கொடிகொண்ட நினைஅன்றி வேறுசிறு
தேவரைச் சிந்தைசெய்வோர்
செங்கனியை விட்டுவேப் பங்கனியை உண்ணும்ஒரு
சிறுகருங் காக்கைநிகர்வார்
நாவலங் காரம்அற வேறுபுகழ் பேசிநின்
நற்புகழ் வழுத்தாதபேர்
நாய்ப்பால் விரும்பிஆன் தூய்ப்பாலை நயவாத
நவையுடைப் பேயர்ஆவார்

---

215 (தொடர்ச்சி).

"பிறந்ததும் இறந்ததும் பெரும நின்புகழ்
மறந்ததும் அல்லது வணங்கி வேண்டினேக்
காமமும் வெகுளியும் களிம யக்கமும்
தாமிடை கலந்தெனைத் தலைம யக்கலால்."

216. இப் பாவொடு பின்வரும் குறட்பாக்கள் போல்வனவற்றை ஒத்துணர்க :

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."
"சாதலின் இன்னாத(து) இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை."

நீவலந் தாரினது குற்றேவல் புரியாது
　　நின்றுமற் றேவல்புரிவோர்
நெல்லுக் கிறைக்காது புல்லுக் கிறைக்கின்ற
　　நெடியவெறு வீணராவார்
தாவலம் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
　　தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　சண்முகத் தெய்வமணியே.217　　(உசு)

பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ
　　பெய்சிறையில் இன்னும்ஒருகால்
பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்
　　பெறுந்துயர் மறந்துவிடுமோ
இரவுநிறம் உடைஇயமன் இனிஎனைக் கனவினும்
　　இறப்பிக்க எண்ணம்உறுமோ
எண்ணுறுன் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்
　　இருந்தவடு எண்ணுறுனோ
கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு
　　காசுக்கும் மதியேன்எலாம்
கற்றவர்கள் பற்றும்நின் திருஅருளை யானும்
　　கலந்திடப் பெற்றுநின்றேன்
தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
　　தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　சண்முகத் தெய்வமணியே.218　　(உஎ)

---

217. இப் பாவொடு கீழ்க்குறித்த தேவாரத் திருமுறை போல்வனவற்றைத் தேர்ந்து தெளிக :

“ தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
　　சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேஎந்தை
　　புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
　　ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
　　கியாதும் ஐயுற வில்லையே.”

218. இப் பாவொடு பின்வரும் கந்தர் அலங்கார மெய்ம்மொழி போல்வன கண்டுவக்க :

“ நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
　கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்குமரேசர்இரு

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.219 (உஅ)

உளம்எனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை என்றனக் குற்றதுணை
உனைஅன்றி வேறும்இல்லை

---

218 (தொடர்ச்சி).

தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.''

219. இப் பாவொடு பின்வரும் கச்சியப்ப முனிவரர், சிவப்பிரகாசப் பெரு மானுர் இவர்கள்தம் திருப்பாடல்கள் போல்வனவற்றை ஓர்ந்துணர்க:

'' செம்புதன் களிம்பு பாற்றறி யாது
களிம்புதான் தீர்வதும் இல்லை
பைம்பொனுக் குவதோர் மருந்தும்அம் மருந்தின்
பாங்கறி புலவனும் உளரால்
வெம்பிய மலத்தை உயிர்விட அறியா
விடுவது மலம்தனக் கில்லை
நம்பிய மாயை உருவினைக் கொடுத்தே
நாயகன் புகர்மலம் கழிக்கும்.''

'' ஆறிரு தடந்தோள் அண்ணல் ஆறெழுத் தினையும் ஓதில்
வேறொரு பிணிபோம் என்கை வியப்பதோ பிறவி என்னும்
மாறரும் அனுதி நோயும் மாறிவே தாகமங்கள்
கூறரும் இன்ப வீட்டில் குடிபுகுந் திருப்பர் அன்றே.''

இளையன்அவ னுக்கருள வேண்டும்என் றுன்பால்
இசைக்கின்ற பேரும்இல்லை
ஏழையவ னுக்கருள்வ தேன்என் றுன் எதிர்நின்
றியம்புகின் றோரும்இல்லை
வளமருவும் உனதுதிரு அருள்குறைவ தில்லைமேல்
மற்றொரு வழக்கும்இல்லை
வந்திரப் போர்களுக் கிலைஎன்ப தில்லைநீ
வன்மனத் தவனும்அல்லை
தளர்விலாச் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.220 (உக)

எத்திக்கும் என்உளம் தித்திக்கும் இன்பமே
என்உயிர்க் குயிராகும்ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமேஎன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவிலாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமைமகனே
பத்திக் குவந்தருள் பரிந்தருளும் நின்அடிப்
பற்றருளி என்னைஇந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாப்
பண்ணாமல் ஆண்டருளுவாய்
சத்திக்கும் நீர்ச்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.221 (௩௦)

---

220. இப் பாவொடு அடியில் கண்ட தாயுமானவரின் உளங்கனிந்த பராபரக் கண்ணிகள் போல்வன பார்க்க :

"பாவம்என் றால்ஏதும் பயம்இன்றிச் செய்யஇந்தச்
சீவனுக்கார் போதம் தெரித்தார் பராபரமே."

"தாய்இருந் தும்பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும்
நீஇருந் தும்நான் தளர்ந்து நின்றேன் பராபரமே."

221. இப் பாவொடு கீழே காணும் திருப்புகழ் போல்வனவற்றைத் தெரிந்து தெளிக :

நான்கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும்இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய்வந்து கவ்விஅந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும்ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என்இருகண் மணியேஎன் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.222 (௯.க)

திருச்சிற்றம்பலம்

---

221 (தொடர்ச்சி).

"தலையை மழித்துச் சிவந்த துணியை அரைக்குப் புனைந்து
சடையை வளர்த்துப் புரிந்து—புலிஆடை
சதிரொ டுவப்பப் புனைந்து விரகொடு கற்கப் புகுந்து
தவம்ஒரு சத்தத் தறிந்து—திருநீறு
கலையை மிகுத்திட் டணிந்து காரணவலைக்குட் புகுந்து
கதறு நிலைக்கைக் கமர்ந்த—எழிலோடே
கனகம் இயற்றித் திரிந்து துவளும் எனைச்சற் றறிந்து
கவலை ஒழித்தற் கிரங்கி—அருள்வாயே."

222. இப் பாவொடு பின்வரும் திருவள்ளுவ நாயனார், தாயுமானப் பெருமானார் இவர்கள்தம் நிறைமொழி போல்வனவற்றை ஓர்ந்துணர்க :

"நல்குர வென்னும் இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும்."

"என்னைப் புரப்ப(து)அரு ளின்கடனும் என்கடனும்
நின்னில் பணிஅறவே நிற்கை பராபரமே."

52. கந்தர் சரணப் பத்து[223]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.[224] (க)

பண்ஏர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணம் சரணம்
விண்ஏர் ஒளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணம் சரணம்
உண்ணேர் உயிரே உணர்வே சரணம்
உருவே அருவே உறவே சரணம்
கண்ணே மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.[225] (உ)

---

223. முன் பதிகத்திற்கு உரிய 189-ஆம் அடிக்குறிப்பு இதற்கும் பொருந்தும்.

224. இப் பதிகத்தில், நம் பெருமானார், இறைவன் குணங்கள் இன்னின்ன என விவரித்து, அவன் திருவடிகளில் தாம் அடைக்கலம் கொண்டிருப்பதைக் கூறுதல் காண்க.

225. இப் பா முதலியவற்றோடு பின்வரும் சிதம்பர சுவாமிகள், பட்டினத்தடிகளார், அருணகிரிநாதப் பெருமானார் இவர்கள்தம் நிறைநீர் மெய்ம்மொழி போல்வன பார்த்து உணர்ந்து உய்க :

"இருளிற் கிடந்த எனைஅன்றே தூக்கி
அருளைத் தரத்தனுவே ஆதி—தெருள்உற்றுத்
தந்தவன்நீ மற்றவையைத் தந்ததுபோல் நிற்கிதல்
எந்தவகை போரூ ரனே."

"மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே."

முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். (௲)

பூவே மணமே சரணம் சரணம்
பொருளே அருளே சரணம் சரணம்
கோவே குகனே சரணம் சரணம்
குருவே திருவே சரணம் சரணம்
தேவே தெளிவே சரணம் சரணம்
சிவசண் முகனே சரணம் சரணம்
காவேர் தருவே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். (௪)

நடவும் தனிமா மயிலோய் சரணம்
நல்லார் புகழும் வல்லோய் சரணம்
திடமும் திருவும் தருவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணம் சரணம்
தடவண் புயனே சரணம் சரணம்
தனிமா முதலே சரணம் சரணம்
கடவுள் மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். (௫)

---

225 (தொடர்ச்சி).

" எருவாய் கருவாய் தனிலே உருவாய்
இதுவே பயிராய்—விளைவாகி
இவர்போய் அவராய் அவர்போய் இவராய்
இதுவே தொடர்பாய்—வெறிபோல
ஒருதாய் இருதாய் பலகோ டியதாய்
உடனே அவமாய்—அழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா எனஒ(து)—அருள்தாராய்
முருகா எனஓர் தரம்ஓ(து) அடியார்
முடிமேல் இணைதாள்—அருள்வோனே."

கோலக் குறமான் கணவா சரணம்
　குலமா மணியே சரணம் சரணம்
சீலத் தவருக் கருள்வோய் சரணம்
　சிவனார் புதல்வா சரணம் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
　நடுவா கியநல் ஒளியே சரணம்
காலன் தெறுவோய் சரணம் சரணம்
　கந்தா சரணம் சரணம் சரணம். (௬)

நங்கட் கினியாய் சரணம் சரணம்
　நந்தா உயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையான் மகனே சரணம்
　சிவைதந் தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகம்நன் றருள்வோய் சரணம்
　சுரர்வாழ்த் திடுநந் துரையே சரணம்
கங்கைக் கொருமா மதலாய் சரணம்
　கந்தா சரணம் சரணம் சரணம். (௭)

ஒளியுள் ஒளியே சரணம் சரணம்
　ஒன்றே பலவே சரணம் சரணம்
தெளியும் தெருளே சரணம் சரணம்
　சிவமே தவமே சரணம் சரணம்
அளியும் கனியே சரணம் சரணம்
　அமுதே அறிவே சரணம் சரணம்
களிஒன் றருள்வோய் சரணம் சரணம்
　கந்தா சரணம் சரணம் சரணம். (௮)

மன்னே எனைஆள் வரதா சரணம்
　மதியே அடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணம் சரணம்
　புகழ்வார் இதயம் புகுவாய் சரணம்
அன்னே வடிவேல் அரசே சரணம்
　அறுமா முகனே சரணம் சரணம்
கன்னேர் புயனே சரணம் சரணம்
　கந்தா சரணம் சரணம் சரணம். (௯)

வேதப் பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமான் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
புனைமா மயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவைஇல் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். (௧0)

திருச்சிற்றம்பலம்

உ. திருத் தணிகைத் திருப் பதிகங்கள்

முற்றுப்பெற்றன.

க. மூத்த பிள்ளையார் திருப் பதிகங்கள் 4, பாக்கள் 38.
உ. திருத் தணிகைத் திருப் பதிகங்கள் 50, பாக்கள் 539.
,, இசை உருப்படிகள் 2, இசைக் கூறுகள் 27.

திரு அருட்பா

ஒன்பதாம் புத்தகமாகிய

ஐந்தாம் திருமுறை அல்லது திருத் தணிகைப் பகுதி

முற்றிற்று.

அநுபந்தம்—1

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை முதற் பதிப்பின் தலைப்பு[226]

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பிரகாச வள்ளலா ரென்னும்

சிதம்பரம்

இராமலிங்க பிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா

திருத் தணிகைப் பதிகம்

இரண்டாம் புத்தகம்

இஃது

சமரச வேத சன்மார்க்க சங்கத்தை அபிமானித்த

மயிலை சி. சோமசுந்தர செட்டியார்

வேண்டுகோளின்படி

இவ்வாசிரியர் மாணுக்கரும் ஷை சமரச வேத சன்மார்க்க சங்க

வித்வான்களி லொருவருமாகிய பிரஸிடென்ஸி காலேசு என்னும்

சென்னை துரைத்தன கல்விச் சங்கத்துத் தமிழ்ப் புலமை

தொழுவூர் - வேலாயுத முதலியாரால்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி௵ சகுஅக-ல் நிகழும் பிரமாதி௵ மீனரவி

Madras

Memorial Press, No. 39, Thumboo Chetty Street.

March 1880.

Registered Copyright.

---

226. இந் நூலின் முதல் அடிக்குறிப்பு முதலியனவும், முன்னுரை எட்டாம் பத்தி முதலியனவும் பார்க்க.

உ

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை 1880-ஆம் ஆண்டு

முதற் பதிப்பின்

வாயுறை வாழ்த்து[227]

இஃது

பிரஸிடென்ஸி காலேசு என்னும் சென்னைத் துரைத்தன

கல்விச் சங்கத்துத் தமிழ்ப் புலமை

தொழுவூர் - வேலாயுத முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

இணைக்குறளாசிரியப்பா

சிவசண்முக சிவஞான தேசிகன் திருவடி வாழ்க.

புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
மண்ணகத் துயரிய மக்கட் பிறப்புப்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
பண்ணப் பழுத்த புண்ணிய நுகர்தரு
விண்ணத் துயரிய வியன்குடிப் பிறப்பினும்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே ;

அதனால்,

மாசறு காட்சி மயன்றவான் றவமுடை
ஆணவத் தக்கனர் வேள்விபுக் கொடுங்கிய
வானவக் குழாத்து மாலரில் கழிப்பிய
காசிப னளித்த தேசுடை யாக்கை
மாயா வரத்தொரு மாச்சூ ராசற
மூவெயின் முருக்கிய முரட்டமுன் முறுவல்
வழங்கிய வாலமர் மறைமுதல் யோகி
கண்ணுதல் வழியே தண்ணருள் பழுத்த
தேவுய ருலகெலா நாவுயர் புகழ்ச்சுவை
மூவிரு முகத்துச் செங்கனி யாவையு
மளித்தமூ தாதை செருக்க துகைப்ப
வெண்வகை வடிவத் தொருவன் றிசைச்செவி
பருகிய பிரணவ விரதச் செங்கனி
முல்லை யாற்று முருந்தெயிற் றரிவையர்
ஆதரம் பெருக வோம்பருட் கற்பின்

227. இந் நூலின் முன்னுரை 8, 20, 21-ஆம் பத்திகள் பார்க்க.

வயாவறுத் தீன்ற வையவாய் மறுப்படா
தொருபய லணைத்துப் போக மார்த்த
பூண்முலை யிமயப் பொலம்பூங் கொம்பு
முச்சிமோந் தின்ப முற்று செங்கனி
மாக்கடன் மதிபெறு வாலுண வருந்திய
பல்பெரு மகத்து நோன்பினு நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ராய்வற
நண்ணிய மராஅடித் தண்ணறு நிழல்வயின்
அண்ணல்வெள் யானை மண்ணுறுத் துப்புரந்த
குலக்கோ மாட்டி குறக்கோ மாட்டி
மெய்யுறச் சுவைத்த தெய்வச் செங்கனி
விட்பட ரொழுக்கறு மட்படர் புதைக்குடில்
ஓவா வாழ்க்கை யுணர்ச்சிவலி யருகுபு
சிறுத்த காலத்துப் பெருத்தநோ யுழந்து
தலைப்பெ யொன்றுடை யிரண்டிற் றிகழ்ந்த
மலக்குறும் பாசு மரீஇய வெமரம்
புண்ணுறு நெஞ்சப் புலம்பு தபவிரு
கண்ணுகர் செங்கனி யாகுறு பாக்கு
நனியதர் சிறப்ப நாட்டிய நாடித்
தயாமூல தன்ம தத்துவம் புலப்படத்
தன்னோர் தயாவிற் றன்வலித் ததனால்
கொலைபுண ரரக்கர் கொடும்பாட்டுக் காசற
வலைபுணர் பள்ளி யாண்டகை யண்ணல்
அரசிளங் குமரனிற் பரசினர் பழிச்சக்
கொடுமரங் குனித்து நெடுநீர் நீந்திக்
கவித்தொகை தைவரக் கைவரத் தேவி
சென்றுபே ராவம் பொன்றுறப் பின்றை
நின்றவெம் பவப்பழி யொன்ற வொன்று
மனனக னெகிழ்ந்து மன்னிய
வினைகளுஞ் செழிப்ப வியைபழி துரப்ப
மெய்ப்பிறப் பில்லான் கப்பறு
மொருகுறி கண்டு பெருவரம் படைத்திவ்
வகனிலக் கரிசறத் தன்பெயர் நிலைஇய
வேதுவி னப்பெயர் காதலிற் புனைஇ
அடர்முளி கானம் படரெரி போலத்
தம்மையுந் தஞ்சார் தவத்தையுந் தவம்புணர்
மெய்ம்மலி யுறுநர் மேதகு குழூஉவையுஞ்

சுட்டற வொழியுந் தோற்றஞ் சான்ற
உயிர்க்கொலை பழகிப் புழுக்குடர் பெருக்கி
மலவுடல் வளர்க்கும் பழியூ னுணவினர்
நினைப்பருங் கூட்ட நேர்பா தகமறத்
திருவுரு சிறந்த பேரரு டன்னியல்
தேற்றிய
திருவருட் பிரகா சச்செழுங் கனியாய்
எம்மையு மெம்முடைத் தம்மையுந் தம்முறு
திறத்தையுங் காட்டியெஞ் சித்தந் தழைப்பத்
திருவாய் மலர்ந்த செந்தேன் பொதிந்து
பெருகருட் பாவாந் தேத்தடை கிடந்த
கருவார் மையற் கவல்கட் டழிக்கும்
திருவார் தணிகைச் செந்தமிழ்ப் பெருக்கு
வருவா ரிதிமலிந் தாடி வாழிய
வாழிய வுலகே வாழிய வுலகே
வாழிய வறனே வாழிய நலனே
வாழிய மறையே வாழிய துறையே
வாழிய தவமே வாழிய வாழ்த்திய
வூழிய வுடம்பே வேழிய ஞவே
வாழிய வாழிய வாழிய நாவே
வாழிய வருளே வாழிய வருளே
வாழிய வருளே வாழிய வருளே.

நேரிசை வெண்பா

ஆரியனார் சீர்பாதந் தாங்க வமைசிரமும்
ஆரியனார் சீர்பாட வாநாவும்—ஆரியனார்
செம்மொழியே சிந்திக்கு நெஞ்சுந் தருந்தவமே
யெம்மையினும் வாழ்க வினிது.

வாயுறை வாழ்த்து முற்றிற்று.

அச்சிற் பதிப்பித்தவர் சிறப்பு

நேரிசை வெண்பா

பொய்க்கிட்டு வையம் புலம்பல்அற நன்மயிலைச்
சிக்கிட்டி எம்சோம சுந்தரன்சீர்—மெய்க்கிட்டிச்
சைவத் தணிகைத் தமிழ்ப்பா வெளியிட்டான்
தெய்வப் பயன்கொழிக்கத் தேர்ந்து.

திருச்சிற்றம்பலம்

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை முதற் பதிப்பில் கண்ட தொழுவூர் - வேலாயுத முதலியார் அவர்களின்

குறிப்புக்கள்[228]

2. திருத் தணிகைத் திருப் பதிகங்கள்

1. பிரார்த்தனை மாலை, 1-ஆம் பா :

கண்ணுற்றது என்பது ஒருமை பன்மை மயக்கம்.

1. பிரார்த்தனை மாலை, 9-ஆம் பா :

தன் என்பது அசைநிலை.

5. ஜீவசாட்சி மாலை, 5-ஆம் பா :

சல்லம் என்பது பன்றிக் கோடு.

13. போக்குரையீடு, 9-ஆம் பா :

கேழ்வி, வேழ்வி என்பன எதுகை நோக்கித் திரித்தவாறு.

28. புண்ணிய நீற்று மான்மியம், 5-ஆம் பா :

ஆறக்கரம் என்பது ஆருக்கரம் என
நீட்டும் வழி நீட்டல்.

38. ஏத்தாப் பிறவி இழிவு, 5-ஆம் பா :

வித்து, விச்சு என்றாற்போல, சத்து,
சச்சு எனப் போலியாயிற்று.

---

228. இந் நூலின் முன்னுரை எட்டாம் பத்தி பார்க்க.

ஆறு திருமுறைகள் கொண்ட திரு அருட்பாவின் முதற் பதிப்பின் தலைப்பு[229]

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்
அருட்பெருஞ் சித்தராயமர்ந்த
திருவருட் பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறைத் திரட்டு

இஃது
கா. திருவேங்கட முதலியார்
விருப்பத்தின்படி
ஷை பிள்ளையவர்கள் மருகரும் சமரச வேத சன்மார்க்க சங்க
வித்வான்களி லொருவருமாகிய
புராணிகர்
பொ. சுந்தரம் பிள்ளையவர்கள்
திரட்டித்தர,
அஷ்டாவதானம்
பூவை - கலியாணசுந்தர முதலியாரால்
பார்வையிடப்பட்டு,
பிருங்கிமா நகரம்
இராமசாமி முதலியாரால்

சென்னை:
ஆல்பீனியன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
கலியாப்தம் ௪௯௯௩-ல் நிகழும் நந்தனஸு
1892

Registered Copy-Right

229. இந் நூலின் 180-ஆம் அடிக்குறிப்பு முதலியன பார்க்க.

திரு அருட்பா—தெய்வமணி மாலை கந்தர் சரணப் பத்து இவற்றின் முதற் பதிப்பின் தலைப்பு[230]

உ

சிவமயம்

சென்னைக் கந்தர்

தெய்வ மணிமாலை

சரணப் பத்து

இவை

பாளையம்

முத்து செட்டியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சிதம்பரம்

இராமலிங்கப் பிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு

காயாறு

ஞானசுந்தர ஐயர்

அவர்களால்

சென்னை - சாஸ்த்திர விளக்கச் சங்கத்தைச் சார்ந்த

வித்தியானந்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

---

230. *இந் நூலின்* 189-*ஆம் அடிக்குறிப்பு முதலியன பார்க்க.*

அநுபந்தம்—6

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை அல்லது
திருத் தணிகைப் பகுதியில் கண்ட

எடுத்துக்காட்டு முதற் குறிப்பு அகராதி[231]

எடுத்துக்காட்டு	நூல் அல்லது நூலாசிரியர் பெயர்	பக்கம்
அஞ்சுவயதான ...	காவடிச்சிந்து	107
அடப்பண்ணி ...	திருமூலர்	149
அடர் பவள ...	திருப்புகழ்	106
அணுகாதஇருடி...	திருப்புகழ்	92
அணுவிற்கணு ...	விநாயகர்அகவல்	2
அமல வாயு ...	திருப்புகழ்	145
அற்றார் ...	திருவள்ளுவர்	143
அன்பர் பணி ...	பராபரக் கண்ணி	117
அக்ஷர தேவி ...	அருணகிரிநாதர்	36
ஆங்கவன் ...	கச்சியப்பர்	145
ஆங்காரமும் ...	அருணகிரிநாதர்	53
ஆதலால் பந்தம்...	அவிரோத உந்தியார்	140
ஆதலின் நமது ...	கந்தபுராணம்	49
ஆதாரம்இலேன்...	கந்தர் அநுபூதி	22
ஆரணன் ...	சந்நிதிமுறை	109
ஆறிருதடம் ...	சீகாளத்திப் புராணம்	156
ஆறுதிருஎழுத்து..	கல்லாடம்	49
ஆவிக்குமோசம்...	அருணகிரியார்	114
ஆன அமுதே ...	கந்தர்அநுபூதி	123
இடர்கெழு ...	நான்மணிமாலை	80
இருவினை ...	அருணகிரியார்	149
இருளிற்கிடந்த ...	சந்நிதிமுறை	159
இல்லறத்தான் ...	சந்நிதிமுறை	151
இன்மை என ...	திருவள்ளுவர்	86
ஈத்துவக்கும் ...	திருவள்ளுவர்	154
உள்ளத்தின் ...	தாயுமானார்	138
எங்கெங்கும் ...	தாயுமானார்	138
எடுத்த நூலம் ...	குமரகுருதாசர் பாடல்	112
எப்போதகத்து ...	நான்மணிமாலை	12
எமக்கிதுவோ ...	காரைக்கால் அம்மையார்	47
எரிதனில் ...	அருணகிரிநாதர்	47
எருவாய் ...	திருப்புகழ்	160
எழுகடல் ...	திருப்புகழ்	81
எள்ளளவும் ...	தாயுமானார்	140
எனக்கினியார் ...	தாயுமானார்	140
என்னால் ...	அருணகிரிநாதர்	86
என்னை அப்பா ...	திருவாசகம்	20
என்னைப்புரப்பது.	தாயுமானார்	158
ஐம்பத்தொன்று...	திருவகுப்பு	49
ஒருஞான ...	திருப்புகழ்	44
ஒருமைமன ...	எங்குநிறைகின்ற பொருள்	63
ஒன்றும்போதா...	மணிவாசகர்	25

231. இந் நூலின் முன்னுரை 5, 6, 7-ஆம் பத்திகள் பார்க்க. இந்த அகராதியில் காட்டியிருக்கும் நூல் பெயர் அல்லது நூலாசிரியர் பெயரை, அந்தந்த அடிக்குறிப்புக்களில் கண்ட நூலாசிரியர் பெயர் அல்லது நூல் பெயரோடு சேர்த்துணர்க. அவற்றுள் நூல்பெயரும் நூலாசிரியர் பெயரும் ஒருங்கே குறித்திருப்பன சிலவே. இங்கு இடம் இன்மை கருதி, பெயர்கள் சில இடங்களில் சுருக்கப்பட்டன.

எடுத்துக்காட்டு	நூல் அல்லது நூலாசிரியர் பெயர்	பக்கம்
கண்ணுள்மணி ...	பைங்கிளிக் கண்ணி	61
கண்புனல் ...	சோணசைல மாலை	95
கதியதாய் ...	அருணகிரியார்	111
கருதுங்கருத்து...	கபிலதேவர்	9
கருமுதல் ...	பட்டினத்தார்	134
கள்ளத்தலைவர் ...	பைங்கிளிக் கண்ணி	33
கனிய நினைவு ...	கபிலதேவர்	6
காந்தம் இரும்பை..	பைங்கிளிக் கண்ணி	61
கார்மாமிசை ...	அருணகிரியார்	152
காலனையும் ...	அற்புதத் திரு அந்தாதி	14
கிளைத்து ...	கந்தர் அலங்காரம்	77
குமரா நம ...	சந்நிதிமுறை	49
குரவம் நாறிய ...	தேவாரம்	106
கூகா என என்...	கந்தர் அநுபூதி	14
கெடுக்கவல்லது...	சிவப்பிரகாசர்	55
கையும் ...	பெரியபுராணம்	150
கொல்லாவிரதம்...	தாயுமானுர்	141
கொல்லான் ...	திருக்குறள்	141
கோடாத ...	கந்தர் அலங்காரம்	66
கோளில் ...	திருவள்ளுவர்	150
சயிலாங்கனை ...	திருப்புகழ்	64
சாகாதெனையே...	கந்தர் அநுபூதி	22
சாதலின் ...	திருவள்ளுவர்	154
சிவதலந்தொறும்..	முருகதாசர்	47
சிவமாதுடனே ...	திருப்புகழ்	120
சிறையாரும் ...	தேவாரம்	120
சுடர்ப் பிழம்பு ...	திருமும்மணிக் கோவை	12
சுழித்தோடும் ...	அருணகிரியார்	148
சூரில் கிரியில் ...	அருணகிரிநாதர்	75
செந்திலை ...	திருப்புகழ்	98
செம்பு தன் ...	தணிகைப் புராணம்	156
சேர்ந்தனை ...	கந்தர் அலங்காரம்	117
சொல்லுகை ...	அருணகிரிநாதர்	38
தம்மையே ...	வன்தொண்டர்	155
தம்மை விடுத்து...	கந்தர்கலி வெண்பா	18
தலையை மழித்து .	அருணகிரியார்	158
தாய் இருந்தும் ...	தாயுமானுர்	157
தானம் தவம் ...	தாயுமானுர்	146
திருவடிஞானம் ...	திருமூலர்	146
தீதா வசவு ...	அருணகிரியார்	141
துயிலைஇன்பெண..	சிவப்பிரகாசர்	152
துயில்கொளாத ...	அருணகிரிநாதர்	89
தெய்வத்திருமலை..	கந்தர் அலங்காரம்	42
தெய்வத்திரு அருள் ...	மும்மணிக் கோவை	69
தெய்வம் என்ப ...	மணிவாசகர்	86
தெய்வம்சான்ற ...	திருமுருகாற்றுப்படை	98
தெள்ளிய ...	கந்தர் அலங்காரம்	71
தேனைப்பாலை ...	மணிவாசகர்	51
நங்குற்றம் ...	பிக்ஷாடன நவ மணிமாலை	121
நலமேதும் ...	தாயுமானுர்	147
நல்குரவு ...	திருக்குறள்	158
நல்குரவென்னும்..	மணிவாசகர்	86
நல்லாறு ...	திருவள்ளுவர்	143
நாடி நந்தமர் ...	தேவாரம்	66
நாமம்நவிற்றுய் ...	மும்மணிக் கோவை	72
நாம் பிரமம் ...	தாயுமானுர்	145
நாயேன் நந்தா ...	மும்மணிக் கோவை	20
நாள் என் செயும்..	அருணகிரியார்	155
நானே நீயாய் ...	திருப்புகழ்	95
நான் ஆர் ஒடுங்க..	அருணகிரியார்	126
நின்குணம் ...	கடுவனிள வெயினனுர்	143

நூல் அல்லது எடுத்துக்காட்டு	நூலாசிரியர் பெயர்	பக்கம்
நின்சீர் அடியார்...	மும்மணிக் கோவை	87
நின்னை அடைந்த..	மும்மணிக் கோவை	45
நீவேறெனது ...	திருப்புகழ்	33
நூலினை ...	கச்சியப்பர்	144
படிக்கின்றிலை ...	அருணகிரியார்	51
படிறுயினை ...	சேரமான்பெருமாள் நாயனார்	142
பத்தித்திருமுகம்..	அருணகிரியார்	132
பந்தாடும் ...	அருணகிரிநாதர்	57
பரம மாயையின்...	திருப்புகழ்	109
பாலே அனைய ...	அருணகிரியார்	103
பால் என்பது ...	அருணகிரியார்	119
பாவம் என்றால்...	தாயுமானார்	157
பிரானவனை ...	அற்புதத் திருவந்தாதி	123
பிறந்ததும் ...	சாமிநாத தேசிகர்	154
புகவே தகேன் ...	மணிவாசகர்	126
புத்தியை ...	கந்தர் அலங்காரம்	18
பூரணச்சிவ ...	அருணகிரிநாதர்	83
பெருங்காரியம் ...	அருணகிரியார்	149
பெரும்பைம் ...	கந்தர் அலங்காரம்	84
பேசப்பட்டேன்...	மாணிக்கவாசகர்	82
பேதைப்பருவம்...	பைங்கிளிக் கண்ணி	106
மட்டேர் குழல் ...	அருணகிரிநாதர்	59
மண்உறங்கும் ...	பைங்கிளிக் கண்ணி	61
மண்ணினின் ...	சுத்தசாதகம்	42
மந்திரம் ஆவது ...	ஞானசம்பந்தர்	82
மரணப்ரமாதம் ...	அருணகிரிநாதர்	38
மருதிடம் ...	பதினோராந் திருமுறை	159
மறிந்திடாது ...	சிவப்பிரகாசர்	152
மாலோன் ...	அருணகிரிநாதர்	38
மாவேழ் சனனம்...	கந்தர் அநுபூதி	80
மின்னேநிகர் ...	அருணகிரிநாதர்	55
முருகன் ...	அருணகிரியார்	101
மெய்யாநெறி ...	சந்நிதிமுறை	139
மோக வாரிதி ...	திருப்புகழ்	88
யாகக் கொலை ...	முருகதாசர்	141
யானேதும் ...	மணிவாசகர்	114
யான் எனது ...	திருக்குறள்	145
வஞ்சித்தென் ...	தேவாரம்	95
வடிவும் தனமும்...	அருணகிரிநாதர்	87
வருந்தேன் ...	மும்மணிக் கோவை	84
வரைஅற்றவுணர்...	கந்தர் அலங்காரம்	69
வாடை பற்று ...	அருணகிரியார்	126
வாலிபகோலமும்..	பட்டினத்தார்	148
விழிக்குத்துணை...	அருணகிரியார்	129
விழுதாதெனவே..	திருப்புகழ்	138
வினையேனை ...	அருணகிரிநாதர்	26
வேட்கைவினை ...	திரு இரட்டை மணிமாலை	2
வேண்டும்நின் ...	சிவப்பிரகாசர்	143
வேலே விளங்கு...	அருணகிரியார்	101

அநுபந்தம் - 7.

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை அல்லது திருத்தணிகைப் பகுதியின்

பாட்டு முதற் குறிப்பு அகராதி

க. மூத்த பிள்ளையார் திருப் பதிகங்கள்

பாட்டு	பக்கம்
அ	
அஞ்சு முகத்தான்	1
அடியார் உள்ளம்	12
அம்பொன்று	12
அயன் தவத்து	7
ஆ	
ஆணிலே அன்றி	10
உ	
உலகம் பரவும்	11
உலகெலாம்	2
உள்ளமும் உயிரும்	3
எ	
என்னை வேண்டி	9
ஒ	
ஒன்றல இரண்டும்அல	3
க	
கமல மலர்அயன்	12
கள்ள நெஞ்சகன்	10
கா	
கானல் நீர் விழைந்த	4
கு	
கும்ப மாமுனியின்	7
கே	
கேவல சகல வாதனை	4
ச	
சச்சிதானந்த வடிவம்	3
சத்த சத்தியல்	4
சீ	
சீத நாள்மலர்	9
சீர் உருத்திரமூர்த்தி	6
த	
தஞ்சம் என்றுனை	9
தடக்கை மாமுகமும்	8
தி	
திங்களங் கொழுந்து	11
திருநெடுமால்	5
திருவும் கல்வியும்	8
து	
துதி பெருங் காசி	7
ந	
நளினமா மலர்வாழ்	5
நா	
நாதமும் கடந்து	3
நாரையூர் நம்பி	6
நாவினால் உனை	11
நீ	
நீண்ட மால்அரவாகி	9
பெ	
பெரும் பொருட்கிடனு	5
பெருவயல் ஆறுமுகன்	8
ம	
மண்ணில் ஆசை	10
மருள் உறுமணமும்	4
மு	
முன்அருந்தவத்தோன்	7
வா	
வாதாகா வண்ண மணி	2
வாளிலே விழி மங்கை	11
வி	
விண்ணவர் புகழும்	6

உ. திருத் தணிகைத் திருப் பதிகங்கள்

பாட்டு	பக்கம்
அ	
அகமாறிய நெறி	83
அடலை அணிந்தோர்	70
அடியார்க்கெளியர்	113
அடியேன் எனை	16
அடுத்திலேன்நின்அடி	66
அடுத்தே வருத்தும்	21
அடையாத வஞ்சகர்	17
அணி கொள்வேல்	17
அண்ணுவே நின்அடி	24
அண்ணுவோ என்	79
அண்ணிலேன் நினை	39
அத்தனே தணிகாசல	39
அப்பன் என்னுடை	39
அமராவதி இறைக்கு	14
அமராவதி இறையோ	83
அம்பாதல் நெடுங்கண்	68
அருகா மலத்தின்	75
அருணன்	135
அரும்பாய நகை	68
அரும் பெறல்மணியை	99
அருள் ஆறுமுகே	159
அரைசே அடியர்க்கு	43
அரைமதிக்குறழும்	89
அல்லார்க்கும்	68
அவம் நாள்கழிக்க	65
அழகா அமலா	112
அழிதரும் உலக	93
அழியாப் பொருளே	50
அழுக்குநெஞ்சினேன்	79
அறியாத நம்பிணி	84
அற்புதமான	133
அன்பிலா வஞ்சர்	118
அன்பின் உனது	75
அன்னே அப்பா	21
அன்னே எனைத்தந்த	14
அன்னை முதலாம்	26
ஆ	
ஆக்கும் தொழிலால்	112
ஆளாயோ துயர்	24
ஆருத்துயரம்	60
ஆறுமுகங்களில்	133
ஆறுமுகங் கொண்ட	128
ஆறுமுகப்பெரும்	108
ஆறுமுகமும்	113
ஆனந்தமான	133
இ	
இகவா அடியர்	50
இரங்கா நின்றிங்கு	47
இராப்பகல்	134
இருந்தாய் இங்கு	56
இருப்பாயமாய	16
இருப்பு நெஞ்சக	18
இருப்பேன் துயர்	43
இலக்கம் அறியா	70
இலதை நினைப்பாய்	56
இவ் வேளை அருள்	54
இழுதைநெஞ்சினேன்	76
இறைக்குளே உலகம்	89
இறையேனும்உன்றன்	65
இன்பப் பெருக்கே	113
இன்ப மற்றுறுகண்	91
இன்னும் எத்தனை	101
ஈ	
ஈயென்று	143
ஈறிலாத நின்	101
ஈனத்திவறும்	76
உ	
உண்டாய உலகுயிர்	23
உண்டால் குறையும்	21
உப்புற்ற பாண்டம்	148
உய்யும் பொருட்டுன்	45
உய்வண்ணம் இன்றி	64
உருத்தன் இகலும்	69
உலகம் பரவும் ஒரு	127
உலகம் பரவும் பரம்	111
உலகியற்கடுஞ்சுரத்து	117
உழலுற்ற	151
உளங்கொள் வஞ்சக	19
உளந்தளர	29
உளம் எனது வசம்	156
உள்ள மனக்குரங்கு	30
உள்ளம் நெக்குவிட்டு	40
உனக்கே விழைவு	15
ஊ	
ஊனே உடையே	19
ஊர் ஆதி இகழ்	31
ஊன் பார்க்கும்	88
எ	
எண்உறும்அவர்கட்கு	46
எண்ணும் புரம்	84
எண்ணில்புன்தொழி	33
எத்திக்கும்என்	157
எந்தை நினை	149
எந்தை பிரான்	109
எப்பாலவரும்	87
எய்தற்கரிய	49
எய்யாதருள்	87
எளியனேன் இன்	102
எளியேன் என்ன	61
எளியேன் நினது சே	48
எளியேன்நினதுதிரு	43
எனையான் அறிந்துன்	65
என்செய்கேன் இனும்	52
என்செய்கை என்	16
என் சொல்கேன்	40
என்றும் மாதர்மேல்	52
என்றே பிணிகள்	85
என்னிருகண்ணின்	125
என்னுடை உயிரை	99
என்னே குறை	88
என்னை என்னை	39
ஏ	
ஏதம் அகற்றும்	115
ஏதம் நிறுத்தும்	116
ஏதிலார் என	40
ஏது செய்குவன்	34

பாட்டு	பக்கம்
ஐ	
ஐயஇன்னும் நான்	102
ஐய நின் சீர்பேச	150
ஐயம் ஏற்று	58
ஐயனே நினை	38
ஒ	
ஒருமையுடன்	142
ஒளியுள்ளொளியே	161
ஒன்றார் புரம்	106
ஒன்றிரண்டான	134
ஒன்றோடிரண்டு	107
ஓ	
ஓங்கி நீண்ட வாள்	105
ஓயாது வரும்	27
க	
கங்கையஞ்சடைசேர்	122
கச்சுக்கட்டி	59
கஞ்சன் துதிக்கும்	20
கடப்பமா மலர்	40
கடும்புலைக்கருத்தர்	118
கடைப் பட்டேங்கும்	81
கடையனேன்இன்	102
கடையேன் வஞ்ச	42
கண்டனேக வானவர்	19
கண்ணப்பன்என்னும்	87
கண்ணனை அயனை	98
கண்ணார் நுதலார்	96
கண்ணி மதிபுனைந்த	108
கண்ணைக் காட்டி	58
கண் மூன் றுறு	13
கரத்தைக் காட்டியே	57
கருங்கடு நிகர்	71
கரு மருந்தாய	86
கரையில் வீண்	144
கல்லளவாம்	26
கல்லாக்கொடிய	60
கல்லாதவஞ்சகர்பால்	29
கல்லா நாயேன்	21
கல்லால் அடியார்	96
கல்லை ஒத்த என்	103
கல்வி எலாம்	109
களித்துநின்	18
கள்ளக்கயற்கண்	60
கள்ளநெஞ்சினேன்	78
கறிபிடித்த	130
கற்கிலேன் உனது	51
கற்பனையே எனும்	110
கற்பிலார் எனினும்	46
கற்றவர் புகழ்நின்	92
கற்றறிந்த மெய்	110
கற்றமேலவர்	153
கற்றொளிகொள்	147
கன்னியர்தம்	30
கன்னேய நெஞ்சகர்	29
கா	
காகம் கரைந்தது	135
காசம் மேகம்	58
காமப்பயலை	62
காமலர் நறவு	121
காமவுட்பகைவனும்	141
காமாந்த காரியாய்	67
காயமாம் கானலை	118
காயாதளிய	114
காயும் நெஞ்சினேன்	78
காயோடுடனாய்	95
காயோம் என நின்ற	55
காய் நின்ற	80
காரூர் சடையார்	96
கார்பூத்த	86
கால் குறித்த என்	41
காவிமலைக்கண்	62
கானலிடை	146
கான்அரு அளக	105
கி	
கிடைக்குள்மாழ்கியே	38
கிளைக்குறும்	90
கு	
குருவே அயன் அரி	15
குழகனை அழியா	100
குறவர்குடிசை	131
குறிக்கொள்அன்பரை	40
குன்றமொத்திலங்கு	88
குன்று நேர்பிணி	19
குன்று பொய்உடல்	37
குன்றே மகிழ்ந்த	43
கூ	
கூவிஏழையர்	33
கூழுக்கழுவேனோ	130
கூழைமாமுகில்	101
கூறேனோ திரு	54
கே	
கேளாது போல்	16
கை	
கையாத அன்புடை	23
கையாததுன்பக்கடல்	15
கொ	
கொள்உண்டவஞ்சர்	14
கொள்ளும் பொழில்	56
கொள்ளேனோ நீ	53
கோதிலாக்குணம்	125
கோ	
கோலக்குறமான்	161
கோவே நல்தணிகை	24
கோவே நின்பதம்	27
ச	
சகம் ஆறுடையார்	94
சங்கபாணியை	37
சங்கம் ஒலித்தது	134
சச்சிதானந்த	133
சடமாகி இன்பம்	148
சதிசெயும்மங்கையர்	118
சத்திவேல் கரத்த	128
சந்தார் வரையுள்	121
சந்தைநேர்நடை	34
சா	
சாருந்தணிகையில்	16
சார்ந்த அடியார்க்கு	50
சாறுசேர்திருத்தணி	39

பாட்டு	பக்கம்
சி	
சிங்கமாமுகனை	124
சிந்தாமணி நிதி	83
சிந்தைக்கும்	130
சிறியேன் இப்போது	54
சிற்பகல்மேவும்	15
சீ	
சீர்கொண்ட தெய்வ	13
சீர்கொண்டார்	67
சீர்திகழ்	133
சீர்பூத்தஅருட்கடலே	22
சீர்வளர்குவளை	120
சு	
சுகமே அடியர்	113
சூ	
சூரியன்	135
செ	
செக்கச்சிவந்தே	127
செங்கண் விடை	107
செங்கதிர்	135
செங்கை அம்காந்தள்	15
செஞ்சொல் சுவையே	48
செய்கொள் தணிகை	61
செய்திலேன் நின்	67
செய்வதன்றவன்	41
செய்வதுனது	48
செல்லும் வாழ்க்கை	34
செழிக்கும் சீர்திரு	38
செழிப்படும்மங்கையர்	71
செறிவிலாவஞ்சக	118
சே	
சேதன நந்தார்	122
சேரும் முக்கண்	50
சேல் பிடித்தவன்	18
சேவலம் கொடி	154
சேவல் ஒலித்தது	135
சேவற்கொடிகொள்	48
சேவியாத என்	51
சை	
சைவநாயக	52
சைவந்தழைக்க	133
சொ	
சொல்லார் மலர்புனை	17
சொல்லும்பொருளும்	42
ஞா	
ஞாலம் எலாம்	110
ஞாலவாழ்வெனும்	92
த	
தணிகாசலம் போய்	62
தணிகைமலையை	61
தணிகைமேவிய	40
தணியாததுன்ப	17
தண்தணி காந்தள்	121
தண்தேன் பொழி	107
தத்துவத்துள்ளே	133
தந்தே தநயமாம்	121
தலனே அடியர்	16
தவம் உண்மையொடு	83
தவம் பெறுமுனிவர்	123
தனமும் கடந்தே	60
தனியே இங்குழல்	53
தனியேதுயரில்	43
தன்னால் உலகை	55
தா	
தாணுஈன்றருள்	81
தாதாதா	130
தாருகப்பதகன்	124
தாமும் கொடிய	59
தாழ்வேன் வஞ்ச	43
தி	
திரப்படுவேன்	66
திருமாலைப் பணி	127
திருமால் ஆதியர்	129
திருஒங்கு	136
திவசங்கள்	82
தீ	
தீங்கு நெஞ்சினேன்	78
தீராததுயர்க்கடலில்	22
து	
துடிஎன்னும்	139
துட்டநெஞ்சினேன்	78
துயில் எறிய	83
துன்பினால் அகம்	52
துன்னும் மறையின்	50
தெ	
தெரியேன் உனது	48
தெருளுடையோர்	124
தெளிக்கு மறை	23
தெள்அகத்தோங்கிய	16
தே	
தேடுங்கிளி நீ	122
தேடேனோஎன்நாதன்	54
தேவரும்தவமுனி	37
தேவநேசனே	40
தேவரேமுதல்	81
தேவர் நாயகன்	19
தேவே என	76
தேறுப்பெருமனம்	83
தேனார் அலங்கல்	59
தேனும் கடமும்	55
தேனும் தெள்ளிய	36
தேனே அமுதே	128
தேனே உளங்கொள்	62
தேன் வழி மலர்	90
தொ	
தொண்டனேன்	102
தொண்டர்கள்	136
தோ	
தோடேந்து	127
தோன்றுஞான	50
ந	
நங்கட்கினியாய்	161
நச்சிலே பழகிய	104
நடவும்தனி	160
நடை எய்துயரால்	21
நண்ணுதவஞ்சர்	64
நண்ணேனே	53
நதியும்மதியும்	121

பாட்டு	பக்கம்
நலமேவுதொண்டர்	63
நல்காதசனர்	14
நவையேதரு	16
நன்மைய எல்லாம்	44
நன்றறியேன்	67
நா	
நாட்டும் தணிகை	62
நாணும் அயன்மால்	114
நாம்பிரமம்	144
நாளைஎகியே	35
நான்கொண்ட	158
நி	
நிருத்தம் பயின்றார்	97
நிலைஅருள் நினது	45
நிலைஉறும்	141
நிலைக்கும் தணிகை	55
நின்நிலை அறியா	94
நின்னிருதாள்	109
நின்னிலையை	130
நீ	
நீர்உண்டு	156
நீர்வேய்ந்த	127
நீற்றணி விளங்கும்	46
நெ	
நெஞ்சமே இஃது	38
நெஞ்சே உகந்த	56
நே	
நேயம் நின்புடை	41
ப	
பசையறுவஞ்சகர்	118
படியின் மாக்களை	58
பட்டிமாடென	105
பண்அளாவிய	105
பண்எறும் மொழி	25
பண்கொண்ட	128
பண்டுமனது	25
பண்ணவனே	17
பண்ணேர்	159
பண்ணேன் நின்	68
பதிபூசைமுதல	140
பதியும் அப்பனும்	36
பதியே எங்கும்	50
பத்தர்கள்	135
பத்திகொண்டவருள்	46
பரங்கிரி அமரும்	99
பரமேது	138
பரிந்திடும்மனத்தோர்	46
பவம் எனும்	93
பள்ள உலகப் படுகுழி	70
பனிப்பற அருளும்	123
பன்னகநொர்ந்து	32
பன்னருவன்	27
பன்னிருகண்	110
பன்னிருதோள்கள்	132
பா	
பாகைப் பொருவும்	60
பாடிநின் திருச்சீர்	94
பாய்ப்பட்ட	154
பாரும் விசும்பும்	20
பார்கொண்ட	145
பார்க்கின்றநிலையே	48
பால் எடுத்தேத்தும்	87
பாவம் ஓர் உருவாகி	57
பாவவாழ்க்கையில்	51
பாவவினைக்கோர்	30
பாவியேன் இன்னும்	102
பாவியேன் படுந்துயர்	53
பி	
பிச்சை எற்றவன்	40
பித்தப்பெருமான்	115
பிரமன் இனி	155
பிரமன் தலையில்	97
பிரியம்மேயவன்	119
பு	
புகுவானவர்தம்	111
புரிவேன் விரதம்	112
புலையமாதர்தம்	104
புன்புலைய	26
பூ	
பூவுண்டவெள்விடை	106
பூவேமணமே	160
பெ	
பெண்குணத்தில்	127
பெருங்களப	26
பெருமை நிதியே	49
பெருமைவேண்டிய	36
பே	
பேதைநெஞ்சே	88
பேயனேன் இன்னும்	102
பேயும் அஞ்சுறும்	34
பொ	
பொதிதரும்மங்கையர்	72
பொய்யர் தம்மனம்	35
பொய்யனேன் பிழை	124
பொல்லாதமங்கையர்	73
பொழுதுவிடிந்தது	135
பொன்ஆர்புயத்தனும்	17
பொன்பிணிக்கும்	80
பொன்னார் புயனார்	96
பொன்னின்ஒளி	75
பொன்னை இருத்தும்	122
பொன்னைப்பொருளா	75
போ	
போதல் இருத்தல்	70
போதாநந்த	43
போதுகொண்டவனும்	85
போற்றேன்எனினும்	15
ம	
மக்கட்பிறவி	75
மஞ்சட் பூச்சின்	56
மஞ்சேர்பிணி	84
மட்டித்தளறு	70
மணப்புது மலரே	123
மணிக்குழைஅடர்த்து	89
அடியேன்	43
மணியேகலாப	64
மணியேதினைப்புன	14
மண்ணில் நண்ணிய	52
மண்ணினுல் மங்கை	26
மண்ணீர் அனல்வளி	17

பாட்டு	பக்கம்
மதியில் நெஞ்சினேன்	77
மதிவளர் சடைமுடி	126
மத்தநெஞ்சினேன்	79
மந்தாரம்சேர்	120
மயிலின்மீது வந்து	18
மருட்டுமங்கையர்	104
மருந்தென மயக்கும்	90
மருளுறும் உலகிலாம்	117
மருள்இலா தவர்கள்	45
மலங்கிவஞ்சகர்	52
மலையும் வேற்கணர்	36
மலைவாங்குவில்	107
மழுவார்தருகை	97
மறிக்கும் வேற்கணர்	119
மறிதருகண்ணினர்	118
மறைஎலாம் பரவ	124
மனமான ஒரு	152
மன்றேர் தணிகையில்	122
மன்னப்பார்போற்று	80
மன்னுங்குவளை	62
மன்னும் நின் அருள்	41
மன்னே என்றன்	47
மன்னே மெய்யே	161
மா	
மாணித்த ஞான	14
மாமயில்	132
மாயைநெறியாம்	31
மாரனை எரித்தோன்	99
மாவின் வாழ்க்கையின்	35
மாலும் அயனும்	116
மாலைகொணர்	136
மால் ஏந்திய	82
மாவீழ்ந்திடு	107
மாறுதபெரும்	109
மான்கண்டகை	107
மி	
மின்னேர் உலகநடை	20
மின்னும் இடை	27
மின்னுண் மருங்குல்	60
மின்னைஅன்ன நுண்	104
மின்னை நிகர்த்தழி	31

பாட்டு	பக்கம்
மின்னை நேர்இடை	74
மீ	
மீளா தவன்துயர்	28
மு	
முடியா முதலே	160
முதுவோர் வணங்கு	65
முத்தனை முத்திக்கு	100
முத்தியின் முதல்வ	124
முந்தைவினையால்	32
முருகநின்பாதம்	124
முருகா எனநின்று	116
முருகாசரணம்	126
முலை ஒருபால்	74
முலைமுகங் காட்டி	93
முலையைக்காட்டி	57
முற்றுமோ மனம்	39
முன்அறியேன்	73
முன்னோனே திரு	54
முன்னைப்பொருட்கு	115
மூ	
மூடர்கள் தமக்குள்	91
மூவடிவாகி நின்ற	123
மெ	
மெய்யர்உள் அகத்தின்	44
மெய்யாவோ நற்றணி	72
மே	
மேலாகியஉலகத்தவர்	83
மேலைவானவர்	41
மை	
மையல்நெஞ்சினேன் மதிசிறிது	103
மையல் நெஞ்சினேன் மதியிலேன்	77
யா	
யாரையுங்கடுவிழி	119
யாரையுந்துணை	19
வ	
வஞ்சகப்பேதையர்	71
வஞ்சகராம் கானின்	28

பாட்டு	பக்கம்
வஞ்சநெஞ்சினேன்	77
வஞ்சமடமாதரார்	74
வஞ்சமே குடிகொண்	57
வடியாக்கருணை	76
வண்ணனே அருள்	41
வதியுந்தணிகையில்	122
வந்தாள்வாய் ஐயா	30
வந்தென் எதிரில்	61
வரங்கொள் அடியர்	69
வருந்தும் தனிமுன்	62
வருபயன் அறியா	93
வருவாய் என்று	48
வலத்தால் வடிவேல்	113
வல்இருள் பவந்தீர்	45
வல்லி ஒருபால்	69
வல்வினைப்பகுதியால்	117
வனைத்தே வருத்தும்	21
வள்அயில்கரங்கொள்	100
வள்ளல்உனை	139
வள்ளல் உன் அடி	39
வன்குலஞ்சேர்கடல்	128
வன்சொலினர்	28
வன்நோயும்	[illegible]0
வன்பிற்பொதிந்த	115
வன்பெருநெருப்பினை	146
வன்பொடுசெருக்கும்	94
வா	
வா என்பார்	31
வாசிநடத்தி	134
வாட்கண் ஏழையர்	33
வாட்செல்வா நெடு	73
வாணுதல்பெருமாட்டி	41
வாயாத்துரி சற்று	55
வாய் கொண்டு	153
வாய்க்கும் உனதருள்	23
வாரா இருந்த	50
வாரார்முலை உமை	107
வாரும் வாரும்	134
வாரேனோ திரு	53
வாவா என்ன	54
வாழாத வண்ணம்	29
வாழும் இவ்வுலக	91

பாட்டு	பக்கம்
வாழும் நின் திரு	36
வாழும்படி நல் அருள்	55
வாழ்வனே நின்பொன்	85
வாழ்வில் ஆம்சிறு	52
வாழ்வே நற்பொருளே	24
வாளாருங்கண்ணியர்	88
வானம் எங்கே	151
வானோர் குடிகளை	15
வான் நிகர் கூந்தலார்	71
வான் பிறந்தார்	72
வி	
விடு மாட்டில்	73
விடையவாழ்க்கையை	36
விண் அறுதுவாழ்	32
விண்ணூறு சுடரே	124
விது வாழ்சடையார்	95
விரதம் அழிக்கும்	60
விரைவாய் கடப்பம்	70
விளக்குறழ்மணிப்பூண்	90
விளைப்பேன் பவமே	112
வீ	
வீட்டைப் பெறுவோர்	70
வீணனேன் இன்னும்	102
வீணை முரன்றது	135
வெ	
வெதிர் உள்ளவரின்	76
வெயில் மேல்கீடம்	60
வெற்பனே திரு	39
வெற்றூர் புரம்	108
வே	
வேங்கைமாமாகி	132
வேட்டேன் நினது	21
வேதப்பொருளே	162
வேதமா முடிவிளங்கு	41
வேதமுடி	133
வேதமும் கலைகள்	125
வேதனைச் சிறை	100
வேதா நந்தனொடு	76
வேயை வென்ற	37
வேய்ப்பால் மென்	74
வேலன் மாதவன்	38
வேல் கொண்ட	15
வேல் கொளும் கமல	97
வை	
வைவளர் வாட்கணார்	71

அநுபந்தம்—8

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
128	15	கட்டலை	கட்டளை
144	29	தனிகை	தணிகை

உ

கடவுளை வழிபடும் அருட்பெரு நெறி

கந்த நாண்மலர்க் கழலிணை உளத்துறக் கருதுகின் றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை அவிழ்த்தருள் சிதம்பரை பாம்பரை யுடன்ஆடும்
அந்த நாள்மகிழ் வடைபவர் உளர்சிலர் அவர்எவர் எனில்இங்கே
இந்த நாள்முறை திறம்பல ராய்உயிர்க் கிதம்செயும் அவர்அன்றே.[232]

இறைவ! உயிர்கள்பால் நிலைபெற்ற அமைதி இன்பம் நிலவுமாறு ஆகும் எளிய கருவியாக என்னைக் கைக்கொள்வாயாக.[233]

உலகின்கண், உயிர்த் தொகுதிகள் துன்பத்துக்கு உள்ளாகி வருந்தி இருக்கும் வரையில், உயிர் இரக்கத்தால் உள்ளும் புறமும் ஊடுருவி, உளம் உடைந்திருப்பவர்களை, மகிழ்ச்சிஆனது அணுகுமாறில்லை.[234]

தடங்கலற்ற மகிழ்ச்சி கொண்டிருத்தல் வேண்டும் என்று நான் விரும்பும் நேரங்களில், நான் கண்ணால் காண்கிற அல்லது மனத்தால் கருதுகிற, என்னைச் சுற்றியுள்ள ஒழியாத் துன்ப நிலையைக் குறித்த எண்ணத் தொடர்பை, அவ் வுள்ளநிலை என்னுள் எழுப்புவதும் அல்லாமல், அதன் பயனாக விளையும் அமைதியின்மையை நான் நீக்கிக் கொள்ளவும், அது என்னை விடுகிறதில்லை.[235]

ஒருவன், தன்னைச் சூழ்ந்து வதியும் சிற்றுயிர்களில் மிகச் சிறுமையுற்றவைகளைக் கூட, எவ்வளவுக் கெவ்வளவு அன்பாகப் பார்த்து, அவற்றின் உறுதுயர் களைந்து, அவற்றைக் காப்பாற்றுகிறானோ, அவ்வளவுக் கவ்வளவு, அவன் இறைவனுக்கு அன்பு செலுத்தியவன் ஆகிறான்.[236]

நறுமணம் கமழும் மென் பூவை விரும்புதல் எவ் வாற்றானும் நன்று; எனினும், அதை, அங்ஙனமே, அதன் நுண்ணிய பசுங் கிளையில், அதற்கு ஊறு செய்யாது, அதன் உயிர்ப் பேரழகு பிறங்க, விட்டு வைத்து மகிழ்தல் அதனினும் நன்று.[237]

எவனொருவன் ஞாயிற்றொளியில் மின்னித் திகழும் பனியின் வண்ணப் படிவங்களை அழிக்காதமைவானோ, எவன் மரத்தினின்றும் பாசிலையைப் பறித்தல் தவிர்வானோ, எவன் எம். மலரையும் எடுக்க உளங்கொளாதிருப்பானோ, அவன்தான், உண்மையில், கடவுள் உகக்கும் நல்லொழுக்கம் கைக்கொண்டவன் ஆவான்.[238]

---

232. திரு ஒற்றியூர்ப் பகுதி 260-ஆம் பக்கம் பார்க்க.

233. Lord ! Make me an instrument of Thy Peace. —*St. Francis of Assisi.*

234. As long as living creatures suffer. there is no possibility of joy for those who are full of compassion. —*Goutama Buddha.*

235. At the moments when I should like to enjoy myself without restraint, it awakens in me reflection about the misery which I see around me or which I suspect, and it does not allow me to drive away the uneasiness thereby caused to me. —*Albert Schweitzer.*

236. And in as much as a man loves and succours and saves even the least of God's creatures, he ministers unto the Lord. —*Anna Kingsford.*

237. Love thou the rose, but leave it on its stem. —*Lord Lytton.*

238. That man is truly ethical who shatters no ice-crystal as it sparkles in the sun, tears no leaf from a tree, cuts no flower. —*Albert Schweitzer.*

இப் பதிப்பாசிரியர் வெளியிட்டிருக்கும்

வேறு நூல்கள்

---

1. விஜய காருண்யம்—ஒரு கற்பனைக் கதைநூல் - தமிழ் வசனம்.

2. பருந்தும் நிழலும்—ஒரு மொழி பெயர்ப்புத் தொகை நூல் - மூலமும் உரையும் - தமிழ்வசனம்.

3. பழந் தமிழரின் மணவினைச் சட்டதிட்டங்கள்—ஒரு சட்ட ஆராய்ச்சி நூல் - ஆங்கில வசனம். (Hindu Marriage Law Reform in the Light of Certain South Indian Customs.)

முதலிரண்டு நூல்களும் சென்னை முதலிய பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டவை. மூன்றும் நூல் தென் இந்தியச் சட்ட நிபுணர்கள் சங்கத்தின் சம்மதம் பெற்றது. இவற்றின் விற்பனையால் ஊதியம் உளதேல், அஃது, இப் பதிப்பாசிரியருடைய திரு அருட்பா வெளியீட்டிற்கும், பின்னர், அதன் அறநிலையத்திற்கும் உதவும். இதுவரையில் திரு அருட்பாவின் பகுதிகள் ஒன்பது வெளிவந்திருக்கின்றன. இனி, பூர்வ ஞான சிதம்பரப் பகுதி, உத்தர ஞான சிதம்பரப் பகுதி, சித்தி வளாகப் பகுதி வெளிவரும். இவற்றின் விவரங்களை இந் நூல் பாயிரம் 6, 7-ஆம் பக்கங்களில் பார்க்க.

குறிப்பு :—இந் நூல் பாயிரத்தின் மூன்றும் பக்க இறுதியில் "ஆவணிமீ 27உ" என்பதைப் "புரட்டாசிமீ 9உ" என்று திருத்திக் கொள்க.

உ

திருச்சிற்றம்பலம்

ஞான சபை

சத்திய ஞான சபையில், இறைவனை, அருள்நெறி நின்று, வழிபட விரும்பும் அடியார்கள் பொருட்டு, நம் பெருமானார் இராமலிங்க அடிகளாரின் தனிப்பேர் உபதேசங்களினின்றும், இப் பதிப்பாசிரியனாகிய என்னால், உள்நிறைந்த பத்திமையோடும், உள்ளொளியோடும், பேருவகையோடும் துருவித் துருவி ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு அருட்பாக்கள், ஞானசபைக் கட்டடத்தின் அகத்தினும் புறத்தினும், என் நண்பர் முருகப்பெருமான் அடியாரான ஸ்ரீ கிருபாநந்தவாரியார் அவர்கள் ஆணையின் கீழ் ஸ்தபதியாகத் தொண்டாற்றிய ஸ்ரீ சிவனார் அவர்களால் அழகு ததும்ப, பேர் அன்போடும், பேர் ஆர்வத்தோடும், பெருங் களிப்போடும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஞானசபைக்கு அன்பராவார் யாவரும் அவற்றைக் கண்ணுற்று, ஒருமையுடன் ஓதி உணர்ந்து அருள் நலம் அடைவார்களாக! ஒன்றுக்கும் பற்றாத எளியேனுக்கு இத் தெய்வத் திரு அருட்பாத் தொண்டினை இப் பிறவியில் ஈந்த இறைவன், எங்கள் பெருமானார்க்கு, யான் எப் பிறவியினும், இத் திருத் தொண்டினை இயற்றி, மீளாது ஆட்பட்டொழுகும் பேற்றினைப் பெறுமாறு அருள் புரிவானாக!

வாழ்க சத்திய ஞான சபை!
வாழ்க எங்கள் பெருமானார்!
வாழ்க அவர்கள் அருள்நெறி!
திருச்சிற்றம்பலம்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

உ

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை



இராமலிங்க அடிகளார் அருள்நெறி வழிபாட்டிற்காக அமைத்தருளிய

சத்திய ஞான சபை

உத்தரஞான சிதம்பரம் அல்லது வடலூர், தென்னார்க்காடு ஜில்லா, சென்னை.